V42
N10
119586

A

# SHORT HISTORY OF JAPAN

BOOK II

# NEW JAPAN

BY

G. SUBRAMANIA IYER



MADRAS: G. C. LOGANADHAM BROS.
THE GUARDIAN PRESS, MOUNT ROAD
1910

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
டிசம்பர் மாதம் வருடம் 83
செப்பனிட்டு முடித்த
டிசம்பர் மாதம் வருடம் 83
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

# SHORT HISTORY OF JAPAN

—

BOOK II

# NEW JAPAN

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1911
MADRAS

BY

G. SUBRAMANIA IYER

ஜப்பான் சரித்திரச் சுருக்கம்

—

புஸ்தகம் II

# புதிய ஜப்பான்

க. சுப்பிரமணிய அய்யர் இயற்றியது

MADRAS

THE GUARDIAN PRESS, MOUNT ROAD

1910

[illegible] [illegible]

All Rights Reserved

19886

MADRAS: G. C. LOGANADHAM BROS.,
THE GUARDIAN PRESS, MOUNT ROAD

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1911
MADRAS.

# பொருளடக்கம்

# CONTENTS

| | பக்கம் |
|---|---|
| I. அதிகாரம் | |
| 1867-ம் ஆண்டு நடந்த புரட்சி | 1—22 |
| II. அதிகாரம் | |
| புதிய ஜப்பானை ஆக்கியவர்கள் | 23—116 |
| சக்கிரவர்த்தி | 25—37 |
| சக்கிரவர்த்தினி | 38—41 |
| இராஜ தந்திரிகள் | |
| மார்க்விஸ் ஹிரோபூமி ஐட்டோ | 41—50 |
| பாரன் ஷிபுஸாவா | 50—54 |
| கவுண்ட் மத்ஸுகாட்டா | 54—58 |
| கவுண்ட் இனோயி | 58—60 |
| கவுண்ட் ஒகுமா | 60—67 |
| பாரன் சுயெமட்ஸு | 67—71 |
| வைகவுண்ட் ஹயாஷி | 71—76 |
| ஜனரல் வைகவுண்ட் கட்ஸுரா | 76—79 |
| ஜப்பான் தேசத்துச் சில சேனாதிபதிகள் | |
| மார்க்விஸ் யமகாட்டா | 79—83 |
| பீல்ட் மார்ஷல் மார்க்விஸ் ஓயாமா | 83—90 |
| ஜெனரல் புகிஷீமா | 90—91 |
| ஜெனரல் குரோக்கி | 91—93 |
| ஜெனரல் ஒகு | 93—95 |

பக்கம்

பாரன் ஜெனரல் கொடாமா 95—100

ஸ்லெந்துஜெனரல் நாவாய் டாக்கியோ
ஒகோரவ 100—103

கடற்படைத் தலைவர்கள்

அட்மிரல் டோகோ 104—112

அட்மிரல் காமிமுரா 112—116

III. அதிகாரம்

ஜப்பானின் அன்னிய யுத்தங்கள் 117—130

சைனு பாக்ஸர் யுத்தம் 128—130

IV. அதிகாரம்

ருஷிய யுத்தம் 131—158

யுத்தம் 137—143

ஜப்பான் சமுத்திரத்தில்
ருஷியப்படைத் தோல்வி 143—148

சமாதானப் பேச்சுகள் 148—152

சமாதான முடிவு 152—158

V. அதிகாரம்

ஜப்பானின் ராஜ்ய அமைப்பு 159—172

VI. அதிகாரம்

பிரஜைகளின் பாத்தியங்களும் கடமைக
ளும் 173—183

VII. அதிகாரம்

பிதுர்பூஜை 184—191

VIII. அதிகாரம்

புஷிடோ அல்லது ஜப்பானிய க்ஷத்திரிய
தர்மம் 192—204



பக்கம்

IX. அதிகாரம்.

ஜயுஜிட்ஸு அல்லது தேகப்பயிற்சி 205—210

X. அதிகாரம்.

ஜப்பானிய ஸ்திரிகள் 211—233

1. முற்கால நிலைமை 212—214
2. சாமானிய ஸ்திரிகள் 215—221
3. சாமுராய் ஸ்திரீகள் 221—223
4. மற்ற ஸ்திரீகள் 223—230
5. ஸ்திரீகளின் சில தொழில்கள் 230—233

XI. அதிகாரம்

தொழில்கள் 234—242

XII. அதிகாரம்

விவசாயம் 243—268

விவசாயத்தின் பொதுவான லக்ஷணங்
கள் 254—261

மற்ற வுரங்கள் 261—264

காடு 264—268

XIII. அதிகாரம்

வியாபாரம் 269—290

ஜப்பானுக்கு வேண்டியதென்ன ? 270—271

வர்த்தகத்தில் நாணயம் 272—274

பாக்டரிகள் வைத்துத் தொழில்கள்
செய்வது 274—281

கைதொழில்களுக்கு மூலதனம் 281—285

அன்னிய மூலதனம் 285—287

புதுக்காப்பு வரிகள் 287—290

முடிவு 290—292

# பிழை திருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம்.* |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 2 | 14 | கட்டியர்ர | கட்டியார் |
| 25 | 7<br>8 | அறந்தது-தனவாய்கோட்டைம் ருஷியாவோடு நடந்த யுத்தமும்—அட்மிரல் | அறந்தது—அட்மிரல் |
| 31 | 20 | ஜொல்ஜர்களைத் | ஸோல்ஜர்களைத் |
| 33 | 14 | கெபோலியருடைய | நெப்போலியனுடைய |
| 39 | 19 | உத்தமகுணங்களிருல் | உத்தம குணங்களிருல் |
| 54 | 4 | ஷிஸாவா | ஷிபுஸாவா |
| 67 | 14 | சமாசாரச் | சமாசார |
| 71 | 6 | செய்திருக்கிறோம் என்றார் | செய்திருக்கிறோம் |
| 72 | 1 | (Peleni-potentiary) | (Plenipotentiary) |
| 76 | 3 | இன்னதென்று | இன்னவென்று |
| 96 | 20 | அவிஸ்டெண்ட் விட்டு | அவிஸ்டெண்ட் |
| 112 | 22 | (Akitsushsma) | (Akitsushima) |
| 123 | 14 | அத்தகையத் | அத்தகைய |
| 188 | 11 | பலபீடஸ்தானத்துக்குப் | பலிபீடஸ்தானத்திக்குப் |
| 214 | 14 | அசாதியம் | அசாத்தியம் |
| 217 | 20 | உத்திரவு | உத்தரவு |
| 222 | 26 | எற்கனவே | ஏற்கெனவே |
| 238 | 11 | தொழில்கள் | தொழில்களில் |
| 252 | 20 | போன்றவை | போன்றவைகளை |
| ,, | 21 | ஈட் | ஈ |
| 255 | 6 | சிக்கனம் | சிக்கெனம் |
| ,, | 15 | பிஞ்சியில்லை | பிஞ்சியவரில்லை |
| 258 | 8 | புண்ணாக்குகள் | பிண்ணாக்குகள் |
| 288 | 4 | அப்படியென் | எப்படியென் |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1911
MADRAS.

# முகவுரை

## PREFACE

நமது ஜனங்கள் அன்னியதேசங்களுடைய சரித்திரத்தை அறிந்து கொள்வதாலுண்டாகும் நன்மைகளைக்கருதி, 1903-ம் வருஷத்தில் "ஜப்பான் சரித்திரச் சுருக்கம்" என்ற புஸ்தகத்தைப் பிரசுரம் செய்தேன். அக்காலத்தில் ஜப்பான் தேசத்து அதிசயமான செய்கைகளும் அதன் கீர்த்தியும் உலகத்தார் கவனத்தை விசேஷமாய்க் கவர்ந்து வந்தபடியால், மற்றத் தேசங்களின் சரித்திரத்தை விட அத்தேசத்துச் சரித்திரத்தை அறிந்துகொள்வது பயன்தரத் தக்கதென்று நினைத்து, அப்புஸ்தகத்தை வெளிப்படுத்தினேன். அது 1867-ம் வருஷத்தில் பழைய ஜப்பானுடைய சரித்திரம் முடிந்து, ஒரு பெரும்புரட்சியால் மேல்நாட்டு ராஜ்யோபாயங்களை மேற்கொண்டு, புதியஜப்பான் ஆரம்பித்த வரலாறுகளுடன் முடிந்தது. அப்போது ஜப்பான் அன்னிய ஜாதியாருடன் யுத்தங்கள் செய்து, தன் சைனிய பலத்தைக் காட்டவில்லை. ஜப்பானியரின் தேசாபிமானமும், புதுமைகளை ஏற்றுத் தமதாக்கிக்கொள்ளும் சக்தியும் வெளிப்பட்டனவேயன்றி, அவர்களின் சைனியபலம் வெளிப்படவில்லை.

பிறகு சைனதேசத்துடன் 1894-1895-ம் வருஷங்களில் யுத்தம் நடத்திக் கீர்த்திபெற்று, 48-கோடிரூபாய்

யுத்தச் செலவுக்கு ஈடாகப் பெற்று, அந்தப் பெருந் தொகையைக் கொண்டு தன் சேனாபலத்தை அதிகப் படுத்திக்கொண்டது. பிறகு சைனாவில் "பாக்ஸர்" கலகம் நேரிட்டு, அன்னிய வாசிகள் ஜப்பானியருடைய உதவியைக் கேட்க, அது அப்படியே உதவி செய்யச் சம்மதித்தது. அதன் சைனியம் ஐரோப்பிய சைனியங்களுடன் சேர்ந்து கலகத்தை அடக்க, அச்சமயம் ஜப்பானியச் சைனியம் காட்டின திறமையையும் கட்டுப்பாட்டையும் அன்னியர் கண்டு வியந்தனர். பிறகு, 1904-1905-ம் வருஷங்களில் ருஷியாவுடன் யுத்தம் செய்து, வெற்றி பெற்றதைக்கண்டு, உலகத்தார் பிரமித்தார்கள். போர்வலியில் ஜப்பான் ஐரோப்பிய தேசங்களுக்குத் தாழ்ந்ததல்லவென்று அப்போது நிச்சயமாயிற்று. ஐரோப்பியர் அதை மதிக்கத் தலைப்பட்டார்கள். ஜப்பான் தனது வன்மையையும் சக்தியையும் உணர்ந்து, தைரியத்துடன் வேறுவழிகளில் அபிவிருத்தியை நாடிச்செல்ல ஆரம்பித்தது.

யுத்தத்தில் பராக்கிரமம் காட்டுவதால் மட்டும் தேசத்தின் க்ஷேமமும் பெருமையும் சித்திக்காதென்றும் அப்படி அவைகள் சித்திக்க வேண்டுமானால், ஜனங்கள் அறிவுடையவர்களாயும் செல்வவான்களாயும் ஆகவேண்டுமென்றும் தீர்மானித்து, அவ்வழிகளில் பெருமுயற்சிகள் செய்யவாரம்பித்தது. கல்விச்சாலைகளை ஸ்தாபித்து, முக்கியமாய் ஸ்திரீகளின் மனப்பயிற்சிக்கு வேண்டியவைகளை ஸ்தாபித்து, கல்வியைப் பரவச் செய்து வந்தது. கல்வியின் நோக்கம் செல்வம் பெறுவ



தென்றறிந்து, மேல்நாட்டாரைப்போல் சாஸ்திரோபாயங்களால் தொழில்களை நடத்தத் துவக்கிற்று. மேல் நாட்டாரைப் போல் இயந்திரங்களை உபயோகித்து, ஆயிரக்கணக்கான வேலைக்காரர்களை அமர்த்திக்கொண்டு, பெருந்தொழிற்சாலைகள் வைத்து நடத்திற்று. தற்கால நாகரிகத்தின்படி தேசத்தைத் நிர்வகிப்பது செல்வமில்லாமல் சாத்தியமல்லவென்று புதுத்தொழில்கள் செய்து, அன்னியவியாபாரத்தை முற்படுத்திற்று. அன்னிய சாமான்கள் அதன் சொந்த சாமான்களுடன் போட்டி செய்வதைத் தடுப்பதும், அதன்சாமான்கள் அன்னிய தேசங்களில் விலையாவதும், முக்கிய நோக்கமாகக்கொண்டது. இந்த நோக்கம் நிறைவேறுமாறு தற்காலம் அதன் இறக்குமதி வரிவிகிதங்களை மாற்றத் தீர்மானித்திருக்கின்றது.

இவைகளெல்லாம் புதியஜப்பானின் லக்ஷணங்கள். இவைகளை நம்மவர் அறிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணத்துடன் "புதியஜப்பான்" என்ற புஸ்தகத்தை எழுதிப் பிரசுரம் செய்கிறேன். ஆங்கிலபாஷையில் தோன்றியுள்ள பல புஸ்தகங்களைப் பார்த்தும் அப்போதப்போது பிரசித்திபெற்ற பத்திரிகைகளில் தோன்றும் வியாசங்களைப் பார்த்தும் இது எழுதப்பட்டிருக்கின்றது. தற்காலத்து ராஜீய அமைப்பு எத்தகையதென்றும், ஜனங்களின் கடமைகளும் சுதந்திரங்களும் எவையென்றும், கல்வி—முக்கியமாய் ஸ்திரீகளின் கல்வி—தேசத்தின் அபிவிருத்திக்கு எவ்வளவு

அவசியமென்றும், தொழிலும் வியாபாரமும் தேசத்தின் நிலையான வளப்பத்துக்கு ஆதாரமென்றும், நற்குணங்களும், தேசாபிமானமும், தன் மறுப்பும் தேசத்து முன்னேற்றத்துக்கு எவ்வளவு அவசியமென்றும், நம்மவர் ஒருவாறு தெரிந்து கொள்ளும்படி இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கின்றது. எப்படி ஒரு சமூகத்தில் பெரியோர் செய்வதைப் பார்த்து மற்றவர் செய்கிறார்களோ, எப்படிப் பெரியோர் அநுஷ்டிக்கும் பிரமாணங்கள் மற்றோர்க்கும் பிரமாணங்களாகின்றனவோ, அப்படியே உலகத்தில் எந்தத் தேசங்கள் அவைகள் செய்த பெருங்காரியங்களாலும் உயர்ந்த சக்திகளாலும் பெருமையடைந்திருக்கின்றனவோ, அந்தத் தேசங்கள் செய்வதைப் பார்த்து, அவைகளைப்போல் மற்றத்தேசங்கள் செய்வதும் அவைகளுடைய பிரமாணங்களை மற்றத்தேசங்கள் மேற்கொள்வதும் வழக்கம். ஜப்பானைப்போல் தற்காலம் நமக்குப் பிரதிமையாய் விளங்கும் தேசம் வேறில்லை. அதைப்பார்த்துக் கீழ்த்திசைத் தேசங்கள் பல புதிய சுதந்திரங்களைப்பெற்று வருகின்றன. இந்தியாவும் தற்காலம் புதுக்கிளர்ச்சிகொண்டிருப்பதற்கு ஜப்பான் ஒரு காரணமென்று சொல்லப்படுகிறது. ஆகையால், அத்தேசத்தின் சரித்திரத்தை நம்மவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று இந்தப் "புதிய ஜப்பான்" பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

1910-ம் வருஷம் நவம்பர் } ஸ. சுப்பிரமணிய ஐயர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1911
MADRAS

# புதிய ஜப்பான்

## CHAPTER I

## முதல் அதிகாரம்

### 1867-ம் ஆண்டு நடந்த புரட்சி

1867-ம் வருஷத்துப் புரட்சியின்போது ஜப்பானிருந்த நிலைமை—அந்நிய தேசத்தாருடைய சம்பந்தத்தால் ஜப்பானுக்கு உண்டான மனஉணர்ச்சி—ஆட்சியைச் சக்கிரவர்த்தி ஒருவரிடம் விடவேண்டுமென்ற எண்ணம்—அன்னியர்களுடைய உபாயங்களினாலேயே அன்னியரை வெல்லவேண்டுமென்ற கொள்கை—கடற்படை, கல்வி, தொழில் முதலியவைகளைப் பலப்படுத்தியது—சாமுராய் என்ற சிறுவகுப்பாரே முதலில் புதுமையை விரும்பியது—சாமுராய்களின் தொழிலும் ஜீவியமும்—அன்னியர் பலாத்காரமாய்ப் பிரவேசித்ததினால் ஜப்பானியருக்கு உண்டான ராஜபக்தியும் தேசாபிமானமும்—புரட்சியை ஆரம்பித்து முடித்தவர்கள் பெரும் விருப்பங்கொண்ட சிறுவர்களே—இவர்களுடைய விருப்பத்துக்கு சிற்றரசர்கள் இணங்கியது—சிற்றரசர்கள் செய்துவந்த தொழில்—சிற்றரசர்களையும் சாமுராய்களையும் ஒற்றுமைப்படுத்தியது ராஜபக்தியே—சிற்றரசர்கள் சம்பளம்பெறும் உத்தியோகஸ்தரானது—பிறகு வரும்படியின் ஒருபாகத்தைப் பெற்றுச் சுகஜீவிகளாய் இருக்கத்

தீர்மானித்தது—சாமுராய்களின் விரோதம்—மகாசபை கூடித் தவறிப்போனது—கொரியாவுடனும் பர்மோஸாத் தீவுடனும் சண்டை செய்ய உண்டான ஏதுக்கள்—சண்டையை நிறுத்தியதால் சாமுராய்களுக்கு உண்டான வருத்தம்—1875-ம் வருஷம் சண்டைசெய்ய உண்டான ஏது—கவர்ன்மெண்டார் செய்த இரண்டு முக்கியமான உத்தரவுகள்—சாமுராய்கள் யுத்தம் செய்யப்பயின்றது—சாமுராய்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் நடந்த யுத்தம்—கவர்ன்மெண்டின் வெற்றி—ராஜாங்க முறையில் மேற்றிசை முறையை அநுசரித்தது—ரயில், தந்தி முதலான ஸ்தாபனங்கள்—தேர்ச்சி பெற்ற மேனாட்டாரைக்கொண்டு தேசத்தில் கல்வி முதலியவைகளை விருத்தி செய்தது—சினேட்ஸபை ஸ்தாபிக்கப்பட்டது—ஸைகோவின் கட்சியார் ஒரு பெயர் போன மந்திரியைக் கொலைசெய்தது—இதனால் பார்லிமெண்டு உண்டானது—இன்னும் அதிகமான திருத்தங்கள்—கட்சி பிரதிகட்சிகள்—கவுண்ட் இடகாகியும் கவுண்ட் ஓகுமாவும்—கட்சிப் பிரதிகட்சிகளின் ஒழிவு.

ஜப்பான் தேசத்தில் அநாதிகாலம் தொட்டு சக்கிரவர்த்தி ஒருவர் இருந்ததும் மத்தியகாலத்தில் அவரை ஒதுக்கிவைத்து ஆட்சியை வசப்படுத்திக்கொண்டிருந்த ஷோகுன் பரம்பரை 1867-ம் வருஷத்தோடு முடிவடைந்து சக்கிரவர்த்திக்குப் பூர்வகாலத்து ஆதிபத்தியம் திரும்பிக் கிடைத்ததுமான வரலாறுகளானது *ஜப்பான் சரித்திரச் சுருக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த மகா முக்கியமான புரட்சி

N.B.—* ஜப்பான் சரித்திரச் சுருக்கம் 1903-ம் வருஷம் “சுதேசமித்திரன்” அச்சுக்கூடம் விலை ரூ. 1—0—0.



நடந்தகாலத்தில் அத்தேசத்தின் நிலைமை எவ்விதமிருந்ததென்று அறியவேண்டும். அன்னிய தேசத்தார் பலாத்காரமாய்த் தங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள ஜப்பானை இழுத்துவிடவே அதை யாண்டவர்களுக்கு இன்னும் என்ன நேரிடுமோவென்று பீதி உண்டாயிற்று. தங்கள் தேசம் ஸ்வாதீனத்தையே இழந்துவிடக்கூடுமென்று பயந்தார்கள். அன்னியரின் மேலதிகாரத்துக்குட்பட்டு ஜப்பான் ஒரு சிற்றரசாகிவிடக் கூடுமோ என்று அஞ்சினார்கள். இப்படி நேரிடுவதைத் தடுக்கவேண்டுமென்ற பெருங்கவலையினாலேயே சிலர் இந்தப் பெரும் புரட்சியை ஆரம்பித்து முடித்தார்கள். அன்னியரிடத்தில் வெறுப்பும் சக்கிரவர்த்தியினிடத்தில் பக்தியும் ஜப்பானியருக்கு அதிகமாயின. ஆட்சிப் பொறுப்பைச் சக்கிரவர்த்தி ஒருவரிடமே நிறுத்தி ஜப்பான் முழுவதும் ஒன்றாக ஒரேவிதமாய் ஆளப்பட வேண்டுமென்று விருப்பம் உண்டாயிற்று. அன்னியர்களுடைய உபாயங்களினாலேயே அன்னியரை வெல்லவேண்டுமானால் அவர்களுடைய ஆட்சியைப் போல் ஜப்பானிய ஆட்சியும் அமைக்கப்படவேண்டுமென்றும் அவர்களைப் போல் தங்களுக்கும் கடற்படை தரைப்படைகளும் கல்வி, தொழில் முதலிய நாகரீக உபாயங்களும் அவசியமென்றும் தீர்மானித்தார்கள். இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுச் சில வருஷங்களுக்குள் பழைய ஜப்பான் புதிய ஜப்பானாக மாறினது உலகத்து சரித்திரத்தில் ஒருபெரும் ஆச்சரியமாகவே கருதப்படும்.

இந்தப் புரட்சியை ஆரம்பித்து நடத்தினவர்கள் ஜப்பானிய ஜனங்களில் ஒரு சிறு பாகத்தினரென்று நாம் அறியவேண்டும். ஜனங்களில் பெரும்பான்மையோர் புதுமையை விரும்பவில்லை. அன்னியரிடத்தில் அவர்களுக்கு வெறுப்புமில்லை. எப்போதுமே ஜப்பானியர் மரியாதையும் ஔதாரியமும் உள்ளவர்கள். அமெரிக்கர், பிரிட்டிஷார் இவர்களிடத்திலும் மற்ற அன்னியரிடத்திலும் ஜனங்கள் எப்போதும் போலவே இந்த ஸ்வபாவத்தைக்காட்டி வந்தார்கள். அன்னியரை வெறுத்து மேற்றிசைப் புதுமைகளை எற்றுத் தேசத்தின் ஸ்வாதீனத்தைக் காக்கவேண்டுமென்று முயன்றவர்கள் சாமுராய் என்ற சிறுவகுப்பார்.

இவர்கள் நமது க்ஷத்திரிய ஜாதியாரைப்போல் போர் செய்வதில் விருப்பமுள்ளவர்கள்; பிராமணரைப்போல் புத்தியும் கல்விப்பயிற்சியு முள்ளவர்கள். இந்துக்களுள் இருப்பதுபோல் ஜப்பானியரில் ஜாதி வேற்றுமை யில்லையாயினும், சாமுராய் வகுப்பாருக்கு மேற்கண்ட இரண்டு ஜாதியாருடைய குணங்களுமிருந்தன. இவர்கள் பெரும்பான்மையும் ஜப்பானில் அங்கங்கேயிருந்த சிற்றரசரின் கீழ் அமர்ந்து அச்சிற்றரசரின் பொருட்டுப் போர்புரிவதும் அவர்களின் சமஸ்தானங்களை நிர்வகிப்பதுமாய் ஜீவித்தார்கள். இவர்களின் செல்வாக்கினாலும் சாமர்த்தியத்தாலும் சிற்றரசர்களைப் பொம்மைகள்போல் இருக்கச்செய்து சகல அதிகாரத்தையு மிவர்களே செலுத்திவந்தார்கள். ஐரோப்பியர் பலாத்காரமாய் ஜப்பானில் ஸ்திரமாய்



இடம் பெற்றகாலத்தில் இந்த சாமுராய் வகுப்பாரில் ஒரு நூதனமான தேசாபிமானமும் ராஜபக்தியும் உண்டாகத் தலைப்பட்டன. புராதனமான கிரந்தங்களைப் புது அக்கறையுடன் படித்து அவைகளால் போதிக்கப்பட்ட கொள்கைகளைப் புதிதாய்க் கற்றார்கள். அந்தக் கொள்கைகள் ராஜபக்தியும் தேசாபிமானமுமே மனிதனுடைய முக்கிய கடமையென்று போதித்தபடியால், சாமுராய்கள் மனதில் இந்த இரண்டும் இதற்கு முன்னில்லாதவிதமாய்த் தோன்றியுறுத்தத் தலைப்பட்டன. புதிதாய்க் கிடைத்த அன்னியர் பழக்கத்தினால் இந்த இரண்டு உணர்ச்சிகளும் விசேஷ தீவிரத்தையடைந்தன. அன்னியர் பலாத்காரமாய்ப் பிரவேசித்திராவிட்டால் இந்த ராஜபக்தியும் தேசாபிமானமும் வெறும் உணர்ச்சிகளாக இருக்குமேயன்றிப் பெரும் மாறுதல்களுக்குக் காரணங்களாயிரா.

1867-ம் வருஷத்துப் புரட்சியை ஆரம்பித்து முடித்தவர்கள் சிற்றரசர்களுமல்ல; பெரும் சொத்துக்காரர்களும் அல்ல. ஷோகூன் அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சக்கிரவர்த்தியின் அதிகாரத்தைப் பழையபடி ஸ்தாபித்த 55-முக்கியஸ்தர்களில் 5-பேர் தான் சொத்துள்ள உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். 8-பேர் அரண்மனையை அண்டி ஜீவித்த பிரபுக்கள். அவர்களுக்குச் சொத்துமில்லை, செல்வாக்குமில்லை. பாக்கி 42-பேரும் பெரும் விருப்பங்கள் கொண்ட சிறுவர்கள். அவர்களின் வயது சராசரி 30-க்கு அதிகப்பட்டதல்ல. அவர்களுடைய முதல் கருத்து தங்

களுக்குச் சொந்தத்தில் உயர்ந்த ஜீவனம் கிடைக்க வேண்டுமென்பது. தேசத்தின் பெருமை அவர்களுடைய இருதயத்தில் இரண்டாவதாகவே யிருந்தது. அவர்களுக்கு உதவியாயிருந்த தென்பாகத்துச் சிற்றரசர்களும் அதேமாதிரியான விருப்பம் கொண்டிருந்தார்கள்.

தேசத்தை ஒருமைப்படுத்தி சக்கிரவர்த்தி ஒருவரே ஆளவேண்டுமென்றும் ஐரோப்பிய ஜனங்களைப்போல ஜப்பானியரும் ஒரு ஜனமாகத் திரண்டு அமையவேண்டுமென்றும் விரும்பின திருத்தக்காரர்கள் சிற்றரசர்களை என்ன செய்வதென்று ஆரம்பத்தில் தயங்கினார்கள். மொத்தம் 276-சிற்றரசர்களிருந்தார்கள். அவர்களுடைய சொத்தும் வன்மையும் ஏறத்தாழ விருந்தாலும் ஒவ்வொருவரும் தம்மட்டும் ஸ்வேச்சாபதியாய் ஆட்சி செய்து வந்தார்கள். தம் இஷ்டப்படி சட்டம் செய்துகொள்வதும் தம் இஷ்டப்படி வரிகள் விதித்து வசூல் செய்வதும் தம்இஷ்டப்படி நீதி செலுத்துவதுமாய் ஸ்வாதீன அரசர் போலிருந்தார்கள். ஒவ்வொரு சிற்றரசரும் சில சைன்னியங்களைக் கூட்டி யுத்தத்திற்குத் தயாராய் வைத்துக் கொண்டிருக்க வேண்டியதைத்தவிர அவருடைய அதிகாரத்துக்கு வேறு வரையறையில்லை. ஒவ்வொருவரையும் சூழ்ந்து கொண்டு அவருக்குப் புத்தி சொல்வோராயும் காரிய நிர்வாகிகளாயும் சிலரிருந்தார்கள். அவர்கள் சாமுராய் வகுப்பாரைச் சேர்ந்தவர்கள். சிற்றரசன் பெயருக்குமட்டு மிருந்தானேயன்றிச் சகலாதிகாரங்களையும்



அந்தச்சாமுராய்களே செலுத்திவந்தார்கள். இவ்வாறு தேசம் பிரிவினை பெற்றிருக்கிற வரையில் திருத்தக்காரர்களுடைய விருப்பம் நிறைவேறாது. தங்களதிகாரத்தையும் சுவாதீனத்தையும் சக்கிரவர்த்திக்கு ஒப்பித்துவிடும்படி சிற்றரசர்களை எப்படிச் செய்வது என்பதும் சக்கரவர்த்தியே மத்திய ஸ்தானத்திலிருந்து தேசம் முழுமையும் ஒரேவிதமான ஆட்சி புரியும்படி எப்படிச் செய்வதென்பதும் திருத்தக்காரர் மனதில் குழப்பத்தை யுண்டாக்கின. கடைசியில் சிற்றரசர்களில் நால்வர் திருத்தக்காரர்கள் விருப்பப்படி செய்ய ஒப்புக்கொண்டார்கள். மற்றவர்களும் உண்மையில் பொம்மைகள் போலவே எவ்வித அதிகாரமும் இல்லாதவர்களாயிருந்தபடியால், அப்படியே செய்யச் சம்மதித்தார்கள். பதினேழு சிற்றரசர்கள்மட்டும் வெகு காலம் சம்மதமற்றவர்களாயிருக்க, இறுதியில் சாமுராய் வகுப்பாரின் செல்வாக்காலும் வல்லமையாலும் அவர்களும் சம்மதிக்கும்படியாயிற்று.

இந்த 276-சிற்றரசர்களில் ஸட்சுமா, யோடோ ஆகிய இருவர்மட்டும் தங்கள் செய்கையால் தங்களுக்குண்டான நஷ்டத்தையும் குறைவையும் உணர்ந்தவர்களாய்க் காட்டினார்கள். ஏனெனில், இவர்கள் உண்மையான ஸ்வாதீன அதிகாரத்தைச் செலுத்துகிறவர்களாயிருந்தார்கள். மற்றவர்கள் தங்களைச் சுற்றியிருந்த சாமுராய்களின் வசம் எல்லாவற்றையும் ஒப்புவித்துவிட்டுப் பொம்மைகளா யிருந்தபடியால், அவர்களுக்கு நேரிட்ட நஷ்டத்தை அவர்களறிய

வில்லை. இவ்வாறு சிற்றரசர்கள் செய்தது மகா ஆச்சரியம். அதிகாரமையா லிப்படிச்செய்தார்களோ அல்லது தேசாபிமானத்தால் இப்படிச் செய்தார்களோ நமக்குத் திட்டமாய்த் தெரியாது. எப்படிச் செய்த போதிலும், 276-சிற்றரசர்கள் தங்கள் ஸ்வாதீனமான ராஜ அந்தஸ்தை யிழந்து ஜனங்களோடு ஜனங்களாய்த் தாழ்ந்துபோகச் சம்மதித்த ஆச்சரியம்போல் வேறு எந்தேசத்துச் சரித்திரத்திலும் நேரிட்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறு சாமுராய்கள் மகா முக்கியமான புரட்சியை மேற்கொண்டதற்கும் அவர்களின் விருப்பத்திற்குச் சிற்றரசர்கள் இசைந்ததற்கும் காரணம், அக்காலத்தில் ஜப்பானியர் மனதில் கிளர்ச்சியை யுண்டுபண்ணிவந்த ராஜபக்தியே தவிர வேறல்ல. ராஜபக்தியால் இவ்வளவு பெரிய காரியம் நடந்து விடுமோ வென்று யோசிப்பவர்கள் ஜப்பானியரின் சுபாவத்தை அறியவேண்டும். ஜப்பானியர் தங்கள் ஒழுக்கத்துக்கு எதைப் பிரமாணமென்று நினைக்கிறார்களோ அதைச் செய்து தீர்க்க எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய இயல்புடையவர்கள். உயிரைக்கூட அதற்காக இழந்துவிடும் சுபாவமுடையவர்கள். சக்கிரவர்த்திக்குப் பக்தி செய்வதும் அவரின் பெருமைக்காகத் தேசத்துக்கு ஊழியம் செய்வதும் ஜன்மசார்த்தகமென்ற உணர்ச்சி அக்காலத்தில் அவர்கள் மனதில் பொங்கிக்கொண்டிருந்தது. அப்படி அது எவர்கள் மனதில் பொங்கவில்லையோ அவர்கள் நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் உரிய



94

வர்களாகக் கருதப்பட்டார்கள். அவ்வுணர்ச்சிக்கு அடங்கி எவர்கள் பெருங்காரியம் செய்தார்களோ அவர்கள் பெருமைக்கும் புகழ்ச்சிக்கும் உரியவர்களாயினர். ஜப்பான் முழுவதிலும் இந்த உணர்ச்சி அப்போது பாவி சமூகத்தின் மனதைத் தூண்டிக் கொண்டிருந்தது. இப்படித் தூண்டப்பட்டே சாமுராய்களும் தென்பாகத்துச் சிற்றரசர்கள் சிலரும் இந்தப் புரட்சியை யாரம்பித்தார்கள்.

பிரதமத்தில் இந்தச் சிற்றரசர்கள் ஸமஸ்தான மன்னர்களாயிருந்ததற்குப் பதிலாக அந்தச் சமஸ்தானங்களைச் சம்பளத்துக்கு ஆளும் அதிகாரிகளாகச் செய்யப்பட்டார்கள். பூர்வம் அவர்களுக்கிருந்த அதிகார முழுதும் அவர்களிடமே விடப்பட்டது. செலவு போக ஏதேனும் வரி வரும்படிகளில் மிகுந்தால் அந்த மிகுதி தலைமைப் பொக்கிஷத்துக்கு அனுப்பப்பட்டது. இந்த ஏற்பாடு திருப்திகரமாயில்லை யென்று சில காலத்துக்குள் தோன்றவே, சாமுராய்கள் மறுபடியும் சமஸ்தான அதிகாரிகளைத் தூண்டித் தங்களதிகாரம் தங்களுக்கு வேண்டியதில்லை யென்று சக்கிரவர்த்திக்கு விண்ணப்பம் செய்துகொள்ளச் செய்தார்கள். பூர்வம் சமஸ்தானாதிபதிகளாகப் பெற்ற வரும்படியில் ஒருபாகத்தைப் பெற்றுச் சுகஜீவிகளாய் ஒதுங்கிவாழச் சம்மதித்தார்கள். சமஸ்தானங்களனைத்தும் கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களின் வசமாயின. அதிகாரத்தையிழந்த சிற்றரசர்களும் தங்களரண்மனைகளில் வெகுசுகமாய்க் குடிக்

கப்பட்டுக்கிடந்த பொக்கிஷங்களைக் கவர்ன்மெண்டுக்கு இழந்துவிடும்படி நேரிடவில்லையாகையால், இவைகளையும் புதிதாய்க் கிடைத்த பென்ஷனையும் கொண்டு எவ்விதக் கவலையுமின்றி ஜீவித்து வந்தார்கள்.

ஷோகூன் ஸ்தாபனத்தை அழித்துச் சக்கிரவர்த்தியை மறுபடியும் அதிகாரத்தில் வீற்றுவித்தது சுலபமாகவே முடிந்துவிட்டதாயினும், திருத்தக்காரர்கள் விருப்பம் நிறைவேறுமாறு ஏகாதிபத்திய ஆட்சியைப் புதிதாய் அமைத்தல் அவ்வளவு எளிதாய் முடியவில்லை. பழைய அநுஷ்டானங்களை ஜனங்கள் மறக்காமலிருக்க, புது நாகரீகத்துக்கும் அன்னியசம்பந்தத்தால் எதிர்ப்பட்ட புது விவகாரங்களுக்கும் தக்கபடி புது அநுஷ்டானங்களை ஸ்தாபிக்கப் புகுந்தபோது, திருத்தக்காரர்களுக்குள் தடுமாற்றமும் வேற்றுமையும் தோன்றின. திருத்தக்காரர்கள் அநுபோகமில்லாத சிறுவர்கள்; ஜப்பானது பூர்வீக சரித்திரத்தில் அவர்கள் அநுஷ்டிக்கக் கூடிய மாதிரிகளுமில்லை. மொத்தத்தில் ஒருகுடும்பத்தாரிடமாவது ஒருவகுப்பாரிடமாவது முக்கிய அதிகாரம் நிலைக்கக் கூடாதென்பது மட்டும் அவர்கள் மனதில் விசதமாயிருந்தது. பிரதிநிதி முறைகளை அநுஷ்டிப்பதே பிற்கால கஷ்டங்களைத் தவிர்க்க உபாயம். இந்த உபாயத்தைப் பற்றித் தீர ஆலோசித்து முடிவு செய்யும்படி இரண்டுமுறை நமது காங்கிரஸ் மகாசபையைப்போல் திருத்தக்காரர் சபை கூட்டி ஆலோசித்தார்கள். அப்படிச்செய்தும் ஒன்றும் நிச்சயிக்கப்படவில்லை.



இந்தச் சமயத்தில் கொரியா தேசத்துடனும் பார்மோஸா தீவுட(Formosa Island)னும் சண்டைக்கு ஏதுவான சம்பவங்களுண்டாயின. கொரியாதேசத்தரசன் வெகுகாலமாய் ஜப்பான் ஆட்சியை நடத்தி வந்த ஷோகூனுக்கு வருஷாவருஷம் வெகுமதிகளுடன் தூதனனுப்புவது வழக்கமாயிருந்தது. அந்த வழக்கத்தை ஷோகூன் ஸ்தானம் எடுபட்டுப்போனவுடன் கொரியா அரசன் நிறுத்திவிட்டான். அது ஜப்பானியருக்கு ஆத்திரத்தை யுண்டுபண்ண, சிலர் கொரியாமீது கப்பற்படைகளை அனுப்பிச் சண்டைசெய்து அவ்வரசனைச் சிக்ஷிக்க வேண்டுமென்று தூண்டினார்கள். இந்த எண்ணம் முக்கியமாய் போர்த்தொழில் விருப்பங்கொண்ட சாமுராய் வகுப்பாருள் கூர்மையாயிருந்தது. ஸட்ஸுமாவென்ற தென்பாகச் சிற்றரசைச் சேர்ந்த சைகோவென்ற மகா சாமர்த்தியசாலி இதேவெண்ணங் கொண்டவனாய்ச் சாமுராய்களைத் தன்னுடன் கூட்டிக்கொண்டான். அப்படியிருந்தும் ராஜாங்கத்தை நடத்தினவர்கள் சமாதானத்தில் திருஷ்டியுள்ளவர்களாய்க் கொரியாமீதுபடையெடுப்பதை அந்தச்சமயம் நிறுத்திவிட்டார்கள். அப்படி நிறுத்தினது சைகோவுக்கும் பொதுவாய் சாமுராய்களுக்கும் கோபத்தை யுண்டுபண்ணிற்று.

அதற்கப்புறம் சில காலத்திற் கெல்லாம் பார்மோஸாத்தீவில் வசிக்கும் அநாகரீகமான முரட்டு ஜனங்கள் ரியூகியூ (Riukiu) த்தீவிலிருந்து அங்கு வந்து அகப்பட்டுக் கொண்ட சிலஜப்பானியரைக் குரூ

ஸமாய் நடத்தினார்கள். இந்த ரயூகையூத்திவு சட்ஸூமாச்சிற்றரசைச் சேர்ந்ததாகையால் பார்மோஸாத்தீவோரைத் தண்டிப்பதால் ஸட்ஸூமாவைச் சேர்ந்த சாமுராய்களுக்குத் திருப்தி யுண்டாகுமெனக் கருதப்பட்டது. ஏற்கெனவே கொரியா விஷயத்திற் சண்டை செய்யாமற் போனது அவர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணி யிருந்தபடியால், பார்மோஸாத்தீவின் மேற் படையெடுத்தாவது அவர்களுக்குத் திருப்தி யுண்டாக்கக் கூடுமென்று சக்கிரவர்த்தியின் மந்திரிகள் நினைத்தார்கள். அப்படி நினைத்தும் கடைசியில் படையெடுப்பு செய்யாமல் நிறுத்தி பார்மோசாத்தீவுக்கு எஜமானனை சீனாவுடன் தந்த்ரோபாயத்தால் சில ஏற்பாடுகள் செய்து பார்மோஸா விஷயத்தை முடித்துவிட்டார்கள்.

அது அப்படி முடிந்ததும் 1875-ம் வருஷத்தில் மறுபடியும் கொரியாவோடு யுத்தம் செய்ய ஏது உண்டாயிற்று. கொரியாக்காரர் சிலர் ஜப்பான் கப்பற்காரர்களைச் சுட்டார்களென்பது காரணமாய் ஜப்பானிய ராஜாங்கத்தார் யுத்தக் குறிகள் காட்டினார்கள். ஜப்பானியர் கடற்படைகளை ஒன்று சேர்த்து அணிவகுத்து கொரியாவைப் பயமுறுத்தினார்கள்; பயமுறுத்தியும் அந்தத்தடவையும் சண்டை நடத்தாமல் கொரியாவுடன் சிநேக சம்பந்தத்தையும் வியாபார சம்பந்தத்தையும் உறுதிப்படுத்தி உடன்படிக்கை செய்துகொண்டு முடித்துவிட்டார்கள். அதுவும் சாமுராய்களுடைய அதிருப்தியைப் பலப்படுத்திற்று.



சிறுதேசமாகிய கொரியாவுடன் சரிசமானஸ்தர்போல ஜப்பானியக் கவர்ன்மெண்டு உடன்படிக்கை செய்தது அவர்களுக்குப் பிரியமில்லை. அது சீனாவுக்கு அடங்கின தேசமாயிருந்ததும் அவர்களுடைய அதிருப்திக்கு ஒரு காரணமாயிருந்தது. போரை விரும்பின சாமுராய்கள் கொரியாவைச் சண்டைக்கிழுத்துச் சிக்ஷித்திருந்தால் திருப்தியடைந்திருப்பார்கள்.

அப்படி யிருக்கையில், கவர்ன்மெண்டார் இரண்டு முக்கியமான உத்தரவுகள் செய்தார்கள்: சாமுராய்கள் எப்போதும் கத்திகள்[1] தரித்துக்கொண்டிருக்கும் வழக்கத்தைத் தடுத்து ஒரு உத்தரவு செய்தார்கள்; மற்றொரு உத்தரவால் சாமுராய்களுக்கும் உயர்குலத்தார்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்த பென்ஷன்களுக்குப் பதிலாய் ஒரு தக்க தொகை ஒரே தடவையாய்க் கொடுக்கப்பட்டு அந்தப் பென்ஷன்கள் நிறுத்தப்பட்டுப் போயின. கலகம் செய்வதற்கு யோசித்துக்கொண்டிருந்த சாமுராய்களுக்கு இந்த உத்தரவுகள் ஒரு முகாந்தரமாயின. சைகோவைத் தலைவராகக்கொண்டு சாமுராய்கள் கலகம் செய்து கிளம்பினார்கள். 4-வருஷங்களாகச் சைகோவும் சாமுராய்களும் யுத்தத்துக்குத் தயார் செய்துகொண்டு வந்தார்கள். மேல்நாட்டார் உபயோகிக்கும் ஆயுதங்களை உபயோகிக்கக் கற்றுக்கொண்டார்கள். மற்ற விதமான பயிற்சிகளும் செய்துகொண்டு வந்தார்கள். கவர்ன்மெண்டும் சும்மாவிருக்கவில்லை. சாமுராய்கள் ஒரே வகுப்பாரே யுத்தம் செய்யக் கூடியவர்களா

யிருப்பது தேசத்துக்குப் பலக்குறை யென்று நினைத்து மேல்நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஏற்பாட்டை அனுஷ்டிக்கத் தீர்மானித்தார்கள். அதாவது, ஒவ்வொரு ஆண்மகனும் அவன் யௌவனப்பருவத்தில் சிலகாலம் சைன்யத்தில் சேர்ந்து யுத்தப்பயிற்சி பெறவேண்டுமென்று சட்டம் செய்தார்கள். சைகோ பக்கம் 40-ஆயிரம் சாமுராய்களும் கவர்ன்மெண்டு பக்கம் 60-ஆயிரம் போர்வீரர்களும் எதிர்த்து நின்று 1877-ம் வருஷம் ஜனவரிமீ 29௳ ஆரம்பித்த கலகம் அதே வருஷம் செப்டம்பர்மீ 24௳யில் முடிவடைந்தது. தலைவர்களாயிருந்து கலகத்தை நடத்தினவர்களெல்லோரும் தற்கொலை செய்துகொண்டோ அல்லது யுத்தத்தில் அடிபட்டோ மாண்டார்கள். சாமுராய்கள் வெற்றிபெற்றிருந்தார்களானால், ஜப்பான் தேசத்துச் சரித்திரம் வேறுவிதமாய் அமைந்திருக்கும். சர்வ அதிகாரமும் ஒரேவகுப்பார் வசமாகி, அவ்வகுப்பார்களது கொடுங்கோன்மை தேசத்தின் அபிவிர்த்திக்குத் தடையாயிருந்திருக்கும். பிரதிநிதித் துரைத்தனமும் தற்கால மேற்றிசை நாகரீகமும் இப்போது நிலைபெற்றிருப்பனபோல் நிலைபெற்றிரா.

இப்படிச் சாமுராய்கள் கவர்ன்மெண்டுக்கு விரோதம் செய்துகொண்டிருந்த காலத்திலும் ராஜாங்கத்தை நடத்தின திருத்தக்காரர்கள் முன்னேற்றப் படிகளில் ஒவ்வொன்றாய் ஏறினார்கள். இவர்களில் ஐட்டோ, இனோயி, ஒகுமா, இடகாகி பிரதானமானவர்கள்; மகாபுத்திமான்களாயிருந்ததும் தவிர ஐரோப்



பிய தேசத்துக்கும் அமெரிக்காவுக்கும் போய் அங்குள்ள ஸ்தாபனங்களைச் சோதித்து அறிந்து வந்தவர்கள். இவர்களுடைய செல்வாக்கும் இவர்களிடத்தில் ஜனங்கள் வைத்திருந்த நம்பிக்கையும் அளவற்றிருந்தன. ராஜாங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு கிளையிலும் இவர்கள் மேற்றிசை மாதிரிகளை அனுசரித்துப் புதுமைகளை அமைத்தது அன்னியருக்கு ஆச்சரியத்தையுண்டுபண்ணிற்று. இத்தகைய புதுமைகளை ஜனங்கள் எப்படி அங்கீகரிப்பார்கள்! ஜனங்களுடைய அனுபோகத்திலும் அறிவிலும் இவைகள் அடங்கினவைகளா! புத்தி மயக்கத்தை யுண்டுபண்ணும்படியான புதுமைகளை ஏற்கெனவே பண்படுத்தாத பூமியில் நடுவது அவைகள் தழைத்து ஓங்குவதற்குச்சாதகமாகுமா!— இவ்வாறு சிந்தித்து அன்னியர் திகைத்தார்கள்.

அன்னியர்களைக் கொண்டு ஒவ்வொரு ராஜாங்க இலாகாவும் புதிதாய் அமைக்கப்பட்டது. ரெயில்பாதைகள் போடுவதும், தந்திக்கம்பங்கள் நடுவதும், விளக்குக்கூண்டுகள் கட்டுவதும், கடற்படைகள் அமைப்பதும் ஆங்கிலேயர் வசம் ஒப்புவிக்கப்பட்டன. பிராஞ்சியர் சட்டங்களைப் புதுப்பித்து நிர்மாணித்தார்கள். சைன்னியத்தைப் பயிற்சி செய்வித்தவர்களும் அவர்களே. கல்விவிஷயங்கள், தபால்வசதிகள் ஏற்படுத்தல், விவசாய அபிவிர்த்தி இவைகளை அமெரிக்கர் ஏற்றனர். வைத்திய சாஸ்திரம் கற்பித்தல், வியாபார முறைகளை ஒன்றுகூட்டுதல், ஸ்தல நிர்வாக முறைகளை ஏற்படுத்தல் முதலான கடமைகள் ஜர்மானியருக்கு ஒப்புவிக்கப்

பட்டன. சிற்பசாஸ்திரம், வர்ணவித்தை இவைகளை இட்டாலியர் ஒப்புக்கொண்டனர். ஜப்பானுக்கு வேண்டியவை எவை என்றும் ஜப்பானியருடைய இயல்பு எப்படிப்பட்டதென்றும் அறியாத அன்னியர் இத்தகைய பெரும் புதுமைகளை எவ்வாறு செய்யக்கூடியவர்களாயினரென்று அன்னியருக்குப் பிரமை உண்டாயிற்றேயன்றி ஜனங்களுக்கு உண்டாகவில்லை. ஏனெனில், ஜனங்கள் ராஜாங்க விஷயங்களில் அக்கறை பாராட்ட இன்னும் தலைப்படவில்லை. திருத்தங்களைச் செய்துகொண்டு போனவர்கள் ஜனங்களுக்கு விருப்பமான பழக்க வழக்கங்களில் பிரவேசிக்காமல் ஜாக்கிரதையாயிருந்தனர்.

இவ்வாறு ராஜாங்க இலாகாக்களை மேல் நாட்டாரைக் கொண்டு புதிதாக அமைத்தவர்கள் ஜனப்பிரதிநிதிகளடங்கிய பார்லிமெண்டொன்று ஸ்தாபிக்கக் காலம் வந்துவிட்டதென்று நினைக்கவில்லை. ஆனால், திருத்தக்காரர்களில் அப்படி நினைத்தவர் சிலர் இருந்தனர். அவர்களில் கவுண்ட் (Count) இடகாகி தலைவர். இவர் டாஸோ சிற்றரசைச் சேர்ந்த ஒரு சாமுராய். ஷோகூன் அதிகாரத்தை எடுத்துவிட்டுச் சக்கிரவர்த்தியை மறுபடியும் ஸ்தாபித்தவர்களில் தலைவராயிருந்து முயன்றவர். கொரியாமீது 1873-ம் ௵ யுத்தம் நடத்துவதாயிருந்தபோது சமாதானத்தைப் பலமாய் எதிர்த்தவர். இரண்டாம் முறை அத்தேசத்தின் மீது யுத்தம் தொடர முகாந்திரம் நேரிட்டு அப்போதும் ராஜாங்கத்தார் சமாதானத்தையே நாடினபோது மந்திரிகள்



ளில் ஒருவராயிருந்த இடகாகி தமது ஸ்தானத்திலிருந்து விலகி, பார்லிமெண்டு தாமசமின்றி ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று பலமாய்க் கலகம் செய்தார். ஸட்ஸுமா சாமுராய்கள் கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் கலகம் ஆரம்பித்து கலகம் நடந்து கொண்டிருக்கையில், இடகாகியும் அவருடைய நண்பர்களும் கவர்ன்மெண்டுக்கு ஒரு விண்ணப்ப மனுப்பி, அதில் அப்போதைய ராஜாங்க அமைப்பைப் பலமாய்க் கண்டித்து, ஏதோ சிலர் தங்கள் சொந்தப் பெருமையை நாடி ராஜாங்கத்தை நடத்தி வருகிறார்களென்றும், பார்லிமெண்டில்லாமல் தேசத்தின் முன்னேற்றம் தடைப்பட்டு வருகிறதென்றும், சமீபத்தில் பார்லிமெண்டு ஸ்தாபித்து நடத்துமாறு ஜனங்களைப் பயிற்சிசெய்விக்கவேண்டுமென்றும் கேட்டார்கள்.

ஏற்கனவே 1874-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் இந்த நோக்கத்துடன் ஒரு ஏற்பாடு செய்திருந்தார்கள். என்னவெனில், மாகாணங்களை நிர்வகித்த கவர்னர்களை ராஜஸ்தலத்துக்குத் தருவித்துக் கூட்டமாகக் கூட்டி ராஜாங்க விஷயங்களைக் கவனித்து வந்தார்கள். இதனால் ராஜாங்கத்துக்கும் ஜனங்களுக்கும் நேரான சம்மந்தமுண்டாகி ஜனங்கள் ராஜாங்கத்தில் அக்கறைகொள்வார்களென்று நம்பப்பட்டது. ஆனால், மாகாணக் கவர்னர்கள் ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களானதால் அவர்களிடத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை வரவில்லை. மேலும், மாகாணக்கவர்னர்கள் ராஜஸ்தலத்தில் கூடும்போது அவர்களுக்குச் சட்ட

நிரூபணத்தில் எவ்வித அதிகாரமும் இருந்ததில்லை. ஆகையால் இதற்கடுத்த உயர்ந்த படியாக 1875-ம் வருஷத்தில் ஸெனட் (Senate) என்று ஒரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டது. அதிலடங்கின மெம்பர்கள் கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்டபோதிலும் கவர்ன்மெண்டின் ஆலோசனையிலிருக்கும் சட்ட திட்டங்களை முன்னதாகவே அவர்கள் விவாதம் நடத்தி அபிப்பிராயம் சொல்ல அதிகாரம் பெற்றிருந்தார்கள். ராஜாங்கத்தின் பேரில் எப்போதும் குற்றங்கூறி அதிருப்தி பாராட்டி வந்தவர்களுக்கு இந்த ஸெனட் ஒரு அடைக்கலம் போலவும் அமைந்தது. ராஜாங்கத்தாருக்கு ஜனங்களின் அபிப்பிராயங்களை யறிய இது ஒரு வழியாயிருந்து காலக்கிரமத்தில் ஜனங்கள் பொது விஷயங்களைப்பற்றிக் கவனிக்க அவசியமான பயிற்சியையும் தந்தது. இப்படியிருக்கையில் ஒகுபூ டோஷிமிட்ஸு (Okubo Toshimitsu) என்ற பெயர்போன மந்திரி ஸைகோவின் கட்சியாரால் 1878௵-த்தில் கொலை செய்யப்பட்டுப் போனார். கொலைசெய்தவர்கள் தங்களுடைய எண்ணத்தைப் பகிரங்கமாய்ப் பிரசுரம் செய்துவிட்டு தாங்களாகவே தண்டனைக்குட்பட்டார்கள். அவர்களுடைய எண்ணமாவது, ஒகுபூ அவருடைய அளவற்ற செல்வாக்கையும் சக்தியையும் பார்லிமெண்டு ஸ்தாபிப்பதில் உபயோகப்படுத்தவில்லை யாகையால் ஜனங்களுடைய விருப்பம் வெளிப்படும்படி அந்தக் கொலை செய்யப்பட்டதென்று வெளிப்படுத்தினார்கள். இந்த வெறிச் செய்கையால் ராஜாங்கத்தார் அச்சமுற்று



விட்டாலும் பார்லிமெண்டு ஸ்தாபனம் சீக்கிரம் ஆக வேண்டுமென்று முயல லாயிற்று.

ஒகுபூ கொலைசெய்யப்பட்ட இரண்டு மாதத்திற்கெல்லாம் மாகாணங்களிலும் முக்கிய பட்டணங்களிலும் பிரதிநிதிச் சபைகள் ஸ்தாபிக்கப்படுமென்று கவர்ன்மெண்டு விளம்பரம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அவைகளிலடங்கிய மெம்பர்களும் மெம்பர்களை நியமிப்பவர்களும் சில சொத்து யோக்கியதை யுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும், வருஷத்திற்கு ஒருமுறை அவைகள் கூடி ஒரு மாதகாலம் நடக்க வேண்டுமென்றும், அவைகளுக்கடங்கிய பிரதேசங்களில் வரிவசூல் செய்வதும் செலவு செய்வதும் முந்திய வருஷத்துக் கணக்குகளைச் சோதிப்பதும் அவசியமானபோது கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பங்கள் செய்துகொள்ளுவதும் அவைகளுடைய அலுவல்களாகுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. பிற்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பார்லிமெண்டுக்கு இவைகள் அஸ்திவாரமாயின. பல தடவைகளில் மாகாணக் கவர்னர்களை இந்தச் சபைகள் விரோதித்துப் பேசினாலும் மொத்தத்தில் இவைகளால் ராஜாங்க நிர்வாகம் உதவிபெற்றது. ஜனங்களும் பிரதிநித்தியபத்தியத்துக்கு உரிய கடமைகளைச் செலுத்துவதில் பிரதம பாடங்களைக் கற்றார்கள்.

இத்தகைய மாகாணப் பிரதிநிதிச் சபைகளால் கவுண்ட் இடகாகிக்கும் அவரைப்போல் பார்லிமெண்டு ஸ்தாபனத்தைக் கேட்டுக்கொண்டு இருந்தவர்களுக்கும் திருப்தியுண்டாகவில்லை. அவர்கள் தாங்கள்

செய்துகொண்டுவந்த கலக்கத்தை நிறுத்தாமல் செய்துகொண்டே போனார்கள். ஜனங்களையும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களைச் சமுசயத்துடன் நோக்கும்படி சதா தூண்டிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் கவுண்ட் ஓகுமாவும் கவர்ன்மெண்டுக்கு விரோதமாக ஒரு கட்சியைச் சேர்த்துப் பலப்படுத்தி வந்தார். இவ்விருவரும் 1867-ம் வருஷத்துப் புரட்சியில் முக்கியஸ்தர்களாயிருந்தவர்கள். இவர்கள் மகாசாமர்த்திய சாலிகள்; செல்வாக்குள்ளவர்கள். இவர்களில் ஒவ்வொருவரையும் சுற்றி ஒரு பலத்தகட்சி யுண்டாயிற்று. ராஜாங்கத்தை நடத்தினவர்கள் தங்களிஷ்டப்படி ரகசியமாய்க் காரியங்களை நிர்வகித்துக்கொண்டு போகிறார்கள் என்றும், ஜனங்களின் அபிப்பிராயங்களும் விருப்பங்களும் கவனிக்கப்படவில்லையென்றும், எழுதியும் பேசியும் ஜனங்கள் மனதைக் கவர்ன்மெண்டுக்கு விரோதமாய்த் திருப்பி வந்தார்கள். ஆயினும் கவர்ன்மெண்டை நடத்தினவர்கள் சும்மாவிருக்கவில்லை. பல வழிகளில் பல திருத்தங்களை ஊக்கத்துடன் ஆரம்பித்து நடத்தி வந்தார்கள்; சிவில் கிரிமினல் சட்டங்களை ஒழுங்குப்படுத்தினார்கள்; அநேக விஷயங்களைப்பற்றி திட்டமான ஒழுங்குகள் செய்தார்கள்; வரவு செலவு இனங்களைச் சீர்ப்படுத்தி செலவைவிட வரவு எப்போதும் அதிகமாயிருக்கும்படி செய்தார்கள்; மாகாண நிர்வாக முறையை ஆதியோடந்தமாய்ப் புதுப்பித்தார்கள்; ஒரு பெரிய பாங்கி (Bank) ஸ்தாபித்தார்கள்; தேசம் முழுமையும் அங்கங்கே நாஷனலான ஸ்தாபனங்களை



கட்டினார்கள்; ரெயில்பாதைகள் தீவிரமாய்ப்போட்டு அதில் ஜனங்கள் கூடி உதவிசெய்யும்படி செய்தார்கள்; தபால் தந்தியாகிய போக்கு வரத்து வசதிகளை விசாலப்படுத்தினார்கள்; பலமான கப்பல் வியாபாரத்துக்கு ஆரம்பம் செய்தார்கள்; போஸ்டல் சேவிங்ஸ் பாங்குகள் ஸ்தாபித்தார்கள்; ரஸ்தாக்களை விருத்தி செய்தார்கள்; துறைமுகங்களைக் கட்டினார்கள்; நதிகளில் போக்கு வரவு வசதிகளை உண்டாக்கும்படி பெரும் முயற்சிகள் செய்தார்கள்; சிவில் உத்தியோகங்கள் போட்டிப் பரீக்ஷை நடத்திக் கொடுக்கப்படும்படி ஏற்பாடு செய்தார்கள்; அநேக சிறுவர்களை ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் அனுப்பிக் கல்வி கற்று வரும்படி செய்தார்கள்; இவைகளனைத்துக்கும் மேலாக, அவர்களுடைய தௌத்திய தந்திரங்களாலும் விடாமுயற்சியாலும் அன்னிய ராஜாங்கங்களுடன் ஜப்பானுடைய சம்பந்தம் கௌரவப்படும்படி செய்தார்கள். உண்மையில் அக்காலத்தில் ஜப்பான் ராஜாங்கம் திறமையாய் நடந்ததுபோல் எப்போதும் நடந்ததில்லை.

இவைகளெல்லாம் செய்யப்பட்டு வந்தகாலத்தில் கவுண்டு ஐட்டோவின் பெயர் முதன்மையாக நின்றது. அவரும் 1867-ம் வருஷத்துப் புரட்சித் தலைவரில் ஒருவர். அவருடைய சக்தியினாலும் செல்வாக்கினாலும் அசையாத தேசாபிமானத்தாலும் ராஜபக்தியாலும் சக்கிரவர்த்தியின் மந்திரிமார்களில் பிரதானஸ்தராயிருந்தார். அக்காலத்தில் நடந்த புதுத்திருத்தங்கள்

ஒவ்வொன்றிலும் கவுண்டு ஐட்டோவின் முக்கிய சம்பந்தம் இல்லாதிருந்ததில்லை. ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் யாத்திரைபோய் ராஜீய அமைப்புகளையும் ஸ்தாபனங்களையும் நன்குய்ச் சோதித்துக் கற்று வந்தார். 1890-ம் வருஷத்தில் ஜப்பானில் பார்லிமெண்டு ஸ்தாபிக்கப்பட்டபோது ராஜீய அமைப்பு சாசனத்தை அவரே எழுதி உருவமைக்கும்படி நேரிட்டது. பார்லிமெண்டு ஸ்தாபித்தான பிறகும் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் ஒழியவில்லை. கவுண்டு இடகாகி ஒரு கக்ஷிக்குத் தலைவராகவும் கவுண்டு ஒகுமா மற்றொரு கக்ஷிக்குத் தலைவராகவும் பிரிவுபெற்று இருந்தார்கள். ஆனால் இருவரும் கவுண்டு ஐட்டோவின் உதவியைத் தேடினார்கள். இடகாகி கக்ஷியார் கவுண்டு ஐட்டோவுடன் சேரக் கவுண்டு ஒகுமா எதிர்க்கக்ஷித் தலைவராயினர். இதுவரையில் ஜப்பானில் தோன்றின திருத்த ஊக்கமெல்லாம் ஒரு பெரும் நோக்கத்தைக் கொண்டதாயிராமல் அந்தந்தத் தலைவரை நாடினதாயிருந்தன. போகப் போக இந்த நிலைமை மாறி, அன்னியர்களுடன் யுத்தம் செய்ய நேரிட்டபோது தேசத்தில் ஸ்வாதீனமும் பெருமையுமே அனைவரும் தம் நோக்கமாகக் கொள்ள, தலைவரை நாடி நின்ற கக்ஷிப் பிரதிகக்ஷிகள் ஒழிந்தன. இந்த விவரங்களைப் பற்றிப் பின்னால் சொல்லுவேன். மத்தியில் புதிய ஜப்பானை ஆக்கியவர்களில் சிலருடைய சரித்திரத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுவேன்.

# CHAPTER II

# இரண்டாவது அதிகாரம்

## புதிய ஜப்பானை ஆக்கியவர்கள்

ஆதியிலிருந்த சைனியத்தலைவன் அதிகாரத்தைக் கவரப்பார்த்தது—கவர்ந்து "ஷோகூன்" என்னும் பட்டப்பெயர் பெற்றது—தேசாபிமானிகள் "ஷோகூன்" வசத்தில் ஜப்பானுக்கு அபாயமென நினைத்தது.—300-வருஷ காலமாய் "ஷோகூன்" செலுத்திவந்த அதிகாரத்தைச்சொற்பகாலத்தில் அடியோடு நீக்கியது—பழைய கால ஏற்பாடுகளும் அனுஷ்டானங்களும் கூடாவென நினைத்தது—ஜப்பானியர்களை அந்நிய நாடுகளுக்கு அனுப்பினது—முட்ஸுஹிடோ சக்கிரவர்த்தியானது—அவருடைய குணதிசயங்கள்—ஜனங்களுக்கு அவரிடமுள்ள மதிப்பு—சக்கரவர்த்தி காலங்கழிந்து வரும் விதம்—கல்வியில் அவருக்கு உள்ள பிரியம்—அவருக்குள்ள போர்வன்மை—அவர் காலத்தில் ஜப்பான் அடைந்த அபிவிருத்தி—கப்பல் செய்வதிலும் கடற்படையை அமைப்பதிலும் இங்கிலாந்தின் மாதிரி அனுஷ்டிக்கப்பட்டது—மகுடஞ் சூட்டப்பட்டபோதே வெளிவந்த விளம்பரம்—சக்கிரவர்த்தினியும் இவருடைய குணாதிசயங்களும்—இவருக்குள்ள தேசாபிமானம்—ஜனங்களுக்கு இவரிடமிருக்கும் மதிப்பு—மார்க்விஸ் ஐட்டோவும் புதிய ஜப்பானும்—இவரும் ஐரோப்பிய தேசங்களின் சில ரணவீரர்களும்—ஐட்டோவும் இராஜதந்திரப் பயிற்சியும்—இவர் தம் தேசத்துக்குப் பட்டபாடு—இவர் கொண்ட மதக்கொள்கை—1905-ம் ஆண்டில்

இவர் கொரியாவுக்குப் பிரதிநிதியாய்ப் போனது—1909-ம் வருஷம் இவரைக் கொரியாத் துஷ்டன் ஒருவன் சுட்டுக் கொன்றது—பாரன் ஷிபுஸாவாவும் ஜப்பானின் செல்வப்பெருக்கும்—மந்திராலோசனை சபையில் சேராமலே தேசத்துக்குழைத்தார்—ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பலவித்வான்கள் கற்கச்சென்றார்—ஜப்பானிய வழக்கப்படி இரண்டு கத்திகளை இருபுடையிலும் கட்டும் வழக்கம் நீத்தார்—அப்படி நீத்தலின் பயன்—இவர்க்கு தீகரான மற்ற ஜப்பானியர்கள்—ஜப்பான் தேசத்து இராஜதந்திரிகள்—கவுண்ட் மத்ஸுகாடா—அரசிறை மந்திரியாயிருந்தது—கௌண்ட் இநோயியும் புதிய ஜப்பானும்—அவரும் விசித்திர வேலையும்—கௌண்ட் ஒகுமாவும் தம் பினத்தாரின் குணங்களும்—அவரும் ஜப்பானும்—அவர் ஒரு பெரிய பேச்சாளி—ஒகுமாவும் ஜப்பானியர்களின் கல்வியும்—இராச்சியத்தில் அவர் கொண்ட இடம்—அவரும் ஐட்டோவும் யமகாடாவும்—ஜப்பானியக் கோட்டைச் சுரன்—பாரன்சுயெமட்ஸுவும்மருசன் விபத்தும்—அவரும் ஜப்பான் கொண்ட புதுநாகரீகமும்—வைகவுண்ட் ஹையாஷியும் ஆங்கிலேயர் நட்டதையும்--அவர் சரித்திரம்—அவரும் இங்கிலாந்துடன் ஜப்பான் கொண்ட கூட்டுறவும்—லண்டனில் ஜப்பானியர் மந்திரி ஆபீசு—அவர் மனைவியார்—ஜெனரல் வைகவுண்ட் கட்ஸுராவும் ஜப்பானியப் படையும்—அவரும் ஜனசமூகமும்—ஜப்பான் தேசத்து சேனாதிபதிகள்—மார்க்விஸ் யமகாடா—ஜப்பானியச் சேனையும் யமகாடாவும்—அவருடைய இராஜதந்திரம்—ஸொரூபம்—பீல்ட் மார்ஷல் மார்க்விஸ் ஓயாமா—அவர் தோற்றம்—அவருடைய குடும்பம்—அவர்கொண்ட குடியன்பு--ஜெனரல் புகிஷிமா--முன்னர் ஆசாரத்தனம்—அவருடைய குணாதிசயங்கள்—ஜ



பானிய யுத்தப்பாட்டு—ஜெனரல் குரோகி—ஜெனரல் ஒக்கு—பாரன் ஜெனரல் கோடாமா—அவரிடத்தில் ஜப்பானியர் கொண்ட நம்பிக்கை—லெப்டினண்ட் ஜெனரல் டிரௌச்சியும் சீனாவோடு நடந்த யுத்தமும்—அட்மிரல் டாக்கியோ ஹீரோஸியும் போர்ட் டார்தர் முட்டடியும்—அவர் தம் நாடு பொருட்டுத் தீரமாய் உயிர் துறந்தது—தளவாய் ரோட்ஸும் ருஷியாவோடு நடந்த யுத்தமும்—அட்மிரல் டோகோ—டோகோவின் இளமையும் சரித்திரமும்—கோஷின் சங்கதி—டோகோவின் அடக்கமும் கடமைப்பக்தியும்—ருஷியாவோடு நடந்த யுத்தத்தில் புகு முன்னால் அதைப்பற்றி அவருக்கு இருந்த அபிப்பிராயம்—அட்மிரல் காமிமூரா—அவர் சரித்திரம்—அமைதிக் காலத்தில் அட்மிரல் எப்படி?—

---

## சக்கிரவர்த்தி

ஜப்பானிய மேற்குலத்தோன் ஒருவன் ஆதியில் சைனியத்துக்குத் தலைவனாய் நியமிக்கப்பட, அவன் மெல்ல மெல்ல ராஜாங்க அதிகாரத்தைக் கவர ஆரம்பித்தான். அப்படியே கவர்ந்து அவன் வமிசத்தார்கள் சக்கிரவர்த்தியை ஒரு மூலையில் ஒதுக்கி, பெயருக்குமட்டும் அவர் ராஜாங்கத்துக்குத் தலைவராயிருக்க, உண்மையான சகல விவகாரங்களும் அவர்களே நடத்தத் தலைப்பட்டார்கள். இப்படி நடத்தத் தலைப்பட்டவருக்கு 'ஷோகூன்' என்ற பட்டப்பெயர் கொடுக்கப்பட்டது. இந்த ஷோகூன் அதிகாரஸ்தனே சக்கிரவர்த்தி போலாகி, வெகு பலவானாயிருக்கையில், ஐரோப்பிய நாட்டார் ஜப்பான் கடற்கரையில் வர்த்த

கத்துக்காகத் தங்களுக்கு இடம் வேண்டுமென்று கேட்கத் தலைப்பட்டார்கள். ஆரம்பத்தில் டேனியர், பிறகு டச்சுக்காரர்கள் வந்தார்கள். பிறகு ஆங்கிலேயர் அமெரிக்கர் முதலாயினோர் வந்தார்கள். வந்து பலவிதமான சுதந்தரங்களைக் கேட்டு ஜப்பான் ராஜாங்கத்தாரை நிர்ப்பந்தப் படுத்த ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் ஷோகூனைத்தான் இந்த அன்னியர்கள் கவனித்தார்களே யன்றி, சக்கிரவர்த்தியைக் கவனிக்கவில்லை.

இதைப்பார்த்து ஜப்பானியத் தேசாபிமானிகள் மனதில் பயங்கொண்டார்கள், ஜப்பான் தேசத்தில் ராஜாங்கம் இரண்டுபட்டு ஒற்றுமையும் பலமும் குறையுமானால் தங்கள் தேசத்தை ஐரோப்பியர் விழுங்கி விடுவார்கள், ஜப்பான் இந்தியாவைப் போலாகி விடும், என்று ஜப்பானிய மேற்குலத்தோர் எல்லோரும் சேர்ந்து, தங்களுள் ஒருவனான ஷோகூன் தன்னுடைய ஸ்தானத்தை இழந்து சகல அதிகாரங்களையும் அவன் சக்கிரவர்த்திக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும் ஷோகூன் என்கிற ஸ்தானமே இல்லாமற் போகவேண்டுமென்றும் அது முதல் ஜப்பானனது சக்கிரவர்த்தியாலும் அவர் மந்திரிகளாலும் ஆளப்பட வேண்டுமென்றும் தீர்மானித்து, அப்படியே செய்து முடித்தார்கள். சுமார் 300-வருஷகாலம் சகல அதிகாரங்களையும் செலுத்திவந்த ஷோகூன் ஸ்தானத்தைச் சொற்பகாலத்தில் இருந்த விடந்தெரியாமல் செய்து விட்டார்கள். இது 1867-ம் வருஷத்தில் நடந்தது.



சக்கிரவர்த்திக்குப் பழையகாலத்தைப்போல ராஜாங்க அதிகாரத்தைப் புதுப்பித்துக்கொடுத்தாலுங்கூட, ஜப்பான் மேற்குலத்தோர் என்ன நினைத்தார்களென்றால், பழையகாலத்து ஏற்பாடுகளும் அனுஷ்டானங்களும் ராஜரீக ஒழுக்குகளும் தற்காலத்துக்குப் பயன்படாவென்று யோசித்து ஐரோப்பிய ராஜாங்கங்களைப்போல ஜப்பான் ராஜாங்கத்தையும் சீர்ப்படுத்த ஆரம்பித்தார்கள். ஜப்பான் தேசாபிமானிகள் நூற்றுக்கணக்காக ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் போய், என்னென்ன தெரியவேண்டியவையோ அவைகளையெல்லாம் தெரிந்துகொண்டு, மீண்டும் ஜப்பானுக்கு வந்து, அங்கே பார்லிமெண்டு ஸ்தாபித்தார்கள். தரைப் படைகளையும் கடற்படைகளையும் ஐரோப்பியப் படைகளைப்போல சீர்ப்படுத்தினார்கள்; வர வர தற்காலத்து அந்தஸ்துக்கு வந்தார்கள். இவைகளையெல்லாம் செய்ததில் இப்போதுள்ள சக்கிரவர்த்தி மகா தைரியத்தையும் மதியூகத்தையும் தேசாபிமானத்தையும் காட்டித் தம் தேசத்துப் புத்திமான்களோடு ஒத்துழைத்துத் தம் தேசத்தையும் ராஜவம்சத்தையும் மகோன்னதக் கீர்த்திக்கு உரியவையாக்கினார்.

இந்தச் சக்கிரவர்த்தியின் பெயர் முட்ஸு-ஹிடோ. அவர் தகப்பனார் கோமி சக்கிரவர்த்தி 1867-ம் வருஷத்தில் இறந்துபோகவே, 15-வயதில் சக்கிரவர்த்தியாய் சிம்மாசனம் ஏறினார். பிற்காலத்தில் அவர் உலகத்தையாளும் மன்னர்களில் நிகரற்ற கீர்த்திவானாய் விளங்குவாரென்று ஒருவரும் நினைக்கவில்லை. அவர்

சிம்மாசனம் ஏறினபோது, ராஜ்யபாரத்தை ஷோகூன் வம்சத்தினர் வகித்து வந்தார்கள். ஜப்பான் தேசம் பழையகாலத்து ஏற்பாடுகளை உதறி மேல்நாட்டு நவீன நாகரீகத்தை ஏற்குமென்பதற்கு அடையாளமாய் அக்காலம் தோன்றியிருந்த என்றுமில்லாத சக்திகளை ஷோகூன் அறிந்திருக்கவில்லை. ஆயினும் காலபலத்தால் ஷோகூனுடைய அதிகாரம்போய் அவர் வம்சத்தினர் மற்ற சிற்றரசர்கள்போல் பென்ஷன் பெறும் மேற்குலத்தோராகி, சக்கிரவர்த்தியே சகல அதிகாரத்தையும் பெற, அவர் புதிய ஜப்பான் கிளம்புவதற்கு முக்கிய காரணமாயினர். அவர் ராஜ்யபாரம் வகித்து நாற்பது வருஷம் ஆவதற்குள்ளாக ஜப்பானில் தோன்றின மாறுதல்கள் உலகத்தில் மற்ற எத்தேசத்திலும் நூற்றாண்டளவான காலத்திலும் உண்டானவையல்ல. ஜப்பானுக்கு எப்போதுமில்லாத வன்மையும் பெருமையும் சம்பாதித்து அதன் கூட்டுறவை மேல்நாட்டார் விரும்பவும் அதன் போட்டிக்கு அவர்கள் பயப்படவும் அவ்வளவு உன்னத நிலைமைக்கு அதைக் கொண்டுவந்த சக்கிரவர்த்தியிடத்தில் ஜனங்கள் அளவற்ற அன்பும் பக்தியும் பாராட்டி அவரைத் தெய்வம்போல் வணங்குவது ஆச்சரியமல்ல. உலகத்தில் வேறெந்த அரசனும் தன் தேசத்துக்குச் செய்தது முட்ஸுஹிடோ ஜப்பானுக்குச் செய்ததைப்போல் ஆகக்கூடியதில்லை.

சக்கிரவர்த்தி தெய்வம்; ஜனங்கள் அவரைத் தெய்வம்போல் வணங்கவேண்டும்,—என்பது ஜப்பா



னியரின் கொள்கை. அவர் இறந்துபோனால், அவருடைய முன்னோர்களைப்போல் அவரும் தெய்வமாகி விடுகிறார். தெய்வத்தின் இருப்பிடமும் அதனுடன் பழகுவதும் எவ்வளவு பயபக்திக்கு உரியனவென்று கருதப்படுகின்றனவோ, அப்படியே 'சக்கிரவர்த்தி விஷயத்திலும் கருதப்படுகின்றது. அவர் முன்பாக நின்று அவருடன் சம்பாஷிக்க இரண்டொருவரே சுதந்திரம் பெற்றவர்கள். வருஷத்துக்கொருமுறை சக்கிரவர்த்தி ஒரு தோட்டக் கச்சேரி நடத்துவது வழக்கம். அதற்கு அநேகர் வரவழைக்கப்படுவார்கள். அழைக்கப்பட்டவர்கள் சக்கிரவர்த்தியின் ஆசனம் போடப்பட்டிருந்த இடத்திலிருந்து தரைப் புழுதியையும் அவர் புசித்து மிகுந்த உண்டித்துண்டுகளையும் முடிந்து கொண்டுபோய் வீடுகளில் பத்திரமான இடத்தில் சேமித்து, நாம் நமது தேவாலயங்களில் பெறும் பிரசாதங்களை மதிப்பதுபோல் மதித்து வருவார்கள். சக்கிரவர்த்தி வெளியில் சவாரிபோகும்போது இருபக்கங்களிலும் ஜனங்கள் மேல்மாடிகளிலிருந்து அவரைப் பார்க்கக்கூடாது. தெருவில் போகிறவர்கள் அவருடைய முகத்தை உற்றுப்பார்க்கக் கூடாது. அவருடன் வண்டியில் செல்லும் உத்தியோகஸ்தர் தலையைக்குனிந்து கொண்டேயிருக்கவேண்டும். இம்மாதிரி சக்கிரவர்த்தியைத் தெய்வம்போல் எத்தித் தொழுவது வரவர சற்றுக் குறைந்து வந்தாலும் சாமானிய ஜனங்கள் மனதில் எப்போதும் போலவே இருந்து கொண்டிருக்கின்றது. 1889-ம் வருஷத்தில்

விளம்பரப்படுத்தின ராஜாங்க அமைப்புப் (Constitution) பத்திரத்தில் சக்கிரவர்த்தியின் சரீரம் பரிசுத்தமென்றும் தீண்டக் கூடாததென்றும் வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.

முட்சூஹிடோ சக்கிரவர்த்தி ஆடம்பரமின்றி ஜீவிப்பவர். காலத்தை ஒழுங்குடன் வரையறுத்துக் கழிப்பவர். காலை நேரத்தில் ராஜாங்க விஷயங்களைக் கவனிக்க ஆரம்பிக்குமுன், கீழ்நாட்டுப் பழைய கிரந்தங்களைப் படிப்பார். ராஜநீதி நூல்களையும் தெளத்திய நீதி நூல்களையும் கற்பிக்கவரும் ஆசிரியர்களுடன் சிறிது நேரம்போக்குவார். பிறகு மாலைப்பொழுதில், செய்யுளும் கலைநூல்களும் கற்பார். சக்கிரவர்த்திக்குக் கவிபாடும் சக்தியும் உண்டு. அவர் கற்கும் விஷயங்கள் பலவாயினும், பலதேச சம்பந்த சட்டத்தை (International law) விசேஷப்பிரியத்துடன் கற்கிறார். அதில் அவருக்கு விசேஷ சாமர்த்தியம் உண்டாயிருப்பதால், சில சமயம் மந்திரிகளுக்குத் தோன்றாததையும் அவர் எடுத்துச் சொல்வார்.

சக்கிரவர்த்தி வெளித்தோற்றத்தில் வீண் அலங்காரம் பாராட்டுவதில்லை, கம்பீரமான பார்வையுடையவராயிருப்பர். அருந்தொடைக் காலங்களில் மட்டும் மற்ற ஜப்பானியரைப்போல் பட்டுடுப்பு உடுப்பாராயினும், மற்றக்காலங்களில் ஐரோப்பிய மன்னரைப் போல் கடற்படைத்தலைவர் அல்லது தரைப்படைத் தலைவர் உடுப்பை உடுப்பதில் பிரியமுள்ளவர். குளிர்ந்த முகமும் மரியாதைச் சுபாவமும் உள்ளவர், தாம்



சக்கிரவர்த்தி என்ற உணர்ச்சியை மறந்தவராகத் தோன்றுமளவே பேசுவர். ஜப்பானியர் பொதுவாய்க் குள்ளமானவராயினும் சக்கிரவர்த்தி 5-அடி 8-அங்குலம் உயரமுள்ளவராய்ப் பார்ப்போர் மனதில் மதிப்பையுண்டாக்கக் கூடியவர். சிலகாலம் வரையில் ஓயாமல் சுருட்டுக்குடிக்கும் வழக்கம் வைத்துக்கொண்டிருந்தாராம். அவருடைய சாப்பாடும் ராஜபோஜனமாகவே யிருக்குமெனப்படுகிறது. சக்கிரவர்த்தி பாலியத்தில் குதிரைசவாரியில் நிகரற்றவரெனப் பெயர்வாங்கியிருந்தாலும், ஒருமுறை அவருக்கு நேரிட்ட விபத்தினால் குதிரைசவாரி அதிகமாய்ச் செய்வதில்லை. குஸ்தி செய்வதிலும் சாமர்த்தியசாலி.

போர்வீரர்கள் எந்த அந்தஸ்துள்ளவராயினும் சக்கிரவர்த்தியை வீரபக்தியுடன் தொழுவார்கள். ரணகளத்தில் உயிரை விடும்போதும், சக்கிரவர்த்தி நீடூழி வாழ்க வென்று வாய்க்குள் சொல்லிக்கொண்டே உயிர்விடுவார்கள். சக்கிரவர்த்தியின் அந்தப்புரத்தில் சுவர்களிலெல்லாம் ரணவீரர்களின் படங்கள் தொங்கிக்கொண்டிருக்கும். ஹிரோஷிமாவில் சண்டை நடந்ததும், சக்கிரவர்த்தி சாமானிய ஜோல்ஜர்களைத் தம் சந்நிதானத்தில் வரவழைத்து அவர்களுடைய சுகதுக்கங்களைப்பற்றிக் குசலப் பிரசனங்கள் செய்ய, ஸோல்ஜர்கள் பக்தி பொங்கி கண்ணீர் சொரிந்தனராம். இவர்களிடத்தில் சக்கிரவர்த்தி வைத்திருக்கும் அன்பினால் சாமானிய ஸோல்ஜரைப்போலவே வசிப்பதில் அவருக்கு இஷ்டமென்று சொல்லப்படுகிறது.

ஜப்பானியச் சக்கிரவர்த்தியைப்போல் உலகத்தில் வேறு எந்த அரசனும் தான் செலுத்திவந்த தன்னரசை (Autocracy) தானாகவே கைவிட்டுத் தன் பிரஜைகளுக்குச் சிறிது சிறிதாய் சுதந்திரம் கொடுத்து ஒரு தலைமுறைக்குள் அந்தச் சுதந்திரத்தின்பேரில் நிர்மாணிக்கப்பட்ட ராஜபத்தியத்தை (Monarchy) ஸ்தாபித்ததில்லை. முட்ஸுஹிடோ சக்கிரவர்த்தியைப் பற்றிப் பின்வருமாறு புகழுவோர் ஒரு அமெரிக்க ஆசிரியரேயன்றி ஜப்பானியரல்ல :—

"உலகத்தில் எந்த அரசனை ஜப்பானியச் சக்கிரவர்த்திக்கு ஈடாகச் சொல்லலாம்? ஏஷியாவில் ஒருவருமில்லை என்பது நிச்சயம். சீனச்சக்கிரவர்த்தியைச் சொல்லலாமா? பர்ஷியா ஷாவையாவது துர்க்கி சுல்தானையாவது சொல்லலாமா? ஐரோப்பிய மன்னர்களைச் சோதிப்போம். ருஷியாச் சக்கிரவர்த்தி இளம் பருவமுள்ளவர்; அவருடைய திறமையைப் பற்றி இதுவரையில் ஒன்றும் தெரியாது. ஜர்மெனிச் சக்கிரவர்த்தியோ, ராஜ தந்திரத்திலாவது யுத்த தந்திரத்திலாவது தேர்ந்தவரென இன்னும் காட்டிக் கொள்ளவில்லை. ஆஸ்டிரியாச் சக்கிரவர்த்தியோ வயது சென்ற ஸாத்வீகப் பிரபு. பல பாஷைகள் பேசும் தம் பிரஜைகளை ஒருவிதமாய் சமாளித்துக் கொண்டு போகிறார். இடலி அரசன், பாவம்! அவர் கதி துக்கமாய் முடிந்தது. இங்கிலாந்து மகாராணியை இங்குச் சேர்க்கவேண்டியதில்லை. மற்ற சிறு அரசர்களைப் பற்றியும் பேசவேண்டாம். பிரன்சு குடி



யரசுத் தலைவரைப்பற்றியாவது வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலுமுள்ள குடியரசுகளின் தலைவர்களைப் பற்றியாவது பேசுதலும் அனாவசியம். ஜப்பான் சக்கிரவர்த்தி பெருங்காரியம் செய்து முடித்தனர்* என்றும் அபிவிருத்தி செய்தனர் என்றும் வெற்றி பெற்றனர் என்றும் எழுதிவைக்கக்கூடியது போல வேறு எத்தேசத்து அரசனைப்பற்றியும் எழுதிவைக்க முடியாது. ரோம ஏகாதிபத்தியத்துக்கு ஆகஸ்டஸ் ஆட்சி எப்படியிருந்ததோ, இங்கிலாந்துக்கு மகா ஆல்பிரட் விஜயன் வில்லியம்(William the Conqueror) புரிந்த ஆட்சி எப்படியிருந்ததோ, ஸ்வீடனுக்குக் கஸ்டவஸ் அடால்பஸ்ஸின் ஆட்சியும், ருஷியாவுக்கு மகா பீடரினுடைய ஆட்சியும், பிரான்ஸுக்கு நெபோலியனுடைய ஆட்சியும், இட்டலிக்கு விக்டர் எமானியுவலினுடைய ஆட்சியும், ஜெர்மனிக்கு முதல் வில்லியத்தினுடைய ஆட்சியும், நம் தேசத்துக்கு (அமெரிக்கா ஐக்கியமாகாணங்களுக்கு) லின்கனுடைய தலைமையும் எப்படியிருந்தனவோ, அப்படி இவர்களுக்கு அதிகமாகவே மிகாடோவின் ஆட்சி ஜப்பானுக்கு இருந்து வருகிறது. ஜப்பானியச் சக்கிரவர்த்தி 45-வயதுக்கு அதிகப்படாத சிறுவர். சூரியோதய ராஜியத்தின் அரசனாக இன்னும் நீண்டகாலம் அவர் வாழக்கூடியவர். உலகத்தில் மகுடம் புனைந்த மன்னரில் அவரை உத்தமரென்று சொல்ல இயலாதென்றால், வேறு எவரை அவ்வாறு சொல்லல் இய

னும்! உலகத்தில் புரட்சி செய்தோரில் இவர் முதல்வரல்லராயின் வேறு யாவர் முதல்வர்?"

இந்தச் சக்கிரவர்த்தி காலத்தில்தான் ஜப்பான் தற்காலவழிகளில் அடைந்த விர்த்தியெல்லாம் நேரிட்டிருக்கின்றது. எந்த விதமான புதிய ஏற்பாட்டிலும் சக்கிரவர்த்தி முதல்வராயும் பிரேரணைக் கர்த்தாவாயும் விளங்கியுள்ளார். கயோட்டோவில் இவர் சிறுவராயிருந்தபோது தாம் சிம்மாதனம் ஏறுதற்கு முன் தம் அரண்மனைத் தோழர்களில் மேல்நாடுபோய் வந்தவர்களைத் தமக்குப் போதகராய் நியமித்து ராஜீய சம்பந்தமான அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டார். சிம்மாதனம ஏறினபிறகு, இந்த வழக்கத்தை உறுதிப்படுத்தி 1867-ம் வருஷத்தில் பிரின்ஸ் இன்வாகுரா (Inwakura)வையும் வேறு சிலரையும் மேல்நாடுகளுக்கனுப்பி அங்குள்ள ராஜ்யபார முறைகளைக் கற்றுக்கொண்டு வரச்சொன்னார். அப்படிக் கற்றுக்கொண்டு வந்தவர்களைத் தம்முடைய முக்கிய மந்திரிகளாக நியமித்தார். அவர்களது யோசனையைக்கேட்டுத் தம் ராஜ்யத்தில் அநேக திருத்தங்களைச் செய்தார். அப்படிக் கற்றுக்கொண்டு வந்தவர்கள் எவராயினும் அவரைத் தமது போதகராகக் கருதி அவரை நானாவிஷயங்களைப்பற்றிக் கேள்விகள் கேட்டு அவர்கள் அறிந்தவற்றையெல்லாம் தாமும் அறிந்துகொண்டார். அறிந்துகொண்டு அவற்றிலிருந்து பாலேடு எடுப்பதுபோல் சாராம்சங்களை எடுத்து அநுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தார். கப்பல் செய்வதிலும் கடற்படை அமைப்



பதிலும் இங்கிலாந்தைமாதிரி அநுஷ்டிக்கப்பட்டது; ஜர்மெனியைப் பார்த்துத் தரைச்சைனிய அமைப்பும் வைத்திய இலாகாவின் அமைப்பும் செய்யப்பட்டன; சங்கீதமும் கலைகளும் பிரான்ஸிலிருந்தும் இடலியிலிருந்தும் தெரிந்துகொள்ளப்பட்டன. சட்டமும் கல்வியும் சம்பந்தப்பட்ட விதிகள் எல்லாத்தேசங்களிலிருந்தும் பொறுக்கி எடுக்கப்பட்டன. சக்கிரவர்த்தி தாம் செய்வதிலெல்லாம் முற்றுறச் செய்வது வழக்கமாகையால் தாம் செய்த திருத்தங்களில் சமயத்திருத்தமும் சேர வேண்டுமென்று உலகத்திலுள்ள சமயக் கொள்கைகளையெல்லாம் அறிந்து வரும்படி தக்க யோக்கியதையுள்ளவர்களை நாலு பக்கங்களுக்கும் அனுப்பினார். மதக்கொள்கைகளைக் கற்கப் போனவர்கள் ஜப்பானுக்குத் திரும்பி வந்து ஜப்பானியர் ஏற்கெனவே அநுஷ்டித்து வரும் கொள்கைகளை மாற்ற அவசியத்தைக் காணோமென்று சக்கிரவர்த்திக்கு அறிவித்தார்கள். அப்படி அறிவித்ததைக்கண்ட ஜனங்கள் திருப்தி யடைந்தார்கள்.

பிறகு 1883-ம் வருஷத்தில் மேற்றிசைத் தேசங்களைப்போல் ஜப்பானியரும் பிரதிநிதி முறைப்படி பார்லிமெண்டு ஸ்தாபித்து ராஜாங்கம் நடத்தப்படவேண்டுமென்று நிச்சயிக்க மார்க்விஸ் ஐட்டோ அப்படி நடத்துதற்கு அவசியமான சிலமுக்கிய விதிகளை யமைத்து ஓர் பத்திரம் தயார் செய்ய, அதற்குச் சக்கிரவர்த்தி தமது முழுசம்மதத்தையும் கொடுத்தார். இதனால் அதுவரையில் ஸ்வேச்சா பத்தியம் செலுத்தும் ராஜபதவியைப்

பெற்றிருந்தவர் ஜனாபிப்பிராயத்தின்பேரில் நிர்மாணிக்கப்படும் சட்டத்துக்குட்பட்ட ராஜபத்தியத்தலைவரானார். இவ்வாறானது உலகத்துச் சரித்திரத்தில் எளிதாய் சம்பவிக்கக்கூடியதாகக் காணவில்லை. ஜனங்கள் சுவேச்சாபத்தியத்தின் கொடுமைகளைச் சகிக்கவொண்ணுமல் வெகுகாலம் முறையிட்டும் பிறகு கலகமும் புரட்சியுஞ் செய்தும் அரசனை பயமுறுத்தியே சுதந்திரங்கள் பெற்றிருக்கிறார்கள். ஜனங்களுக்குப் பயந்து ஒரு முறை சுதந்திரங்கொடுத்த அரசன் சுவேச்சாபத்தியத்தில் தனக்குள்ள இயற்கை விருப்பத்தால் மறுபடியும் உற்ற சமயம் நேரிட்டபோது தான் கொடுத்த சுதந்திரத்தை நிறுத்தி எப்போதும் போல் சுவேச்சாபத்தியத்தை முன்னிலும் கடுமையாய்ச் செலுத்துவான். மறுபடியும் ஜனங்கள் கலகம் செய்து முன்னிலும் அதிகமான சுதந்திரங்களைப் பெறுவார்கள். இவ்வாறே உலகத்தில் ஜன சுதந்திரங்கள் நிலைபெற்றிருக்கின்றன. ஜப்பானில் மட்டும் இத்தகைய சம்பவங்களெவையும் நேரிடாமல் காலநிலைமையை நோக்கி அரசர் தமது அதிகாரத்தை ஜனங்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்து நிகரற்ற புகழுடன் விளங்குகின்றார்.

சக்ரவர்த்திக்கு மகுடம் சூட்டப்பட்டபோது அவர் பின்வருமாறு விளம்பரம் ஒன்றுசெய்தார். "நம் முன்னோர் வகித்துவந்த சிம்மாசனத்தை நாம் வகிக்கப் புகுங்கால், நாம் நிச்சயிப்பது என்னவென்றால்; நாம் செல்லும் வழியில் என்ன கஷ்டங்கள் எதிர்ப்பட்டாலும் நம் தேசத்தை நாம் நேராக ஆட்சிபுரிந்து,நம் பிர



ஜைகள் அனைவரது அமைதியைக்காத்து, மற்றத் தேசங்களோடு நேசசம்பந்தங்கள் செய்ய முயன்று, நம் தேசத்தை மகிமை பெற்றதாக்கி, வளமும் சந்தோஷமும் ஸ்திரமான ஆதாரமாகக் கொண்டு நமது ஜனங்கள் ஜீவிக்கும்படி செய்து ராஜ்யத்தை நிர்வகிப்பதே நமது துணிபு."

தமது கடற்படைக்கும் தரைப்படைக்கும் பின்வருமாறு ஆக்ஞாபனம் செய்தார். "நாமே உங்களுக்கு முக்கிய சேனாபதி. ஆகையால், உங்களை நமது கரங்கள்போல் கருதுகிறோம். நம்மையும் நீங்கள் உங்களது சிரசுபோல் கருதவேண்டும். கருதி, பரஸ்பரம் நம்பிக்கையும் பக்தியும் உண்டாக வேண்டும். நமது கடமைகளை நாம் முற்றிலும் நிறைவேற்றுவதும் நிறைவேற்றாததும் உங்கள் கடமைகளை நீங்கள் எவ்வாறு நிறைவேற்றுகிறீர்களோ அதைப் பற்றின. நம்தேசம் மற்றத் தேசங்களது கருத்தில் உயர்ந்து சிறக்கத்தவறுமானால், அதனால் விளையும் துக்கத்தை நம்மோடு நீங்களும் அனுபவிக்க விரும்புகிறோம். அது கௌரவம் பெற்று சிறக்கும் பட்சத்தில் அந்தப் பெருமை எப்படி நம்மதோ அப்படி உங்களதுமாகும். உங்கள் கடமையில் நீங்கள் சலிக்காமல், நில்லுங்கள். தேசத்தைக் காப்பதில் நமக்குத்துணை செய்யுங்கள், அப்படிச் செய்வீர்களேயானால், ஜப்பான் ஜனம் வளப்பமுறுவதுடன் நமது தேசத்தின் நற்பெயரும் உயர்ந்து விளங்கும்."

## சக்கிரவர்த்தினி

முட்ஸு-ஹிடோ சக்கிரவர்த்தியின் மனைவியாரான ஹாரொனகோ (Harow-ko) 1850 வருஷம் பிறந்தார். சக்கிரவர்த்தியை விட இரண்டு வருஷம் மூத்தவர். ஜப்பானில் சக்கிரவர்த்திக்கு அடுத்த படியில் 5-உயர்தரக் குடும்பங்கள் உண்டு. அவைகளில் ஒன்றிலிருந்தே சக்கிரவர்த்தியின் மணப்பெண்ணைத் தெரிந்தெடுப்பது வழக்கம். ஹாரொனகோ பிரின்ஸ் தாடாகா வம்சத்தில் பிறந்த பெண். இளம்பருவத்தில் க்யோடோவில் வசித்தனர். மேல்நாடுகளில் சன்னியாசி மடங்களில் அடைப்பட்டிருக்கும் கன்னிகைகளைப்போல உலகத்து சம்பந்தம் எதுவுமறியாமல் வளர்க்கப்பட்டு வந்தார். அங்குத் தமது பிற்கால அந்தஸ்துக்குரிய பயிற்சியைப் பெற்று 19-வது வயதில் சக்கிரவர்த்தியை மணம் புரிந்தார். ஹாரொனகோ ஜப்பானில் தற்காலத்து ஸ்திரீகளில் அதிசயமாய்த் தோன்றுகிறவர். ஜப்பானிய உடைகளை உபயோகப்படுத்தாமல் பாரிஸ் நகரத்தில் தமது உடைகளைச் செய்வித்து உடுக்கிறார். அன்னிய உடுப்புகளானாலும் அவைகளை விகாரமாவது கூச்சமாவது இல்லாமல் மேல்நாட்டு ஸ்திரீகளைப்போலவே உடுத்து நடமாடுவார். அவர் தோற்றம் அழகுள்ளதா யில்லாவிட்டாலும் அவர் முகத்தில் களையிருக்கின்றது. அன்பும் புத்தியும் பரபரப்பும் விளங்குகின்றன. அவருடைய உடையும் மாதிரியும் மேல்நாட்டு உடையையும் மாதிரியையும் போன்றனவாயினும் இருதயத்தில் சொந்நாட்டவ



ராகவே இருக்கிறார். ஜப்பானின் புராதன வழக்கங்களில் பக்தியுள்ளவராயும் அனாவசியமான புதுமைகளை விரும்பாதவராயும் உள்ளவர்.

ஹாரொனகோ ஜப்பானுக்கு வீராவேசத்துடன் ஊழியம் செய்ய விரும்புகிறவர். தமது ஜனங்களுக்காக எவ்விதமாய்த் தம்மை அர்ப்பணம் செய்து கொள்ள வேண்டுமானாலும் செய்துகொள்வார். ஜனங்களுடைய கோரிக்கைகள், பயங்கள், விருப்பங்கள், எவைகளோ அவைகளைத் தம்முடையன வாக்கிக் கொள்வதே அவருடைய பெரும் விருப்பம். இதையறிந்து ஜனங்கள் சக்கிரவர்த்தியை உபசரிக்கிறபடி அவரையும் உபசரிக்கிறார்கள். சக்கிரவர்த்தியின் மகிஷி என்கிற காரணத்தாலல்ல, இனி வரும் சக்கிரவர்த்திக்கு ராஜீய அனுஷ்டானப்படி அவரே மாதா என்கிற காரணத்தினால் இவ்விதம் உபசரிக்கப்படுகிறார். சக்கிரவர்த்தினியை இவ்வாறு உபசரிப்பதற்கு வேறு விசேஷகாரணமுமொன்று உண்டு: வெகு காலத்துக்கு முன்னால் சக்கிரவர்த்தினியாயிருந்த ஒருவர் அவருடைய உத்தமகுணங்களினால் தெய்வம்போல் கொண்டாடப்பட்டார்; அவர் தற்காலம் புனர் ஜனனம் அடைந்து ஹாரொனகோவாக அவதரித்திருக்கிறாரென்று ஜப்பானியர் நம்புகிறார்கள்.

ஹாரொனகோவிடத்தில் சக்கிரவர்த்திக்குப் பூரணமான அபிமான மிருந்தபோதிலும் சக்கிரவர்த்தினியின் நிலைமை துக்கமற்றதாயிருக்கவில்லை. அவர் சக்கிரவர்த்தியின் பட்டமகிஷியாயினும் வேறு சில ஸ்திரீ

களையும் சக்கிரவர்த்தி மணம் புரிந்திருக்கிறார். பின்னால் சக்கிரவர்த்தியாக வரப்போகும் யுவராஜாவும் இவருக்குப் பிறந்த புத்திரரல்ல. சக்கிரவர்த்தியின் அந்தப்புரம் பட்டமகிஷி ஒருவராலும் வேறு பதினொரு ஸ்திரீகளாலும் பூர்த்தி பெற்றிருக்கும். பட்டமகிஷி மேற்சொன்ன 5-முதல்தர உயர்குலங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட, மற்றஸ்திரீகள் கீழ்த்தர அந்தஸ்துள்ள குலங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்படுவார்கள். பட்டமகிஷிக்குள்ள கௌரவங்கள் மற்ற ஸ்திரீகளுக்கில்லாவிட்டாலும் மற்ற ஸ்திரீகளில் எவருக்கேனும் பிறந்த பிள்ளை பட்டத்துக்கு உரியவனாகவே கொள்ளப்படுவான். இப்போது யுவராஜாவாயிருப்பவர் பட்டமகிஷிக்குப் பிறந்த பிள்ளையல்ல. கீழ் அந்தஸ்து ஸ்திரீகளில் ஒருவருக்குப் பிறந்தவர். ஆயினும் இனிப் பட்டமகிஷிக்குச் சந்ததி உண்டாகாதென்று நிச்சயமாய்த் தெரிந்தவுடன் அவருக்கு யுவராஜாப்பட்டம் சூட்டப்பட்டது. யுவராஜாவுக்கும் சமீபத்தில் ஒருபிள்ளை பிறந்து அந்தப்பிள்ளையும் பட்டத்துக்கு உரியவனாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறான். இந்த யுவராஜாவிடத்தில் ஹாரௌகோ தம் சொந்த மகனுக்குரிய அன்பைப் பாராட்டி வருகிறார். அவருடைய படிப்பிலும் பயிற்சியிலும் முழுக்கருத்தும் வைத்திருப்பதன்றி அவருடைய ஜனன மாதாவையும் வெகு க்ஷேமமாய் நடத்தி வருகிறார்.

சமீபத்தில் ருஷியாவுடன் யுத்தம் நடந்த காலத்தில் வழக்கமாயிருந்த சகல களியாட்டங்களையும் டல்



லாசக் கச்சேரிகளையும் விட்டுவிட்டு யுத்தம்நடத்திக்கொண்டிருந்த போர்ச்சேவகர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் எவையோ அவைகளைச் சேகரிப்பதில் முழுக்கவலையும் செலுத்தி வந்தார். சீனாவுடன் யுத்தம் ஆரம்பமானதற்குச் சிலகாலம் முன்னால் ரெட்கிராஸ் ஸொஸையடி என்று தாதிமார்களடங்கிய ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். இந்தச் சங்கத்தைப்பற்றி விஸ்தாரமாய்ப் பின்னால் தெரியப்படுத்தியிருக்கிறேன். இந்தச் சங்கத்துக்கு ஹாரௌகோ தலைவர். அதற்காக நாளெல்லாம் அவர் உழைத்து வருகிறார். யுத்தம் நடந்த காலத்தில் தாமாவது அரண்மனையைச் சேர்ந்த எவராவது சுகத்துக்காகவும் விளையாட்டுக்காகவும் சிறிது பணமேனும் செலவு செய்யப்பட மாட்டாதென்று கண்டிப்பாய் உத்தரவு செய்திருந்தார். மிருக்கக்கூடிய பணமெல்லாம் போர்வீரரின் உபயோகத்துக்கே செலவாக வேண்டுமென்று தீர்மானித்திருந்தார்.

---

## இராஜ தந்திரிகள்

### மார்க்விஸ் ஹிரோபூமி ஐட்டோ

(பின்வரும் சரித்திரம் அவர் உயிருடனிருக்கும் சமயம் எழுதப்பட்டது)

சொற்ப காலத்துக்கு முன் ஜப்பானும் சீனாவைப்போலவே ஒரு தேசமென்றும், ஜப்பானியர் சீனாவினின்றும் சிற்சில வேறுபாடுகளுடையவரேயன்றி மிகுந்த நாகரீகத் தேர்ச்சியுடையவரல்லரென்றும் எண்ணியிருந்த மேற்றேசத்தார் வியப்படை

யும்படி, 1894-95-ம் வருஷங்களில் ஜப்பானுக்கும் சீனுவுக்கும் யுத்தம் நேர்ந்தபோது அதில் ஜப்பானியர் காட்டிய வீரத்தன்மை, ராணுவ ஒழுக்கு, முதலியவற்றால் உண்டான புகழ்ப்பெருமைக்கெல்லாம் முக்கிய கர்த்தாவாயிருந்த ஐட்டோப் பிரபு சாமானியமல்லவென உலகில் கியாதி பெறலாயிற்று. அது முதல் எப்பொழுதும் அவரைப்பற்றிப் பத்திரிகைகள் பல பற்பலவிதமாய்ப் புகழ்வதையும் அவருக்கு ஏனைய நாட்டிலுள்ள ராஜதந்திர நிபுணரும் பொது ஜனங்களும் காட்டிவரும் மரியாதைகளையும், செய்துவரும் உபசாரங்களையும் பலர் அறிந்திருக்கிறார்கள். இவரைப் போலவே ஜப்பானில் இன்னும் ஐனோயி, ஒகுமா, யமகாடா, மட்ஸுகாட்டா ஆகிய அதி புத்திசாலிகள் புராதன நாகரீகத்தேர்ச்சியாதாரமாகவே ஜப்பான் முற்படுவதற்குத் தக்கவழி காட்டியவர்களாகி, ஐட்டோப் பிரபு அடைந்திருக்கும் கியாதியிற்களிப்புறுவதோடு அவர்களில் ஒருவர் "ஐட்டோப் பிரபுவாலேயே ஜப்பான் தேசத்தின் தற்காலத்தியதும் இனி வருங்காலத்தியதுமான நன்மை கைகூட வேண்டும்" எனப் புகழ்ந்து "தேசத்தில் துரைத்தனச் சங்கடங்கள் எவை நேரிடினும் அவற்றை நிவர்த்திக்க ஐட்டோப் பிரபுவன்றி வேறு யாருமிலர்" என வற்புறுத்திக் கூறியுளரென்றால், ஐட்டோவின் சிறந்த பதவியை வேறெடுத்து விளக்கவேண்டியது அவசியமோ? ஐட்டோப் பிரபு மந்திரியாயிருந்தாலுஞ்சரி, வேறுமந்திரி துரைத்தனம் செய்யும் காலமாயினுஞ்சரி, ஜப்பானியர் ஐட்டோப்



பிரபுவின் கருத்தையே பின்பற்றி வருகிறார்கள். ஏனைய மந்திரியின் துரைத்தனக் காலமாயிருந்தாலும் ஐட்டோப் பிரபுவே மந்திரியாயிருப்பது போல அவருக்குச் செல்வாக்குண்டு. நம்மிந்தியாவிலும் மற்றத் தேசங்களிலும் தேசப் பொதுநன்மையை நாடியுழைப்போர்களைச் சிற்சிலர் யாதும் தக்க காரணமின்றியே குறை கூறித் திரிவதுபோல, ஜப்பானிலும் சில சாமானியப் பத்திரிகைகள் ஐட்டோப் பிரபுவைச் சில சமயத்திற் குறைகூறினும், தேசத்திற் கெவ்விதக்குழப்பம் நேரிட்டபொழுதும் ஜப்பானியர் ஒருமிக்க ஐட்டோப் பிரபு ஒருவரையே தமது தலைவராக நம்பி அக்குழப்பத்தை விலக்கிக்கொள்ள விரும்புவார்கள். ஜப்பான் சக்கிரவர்த்தி ஐட்டோப்பிரபுவிடம் மிகுந்த நம்பிக்கையுடையவராயிருப்பதோடு, அவரால் தேசமடைந்திருக்கும் மேம்பாட்டையும் நன்கு தெரிந்துகொண்டவரே. ஜனங்கள் தெய்வத்தன்மையினரென மதித்துப் பூஜிக்கும் சக்கிரவர்த்தியே இவரைக் கனப்படுத்தி, எக்காலத்தும் சக்கிரவர்த்தியின் வம்சத்தினரே பெற்றுவந்த கௌரவப்பட்டமொன்றும் ஐட்டோப் பிரபுவுக்கு அளித்தனரென்றால், அங்ஙனம் கௌரவப்படுத்தப்பட்ட ஐட்டோப் பிரபுவிடம் ஜனங்கள் கொண்ட மதிப்பு எத்தன்மையாயிருக்குமெனத் தெரிந்துகொள்ளல்கூடும்.

பிரான்ஸ் தேசத்தை உயர்பதவிக்குக் கொண்டுவந்த நெப்போலியன் என்ற ரணவீரனென்ன, அல்லது ஜர்மெனித் தேசத்தை உலகத்தோர் கொண்டா

டச் செய்த பிரவீணரான பிஸ்மார்க்கென்ன, இவர்கள் தங்கள் தேசங்களை உன்னத பதவிக்குக்கொண்டு வந்ததில் பலவனுகூலங்கள் ஏற்கெனவே ஏற்பட்டிருந்தும், வெகுகாலம் பாடுபட்டே தம் நோக்கங்களை நிறைவேற்றி யிருக்க, நவீன ஏற்பாடுகள் யாவுமின்றிப் புராதன பழக்க வழக்கங்களையே மேற்கோளாகக் கொண்டு கிழக்குக் கோடியிற் கிடக்கும் ஜப்பான் தேசத்தைச் சுமார் 30-வருஷங்களுக்குள்ளாகத் தற்கால நாகரிகங்களில் முழுவதுந் தேர்ச்சியடையச் செய்த ஐட்டோப் பிரபுவுக்கீடாக மேற்குறித்த இரண்டு கீர்த்திவான்களைச் சொல்லலாகாதென்றும், மேனாட்டில் எந்த ராஜதந்திரநிபுணரையும் அவருடன் ஒப்பிட்டுப் பேசக்கூடவில்லையென்றும், சில ஐரோப்பியக் கல்விமான்களே அபிப்பிராயப் படுகிறார்கள்.

இவர் 1841-ம் வருஷத்தில் பிறந்து, சுமார் இருபத்திரண்டு வயது வரையில் தம் நாட்டிலுள்ள சாதாரணக் கல்விச்சாலைகளிற் கற்று, 1863-ம் வருஷத்தில் இனௌயிப்பிரபுவுடன் இங்கிலாண்டிற்குக் கல்வி கற்கும் நோக்கத்துடன் சென்று, சிறிதுகாலம் அங்குத் தங்கித் தம் நாட்டுக்குத் திரும்பின பொழுது, ஷிமோனோஸெகி என்ற ஜப்பானுக்குச் சொந்தமான கோட்டையொன்றை அன்னிய ராஜாங்கத்தார் முற்றுகைபோட்டுத் தகர்த்துக்கொண்டிருக்க, அவ்வன்னிய ராஜாங்கங்களின் மந்திரிகளுடன் கலந்து பேசவேண்டிய விஷயங்களெல்லாம் ஐட்டோப் பிரபுவே அக்காலத்தில் சிறியவயதினரேயாயினும், ஜப்பானின் பிரதிநிதியாய்ச்



சக்கிரவர்த்தியால் பொறுக்கப்பட்டு விளங்கினரெனக் கேட்க, இத்தனை சிறுவயதில் அவர் இத்தகைய ராஜதந்திரப்பயிற்சி யடைந்தது என்னமென எவர்க்கும் வியப்பே யாகின்றது. கலகம் ஓய்ந்து நாட்டிற் சமாதானம் பிறவியவுடனே, அன்னிய நாட்டாரின் கோபி என்ற துறைமுகத்தையடுத்த ஹியோகோ மாகாணத்துக்குக் கவர்னராக 1868-ம் வருஷம் இருபத்தேழாவது வயதில் ஐட்டோப் பிரபு நியமிக்கப்பட்டார். அவரையன்றி அன்னிய ராஜாங்கத்து மந்திரிகளோடு கலந்து பேசிக் காரியம் முடிவுசெய்யச் சாமர்த்தியவான் வேறே யாரும் ஜப்பானில் இல்லையென்றே ஜப்பான் சக்கிரவர்த்தி அவரைத் தெரிந்தெடுத்து நியமித்தார். இந்த ஸ்தானத்தில் இரண்டுவருஷ காலமிருக்க, 1870-ம் வருஷத்தில் அவரை அரசிறை உதவி மந்திரியாக நாட்டின் க்ஷேமத்தைக் கருதி நியமிக்கவேண்டியதாயிற்று. உடனே அவர் அமெரிக்காவுக்குச் சென்று ஒருவருடகாலந் தங்கி அரசிறை விஷயமாய்க் கற்கவேண்டிய தெல்லாங் கற்றுத்திரும்பச் சிலநாட் சென்றது. அப்படி 1873-ம் வருஷத்தில் திரும்பினபோது, மராமத்திலாகா மந்திரியாக மந்திரிகளின் சபையில் நியமனம் பெற்று, பன்னிரண்டு வருடங்கள் அந்த இலாகாவின் மந்திரியாகவிருந்து தக்க அனுபவமடைந்த பிறகு, 1885-ம் வருஷத்தில் முதற்றடவை தாமே முக்கிய மந்திரியாய் மந்திராலோசனைச் சபையைக் கூட்டினார். அவர் கூட்டின சபை மூன்று வருஷங்களின் பிறகு மாறினும், அதற்குப்

பதிலாகக் கூட்டப்பட்ட மற்றொரு மந்திரிச் சபையிலும் அவரில்லாதிருக்க முடியாதெனச் சக்கிரவர்த்தி கருதியபடியே அவர் ஒருவராயிருந்து நிர்வகித்தார். அன்றியும், அவர் பல இலாகாக்களின் தலைவராக உத்தியோகம் பெற்றிருந்து, மறுபடியும் 1892-ம் வருஷத்தில் தாமே முதன் மந்திரியாக மந்திரிச்சபையை நியமித்துக்கொண்டார். இந்தச் சபை 1896-ம் வருஷம் வரையிலும் அரைத்தனஞ் செலுத்தி வந்த காலத்திலேயே ஜப்பானுக்கும் சீனாவுக்கும் கலகம் நேர்ந்து யுத்தம் நடந்தது. அந்த யுத்த காலத்தில், அவர் காட்டிய சாமர்த்தியத்தை மெச்சி, அவரைச் சக்கிரவர்த்தி மார்க்விஸ் பட்டத்தினராக்கினர். மறுபடியும் அவரே 1898-ம் வருஷத்திலும், பிறகு 1900-ம் வருஷத்திலும் மந்திரிச்சபையை மூன்றாவது நான்காவது தடவையாக ஏற்படுத்திச் சிலமாதங்கள் அரைத்தனம் நடத்தினார். இவ்வளவும் அவர் ஜப்பான் தேசத்தில் பல தடவைகளில் முதன் மந்திரியாகவும், மற்றும் பல காலங்களில் பல இலாகாத் தலைவராயுமிருந்து வந்ததன்றி, அன்னிய தேசங்களுக்குச் சென்று ஜப்பானுக்குச் சில சாதகங்கள் பெறவேண்டியிருந்த காலங்களிலெல்லாம் சக்கிரவர்த்தி அவரையே தெரிந்தெடுத்தனுப்புவது வழக்கமாயிருந்தது.

அப்படி மேற்குத் தேசங்களுக்கு ராஜ்ஜீய காரிய வசத்தினால் அனுப்பப்பட்ட பல சமயங்களுள், 1882-ம் வருஷத்தில் அன்னிய தேசங்களின் ஸ்தாபனங்களையும் அநுபோகங்களையும் சோதித்தறிந்து, ஜப்பான்



தேசத்துக்கு எவ்வித அமைப்பு தக்கதாகுமென நிச்சயித்து, அத்தேசத்தின் அரசமுறை அமைப்பைக் கற்பிக்குமாறு அனுப்பப்பட்ட சமயத்தைவிட பெரியதொன்றும் நேரிட்டதில்லை. அப்போது ருஷியச் சக்கிரவர்த்தி மூன்றாவது அலக்ஸாண்டருக்கு முடிசூட்டு நடக்க, ஐட்டோ அங்கு ஜப்பான் பிரதிநிதியாய் விளங்கினர். ஜப்பானுக்குத் திரும்பிவந்து கொரியா விவகார சம்பந்தமாய்ச் சீனாவுக்குச் சென்றனர். காலஞ்சென்ற விக்டோரியா மகாராணிக்கு 1897-ம் வருஷத்தில் டைமண்ட் ஜூபிலி நடந்தபொழுது ஜப்பான் பிரதிநிதியாகச் சென்ற சக்கிரவர்த்தி குமாரருடன் இங்கிலண்டுக்குப் போயினர். சமீபத்தில் ஐந்தாவது முறை ஐரோப்பிய தேசங்களைப் பார்த்துத் திரும்பியும் வந்திருக்கின்றார்.

மேற்சொன்னவாறு மார்க்விஸ்ஐட்டோ ராஜாங்க நிர்வாகத்தில் பெற்ற உன்னத ஸ்தானங்களாலே மட்டும் அவருடைய தேசாபிமானம் வெளிப்பட்டதன்று; எவ்விதத்தால் தம் தேசத்தின் பொருட்டு உழைக்கக்கூடுமோ அவ்விதத்திலெல்லாம் ஓயாமலுழைத்து வருகிறவரானதால், ஜப்பானியர் மார்க்விஸ் ஐட்டோவைத் தேசாபிமானிகளுள் மகோன்னத பதவியில் வைத்து மதிக்கிறார்கள். ஜப்பானியர் அன்னிய தேசத்தார்களுடைய நோக்கத்தைத் தடுக்குமாறு அவ்வன்னியரது உபாயங்களையே பிரயோகஞ் செய்யவேண்டுமென்று துணிபுற்ற காலத்தில், மார்க்விஸ் ஐட்டோ அவர்களுடன் உற்ற துணையாக நின்று தேசத்தின் முற்போக்

ருக் கின்றியமையாத மகாசிரேஷ்டமான சகாயஞ் செய்தனர். இவருடைய செல்வாக்கினாலேயே ஜப்பானியர் மேனாட்டுக் கருத்துக்களை அங்கீகரிக்கலாயினர். ஆயினும், ஜப்பானிய அபிமானிகள் தேசக்ஷேமமே தங்கள் எல்லா முயற்சிகளுக்கும் முடிவான நோக்க மென்பதை மறந்தனரல்லர். இவ்வாறு ஜனங்களின் மனச்சார்பைப் பண்படுத்தி, 1890-ம் வருஷத்தில் ஜப்பான் ராஜாங்க அமைப்பு முறையையும் வரைந்து ஜனப் பிரதிநிதித்தியத்தை ஸ்தாபித்தார். அநேக ஆயிரம் வருஷங்களாக அரசன் தன் நெஞ்சே ஆணையாக ஆட்சி செய்துவந்த ஜப்பானில் அரசனுடைய விருப்பு வெறுப்புக்களும் மனோபீஷ்டங்களும் ஜனப் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தின் சார்பு பெற ராஜாங்கத்தை மாற்றுவது ஒப்புயர்வற்ற மகா மதிநுட்பர்களால் கூடியதேயன்றி மற்றோராலன்று. நவீன ஏற்பாடுகளைக் குற்றமற வரைந்துரைத்தல் கஷ்டமல்ல. எவ்வாறு அவற்றைத் தீங்கு விளையாமல் ஜனங்கள் அனுஷ்டிக்கத் தக்கதோ அவ்வாறு அவற்றை யமைத்தல் ஆழ்ந்த ராஜதந்திரிகளாலேயே முடியும். ஜப்பானியர் ஆரம்பத்திற் பெருந்தீங்கு விளைக்கும் தவறுகளைச் செய்யாமல் சொற்ப காலத்தில் தேச நலத்துக்குற்றவாறு தங்கள் அரசாங்கத்தைச் செலுத்தினது மார்க்விஸ் இட்டோ போன்ற தேசாபிமானிகளின் தீர்க்க புத்தியையும் ஆழ்ந்த திறமையையும் காட்டுகின்றது.

ஆதியில் பௌத்தமதம், கன்பூஷியமதம் (Confucianism), [illegible] முதலியவைகள் அன்னிய தேசங்களி



லிருந்து ஜப்பானிற் புகுந்தபோதிலும், காலவனவில் அவைகள் ஜப்பானிய உருவமே அடைந்தன. கிறிஸ்து மத போதகர்கள் எங்கும்போல் அங்கும் செய்யும் மதபோதகமுயற்சிகள் பயன் படாமையால், அங்கு வசிப்போர்களிடத்தில் மிக வெறுப்பைக் காட்டி வருகிறார்கள். மார்க்விஸ் இட்டோவும் இம்மதாசாரியர்கள் ஜப்பானியரைப் பலவிதமாய் இகழ்ந்து வருவதில், அவர்களிடத்தில் ஒற்றுணர்ச்சியற்றவராயிருக்கின்றனர். நல்லன செய்தலும் தீயன விலக்கலுமே ஜப்பானியருக்குப் போதுமான மதமென்றும், மூடபக்தி யுருக்கொண்ட கிறிஸ்துமத முதலியன ஜப்பானியருக்கு அனாவசிய மென்றும், மார்க்விஸ் இட்டோசொல்லுவது வழக்கமாம்.

ஐரோப்பிய தேசங்களிலும் அமெரிக்காவிலும் மார்க்விஸ் இட்டோ சென்ற ராஜஸ்தானங்களிலெல்லாம் முடிமன்னரும் ஆட்சியதிபரும் வெகுசிறப்புடன் உபசரிக்கப் பிரிட்டிஷ் மகாராஜா மாட்சிமை தங்கிய ஏழாவது எட்வர்டு தமது வாசஸ்தானத்துக்கு இந்தக் கியாதிபெற்ற அரசியல் வல்லோரைவரவேற்கவிரும்பி, அவ்வாறே வரப்பெற்றுப் பெரும்பட்ட மொன்றைப் பூட்டிக் கனப்படுத்தினர். ஜப்பானில் மார்க்விஸ் இட்டோவைவிடப் பெரியோரில்லை.

ருஷியயுத்தம் முடிந்ததும் 1905-ம் வருஷம் பிரின்ஸ் இட்டோ கொரியாவில் ஜப்பானுடைய பிரதிநிதியாக ரெஸிடெண்டாய் நியமிக்கப்பட்டார். அத்தேசத்து ராஜாங்கத்தைத் திருத்தி ஒழுங்கும் சாவதான

றும் நிலை நிற்கச்செய்து அன்னியருக்கு இரையாகி விடாமல், அத்தேசம் தன்னைத்தான் காத்துக்கொள்ளக் கூடியவாறு செய்வது நோக்கமாய் அங்குப் பிரின்ஸ் ஐட்டோ சென்றார். 1909-ம் வருஷம் அக்டோபர் மாசம் 26-ம் தேதி அவர் ருஷிய அரசிறை மந்திரியைச் சந்திக்க ஹார்பின் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக, அங்கு ஒரு கொரியா தேசத்தானால் கொலைசெய்யப் பட்டுப் போனாரென்று கேட்டு உலகம் திடுக்கிட்டது. கொலை செய்ததற்குக் காரணத்தைக் கேட்டபோது, ஜப்பானால் கொரியா படும் கஷ்டங்களுக்காகவும் தனது பந்துக்கள் சிலருக்குங் கொலைத்தண்டனை விதித்ததற்காகவும் பழி வாங்கும் நோக்கத்துடன் பிரின்ஸ் ஐட்டோவைச் சுட்டு வீழ்த்தினதாக அந்தக் கொரியா தேசத்தான் சொன்னான்.

---

## பாரன் ஷிபுஸாவா (Baron Shibusawa)

(அவர் நோக்கங்களும் உழைப்பும் அன்னிய தேசம் போனதும்)

மார்க்விஸ் ஐட்டோவின் பெருந்தன்மையும் தேசாபிமானமும் எத்துணை உயர்ந்தனவாயினும், முற்றிலும் ஒருவர் முயற்சியினாலேயே தேசாபிவிர்த்தி சித்திபெறல் சாத்தியமல்லவாகையால், இவருடன் வேறு துறைகளில் பெரியோர் மற்றோரும் உடனுழைத்துத் தம் தாய்ப்பூமியின் தற்கால பிற்கால க்ஷேமலாபாதிகளை நிலைநாட்டி வருகின்றனர். மார்க்விஸ் ஐட்டோ துரைத்தன விவகாரங்களில் நேரே புகுந்து அதை வகித்துவர,



பாரன் ஷிபுஸாவா (Baron Shibusawa) என்ற பேரபிமானி ராஜாங்க ஜோலிகளிற் சம்பந்தமுறாமல் விலகி நின்று தேசத்தின் பொருட் பெருக்கத்திற் கவலையேற்று வருகின்றனர். துரைத்தனம் எவ்வாறு சீர்ப்பட்டிருப்பினும், செல்வப்பெருக்கில்லையாயின் அபிவிர்த்திக்குக் குந்தகம் நேரிடக்கூடும். செல்வமும் வர்த்தகமும் தேசாபிவிர்த்திக்கு இன்றியமையாதென்பதை ஆதிமுதல் உணர்ந்தவராய் பாரன் ஷிபுஸாவா தாம் ஏற்றிருந்த அரசிறை உதவிமந்திரி ஸ்தானத்தையொழித்து வர்த்தகக் களத்திற் புகுந்தனர். ஜப்பானின் தனாபிவிர்த்திக்காகச் சமீபத்தில் படிப்படியாய்ச் செய்யப்பட்டு வந்த பற்பல முயற்சிகளில் அவர் சம்பந்தப்படாத தொன்றுமில்லை. அவருக்குத் தற்காலம் சுமார் 70-வயதாயினும், ஏறக்குறைய 50-பெரிய கம்பெனிகளில் அவர் அத்தியக்ஷகர்களில் ஒருவராயிருப்பதுமன்றித் தம் ஜனங்களது நாணயத்தையும் கௌரவத்தையும் பலப்படுத்தற்கியைந்த ஊக்கங்காட்டி ஒவ்வொன்றிலும் பங்கு பெற்றனர். அவர் விரும்பினால் மந்திரிகளிலொருவராகச் சக்கிரவர்த்தியால் நியமிக்கப்பெறுவது சுலபமாயினும், மந்திர ஆலோசனைச் சபையிற் சேராமல் ஒதுங்கி யிருப்பதனால் தேசத்துக்கு அதிக நன்மை செய்யக்கூடுமென்கிற நம்பிக்கையாலேவப்பட்டு வர்த்தகவிரிவிலெப்போதும் கொண்ட கவலை நெகிழவிடாமலிருக்கின்றனர். மேலும் ஜப்பான் ராஜாங்க வொழுங்குப்படி மந்திரிகள் சாமானியக் கம்பெனிகளின் அத்தியக்ஷராயிருத்தல் தடுக்கப்

பட்டிருக்கிறபடியால், அவ்வாறு அந்த மந்திரி யுக்தி
யோகத்தை ஏற்றல் அவர் சம்பந்தப்பட்டு நடந்திவரும்
அநேகக்கம்பெனிகள் தடுமாறிப் போவதற்கே துவார
மாதலால், தேசாபிமானிகளும் எல்லோரும் ஆசைப்
படத்தக்க அந்தப்பெரிய அந்தஸ்தை வேண்டாது
ஒழித்திருக்கின்றனர். இவ்வாறு பொருளாதார நெறி
களில் வேலைசெய்து வருவதன்றி, மற்றெவ்வாறு தம்
ஜனங்களுக்கு நன்மைசெய்து வரக்கூடுமோ அவ்வா
றெல்லாம் செய்ய முன்னிற்போராயு மிருக்கின்றனர்.
அநேக தருமசாலைகள் கட்டி அனைவருக்கும் வேண்டிய
நிதிகளையு மேற்படுத்தி யிருக்கின்றனர். அவராலேற்
படுத்தப்பட்ட வித்தியாசாலைகளும் பலவுண்டு. கம்
பெனியென்கிற கூட்டுவியாபாரமுறை அவரே ஜப்
பானியருக்கு ஆதியிற் போதித்தவர்.

1868-ம் வருஷத்து நவீன ஏற்பாட்டிற்கு முன்,
அநேக ஜப்பானியச் சிறுவர்கள் ஐரோப்பிய தேசங்க
ளுக்கும் அமெரிக்காவுக்குஞ்சென்று அங்கே பணித்தங்
களைக் கற்றும், ஸ்தாபனங்களைச் சோதித்தும், அநு
போகங்களைப் பெற்றும், திரும்பித் தம் பிறப்பு நாட்டில்
தற்கால நாகரீகநிலைப்பாட்டுக்குக் காரணபூதர்களானார்
களென்று சொல்லி யிருக்கிறேன். அப்படிச் சென்ற
சிறுவர்களில் பாரன் ஷிபுஸாவாவும் ஒருவராகி, இங்கி
லாந்துக்கும் பிரான்ஸுக்கும் செல்ல அங்கே வெகு
கௌரவமா யுபசரிக்கப்பட்டனர். ஜப்பானை விட்டு
இவ்வன்னிய தேசங்களுக்குப் புறப்படும் பொழுது,
தம் அந்தஸ்திற்கான மற்ற ஜப்பானியர்களைப்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1911

போலப் பூர்வ வழக்கத்தை யொட்டி உடையுடுத்திப்
புறப்பட்டதாகவும், இரண்டு பக்கங்களிலும் இரண்டு
கத்திகள் வழக்கம்போற் றொங்கினதாகவும், பிரான்ஸ்
தேசம் போனதும் தாம் நேசப்பாங்கான நோக்
கங்களுடன் யாத்திரை செய்வதை யுணர்ந்து கத்தி
யேந்தல் தகாதென்றறிந்து, பிரெஞ்சு கனவான்களைப்
போல் தமதுடையை மாற்றினதாகவும் சொல்லப்படு
கிறது. சாமானியமாய்க் கருதின், இப்படி மாற்றி
னது ஒரு பெருங்காரியமாகச் சொல்லத்தகாதெனி
னும், அக்கால விசேஷத்தை நாடி நோக்குகையில்,
இது ஜப்பானிய ஜாதித்தலைவர் சமயோசிதமாகத் தங்
கள் பூர்வீகப் பழக்க வழக்கங்களை மாற்றுவதில் வீண்
சங்கை கொண்டவர்களல்லரென்பதைக் காட்டுகிறபடி
யால், இதை யொரு விசேஷ சம்பவமாக இங்கு எடுத்
துரைக்கலாயினேன். தாம் புது உடுப்பு தரித்தவாறு
பிரெஞ்சு நாட்டில் தம்மைப் போலப் புகைப்படமொன்
றெடுக்க, அதை ஜப்பானில் அவர் குடும்பத்தார்
பார்த்து இவ்வாறு தம் குடும்பத்துக்கிளப்பம் நேர்ந்த
தே என்று துக்கித்துக் கண்ணீர் விட்டனராம். அதா
வது, பரம்பரையாய்ப் பெரிய அந்தஸ்தான குடும்பத்
தைச்சேர்ந்த பாரன் ஷிபுஸாவா ஐரோப்பாவுக்குப்
போய் அங்கு உடைமாற்றினது மன்றிக் கத்திகளையுங்
களையலாயிற்றே என்று மனம் நொந்தனர்போலும்.
ஆயினும், நீண்டகாலம் அநுஷ்டானத்திலிருக்கும்
ஒழுக்கங்களினின்றும் ஒருவாறு நழுவிப் புதுமைகளை
யேற்றது அபிவிருத்திக்கின்றியமையாத தாகையால்,

தேசாபிமானிகள் சாமானிய ஜனங்களது இகழ்ச்சி புகழ்ச்சியைக் கருதாது தேசநன்மைக் குற்றவைகளை மேற்கொள்ளவிற் பின்வாங்க மாட்டார்கள். பாரன் ஷிபுஸாவா உண்மையான தேசாபிமானி நிரானதால் மேற்றிசை நாகரீகத்தின் எவை நன்மை பயக்கத்தக்கனவோ அவற்றையேற்க முன்வந்தோர்களுக்குத் தலைவராய் நின்றனர். பாரன் ஷிபுஸாவா, பொருள் படைத்தோர், பொருள் இல்லோர், பெரியோர், சிறியோர், அனைவராலும் மதிக்கப் பட்டவராய், ஜப்பானில் எங்குச் சென்றாலும் அவரைப்பற்றி யோர் அவச்சொல்லேயாவது, அவர் தகாத காரியம் செய்ததாகவாவது கேட்டலரிதாக விருக்கிறார்.

மார்க்விஸ் ஐடோ, பாரன் ஷிபுஸாவா இவர்களுக்குச் சற்றேறக்குறைய சமமாகத் தற்காலம் ஜப்பானில், மார்க்விஸ் யமகாட்டா (Marquis Yamagata), கௌண்ட் மட்ஸுகாட்டா (Count Matsukata), கௌண்ட் ஐநோயி (Count Inouyi), கௌண்ட் ஓகுமா (Count Okuma), ஆகிய இன்னோரையும் சொல்லலாம்.

---

கவுண்ட் மட்ஸுகாட்டா

கவுண்ட் மட்ஸுகாட்டாவுக்கு ஆங்கிலேயரில் ஜி. ஸி. எம். ஜி. (G. C. M. G.) என்ற ஒரு கண்ணியப்பட்டமுண்டு. இவர் தாம் படைத்த கீர்த்தியில் மற்றப்பேர்களுக்குக் குறையார். கி. பி. 1835-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் சாத்ஸுமா கூட்டத்தைச் சேர்ந்த ஒரு



சாமுராய், தம்மினத்தார்க்குள்ள வழக்கப்படி படைக் கல்வியும் கலைக்கல்வியும் கற்றார். இவர்க்கு நாகஸாகி (Nagasaki) யில் ஏனைய சாதியார்களால் கப்பற்சண்டையில் பயிற்சி முற்றுப்பெற்றது. தம்மினத்தாராய சாத்ஸுமா கூட்டத்தின் சிற்றரசனண்டை அரண்மனை விசாரிப்பு வேலை செய்து வந்தார். ஜப்பானில் ஷோகன்களுக்கு இராச்சியாதிகாரம் இல்லையென்று செய்த கலகத்தில் இவரும் சேர்ந்திருந்தார். பழைய இராஜ வம்சம் மறுபடியும் இராச்சியாதிகாரம் பெற்ற காலத்தில் இவர் ஒரு பிரதேச (Local) கவர்னராக நியமிக்கப்பட்டார். கி. பி. 1870-ம் வருஷம்முதல் தலை ராஜாங்கத்தின்(Central Government)அரசிறை விஷயமாய் உழைத்து வருகிறார். விவசாயம் கைத்தொழில் இவற்றில் துணிச்சலாய்ப் புகுந்துழைப்பதை இலகுப்படுத்தித் தைரியப்படுத்துவதில் முயற்சிகள் செய்து வந்தார். நிலவரி விஷயத்தில் அநுகூலமாய் ஏற்பட்ட திருத்தங்களில் இவரும் சேர்ந்துழைத்தார். கி. பி. 1878-ம் வருஷத்தில் பாரிஸ் (பிராஞ்சு தேசத்துத் தலைநகரம்) நகரத்தில் நடந்த காட்சியில் ஜப்பானுக்குரிய பாகத்துக்குத் தலைவராய் ஐரோப்பா கண்டத்தைப் பார்த்தார். கி. பி 1880-ம் வருஷத்தில் உள்நாட்டு விஷயங்களைப்பார்க்கும் மந்திரியாகவும், 1881-ம் வருஷம் அரசிறை மந்திரியாகவும் நியமிக்கப்பட்டார் 1884-ம் வருஷம் கவுண்ட் ஆக்கப்பட்டார். இவர் இரண்டுதரம் பிரதானியாயிருந்தார்; ஒருதரம் 1891-92-ம் வருஷத்திலும், இன்னொரு

தாம் 1896-ம் வருஷத்திலும். 1896-ம் வருஷத்தில் அரசிறை மந்திரியாகவும் இருந்தார்; 1898-ம் வருஷத்தில் பிரதானி வேலையைத்துறந்து திரும்பவும் அரசிறைமந்திரி ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். அந்த ஸ்தானத்தில் இரண்டு வருஷம் வேலை பார்த்தார். இந்த இரண்டு வருஷத்தில் இவர் செய்த முக்கியமான வேலை பொன் நாணயத்தை நாட்டில் ஏற்படுத்தினது. 1902-ல் அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் சுற்றிப்பார்த்து வந்து ஆனரபில் டி. வி. எல். என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் காலத்தில் இராஜாங்கத்தில் அநேக தொல்லைகள் நேர்ந்தபோதிலும் அநேக புஸ்தகங்களும் எழுதவல்லராயினர்.

கவுண்டானவர், முன் ஜெர்மன் தேசத்தில் இருந்த * பிரின்ஸ் பிஸ்மார்க்கினுடைய முகசாடையைக்கொண்டிருக்கிறார்; உண்மையாகவே, இவர் சும்மா இருக்கும்போது முகத்தைப் பார்த்தால், மேற்படி பிஸ்மார்க் இன்னமும் பிழைத்திருக்கிறார் எனவே தோற்றும்; ஆனாலும், வாயைத் திறந்தால், இவர்க்கும் பிஸ்மார்க்குக்கும் உள்ள வித்தியாசம் வெளியாகிவிடும். ஆயினும் பிஸ்மார்க்குக்கு சிறப்பாய் ஏற்பட்ட மனவுறுதி மத்ஸுகாட்டாவின் பேச்சில் வெளிப்படாமல் இராது. கவுண்டானவர் குடிகள் யாவரிடத்திலும் அன்புகொண்டவர். ஆகையால், இவர் பிரதான மந்திரி வேலையைத் துறந்து 6-வருஷமாயினும், இன்ன

* பிரின்ஸ் பிஸ்மார்க் (Bismark) வெகுகாலம் ஜெர்மனி மந்திரியாயிருந்து அதன் தற்காலப் பெருமையை ஆக்கினவர். இவர் 1898-ம் வருஷத்தில் காலஞ்சென்றார்.



மும் இராஜ சபைகளிலும் ஜன சமூகங்களிலும் (Society) பிரதானிக்குத் தக்க மரியாதைகள் நடக்கின்றன.

ஜப்பானில் இராஜாங்க வரவு செலவு நிர்வாகத்தில் விசேஷ செல்வாக்கு பெற்றிருந்தார்; இவர் ஆலோசனை அதிகமாய் மதிக்கப்பட்டது. இவர் பிரான்சுக்குப் போனபோது அத்தேசத்திலும் மற்றத் தேசங்களிலும் வரவு செலவு ஏற்பாடுகளில் (Fiuancial systems) மிகவும் கவனம் செலுத்தி வந்ததாகத் தெரிகிறது. தம் தேசத்துக்குத் திரும்பிவந்தபோது வரவு செலவு முறைகளில் தமக்கு உள்ள சாமர்த்தியத்தைக் காட்ட வெகு விருப்பங் கொண்டவரானார்; ஏனென்றால், ஜப்பான் தேசத்து வரவு செலவு நிலைமை மிகக்கெட்டிருந்தது; ஜப்பான் தேசத்து அரசிறையைக் கையாண்டு வந்த காலத்தில் வரவு செலவு விஷயமாய் இரண்டு மாறுதல்கள் உண்டாக்கினார்:—முதலாவது, இராச்சியத்தில் மாற்ற முடியாத நோட்டுகளைத் திருப்பிக்கொண்டு, அவற்றிற்குப் பதிலாய் மாற்றக் கூடுமான நோட்டுகளைப் பரவவிட்டார். இரண்டாவது, 1897-ம் வருஷத்தில் ஜப்பானிய நாணயங்கள் பொன்னளவைக் கொண்டனவாய்ச் செய்தார். புது ஏற்பாடுகள் செய்யப்பட்ட துவக்கத்தில் வெகு அலங்கோலமாய் இருந்த வரவு செலவு முறைகளை இவர்தான் சீர்திருத்தினார். இந்த வேலை பேர்போன ஐகோயி, கவுண்ட் ஒகுமா முதலானவர்களால்கூட முடியவில்லை; ஆனாலும், இவர்களுக்குச் சில விசேஷ தடங்கல்கள் நேரிட்டதால் அது முடியா

மல் போனாலும் ஒப்புக்கொள்ளவேண்டியது. மத்ஸு-காட்டா துரைத்தனத்து அரசிறை நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி ஸ்திரமாய் நடைபெறச் செய்திருக்கிறார். ஆகையால், இவர்க்குப் பிறகு வரும் மந்திரிகள் இவர் செய்ததை மாற்றவேண்டுமானால், அப்படிச் செய்ய பல்லாண்டு கழியும்.

---

## கௌண்ட் ஐநோயி

கவுண்ட் ஐநோயி மாறிமாறி அரசிறை மந்திரியாயும் அரசிறை உதவிமந்திரியாயும், அயல் நாட்டு மந்திரியாயும், பிரதானியாயும் இருந்திருக்கிறார். ஆகையால், இவர் ஜப்பான்தேசத்து ஜேஷ்ட இராஜதந்திரிகளில் ஒருவர் என்றும் இப்போது உத்தியோகம் விட்டு விலகி நிற்கும் முக்கிய இராஜதந்திரிகளில் ஒருவர் என்றும் சொல்லப்படுகிறார். ஷோகூன்கள் ஆண்ட காலத்தில் (Shogunate) லண்டன்மாநகரத்தை முதல் முதல் பார்க்கப்போன ஆறு ஜபானியர்களில் இவர் ஒருவர்; அந்தச் சமயத்தில் அல்லாமல் அதற்குப் பிறகும் பலதடவைகளில் ஐரோப்பாவுக்குப் போய் வந்திருக்கிறார். சில வருஷங்களுக்கு முன் இவர் பெர்லின் (Berlin) நகரத்துக்குப் போயிருந்தார். அங்கிருந்து திரும்பிவந்த காலத்தில் இவர் குமாரன் ஜர்மன்தேசத்து கெய்ஸர் (Kaiser) ராஜ ஸபையில் ஜப்பானிய ஸ்தானிகராய் (ie Consul) நேமிக்கப்பட்டார். கவுண்ட்டானவர் இந்தலோகத்தில் மனிதன் எடுத்த காரியம் அவன் நினைத்தபடி கைகூடுகிறதில்லை என்று நினைப்ப



வர்களில் ஒருவர் ஆயினும், தம் தேசத்தின் பிற்கால கதியைப்பற்றி, இவரைக் காட்டிலும் அதிகமாய் நல்ல எண்ணங்கள் ஒருவரும் கொள்ளவில்லை. இவ்வுலகத்துப் பலநாடுகளுக்குள் தம் நாட்டை இப்போதைய நிலைமைக்குக் கொண்டுவர இவர் பட்டபாட்டைக் காட்டிலும் வேறே ஒருவரும் அதிகமாய்ப் பாடுபடவில்லை. இப்போது கவுண்ட் ஐநோயி அரசிறைக் கணக்கு வழக்குகளை ஆழ ஆய்ந்துகொண்டு இருக்கிறார். ஜப்பான் தேசம் எப்போதைவிட அதிகச் செல்வம் பெற்றுள்ளதென்றும் உலகத்தார் அந்நாட்டை நம்பி கொடுக்கல் வாங்கல் செய்யலாமென்றும் ஐயமறக் காட்டும்படி ஒருகணக்கு தயார் செய்திருக்கிறார். ஜப்பான் தேசத்துடன் கொடுத்தல் வாங்கல் செய்வதில் அதன் நாணயத்தைச் சந்தேகமின்றி உணரவேண்டுமானால், உலகத்தார் அந்நாட்டின் உண்மையான நிலைமையைத் தெரிந்து கொள்வது அவசியமென்று இவர் வெகு உறுதி கொண்டிருக்கிறார். இவர்க்குத் தாங்கமாட்டாதவேலை இருந்து கொண்டேயிருந்தும் அதன் மத்தியில் விசித்திர கலைகளினாலுண்டாகும் இன்பங்களையும் அநுபவிக்காமல் போகிறதில்லை. ஜப்பானியர்க்குத் தெரிந்த மிக அருமையான விசித்திர வேலைப் பொருள்களைச் சேர்த்து வைத்திருப்பதாகப் பிரசித்தி பெற்றிருக்கிறார். இவர்க்குத் தோட்டம் வைத்துப் பயிர் செய்வதில் பிரியமாம். மற்றவிஷயங்களிலோ என்றால், இவர் மிகவும் சுறுசுறுப்புடையவரும் சிரித்த முகமுடையவருமாய் இருக்கின்றார். இவர்க்கு 65-வயது

ஆயும் சாதாரணமாய்ச் சுறுசுறுப்பு உள்ளவர்கள் போல இவரும் வயதுக்குத் தக்கபடி கிழத்தனம் தோன்றவில்லை.

---

### கௌண்ட் ஒகுமா

கவுண்ட் ஒகுமா தந்நாட்டுப் பார்லிமெண்டில் எதிர்கட்சித் தலைவராய் இருக்கிறார். அவர் கொழுத்த முழு ஜப்பானியர். தம் தேசத்தார்க்குள்ள பிரசித்தமான எல்லாக் குணங்களும் அநேக குறைகளும் அவர்க்குண்டு. தம் தேசத்தாரின் குணங்களின் ஒரு அவதாரமெனச் சொல்லப்படுகிறார். ஜப்பான் நினைக்கிறதென்ன, உணர்கிறதென்ன, கோருகிறதென்ன, பயப்படுகிறதென்ன என்று இவர் முற்றிலும் அறிந்திருப்பதே யல்லாமல், இவரும் அதே மாதிரியாய் நினைத்து, உணர்ந்து, கோரி பயப்பட்டு வருகின்றார். ஜப்பானுக்கு வேண்டாதது இவர்க்கு வேண்டாம், வேண்டியது இவர்க்கு வேண்டும்; கனவுகாண்பது இவரும் காண்கிறார்; ஆசைகொள்வது இவரும் கொள்கிறார்; ஆகையால், ஜப்பானுக்காக இவரைத் தவிர மற்றவர்கள் எவரும் பரிந்து பேசக்கூடியவரல்லர். ஜப்பான் சில சந்தர்ப்பங்களில் என்ன செய்யும் என்று ஒருவன் அறியவேண்டுமானால், இவர் அதே சந்தர்ப்பத்தில் என்ன செய்வாரென்று தெரிந்துகொண்டால் போதுமானது. கவுண்ட் ஒகுமா பிரதானியாயும் அரசிறை மந்திரியாயும் இருந்திருக்கிறார்; ஆயினும் கொஞ்சநாளாய், பார்லிமெண்டின் எதிர்க்கக்ஷியை மிகச் சமத்தாய் நடத்திவரு



கிறார்; கவுண்டானவர் கௌண்ட் ஐனோயி எப்படி மனிதன் எடுத்த காரியம் நிறைவேறுவதில்லை என்று நினைக்கிறவரோ அதற்கு மாறாய் இவர் அவன் எடுத்த காரியத்தை எடுத்தபடி நிறைவேற்றிவிடலாமென்ற நம்பிக்கை கொண்ட மனுஷர்; ஆனால் இவர் சில சமயங்களில் அப்படிப் பிசகாய் நம்பிக்கை கொள்கிறார் என்பாருமுளர்; இவர் ஜப்பான் தேசத்துப் பெருங்கிழவர் (Grand old Man) என்று பேர் எடுத்திருக்கிறார்;

கவுண்ட் ஒகுமா ஒரு பெரிய பேச்சாளி (Orator); ஜப்பானில் இவரைக்காட்டிலும் பேச்சாளி வேறொருவருமில்லை; ஜப்பானியர்களே பேச்சாளிகள்; மனநிலமுந்தப் பேசுந் திறமைக்கு இவர்பேச்சு ஒரு மாதிரி போல எண்ணலாம்; தம் எதிரிகளைத் திட்டியோ தம் தோழர்களை எத்தியோ, எப்படிப் பேசினாலும் இவர் பேச்சுகள் எல்லார்க்கும் ஒரு மாதிரி (Model) போன்றவை என்பதில் சந்தேக மில்லை. இவர் பேச்சுகள் பேசும்போது, இவர்க்கு ஆவேசம் வந்துவிடும் (Transformed), சத்துருமித்துருக்கள் இருவரும் ஒருங்கே இவருடைய மந்திரத்துக்கு (Spell) உட்பட்டு இவரைத் துதிப்பார்கள். ஜப்பானில் இவரைவிட்டால் மேலான நன்னடக்கையுடையவர் ஒருவருமில்லை. ஜப்பானியர்கள் ஒருத்தரைப்போல் ஒருவர் தாங்கள் வெகு நன்னடத்தை உடையவர்கள் என்று வெகு கர்வப்படுகிறார்கள். ஒரு சமயத்தில் அந்நிய இராஜதந்திரி ஒருவர் கவுண்டினுடைய அனுமதிபெற்று

வெளியே போகும்போது இவரிடத்தில் பிரஞ்சுபாஷை
யில் இந்தக்கவுண்ட் கண்டித்துப் பேசும் புன்சிரிப்
புடன் பேசினார்; அப்போதுதான், கவுண்டானவர்
தாம் உத்தியோகம் பார்க்கும் விடுதிக்கு முன்னால்
உள்ள முன்மண்டபத்தில் கொண்டுவந்து போடப்
பட்டுச் சாவோ பிழைப்போ என்று முற்றிலும் வருத்
தப்பட்டுக் கொண்டிருந்தார்; வருத்தமென்னவென்
றால், இவர் மந்திரிவேலையில் போகும் தோரணையை
யொப்பாத யாரோ ஒரு வெறியன் இவர் வண்டியின்
கீழ் ஒரு வெடிகுண்டுபோட இவர் வேலைக்காரர்களும்
குதிரைகளும் செத்தனர். இவர்கால் காயம் பட்டது.

இந்தவுலகத்தில் தாம் செய்த பெருத்த வேலை
ஒரு இராஜ தந்திர சமர்த்தராய்ச்செய்ததல்ல; தம்
நாட்டார்க்குக் கல்வி புகட்டச்செய்ததே இவருடைய
பெரும்வேலை; எப்படியென்றால், தாம்மாத்திரம் ஒருகீழ்
வெளியாராயே (Oriental) இருந்துவிட்டாலும், தம்
முடையமஞ்சள்வர்ண சாதியார் மேல்வெளியார்களாய்
(Westerner) விடவேண்டுமென்று ஆவல் கொண்டு
தமது சகல சக்திகளையும் இவர் உபயோகித்ததைப்
போல் வேறொருவரும் உபயோகித்ததில்லை. இவரைவிட
தம்மினத்தார்க்குள் மேல்வெளியார் கற்கும் கல்வியைப்
போட்டி விருத்திசெய்ய வேறொருவரும் அதிகமுயற்சி
செய்யவில்லை. வாஸ்தவத்தில, கடந்த 30-வருஷ கால
மாய் யமகாட்டா ஜப்பானியரைப் படையாளிகளாக்க
வும் மார்க்விஸ் ஐட்டோ அவர்களுக்கு இராச்சிய
நிர்வாக ஞானத்தைப் பெருக்கவும் என்னென்ன செய்



தார்களோ அவைகளையெல்லாம் கௌண்ட் ஒகுமா
படிப்பு விஷயமாய் செய்திருக்கிறார். தம் முயற்சி
யிலேதாம் ஜெயிக்கவும் ஜெயித்தார். சில காலமாய்,
ஜப்பானைத் தவிர வேறே எத்தேசத்திலும் கல்வி
யானது தீவிரமான விருத்தியடையவில்லை. ஒவ்
வொரு கிராமத்திலும் போர்ட் (Board) சிறு
பள்ளிக்கூட (School) மொன்றிருக்கிறது. அந்தப்
பள்ளிக்கூடத்துக்குப் பிரதிதினமும் போகாத சிறு
வனில்லை சிறுமியில்லை; அப்படிச்சிறுவனும் சிறு
மியும் எட்டுவருஷம் கழிக்கவேண்டும். அப்புறம்,
பெரிய பட்டணங்களில் போர்ட் சிறு பள்ளிக்கூடங்
களே யல்லாமல், பெரும் பள்ளிகளும் கைத்தொழிற்
பள்ளிகளும் சிற்சில வேலையில் புலமைப்பள்ளிகளும்
(Colleges) இருக்கின்றன; இப்படி யுண்டானதற்கு
ஜப்பானியர் ஒகுமாவைத் தினம் தினம் வாழ்த்த
வேண்டும்; ஏனென்றால், இவர் துரைத்தனத்தாரைக்கல்
விச்சாலைகள் விஷயமாய்ப் பணத்தைக் கொட்டும்படி
வற்புறுத்தியதல்லாமல், தாமும் அவற்றிற்காகத் தம்
பணத்தைக்கொட்டிக் கொடுத்திருக்கிறார்; தாம் சொந்
தச்செலவில் அழகான பெரும்பள்ளிகள் (High School)
சிறுவர்க்கும் சிறுமிகளுக்கும் டோகியோவில் அமைத்
திருக்கிறார். இவற்றிற்கு வேறே ஒருவருடைய ஒத்
தாசையுமில்லை; பணஞ்செலவிடுவதுபோல, மனதையும்
காலத்தையும் வெகுதாராளமாய் போக்குகிறார்; தம்
பள்ளிகளைத் தாமே உருவமைத்தார்; அவை சரியாய்
நடந்துவருகின்றனவா என்று அவற்றை அளவற்று

கலையுடன் பார்த்து வருகிறார். சமயம் வாய்த்த போதெல்லாம் விருத்திசெய்து கொண்டேவருகிறார்.

ஜப்பான் தேசமானது மேல்நாடுகளுடன் சரிசமானமான நிலைக்கு வரவேண்டுமென்றால் அதன் குடிகள் யாவரும் எல்லா வகுப்பாரும் ஏற்றக்குறைச்சல் இல்லாமற் கல்விகற்க வேண்டுமென்பதை இவர் நன்றாய் அறிந்திருக்கிறார். இதையே இவர்மனது நோக்கிச் செல்கின்றது; இவர் தேசத்தாரிடம் இவர்க்கு இருக்கும் நம்பிக்கை அளவற்றது. இந்தப் பூலோகத்தில் ஒரு சாதியாவது இவர்களைப் போல இயற்கையாகவே அவ்வளவு அனுகூலங்கள் பெற்றிருக்கவில்லை; அவ்வளவு உயர்த்தியான குணமும் படைத்ததில்லை—என்று இவர்க்கு உறுதியாய் மனதில் பட்டிருக்கிறது. ஆங்கிலேயர் பிரான்ஸியர் ஜர்மானியர் ஆகிய இவர்க்கு ஒப்பாயாவது சற்று உயர்த்தியாயாவது வைத்துப் பார்ப்பதற்கு ஒன்று தான் குறை என்னலாம்: அதாவது கல்வி; அந்தக் கல்வி அவர்களுக்குக் கிடைத்துவிடும் என்று இவர்க்கு முற்றிலும் மனதில் ஒரு தீர்மானமுண்டு.

1868-ம் வருஷத்துக்கலகத்தில் முதல்முதல் இவர் பேர் முன்னுக்கு வந்தது. அப்போது தாமும் ஒரு உயர்குலத்தாராயினும் சக்கிரவர்த்தியுடன் சேர்ந்து கொண்டு உயர்குலத்தாரின் சுதந்தரங்களைப் பிடுங்கத் தம்மால் இயன்ற மட்டும் உதவிபுரிந்தார். இவரும், யமகாட்டாவும் ஐட்டோவும் அக்காலத்தில் அண்ணன் தம்பிகளாய் ஆயுதமெடுத்து ஒரே நோக்கங்கொண்டு



ஒரே பத்தியில் போர்புரிந்தார்கள். இப்போது கூட, பேருக்குப் பிரிந்திருந்த போதிலும், உண்மையாகவே எல்லாரும் ஒரே நோக்கங்கொண்டவர்கள்; ஏனென்றால், மூவரும் சேர்ந்து செய்யக்கூடிய மேன்மை யாவும் ஜப்பானுக்காகச் செய்யவேண்டுமென்பதே அவர்களுடைய வெகு பெருத்த ஆசை. இந்த மாதிரியாக, இம்மூவரும் கட்சிப் பிரதிகட்சிகளுக்குத் தலைவர்களாய் இருந்தபோதிலும் அனுதாபத்தால் இம்மூவருக்கும் ஒரு நுட்பமான சம்மந்தமுண்டு. கவுண்ட் ஒகுமா முற்போக்கு வேண்டினவர் கட்சிக்குத்தலைவர் (Progressivist); ஐட்டோ என்பவர் சமயோஜிதக் கட்சிக்குத் (Opportunists) தலைவர். யமகாட்டா பின் நிற்பார் (Conservatives) கட்சிக்கு அதிபதி. கவுண்ட ஒகுமா வானவர் முற்போக்கார் (Progressivists) தலைவராய் இருப்பதோடுகூட துரைத்தனத்தாரின் எதிர்க்கட்சிக்குக்கூடத் தலைவரே; இவர் இல்லாமற் போனால், ஜப்பான் தேசத்தில் பார்லிமெண்டில் (Parliament) சரியாய் அமைந்த பிரதிகட்சி என்பதும் ஒன்று இருக்குமா என்பது சந்தேகம்; ஏனென்றால், ஜப்பானில் தம் வாழ்நாளெல்லாம் கழித்திருந்த போதிலும் ஐரோப்பாவில் பார்லிமெண்டில் சங்கதிகள் என்னமாய் நடந்தேறி வருகின்றன என்று, மற்ற எந்த ஜப்பானியரையும் விட அதிகமாய் இவருக்குத் தெரியும்; மார்க்விஸ் ஐட்டோவுக்குக்கூட அவ்வளவு தெரியாது. ஒரு தேசத்தார்க்குப் பார்லிமெண்ட் வேண்டுமானால் அந்தப்பார்லிமெண்டால் நல்ல

துரைத்தனம் நடப்பதற்குத் துரைத்தனக் கட்சி என்று ஒன்று இருக்கவேண்டியதும் தவிர, பிரதி கட்சியும் ஒன்று இருக்கவேண்டியது அவசியம். ஜப்பான் சக்கிரவர்த்தியான மிக்காடோவும் நாட்டார்க்கு அரசமைப்பு (Constitution) ஒன்று நடப்பதற்கு உத்திரவு விட்டதும் விடாததுமாய், ஜப்பானில் நடந்த முதல் பார்லிமெண்டிலேயே அம்மிக்காடோவின் மந்திரிமார்களுக்குக் கூடியமட்டில் தகுந்த எதிர்க்கட்சியொன்று சித்தஞ்செய்து வைக்கவேணுமென்று பல முயற்சிகள் செய்தார். இந்தமாதிரி, பார்லிமெண்டு மெம்பர்கள் பொறுக்கி முடிந்தபிறகு துரைத்தனக் கட்சியாரின் தொகையைக் காட்டிலும் மட்டுக்கு மீறி தம் எதிர்க்கட்சி ஏற்பட்டது. ஆகையால் பார்லிமெண்டு மரியாதைப்படி தாமே பிரதம மந்திரியாய் நிற்கும்படியாகிவிட்டது. இப்படிப் பிரதம மந்திரியாய் நிற்பது தம் யுக்திபுத்தி இரண்டுக்கும் ஏற்கவில்லை. ஆகையால் இவர் அப்படி நிற்க மறுத்துவிட்டார். அப்போதைக்குப் பிறகு அரசிறை மந்திரியாயும் பிரதானியாயும் வேலைபார்த்து வந்தார் என்பது நிசமே யாயினும்; அப்படி இஷ்டமில்லாமலே செய்தார்; ஏனென்றால், தமக்குள்ள சீஷர்களைக்கொண்டு ஜப்பானுக்குச் சேவகம் புரிய வேண்டுமானால் எதிர்க்கட்சியில் சேர்ந்துதான் அது ஆகவேண்டுமென்று வெகு தந்திரமாய்க் கண்டுகொண்டிருக்கிறார். தாம் ஒரு கட்சிக்குத் தலைவராய் இருந்து தம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதைவிட தம் நாட்டுக்கு



உழைப்பதற்குத் தாம் எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை சீனா தேசத்தோடு நடந்தபோரில் தெளிவாய்க் காட்டினார்; பின்னும் கூடக் காட்டினார்; எப்படியென்றால், ருஷியாவோடு போர்புரிய வேண்டு மென்பதில் சக்கிரவர்த்திக்கு ஓகுமாவைக் காட்டிலும் துணையாய் இருந்தவர் வேறொருவருமில்லை.

கவுண்ட் ஓகுமா ஜப்பானில் மிகுந்த பணக்காரர்களில் ஒருவர்; அவர் செய்யத்துணிந்த ஒவ்வொரு காரியத்திலும் பொன் பொன்னாய் விளைந்தது; அப்படிப் பொன்பொன்னாய் வாரிக்கொட்டினாலும் அவர்க்குப் பணத்தாசை இல்லாமல் இருப்பது வெகு உயர்த்திதான். அவர் தாம்செய்துகொண்டு வரும் காரியத்துக்கும் அவருடைய சமாசாரப் பத்திரிகைகளுக்கும் தாம் நேசிக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் தம் அளவற்ற பணத்தைச் செலவழித்து வருகிறார். அவர் ஜப்பான் தேசத்துக் * கார்னிகி (Carnegie).

---

பாரன் சுயெமட்ஸு—

மார்க்விஸ் ஐட்டோவின் மாப்பிள்ளை; அவர் இப்போது இங்கிலாண்டில் இருக்கிறார்; ஜப்பானில் சிறு மக்கள்களுக்குள் வெகு சிறப்பு பெற்றவர்; இங்கிலாண்டில் ஆங்கிலேயர் ஜப்பானிய தேசத்தாரின் இலக்ஷியங்

* ஆண்ட்ருகார்னிகி ஸ்காட்லாண்ட் தேசத்தைச் சேர்ந்த ஒரு கோடீச்சுரர்; அமெரிக்காவில் செல்வம் சம்பாதித்தார்; தருமம் விஷயமாய்க் கணக்கற்ற செல்வம் செலவு செய்திருக்கிறார். இவருக்கு வயது இப்போது 73 என்னலாம்.

கள் (Ideals) இன்னவென்று தெரிந்துகொள்ளும்படிச் செய்துவருகிறார்; அவர் முன்னொருதடவை தம் தேசத்திய உள்நாட்டு (Interior) மந்திரியாய் இருந்தார்; இப்போது வேலை ஒன்றும் கிடையாது; தம் நாட்டாரையும் தம் நாட்டாரின் ஆசைகளையும் (Aspirations) விஸ்தரித்து விளக்கி இங்கிலாண்டிலும் அமெரிக்காவிலுமுள்ள சமாசாரப் பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறார், அவரைப்போய் W. T. ஸ்டெட் (Stead) என்று பேர்போன ஒரு கனவான் கண்டு பேசி விவரங்கள் கேட்டபோது, யுத்தத்தில் கிடைக்கும் ஜயத்தால் தொடர்ந்துவரும் பிரமங்களுக்கு ஜப்பானியர் இரையாகலாம் என்ற எண்ணத்தைப் பாரனுக்கு எடுத்துக்காட்டினவுடன் பாரன் வெகு களிப்புடன் சிரித்தார். ஜப்பான் தேசத்தார் ஆசியாகண்டத்தார் போலாவார்கள் என்று சொல்லக் கேட்டவுடன் அந்த எண்ணத்தைகூ வெகு கடிந்துபேசினார்; சீனர்களும் ஜப்பானியர்களும் ஒருபோதும் ஒத்துப் பிழைக்கமாட்டார்கள் என்றும் ஆகையால் "மஞ்சள் விபத்து" (Yellow Peril) ஐரோப்பாவுக்கு வந்து தலைப்படும் என்பது வெறும் கிலி என்றும் தாம் நம்பியிருப்பதாகச் சொன்னார்.

அப்போது மிஸ்டர் W. T. ஸ்டெடுக்கு இன்னும் என்ன வற்புறுத்திச் சொன்னார் என்றால்:—இங்கிலாண்டுக்கு எகிப்து தேசம் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே ஜப்பானுக்குக் கொரியாத்தேசம் வேண்டுமெனவும் ஜப்பான் சண்டை போடுவதெல்லாங்கூடித் தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ளத்தான் எனவும் சொன்



னார்; மஞ்சூரியா விஷயமாயும் சொன்னார்: மஞ்சூரியாவானது எப்போதும் சீனாவின் சொத்தாய்த் தான் இருக்கவேண்டுமெனவும் அதைச் சீனா வேறொரு வல்லரசுக்கு விட்டுவிடக் கூடாதென்று வல்லரசுகள் புணையாய் நிற்க வேண்டுமென்றும் சொன்னார்.

"கீழ்வெளிகளின் தொல்லை" (Eastern Problem) என்பது என்னவென்று விரித்துக்காண்பித்து சமாசார பத்திரிகைகளுக்குச் சாந்தத்துடன் உள்ளது உள்ளபடி வெகு திட்டத்தில் எழுதியிருக்கிறார். இங்கிலாண்டுக்கும் ஜப்பானுக்கும் உள்ள தோழமை உறவு ஏதோ ஒரு அகஸ்மாத்தாய் நேர்ந்ததாகச் சொல்லக்கூடாதென்றும், கீழ்வெளிகளிலும் மேல் வெளிகளிலும் உள்ள தீவு ஏகாதிபத்தியங்கள் (Island Empires) இரண்டும் கொண்ட கூட்டுறவு, வெகு நாளாய் உள்ள கருத்து ஒன்று பிரிந்து கொண்டே வந்ததின் இறுதிப் பலன்போலுள்ளதென்றும், வெகு ஆழத்தில் வேரூன்றி நிற்கும் பெருமரமொன்றின் பழமென்றும், ஆங்கிலேயர் தூரமான கீழ்வெளிகளில் கொண்ட நோக்கமானது (Policy) இராஜதந்திரத்திற் (Diplomacy) குற்ற அலைகளால் அடிபட்டு வந்தபோதிலும், வெகு காலமாய் அக்கூட்டுறவு நோக்கியே சென்றுகொண்டிருந்தது என்றும் அவர் நம்புகிறார்; கிரேட் பிரிடன் தூரமான கீழ்வெளிகளில் செய்திருக்கிறதெல்லாம் தவறாமல் ஜப்பானுக்கு அனுகூலமாகவே முடிந்தது.

பாரன்சுயெ மட்ஸு தம் நாட்டைக்குறித்துச் சாடையாய் அசூயைக்காரர்கள் சொல்லும் பேச்சுகளை

மறுத்துப் பேசுகிறார். ஜப்பான் இப்போது கொண்ட புது நாகரீகம் வெறும் பேருக்கு மாத்திரம் அமைந்திருக்கிறதென்றும் இத்தனைக்கித்தனை ஜப்பான் பழய நாகரீகத்துக்குத் திரும்பிவிடுமென்றும் சொல்லப்படுகிறது; முற்றிலும் இது மறுக்கப்படுகிறது:—ஒவ்வொன்றிலும் ஐரோப்பிய மாதிரிகளையும் நோக்கங்களையும் கொண்டு ஜப்பானை நாகரீகப்படுத்த இடைவிடாது முயன்று வரப்படுகிறது; இந்த முயற்சி சில தூரம் கைகூடியிருக்கிறது; அப்படிக்கைகூட அநேக உயிர்ச்சேதமும் பணவிரயமும் செய்யப்பட்டிருக்கின்றன. ஜப்பானியர்கள் மேல்நாட்டுக்கனிவர்க்கங்கள் தின்று ருசி கண்டபிறகு அவற்றை மதியாதது அசம்பாவிதம். பாரனவர் இந்தச்சொல்லுடன் நிற்கவில்லை. "இன்னமும் பலவிதங்களில் அபிவிருத்திபெற்று ஜப்பான் உலகத்தில் மற்ற தேசத்தாருடன் சரி சமானமாய் போய்க்கொண்டிருக்கப் போகிறது" என்றும் சொல்லுகிறார். "அந்நியர்களைப் பார்த்து நாம் இப்போது அடைந்திருக்கும் நாகரீகத்தில் ஐம்புல நுகர்ச்சிக்குரியவற்றை (Material) நாம் கைவிடுவோமென்று நினைக்கவில்லை:—நமக்கு இப்போது மின்சார விளக்குகள் இருக்கின்றன. இனி எப்போதாவது எண்ணெய் விளக்குக்கும் மெழுகுவத்தி விளக்குக்கும் ஆசைப்படுவோமா? நமக்கு இப்போது ரெயில் பாதைகள் இருக்கின்றன; இனி எப்போதாவது காலால் நடந்துபோக விரும்புவோமா? இப்போது தந்திக்கம்பிகள் போட்டிருக்கிறோம்; அவற்றை



அறுத்துவிட்டுச் சேதிகளை ஆள் மூலமாய் அனுப்புவோமா? மக்களின் மனோபிவிருத்திக்கு உரிய சட்டம், சாஸ்திரம், சித்திரவேலை இன்னும் மற்ற வழிகள், ஆகிய இவற்றில், நாம் மேல்நாட்டு எண்ணங்களைக் கொண்டுவந்துவிட பலமுயற்சிகள் செய்திருக்கிறோம்" என்றார். இதெல்லாம் ஜப்பானியர் ஒருபோதும் கைவிடமாட்டார்கள். ஏனென்றால், அவையாவும் ஆழவேரூன்றி ஜப்பானியச் சாதி ஒரு கட்டுப்பாடாய் நிற்க முக்கியமான ஹேதுக்களாய்விட்டன." ருஷிய ஜப்பானிய யுத்தத்தைப்பற்றி அவர் சொல்வது என்னவென்றால்:—"ஜப்பான் ஒரு பெரிய வேலையின் பொருட்டுக் கச்சை கட்டிக்கொண்டிருக்கிறது; அந்தவேலை மிகவும் பெரிதென்றும் பளுவென்றும் முற்றிலும் அறிந்திருக்கிறது; ஆனாலும், தன் சொந்த இராச்சியபார காரியம் நிறைவேற்ற மாத்திரம் யுத்தம் செய்யவில்லை. நாகரீகம், மனிதஜாதி இவற்றைக் காக்கும்பொருட்டும் அச்சண்டை செய்ததென்று ஜப்பானுக்கு நன்றாய்த் தெரியும். அந்நாடு தன் சொந்தக் காரியத்துக்கே சண்டை போடுகிறதென்பது நிஜந்தான்; ஆனாலும், அதினால் இங்கிலாண்டு அமெரிக்கா இந்த நாடுகளுக்கும் நாகரீகம் மனிதஜாதி இவற்றிற்கும் பரிந்து நிற்கின்றது."

---

### வைகவுண்ட் ஹயாஷி

வைகவுண்ட் ஹயாஷி என்பவர் ஜப்பான் சக்கிரவர்த்திக்கு லண்டன் பட்டணத்தில் ஸெண்ட் ஜேம்ஸ் ராஜசபையில் ஒருவிசேஷ ராஜகாரியஸ்தனும் சர்வ

அதிகாரம் படைத்த மந்திரி (Pelenipotentiary) யுமாயிருக்கிறார். லண்டனில் மிகவும் ஜனப்பிரியம் படைத்த கனவான்களில் இவரும் ஒருவர். இந்த வைகவுண்டானவர் ஆங்கில வழிகளையும் நடத்தையையும் கண்டவர் அனுகும்படி முற்றும் * கைக்கொண்டிருக்கிறவர். அதினால், வெஸ்ட் எண்ட் பாகத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் இவரை விட வேறொருவரையும் அங்குள்ளோர் தேடிக் கூப்பிடுகிறதில்லை. சூரியோதய பூமியாகிய ஜப்பான் தேசத்துப் பிரதிநிதி ஆகிய இவர் ஒருநாள் மாலையில் வெஸ்ட் எண்ட் நீச்சடிக்கும் பந்தயத்திலும், மறுநாள் மாலையில் தேகப்பயிற்சிக் கச்சேரியிலும் தலைமை வகிப்பதும் மூன்றாம்நாள் சாயந்திரம் பிரசங்கங்கள் நடக்கும் ஒரு சபையில் பேசுவதும் ஸகஜம். தலைவராய் ஒரு சபையில் வீற்றிருந்தால் இவரை எவரும் பார்த்து அதேமாதிரி நடந்துகொள்ளும்படிச் செய்வார். சபையாரைப் பார்த்துப் பேசும்போது சாமர்த்தியமும் மரியாதையும் காட்டி இவர் புகழ்ச்சிபெறாத சமயமில்லை. இந்தமாதிரியான குணங்கள் படைத்தபிறகு இவர் இந்தக்காலத்தின் வெகு சமத்தான இராஜதந்திரிகளில் ஒருவரென்று சொல்லாமலே விளங்கும்.

ஹையாஷி 1866-ம்௵ இங்கிலாண்டுக்குப்போய் அங்குக் கல்வி பெற்றார்; சிறுவயதிலேயே தம் சொந்த நாட்டிலேயே சர்க்கார் வேலையில் அமர்ந்தார். முதல் முதல் அவர் கோப் (Kobe) என்னும் இடத்தில் கவர்னராய் இருந்து பிறகு அந்நிய மந்திரி ஆபீசுக்கு (Office)



மாற்றப்பட்டார். இந்த வேலையிலிருந்தபோது ஜப்பானுக்கும் சீனாவுக்கும் யுத்தம் நடந்தது. அக்காலத்தில் இவர் விசேஷ சாமர்த்தியங் காட்டினபடியால் இவருக்கு வைகவுண்ட் (Viscount) என்று ஒரு பிரபுப்பட்டம் கொடுக்கப்பட்டது. அந்த யுத்தம் நின்றபிறகு, சமாதான உடன்படிக்கை நடத்துவதில் மிக உதவியாயிருந்தார். பிறகு ருஷியாவில் ஸெண்ட் பீடர்ஸ்பர்க்குக்கு ஜப்பான் மந்திரியாக அனுப்பப்பட்டார். 1899-ம் வருஷம் லண்டனில் ஜப்பான் காரியஸ்தராக மிஸ்டர் கேட்டோ (Kato) வுக்குப் பதிலாகப் போனார். ஹாலண்டிலுள்ள ஹேக் பட்டணத்தில் உலகத்து நானாதேசங்களுக்கும் பொதுவாய் ஒரு நியாய சபை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. தேசத்தோடு தேசம் யுத்தம் செய்வதை யொழித்துக் கூடிய வரையில் வழக்குகளை இந்த நியாயசபையின் மத்தியஸ்தத்தின்பேரில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பது நோக்கம். இது 1899-ல் ஸ்தாபிக்கப்பட்டது. ஹேக் (Hague) சமாதானக் கூட்டத்தில் இவர் ஜப்பான் பக்கம் முக்கிய பிரதிநிதியாய் இருந்தார். ஹேக்கிலிருந்து திரும்பி லண்டனில் ஸெண்ட் ஜேம்ஸ் ராஜ சபையில் ஒரு விசேஷ இராஜ தூதனாகவும் சர்வாதிகாரியாகவும் (Plenipotentiary) ஏற்பட்டார். 1896-ம் ஆண்டில் பாரன் பட்டம் பெற்றார்; 1902-ம் ஆண்டு வைகவுண்ட் என்னும் பட்டம் பெற்றார். இவர் சுறுசுறுப்பான வாழ்க்கையில் எந்தக் காரியம் கொண்டு முடித்ததற்கு மிகவும் பெருமை சொல்லிச்

கொள்கிறார் என்றால், இங்கிலாண்டுக்கும் ஜப்பானுக்கும் கூட்டுறவு செய்வித்ததற்கே. இவர் வெகுதேசங்களைச் சுற்றிப்பார்த்திருக்கிறார். இவர் யாத்திரை செய்யாத தேசம் இன்னதென்று சொல்லுதல் கஷ்டம். ருஷியசக்கிரவர்த்தியான ஸாரின் அத்தியந்த சிநேகிதர்; ஸாரைப்போலவே உலக சமாதானத்தை விரும்பினவர்; ஆனால் அவ்விருப்பம் ஸார் விருப்பத்தைக் காட்டிலும் பெரியநோக்கம் கொண்டது. இவர் தம் ஜப்பான் பாஷையில் இராச்சியபார சிக்கனம்(Political economy)இராச்சியபார சாஸ்திரம் (Politics) இவ்விரண்டு விஷயமாய் ஆங்கில புஸ்தகங்கள் பல மொழிபெயர்த்திருக்கிறார். இவர் பிரசுரித்த ஆங்கிலேய புஸ்தகங்களில், வெகு கிட்டத்தில் அச்சிடப்பட்ட "அவர் ஜனங்களுக்கு" என்ற புஸ்தகம் ஒன்றைச் சொல்லலாம்.

லண்டனில் ஜப்பானிய மந்திரி ஆபீசில் இருக்கும் பலர் வாழ்க்கையின் மாதிரி இப்படிப்பட்டதென்று பின்வருமாறு ஒரு நிருபர் ஆங்கிலப் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார் :—

"க்ராஸ்வெனார் கார்டன்ஸ் (Grosvenor Gardens) என்ற இந்த ஆபீசைச் சாதாரணமாய்ப்பார்க்கப் போகிறவனுக்கு மிக ஏமாற்றத்தைக் கொடுக்கின்றது. யாவனாயினும் அங்குக் கீழ்நாட்டு ஆடம்பரம் பார்க்கலாமென்றே போவான். வந்தாரைக்காணும் அறையில் ஜப்பானியச் சித்திரத்தொழில் மாதிரிகளும் உத்தியோகஸ்தர்களை வரவேற்கும் அறையில், ஜப்பான் சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி, பட்டத்திளவரசர்



இவர்களுடைய படங்களும், இன்னும் கண்ணைக் கவரும்படியான புஷ்பங்கள் மிருகங்கள் முதலியவற்றின் சித்திரப்படங்களும் தவிர, மற்றப்படி அங்குப்போனவன் தான் ஐரோப்பிய மாளிகையில் இருக்கவில்லை என்று நினைக்க யாதொரு குறியும் இல்லை. ஆபீசில் போட்டிருக்கும் சகல சாமான்களும் இப்போதைய ஐரோப்பிய சாமான்கள்போலவே இருக்கின்றன. வைகவுண்டுக்குள்ள காரியதரிசிகள்கூட முழு ஐரோப்பிய உடை உடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மஞ்சள் நிறமும், கருப்பு மயிரும், வாதாம்கொட்டை போன்றக் கண்ணும் தவிர அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் ஜப்பானியரென்று காட்ட யாதொரு குறியுமில்லை. வாரம் ஒருதரம் மாத்திரம் ஜப்பானியரென்று நன்றாய்க் காட்டிக்கொள்வதுண்டு. அன்றைய தினத்துக்கு "ஜப்பானிய ராத்திரி" என்று பேர். அந்த ராத்திரி சாப்பாட்டு மேஜையில் வைக்கும் ஒவ்வொன்றும் ஜப்பான் தேசத்ததாய் இருக்கவேண்டும். அன்று ஜப்பானிய பாஷைதான் பேசவேண்டும். ஒவ்வொரு மாசத்திலும் இரண்டாம் வெள்ளிக்கிழமை மற்றொரு ஜப்பான் தினம். அப்போது வைகவுண்ட் பெண்சாதி லண்டனில் (London)வசிக்கும் தன் ஜப்பானிய ஸ்திரீகளான தம் நண்பர்களை (14-பேர்கள்) விருந்துக்குக் கூப்பிட்டுத் தேத்தண்ணீர் கொடுப்பாள்; உண்மையான ஜப்பானிய தேத்தண்ணீர் சிறு கோப்பைகளில் கொடுக்கப்படும்; இந்தமாதிரி காலங்களில் சர்க்கரையும் பாலும் தேயில் கலப்பது வழக்கமன்று. ஜப்பானியப் பட்ச

ணங்களும் திண்டிகளும் மரக்கரியாலும் இறைச்சியாலும் செய்யப்பட்டுத் தின்னப்படும். இவ்விறைச்சியும் கரியும் ஆங்கிலேயருக்கு இன்னதென்று தெரியாது.

வைகவுண்ட் ஹையாஷியின் மனைவியார் ஜப்பான் தேசத்துப் பிரபு ஒருவரின் பெண். லண்டனில் தம் கணவனுடன் இருக்கப் போன புதிதில் இங்கிலீஷு பாஷை சொற்பமாய்த் தான் தெரியும். பிற்பாடு சில மாசங்களுக்குள் நன்றாய்க் கற்றுக் கொண்டு விட்டார்; தன்னைப் பார்க்க வரும் ஆங்கிலேய ஸ்திரீகளுடன் சுமாராய்ப் பேச இப்போது சக்தியுள்ளவரா யிருக்கிறார்.

---

ஜனரல் வைகவுண்ட் கட்ஸூரா

ஜப்பான் தேசத்துப் பிரதானியாகிய ஜனரல் வைகவுண்ட் கட்ஸூரா என்பவர் கி. பி. 1849-ம் வருஷத்தில் முக்கியத் தீவின் மேற்பாகத்தில் சாதாரணமாய்ச் சோஷூ (Choshieu) என்று சொல்லப்பட்ட நாகாட்டோ(Nagato) என்ற மாகாணத்தில் பிறந்தார். இந்த மாகாணத்தில் அநேக ஜப்பானியப் போர்வீரர்கள் இராஜதந்திரிகள் முதலான வெகு பிரபலமானவர்கள் சிலர் பிறந்தார்கள்:—மார்க்விஸ் ஐட்டோ என்ன, பீல்ட் மார்ஷல் யமகாட்டா என்ன, கவுண்ட் ஐநோயி என்ன, இவர்கள் யாவரும் அந்த மாகாணத்தில் பிறந்தவர்களே. கி. பி. 1867-ம் வருஷம் பழைய சக்கிரவர்த்தி செங்கோல்கொண்ட பிறகு இந்தச் சேனாபதி இராணுவத்தில் மிகப் பிரக்கியாதி யடையத் தொடங்கினார். இவர் அக்காலத்தில் ஒரு சிறு படைத்தலைவராய்



(Subaltern) இருந்தபோதிலும் மிகவும் கீர்த்தி பெற்றார்; அதுபற்றி ஜர்மன் தேசத்தில் இராணுவ விஷயமான விவரங்கள் கற்றுவரச் சக்கிரவர்த்தி இவரை அங்கே அனுப்பித்தார். அத்தேசத்தில் கட்ஸூரா வெகுகாலம் சுகமாய்க் காலங் கழித்துத் தம்நாடு திரும்பியவுடன் படை இலாகாவில் அநேக பலவிதமான திருத்தங்களைச் செய்து படைகளின் திறமையை எல்லாருக்கும் ஆச்சரியமுண்டாக மாற்றினார். கி. பி. 1876-ம் ஆண்டு ஒரு கர்னல் வேலைக்கு உயர்த்தப்பட்டபோது பழைய சேனாபதி காவாகாமியுடன் மறுபடியும் ஜர்மனிக்கு அனுப்பப்பட்டார். அந்நாளில் காவாகாமி என்பவரால் வெகு காரியங்கள் நடக்குமென்று எண்ணப்பட்டது. ஜர்மனியிலிருந்து தம்தேசம் வந்து சேர்ந்தவுடன் "வைஸ் மினிஸ்டர்"(Vice-Minister) வேலைக்கு ஜனரல் ஓயாமாவின்கீழ் உயர்த்தப்பட்டார். இந்த வேலையில் இருந்துகொண்டே படைகளில் பல்லாண்டுகளுக்கு முன்னால் தாம் ஆரம்பித்த சீர்திருத்தங்களை முடித்துத் தீர்த்தார். 1892-ம் வருஷம், நிலைப்படையின் மூன்றாவது பாகத்துக்குத் தலைவராய் நேமிக்கப்பட்டார்; கொஞ்சநாளுக்குப் பிறகு ஜப்பானுக்கும் சீனாவுக்கும் யுத்தம் ஆரம்பித்தபோது, தைரியமும் தந்திரமும் உள்ள ஜப்பானியத் தலைவர்களில் ஒருவராகப் பெயரெடுத்தார். இவர் இப்படிப் பெருங் காரியங்கள் செய்யவே வைகவுண்ட் பட்டம் கொடுக்கப் பெற்றார். சேனாதிபதி அந்தஸ்துக்கும் உயர்த்தப்பட்டார். கி. பி. 1898-ம் ஆண்டில் யுத்த மந்திரியாக நேமிக்கப்பட்டார். இந்த

உத்தியோகத்தில் 1900-மாண்டில் யமகாட்டா (Yamagata) வினுடைய மந்திராலோசனை சபை (Cabinet) கலைகிற வரையில் இருந்தார்; இப்போதுள்ள மந்திராலோசனை சபை 1901-ம் வருஷம் ஜெனரல் வைகவுண்ட் கட்ஸூரா ஏற்படுத்தினார். இந்தச் சபை ஐட்டோச் சபைக்குப் பிறகு வந்தது; ஜனங்கள் எல்லோர்க்கும் வெகு நம்பிக்கையாய் நடந்து வருகிறது. இப்போது இந்தச் சமயத்தில் கவுண்ட் கட்சுராவானவர் ஜப்பான் துரைத்தனத் தலைவராய் இருப்பது ஜப்பானுக்கு வெகு அதிருஷ்டம். ஏனென்றால் இவர் வெகு சமர்த்தர், யாதொரு கட்சியிலும் சேர்ந்தவரன்று. இவரை இராஜதந்திரி என்று சொல்வதைவிட ஒரு படையாளி என்றே சொல்லவேண்டும்.— இப்படிப்பட்ட காரணத்தினாலேயல்லாமல் எகாதிபத்தியத்தில் இருக்கும் எல்லாத் தலைவர்களிடத்தில் கிட்டின நேரான உறவு கொண்டவராயும் இருக்கிறார். ஐட்டோவின் பழய தோழனாகிய கவுண்ட் ஐநோயினுடைய ஒரு பெண்ணை மணந்தார். இவர் வீட்டில் ஜப்பானியர்கள் பலவருஷமாய்க் கூடிக் கலக்கும் வழக்கம் இருந்து வருகிறது; இவர் வீட்டில் பிரபலமான பெரிய மனுஷர்கள் யாவரும் பொதுவாய்க் கூடிப்பேசுவதுமுண்டு; இதுவுமல்லாமல் யுத்தத்திற்குப் போகவேண்டியிருப்பவரில் அநேகம் பேருடன் பக்கத்தில் நின்று சண்டைசெய்திருக்கிறார்; யமகாட்டா, ஓயாமா இவர்களிடத்திலும் ஐட்டோவண்டையுங்கூட வேலை செய்திருக்கிறார். இம்மாதிரியாகக் கட்சிகள் எல்லாவற்



றிலும் குடிகள் எல்லா வகுப்பார்களிலும் இவர்க்குப் பலசிநேகிதர்கள் இருக்கிறார்கள். இதனால் இந்தச் சங்கடகாலத்தில் இவர் ஒருநல்லபதவியை (good stead) சம்பாதித்திருக்கிறார்.

---

## ஜப்பான் தேசத்துச் சில சேனாதிபதிகள்

### மார்க்விஸ் யமகாட்டா

ஜப்பான் தேசத்து மிகவும் பேர்போன இராஜதந்திரிகளில் மார்ஷல் யமகாட்டா ஒருவர். இன்றைக்கு ஜப்பான் தன்னதே என்று தன் அதிசயமான சேனையைச் சொல்லிக்கொள்ளுகிறது. அந்தச்சேனை இந்த மார்ஷலால் உண்டாக்கப்பட்டது; இந்த விஷயத்தில் ஜப்பான் இந்தமார்ஷலுக்கு மிகக் கடமைப்பட்டிருக்கிறது. அவர் அந்தச்சேனையைச் செய்ததும், கூட்டியதும், உருவமைத்ததும், பழக்கினதுமல்லாமல் உயிருள்ள பெரிய கூட்டமாகத் திரட்டித் தன்னுடைய குணாதிசயங்களையும் பூட்டியிருக்கிறார். இந்தப் பெரும் வேலையில், இதர தேசத்தாருடைய மதிப்பற்ற உதவியையும் பெற்றிருக்கிறார். பிராஞ்சும் ஜர்மனியும் தம் அருமையான சமர்த்தர்களை அனுப்பி உதவின. இந்த மார்ஷல் மூலமாக இந்தத் தேசங்களுடைய திறமை பெரும்பாலும் சேனையில் பதிந்திருக்கிறது. அவற்றால் அவருக்கு மிக ஞானமுண்டாயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை; ஆயினும், அவருக்கு அத்தேசங்கள் சொல்லிக்கொடுத்தவற்றைத் தன் சொந்த சாமர்த்தியத்தைக்கொண்டு விருத்திபண்ணிக் கொண்டாரென்பதை அவைகள் ஒப்புக்கொள்ளாமற் போகவில்லை.

யமகாட்டா ஜப்பான் சேனையை உருவமைப்பதில் அவருக்குத் தேகவலிமை இல்லாததால் அசாதாரணமான கஷ்டங்கள் நேரிட்டன, இந்தக் கஷ்டங்களால் அந்த விஷயத்தில் அவர் செய்தவேலைக்கு அதிகப்பெருமை யுண்டாயிருக்கிறது. நிஜமாகவே அவருக்குத் தேகத்தில் கஷ்டம் இல்லாம லிருந்தபோதிலும் கூட மிகவும் களைத்து வலியற்று இருந்து வந்தார். அதினால் கடந்த பலவருஷங்களாக அவர் நோயாளியாகவே இருந்ததாகச் சொல்லவேண்டும். தம்மால் கூடிய மட்டிலும் வேலைசெய்து வந்தகாலத்தில் விடியற்காலை முதல் இராத்திரி நெடுநேரம் வரையில் சிரமப்படவேண்டி இருந்தது. அவர் ஸ்தானத்தில் இன்னொருவர் இருந்திருப்பாராகில் களைப்பாறுதல் தவிர வேறொன்றும் மனதில் தோன்றியே யிராது. பிறகு அடிக்கடி வலிதாங்கப்படாத நோய்கள் வந்து அவரைத் தாக்கின; அப்பொழுது எதற்கும் பின்வாங்காத அவர் மனவலி (Will) யும் இந்நோய்களுக்குப் பின்வாங்கின.

இந்தமாதிரி ஸ்திதியானது, நாம் எப்பொழுது வேலைத் தொந்திரவால் சும்மா படுத்திருக்கக் கூடாதோ அப்பொழுது தான் வந்து நேரிடுவது வழக்கமென்று அவர் ஒரு விதமான பொறுமைப் புன்சிரிப்புடன் முறை யிடுகிறதுண்டு.

ருஷியாவில் கெம்பிரியில் (Kembri) ருஷியச் சக்கிரவர்த்தியாகிய இரண்டாவது நிகல(Nicholas II) ஸுக்கு நடந்த பட்டாபிஷேகத்தைப் (1894) பார்க்



கும்படிக் கூடின பேர்போன கனவான்களில் மார்ஷல் யமகாட்டா ஒருவர்; அவரைத்தான் எல்லாரும் மிகவும் சிரத்தையாய்க் கவனித்தார்கள்; படையாளிகளுடன் அங்கே அவர் கலந்த காலத்தில் அவர்கள் மனதை அவர் மிகவும் ஆழக்கவர்ந்தார். அவரிடத்தில் படைகள் சம்மந்தமாய் ஆழ்ந்த ஞானம் இருந்தாலும், அன்பும் வணக்கமும் கலந்த நடத்தை இருந்ததாலும் எல்லார்க்கும் அவரைக்கண்டு அளவற்ற ஆச்சரியமுண்டாயிற்று. அவரை அங்குள்ளோர் ஒரு முதல்தரமான போர்வீரர் என்று சொல்லிக்கொண்டார்கள்; அன்றியும் அவரை இரண்டாவது மோல்ட்கி(Moltke)* என்றும் சொன்னார்கள்.

மார்க்விஸானவர் சேனையைக் கருதிய விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில் கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்; கொஞ்சகாலத்துக்கு முன் ஜப்பானில் நடந்த சீர்திருத்தங்களில் பல தமக்குப் பிடிக்கவில்லை என்பதை இவர் மறக்கவில்லை. இப்படியிருந்தும், கன்ஸர்வேடிவ் (Conservative) கக்ஷியார் இவரைத் தமக்குத் தலைவராக எண்ணினாலும், பிரதான மந்திரியாய் இருந்திருந்தாலும், இவர் ஒரு கட்சிக்கும் சேர்ந்தவரல்ல; இவர் இராஜதந்திரிகளில் சேர்ந்தவரல்லவென்றே சொல்லலாம்; ஏனெனில், இவர் பார்லிமெண்டு (Parliament) வைத்து அரசாள்வதை வெறுப்பவர். தேசத்தின் பொது விஷயங்களைக்

* மோல்ட்கி என்பவர் சுமார் 40-வருஷத்திற்கு முன்னால் இருந்த ஜெர்மானிய யுத்த தந்திர நிபுணர்; இவர் 1891-ம் வருஷத்தில் காலம் சென்றார்.

குறித்த சங்கதிகளைத் தீர்மானிக்க வேண்டியிருந்தால் மாத்திரம் பார்லிமெண்டுக்குள் நுழையச் சம்மதிப்பார். இவர் திரிகரணத்திலும் படையாளிதான்; தாம் படையாளியாய்ச் செய்யக்கூடிய வேலையை நோக்கித்தான் தாம் இவ்வுலகத்தில் வாழக் கரிசனம்கொண்டிருக்கிறார்; சேனைதான் இவருக்குத் தெய்வம். அதை ஒரு அளவற்ற மதிப்புக்குரிய வஸ்துவாகவும் தெய்வத்தன்மை பொருந்தியதாகவும் பாவிக்கின்றார்; அதற்காக எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் அடைந்தாலும் பெரிதாகாதென்பது இவருடைய கொள்கை.

தமக்கு வயதாய் விட்டதென்று மார்ஷல் குறை சொல்லிக்கொண்ட போதிலும் 65-வயசு கூட ஆனதாக இவரைப் பார்த்தால் தோன்றாது. ஆனால், அவர்க்கு மீசையும் தலைமயிரும் நரைத்திருக்கின்றன; உருவம் நிமிர்ந்து ஒல்லியாய் நீண்டு இருக்கிறது; வலியுடையவராய் வேலைக்குப் பின் வாங்காதவர்; தலை நீண்டது. இவர் உடையிலும் பார்வையிலும் ஒரு போர் வீரனுக்கு வேண்டியது போல, மிகக்கச்சிதம் கொண்டாடுகிறவர்; இவற்றை அசட்டை செய்பவர்களைக் கண்டால் இவர்க்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது. பேசிக்கொண்டிருக்கும் போது மார்க்விஸ் யமகாட்டாவுக்கு, தாம் எடுத்துக்கொண்ட விஷயங்களைப் பக்கத்தில் இருக்கும் எந்தப் பொருளைக்கொண்டாவது விளக்குவது வழக்கம்; ஒரு நெருப்புப் பெட்டியாகட்டும், சிறு சுருட்டுகள் உள்ள பெட்டியாகட்டும், எது இருந்தாலுஞ் சரி, சிற்சில வேளையில்



அதையே ஒரு படையணியாக அல்லது பட்டாளமாகக் (Battalion) கருதி விளக்குவார்.

---

### பீல்ட்மார்ஷல் மார்க்விஸ் ஒயாமா

ஜப்பான் தேசத்தில் வெகு பேர்போன மக்களுள் மார்க்விஸ் ஒயாமா ஒருவர்; இவர் ருஷியாவோடு நடந்த யுத்தத்தில் இவர் ஜப்பான் தேசத்துச் சேனைகளுக்கு எல்லாம் நேமிக்கப்பட்டார். இந்தச்சங்கதி தெரிந்த உடனே ஸெண்ட் பீடர்ஸ் பர்கில் எல்லோரும் திருப்தி அடைந்தார்கள்; ஏனென்றால், வெகுநேர்த்தியாய்ச் சேனைகளை நடத்தின குரோக்கிக்குப் பொறாமை உண்டாய் ஜப்பானிய கட்சியில் காரியங்கள் கெட்டுப்போமென்று ஜப்பான் சத்துருக்கள் நம்பினார்கள். ஆனால், சத்துருக்கள் ஏமாந்து போனார்கள்; ஏனென்றால், குரோக்கி ஒயாமாவுக்கு விரோதியாவதைவிட்டு அவரைக்கண்டு அண்ணாந்து களிப்பவரானார் என்று ஜப்பானியர் சொல்லுகிறார்கள்.

மார்க்விஸ் ஒயாமாவுக்கு இப்போது சுமார் 70-வயசு இருக்கும். அத்தேசத்துப் பிரக்கியாதி பெற்றவர்களில் யாரைப்பார்த்தாலும்; அவர்கள் ஜப்பானியராய்த் தோற்றுவதுபோல அவர் தோற்றமாட்டார்;

ஜப்பானியர் மொத்தத்தில் குறுமக்கள்தான். ஆகையால் ஜப்பானியச் சேனை, உத்தியோகஸ்தர்கள் யாவரும் அப்படியே ஆயினும்,ஒயாமா உயர்ந்து கொஞ்சம் பருமனாயும் இருப்பார். மற்ற ஜப்பானியர்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் அவர் ஒரு இராக்ஷஸனென்பதற்குக்

குறைவில்லை; அன்றி, அவர் தேகம் பருத்துத் திரண்டிருக்கும். ஜப்பானியர்களுக்கு வழக்கமாயிருக்கும் மெலிதான மீசையையும் சிறிய கிருதாவையும் (Whiskers) சரைத்துவிட்டு வழவழப்பான முகத்துடன் இருக்கிறார். முகத்தில் ஏறக்குறைய எப்போதும் "நல்ல எண்ணத்தால் உண்டாகும் புன்சிரிப்பைக் காணலாம். கவுண்டானவர் மிக அழகானவரோடு சேர்ந்தவரன்று. அவரை அன்பும் நல்லகுணமும் உருவெடுத்தனவென்னலாம். ஜப்பானில் வாக்கு சாதுர்யத்தில் ஒருவருக்கும் கீழ்ப்பட்டவரன்று. அவர் நடத்தையானது மிகக்கருணை நிறைந்தது; எதிராளியைக் கைவசம் பண்ணும் தன்மையுடையது. அவர் மனைவியார் ஜப்பான் நாட்டில் மாட்சிமை பெற்ற மாதர்களுக்குள் மேலானவர்; அழகானவர்; அவர் நடையிலும், உடையிலும் முற்றும் மேல்நாட்டு ஸ்திரீதான்; அவர் சிறுவயதிலேயே கல்வி கற்கும் பொருட்டுப் பிராஞ்சு (France) தேசத்துக்கு வரவழைக்கப்பட்டு அங்கேயே தம் சிறுபிராயமெல்லாம் கழித்தார்; அவரை அமெரிக்காவுக்கு அழைத்துப் போகும்போது வயது 12-தான். இந்தச் சிறு பிராயத்தில்கூட தாம் பிறந்த பிரபு குலத்திற்கு உண்டான குணங்களை வெளிப்படுத்தினார். அவர் தோற்றம், அவர் நிறம், அவர் கருநீலமான தலைமயிர், நேர்த்தியான விளக்குத் திரிபோன்ற விரல்கள், அழகான நகங்கள் இவையாவும் அவர் பிறந்த பிரபு குலத்தைக் குறிப்பவை. அவர் வயது முதிர்ந்த காலத்தில், தம் விரல்



தளைப் பார்த்துச் சந்தோஷமடைவது வழக்கம். அவருக்கு ஸெண்ட் பீடர்ஸ் பார்க்கில் இருந்த ஒரு உடன்பிறந்தாள் அப்போதப்போது அழகான மோதிரங்கள் அனுப்பித்துக்கொண்டிருந்தாள். ஆனால் ஓயாமாவின் மனைவி அவற்றைப் போட்டுக்கொள்கிறதில்லை. அவர் ஆங்கிலம் பேசும்போது அப்பாஷை தாய்ப்பாஷை அல்லாதவர்க்கு உண்டாகக்கூடிய குற்றம் பிழைகள் உண்டாவதில்லை. இப்போது இந்தத் தம்பதிகளுக்கு வயது வந்த இரண்டு ஆண்மக்களும் ஒரு பெண்ணும் உண்டு. இந்த அம்மாள் தம் புருஷரோடுகூடப் போர் வீரர்களோடு கலந்து பழகும்போது உயர்குலத்து ஸ்திரீயாய்ப் பழகுவாராயினும் தம் வீட்டுக் காரியங்களைச் சாமானிய ஸ்திரீகளைப்போலப் பொறுப்பாய்ப் பார்த்து வருகிறார். "புதுமாதிரி ஸ்திரீகள்" என்று ஐரோப்பிய ஸ்திரீகள்போல நடை உடை முதலியவற்றை மாற்றி ஜீவிக்கும் ஜப்பானிய ஸ்திரீகளில் அவரை முதல்வரென்று சொல்லலாம். வயதான பெரிய இராஜ தந்திரிகளுக்கு அந்தம்மாளிடத்தில் அதிகப்பிரியமில்லை. சக்கிரவர்த்தி அந்தம்மாளிடத்தில் அளவற்ற அபிமானம் வைத்திருக்கிறபடியால் அவரால் அபாயமுண்டாகுமென்று பயந்து அப்படிப் பிரியம் வைப்பதில்லை. கௌண்ட் ஓகுமாவிடத்தில் படைகளும் குடிகளும் கொண்டிருக்கும் மாதிரியைச் சுமாராய்ப் பின்வருமாறு அறியலாகும்:—பீல்ட் மார்ஷல் (Field-Marshal) வெகு கண்டிப்பாய் அடக்கி நடத்துவாராயினும் (Disciplinarian) அவர்

கீழ் உழைக்கும் ஊழியர்களாயினும் படையாளிகளாயினும் யாவராயினும் ஒருங்கே அவரை வழிப்படுகிறார்கள். அவரிடத்தில் அவர்கட்குற்ற நம்பிக்கை அளவு கடந்தது; யமகாட்டாவும் இவரொப்ப அவர்களின் மதிப்புற்றவரன்று. உண்மை கூறின், கௌண்ட் ஒயாமாவின் பொருட்டு அவர்கள் செய்ய இயலாதது ஒன்றுமில்லை, படாத கஷ்டமில்லை, களிப்புடன் எதிர்க்காத கெடுதியில்லை. அவர் கீழ் இத்தகைய அன்பு கொள்வோர் அவர் கீழ் உழைப்பவர்களேயல்ல; படைகளிடத்தில் கொண்ட அன்புபோன்றே நாடெங்கும் குடிகளிடத்திலும் அன்பு கூர்ந்திருக்கிறார். போர்ட்டார்தர் (Port Arthur) என்னும் கடலரணைக் கைப்பற்றியதினாலே அவ்ர்களுடைய மனதில் ஆழ்ந்து கிடக்கிறார். அவர்களுக்குக் கைகூடிய வெற்றிகள் யாவற்றிலும் இவ்வரணைக் கைப்பற்றின வெற்றியையே அவர்கள் வெகு செருக்குடன் பாராட்டுகிறார்கள்.

ஒயாமாவானவர் ஜப்பான் சக்கிரவர்த்தியாகிய மிக்காடோவின் அந்தியந்த சிநேகிதர்களில் ஒருவர். சக்கிரவர்த்திக்கு அவரிடத்தில் அந்தரங்கமாயுள்ள (Personal) மதிப்பு தவிர படைத்தலைவராய்க்காட்டிய சாமர்த்தியத்தாலும் அவரிடத்தில் விசேஷ மதிப்புண்டு. ஒயாமா "ஜென்ரோ" (Genro) என்னும் மூத்த இராஜதந்திரிகள் அடங்கிய சபையில் ஒருவர். இந்தச் சபை தேசசம்பந்தமான விஷயங்களில் சக்கிரவர்த்தி பிரவேசிக்கவேண்டிய அவசியம் நேரிடும்போது அவர்க்கு ஆலோசனை சொல்லும் ஒரு "பிரிவி கௌன்ஸில்"



(Privy Council) போன்றது. இவ்விதமாய் அவர் ஒரு பேர்பெற்ற இராஜதந்திரியாயும் படையாளியாயுமிருக்கிறார். அவரும், மிகக்கிழப்பட்டு ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் கலக்கச் சக்தியற்றிருந்த யமகாட்டாவும் சக்கிரவர்த்திக்கு வலக்கையும் இடக்கையுமாய் இருப்பவர்கள்.

தம் மனைவியார்போலவே, தாமும் பிராஞ்சு (France) தேசத்தில் கல்விப்பயிற்சி பெற்றார். ஆனது பற்றி அவர்க்கு ஆதிமுதல் பிராஞ்சியர் மாதிரியாகவே குணமேற்பட்டது. "அவர் 1870-ம் வருஷம் நடந்த பிராஞ்சு ஜர்மனி யுத்தத்தில் ஜப்பானியத் துரைத்தனத்துக்காக யுத்த நடவடிக்கைகளைப் பார்த்திருக்கும்படி எற்பட்டவர் (Attache); இந்த யுத்தம் முழுவதும் வெகு கவனம் வைத்துப்பார்த்தார்; கடைசியில் முடிவைக்கண்டு மனங்கசந்து எமாந்துபோனார். ஜப்பானுக்குத் திரும்பியபோது சைனியத்தில் ஒரு தளகர்த்த வேலைக்கு நேமிக்கப்பட்டார். கி.பி. 1877-ம் வருஷம், நாடு இரண்டுபட்டுக் கலகம் நடந்தபோது, அவர் வெகு கோரமான சண்டைகளைப் பார்த்தார். பிறகு சமாதானம் நிலைத்தபோது, ஐரோப்பாவில் அந்தக்காலத்தில் இருந்த விதம் விதமான படை எற்பாடுகள் நடந்துவரும் விதத்தைக் கற்றறிந்து வரும்படி அனுப்பப்பட்டார். யமகாட்டா அப்போது படைத் திருத்தங்களை எற்றுக்கொண்டு நடத்திவந்த பெரும் வேலையில் அவர்க்கு உதவிசெய்யும் உத்தேசத்துடன் அனுப்பப்பட்டார். ஐரோப்பாவில் இந்தக் காரியம்

முடிந்தவுடன் ஜப்பானுக்குத் திரும்பிவந்து படை ஏற்பாட்டைத் திருத்துவதிலும் ஜப்பான் தேசத்துப் படைக்கல்வி விஷயத்தில் முக்கியமான மாறுபாடுகள் செய்வதிலும் புகுந்துழைத்தார். தமக்கு ஏற்பட்ட வேலையை மிகச் சுறுசுறுப்புடனும் உண்மையான சாமர்த்தியத்துடனும் செய்ததினாலே யமகாட்டாவை மிகவும் சந்தோஷப்படுத்தினார்; ஆகையால் யமகாட்டா தம்மால் கூடியமட்டில் கவுரவப்படுத்தவேண்டி இவரைத் தம் கீழுள்ள யுத்தவீரர்களுக்குத் தலைவராக்கினார். ஜப்பான் சக்கிரவர்த்தியாகிய மிக்காடோவுங்கூட இவரை முதல் முதல் கவுண்டாகவும் பிறகு மார்க்விஸாகவும் செய்து கண்ணியப்படுத்தினார். சீனாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த யுத்தகாலத்தில், ஓயாமா யுத்தமந்திரியாய் இருந்தார்; ஆனால், இந்த உத்தியோகத்தை விட்டுக் கூடிய சீக்கிரத்தில் நீங்கி இரணகளத்தில் போய்ச் சண்டைபோட உத்திரவு கேட்டார். அதன்படி இவர் இரண்டாம் "ஆர்மிகோர்(Army Corps) என்னும் அணிவகுப்புக்குத் தலைவராய் நேமிக்கப்பட்டார். இவ்வகுப்புடன் மஞ்சூரியா வழியாய் ஊடேபாய்ந்து போர்ட் ஆர்தரைக்(Port Arthur) கைப்பற்றினார். சீனா மீது படையெடுக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கும்போது ஜப்பானுக்குத் தெற்கே ஹிரோஷிமாஎன்ற சிற்றூரொன்றைத் தன் தலையிடமாக்கிக்கொண்டு(Head Quarters)அங்கே ஒரு கடையில் இருந்த இரண்டு சிறு அறைகளைத் தாம் உண்ண உறங்க அமர்த்திக்கொண்டார். "இந்தச் சண்டைக்காகப் படைகள் மரக்கல

V42
210



மேறுவதற்கு முதல்நாளிரவு M. டி. கர்வில் (Guerville) என்ற ஒரு பிரஞ்சுக்காரர் ஓயாமாவைப் போய்ப் பார்த்தார். அப்போது அவரும் மார்க்விஸ் ஐட்டோவும் தளவாய் காவா காமியும் நாடு குறிக்கும் ஒரு பெரிய படத்தைக் (Map) கீழே விரித்துக்கொண்டு அதைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு வெகு ஆவலுடனும் கவலையுடனும் சண்டைக்கு உற்ற இடங்களைப் பரிசோதித்துக்கொண்டிருந்தார். மறுநாள் படைகள் ஏற்றிய மரக்கலங்கள் ஒன்றின்மேல் அந்தப் பிராஞ்சு தேசத்தார் ஓயாமா பக்கத்தில் நின்றுகொண்டிருக்க, அப்போது ஒரு ருஷியப் படகி (Cutter) லிருந்த ஒருவன் இவர்களைப் பார்த்தவுடன் குனிந்து படகை ஓட்டிக்கொண்டே இவர்கள் பக்கமாய் சுட்டான். உடனே அங்கிருந்த ஜப்பானியப் படையாளிகளுக்கும் கப்பலோட்டிகளுக்கும் வெகு கோபமுண்டாகி "பயங்காளியே, கோஸக்கே, துரோகியே உனக்கும் போங்காலம் அடுத்தபடியாய் வரும், கேடு கெட்ட வேவுகாரனே!" என்று உரக்கக் கூக்குரலிட்டார்கள். ஆயினும் ஓயாமா ஒருவார்த்தையும் சொல்லவில்லை; ருஷியப்படகு ஓடிக்கொண்டு போகப் பார்த்துவிட்டு வெகு சாந்தமாய்ப் புன்சிரிப்பு சிரித்து வெகு யோசனை செய்கிறவர்போல நின்றார்".— என்று கர்வில் தான் ஜப்பானைப்பற்றி எழுதின புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். பீல்ட்மார்ஷலுக்குப் பல சங்கதிகளில் ஞானமுண்டு. அவர் யுத்தமந்திரியாகவும் கப்பற்படைக்கு "முதல் லார்ட்" டாகவும் (First

Lord of the Admiralty) கல்வி மந்திரியாகவும் மாறி மாறி இருந்ததுமன்றி, தம் பேரை ஒவ்வொரு ஆபீசிலும் நினைத்துக் கொள்ளும்படி நல்லவேலை செய்திருக்கிறார்.

---

## ஜெனரல் புகிஷீமா

ஜெனரல் புகிஷீமா ஜப்பான் சேனையில் மூன்றாவது அந்தஸ்து சேனாதிபதியாக, ஏகாதிபத்திய சைன்னியத்துக்குரிய தலையிடத் (Imperial Head Quarters) தில் உத்தியோகம் செய்பவர். வேலை கொடுப்பது எடுப்பது முதலிய விஷயங்களைப் பார்க்கும் அதிகாரி. இவர் அநேக ஊர்கள் சுற்றிப்பார்த்து வந்திருக்கும் ஓர் படையாளி. இவருக்கு ஆங்கிலம் பேசத் தெரியும். சீனாவுடன் ஜப்பான் சண்டைபோட்ட போது இவர் ஒரு ரெஜிமெண்டின் (Regiment) அதிபதியாகவிருந்தார். பிறகு, பார்மோஸா (Formosa) என்னும் தீவில் வேலை பார்த்தார். சீனாதேசத்தார் ஸ்திரீகளைப் போல் புருஷரும் தலைமயிரைப் பின்னலிட்டுத் தொங்கவிட்டுக்கொண்டிருப்பது வழக்கம். பார்மோஸாவில் ஜப்பானியப் பிரஜைகளாய் வசித்த சீனர் இந்த வழக்கப்படி செய்வது சம்மந்தமாய் இவருக்கும் கவர்ன்மெண்டுக்கும் அபிப்பிராயபேதம் நேரிட்டபடியால் அவ்வேலையினின்றும் அகன்றார். இன்னும் ஒருதரம் இவர் இந்தியா, பார்சியம், துர்க்கி, இந்தேசங்களைச் சுற்றிப்பார்த்தார். சீனாவில் நடந்த பாக்ஸர் கலகத்தில், (Boxer troubles) டீயின்ட்ஸினுக்கும் பெகினுக்கும்



(Tientsin-Pekin) நடுவில் நடந்த சண்டைகளில் (இந்தக் கலகத்தைப் பற்றிப் பின்னால் ஒரு அதிகாரத்தைப் பார்க்க) கலந்துகொண்ட ஜப்பானியப்படைக்கு இவர் தலைவராகவிருந்தார். அப்போது அந்த ஜப்பானியப் படை தலைகால்தெரியாமல் தைரியம் காட்டியும் சேனைப் பயிற்சி கொஞ்சம் கொடாமலும் பெயரெடுத்தது. இவர் பெற்ற ஏராளமான அனுபவமும் பழுதற்ற பகுத்தறிவும், உருஷ்யச் சேனையைப்பற்றியும் ரணகளங்களைப்பற்றியும் கிடைத்த புலனும், இவர் நாட்டுக்கு நன்மையைத் தருவனவாம்.

ருஷ்யச் சண்டையை ஜப்பானிலிருந்தே நடப்பித்தவர்கள் மூவர்கள்:—முதலாவது ஓயாமா—இவரைப் பற்றி இதற்கு முன்னால் விஸ்தாரமாய் சொல்லி முடித்தோம். இரண்டாவது பாரன் ஜனரல் கொடாமா—இவரைப்பற்றிப் பின்னால் சொல்லப்படும்; ஜப்பானியப் படைப் பொதுச்சிப்பந்திகள் படைவிஷயங்களை நிர்வகிப்பதில் இவர் அவர்களுக்கு (சிப்பந்திகள்) தலைவராய் இருந்து நிர்வாகம் நடக்கவேண்டிய மாதிரியைக் காட்டி நடப்பித்து வந்தார். யுத்தத்தை நடத்தின மூன்றாவர் ஜனரல் புகுஷீமா—ஜப்பான் சீனா யுத்தத்தில் இவர் குடிகளின் மதிப்பு வியப்பு கொண்ட போர்வீரர். ஆனால் வெகு அடக்கமுள்ளவர். இவர் சில யுத்தப் பாட்டுகளும் பாடியிருக்கிறார்.

---

## ஜெனரல் குரோக்கி

ருஷ்ய யுத்தத்தில் முக்கியத் தலைவர்களாயிருந்த

வர்களில் குரோக்கி ஒருவர். இவர் வரலாறு பின்வருமாறு:—

இட்டேயி குரோக்கி கி.பி. 1845-மாண்டில் ஸட்ஸூமா என்னுமிடத்தில் பிறந்தார். இவர் ஒரு கொழுத்த ஸட்ஸூமன். இவரைத் தைரியத்தின் உருவமென்று சொல்லலாம். இவர் பாலியத்திலிருந்தே படையாளியாக வளர்ந்தார். சேனையில் அடிப்படியிலிருந்து உயர்ந்த பதவிக்கு வந்தார். ஜப்பானில் அடிப்படியிலிருப்பது ஒரு தாழ்வுமில்லை. சக்கிரவர்த்திக்கு இராச்சியத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக 1868-ம் வருஷம் நடந்த சண்டையில் குரோக்கி ஒரு லெப்டினெண்டாக (Lieutenant) இருந்து மிக்காடோ சக்கிரவர்த்தியின் சேனையில் ஒரு அணிக்குத் தலைவராகச் சண்டைபோட்டார். 1871-ம் வருடம் இவர் ஏகாதிபத்திய கடற்படையில் ஒருகாப்டன் வேலைக்கு உயர்த்தப்பட்டார். 1877-ம் வருஷத்தில் டாகாமார்ட் ஸைகோ (Takamort Saigo) என்னும் ஒரு ஸட்ஸூமான் தன் ஸட்ஸூமா மாகாணத்து ஜனங்களை அநேகமாய்ச் சேர்த்துக்கொண்டு மிக்காடோவை எதிர்த்தான். இவனை எதிர்த்துக் குரோக்கி இடைவிடாமல் 180-தினங்கள் மிக்காடோபக்கம் போர்புரிந்தார். அது முதல் 1884-ம் வருடவரையில் குரோக்கி வெளிவரவில்லை. அப்போது (1884) இராணுவ சிப்பந்தியைச் சேர்ந்த உத்தியோகஸ்தராகத் தமக்குத் தெரிந்த யுக்தி புத்திகளைக்காட்டி ஸ்வீடன் (Sweden) தேசத்திலிருந்து ஜப்பானுக்குப் போயிருந்த ஒரு கோமகனை



ஆச்சரியப்படுத்தினார். 1892-மாண்டில் ஒரு லெப்டினெண்ட் ஜெனராலாகி குமமோட்டோவில் (Kumamoto) ஆறாவது படையணிக்குத் தலைவராக இருந்தார். இந்தக் குமமோட்டோவில் ஸைகோவோடு மிகக்கடும் சண்டைகள் நடத்தினார். சீனாவோடு யுத்தம் ஆரம்பித்தபோது உடம்பு செம்மையில்லாமற் போய்விட்டார். அப்போது இரணகளத்திற்குப் போகவேண்டும் போகவேண்டும் என்று கோபமாய்ச் சொல்லிக்கொண்டு வந்தார். நல்ல சாப்பாடு சாப்பிடாமலும் நல்ல தூக்கமில்லாமலும் இரணகளம் போய்ச்சேர்ந்தார்.

பிறகு சண்டை நடக்கும் அமளியிலே "நான் இரணகளத்திலே இப்போது இருக்கிறபடியினாலே எனக்கு மிகப்பளுவு நீங்கிச் சந்தோஷமானேன்." என்று வெளியிட்டார். தரைப்பக்கமாய்ப் போய் வேஹைவேயை (Wei-hai-wei) கைப்பற்றினார். குரோக்கியும் ஒகுவும் கோட்ஸூவும் ஒரேயடியாய் ஜனரல் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டார்கள். அப்போதே யமகாட்டாவும் ஓயாமாவும் பெரும் பட்டங்கள் பெற்றார்கள். இவர் ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் ஒரு முக்கிய சேனாதிபதியாய் இருந்து முன்னைவிட அதிகக் கீர்த்தி பெற்றார். யுத்த முடிந்ததும் சக்கிரவர்த்தியார் இவரைத் தம் ஸந்நிதானத்துக்குத் தருவித்துப் பல சம்மானங்கள் செய்தார்.

---

### ஜனரல் ஒகு.

ஜனரல் ஹாக்கியோ ஒகு 2-வது ஜப்பானியப் படையணிக்குத் தலைவராய் இருந்து நடத்தியவர்.

அவர்க்கு இப்போது வயது 65-க்குமேல் இருக்கும். அவர் ஸட்ஸுமான் அல்ல போல் தோன்றுகிறது; பங்கோ (Bungo) மாகாணத்தார் என்று சொல்லப்படுகிறார். இம்மாகாணம் கையூஷியூ (Kiushiu) என்றதின் கடற்கரை ஓரத்தில் இருக்கின்றது (இந்தத் தலைவர்களில் ஒருவராவது பெரிய தீவிலிருந்து வந்தவரல்ல.) கி. பி. 1877-ம் வருஷம் ஜப்பானில் தென் மேற்கு மூலையில் நடந்த சண்டையில் அவர் ஒருவர்தான் அவரோடு உழைத்தவர்களில் வெகு கீர்த்தி பெற்றார்; அவர் அப்போது எதிரிகளைத் தயங்கச் செய்யும் மகா தீரனான டாக்காமார்ட் ஸைகோவினுடைய கலகப்படைகள் குமமோடோ (Kumamoto) என்ற கோட்டையில் கவிந்து அடைத்துவிட்ட ஏகாதிபத்தியப் படையணி ஒன்றில் அகப்பட்டுக்கொண்டார். குமமோட்டோவை ஸைகோ ஒருதரம் கைப்பற்றுவானானால் ஏகாதிபத்தியத் தலைநகராகிய டோக்கியோவை நோக்கிப் பாய்ந்து ஊடுறுவதைத் தடுக்க யாதொன்றுமில்லை. டோக்கியோ வண்டை போவானானால், தன்னிஷ்டப்படித் துரைத்தன ஊழியர்களைச் செய்ய நெக்குவான் என்பதில் சந்தேகமில்லை. ஒகு, மிக தைரியத்துடன் கோட்டையிலிருந்து திடீரென வெளிக்கிளம்பி முற்றுகை போடுவோர்களின் ஊடே பாய்ந்து வெளியிலே இவருக்கு உதவியாகக் காத்துக்கொண்டிருந்த ஏகாதிபத்திய உதவிப்படையுடன் போக்கு வரவு ஏற்படுத்திக்கொண்டார். இது ஒரு பெரிய முட்டில் (Crisis) செய்த பேருழியம். இவருக்கு வயதில் சமானமான மற்ற



எவருக்கும் கொடுக்கப்படாத வெகுமதி இவருக்குக் கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்டவரின் பெயர் சீனாவுடன் நடந்த சண்டை வரையில் வெளிப்படவில்லை; அப்பொழுது கூடப் படைவீரனாக அல்ல. இந்த யுத்தத்தில் குரோக்கி இரணகளத்திற்குப் போனபோது அவருக்குப் பதிலாகக் குமமோடோவில் ஆறாவது படைஅணிக் கையிருப்புப்படையின் (Reserve) தலைவராக ஜப்பானிலேயே இருக்கும்படி யாயிற்று.

இவர் 1902-ம் வருஷத் தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்த சங்கதி அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம். அப்போது டெல்லி தர்பாரில் இவர்தான் ஜப்பான்பக்கம் பிரதிநிதியாய் அனுப்பப்பட்டார். பிறகு ஜெனரல் பாரன் ஒகு யுத்த சபையில் (Council of war) நிலையாய் ஓர் அங்கத்தினராக்கப்பட்டார். இவரும் ருஷிய யுத்தத்தில் கீர்த்திபெற்றவர்.

---

### பாரன் ஜெனரல் கோடாமா

இவர்தான் ஜப்பானியப் படைக்கு மூளை என்றும், யுத்தம் நடத்துவது இப்படி என்று உருவம் போடப்பட்டதற்கு (Plan) வேண்டிய பொறுப்பைத் தலையில் போட்டுக்கொண்டது இவர்தானென்றும் போர்முனையிலிருந்து ஒரு நிருபர் எழுதி இருக்கிறார்.

கொடாமா வீரர்குலத்தில் பிறந்தவர். இவர் ஐம்பது வருஷங்களுக்கு முன்னால், சோஷ்யு (Choshieu) என்னும் மாகாணத்தில் பெரிய டைமியெட் (Daimiate) அல்லது சண்டை போடக்

கூடிய நாலு பெரிய கூட்டங்களிலொன்றில் பிறந்தார். இக்கூட்டங்களிலிருந்து ஜப்பான் தேசத்துப்போர்வீரர்களும், தலைவர்களும் கிளம்பி இருக்கிறார்கள். இவர் இராஜாங்க விஷயங்களில் தலையிடத் தொடங்கியபோது ஜனங்கள் தைரியமாய் இராஜாங்கத்தை நடத்தும்படி கூக்குரலிட்டார்கள். சீர்திருத்தக்காரர்களின் ஆசைகளெல்லாம் படை உறவி இராஜ்யதந்திரம் நடத்துபவர் மேலிருந்தன. இவருக்கு "கோடரி மந்திரி" (Minister of the Axe) என்று பேர் வந்தது. ஏனெனில், சண்டையில்போல இராஜ்யபார விஷயங்களிலும் கூரான கோடரியொன்று மழுங்கற்கத்தியிலும் நல்லதென ஒரே யடியாய் வெளியிட்டு விட்டார். மஞ்சூரியாவிலும் கொரியாவிலும் ருஷியா கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து வந்ததைப்பார்த்து இந்தப் படை உறவித் தம் வலியெல்லாம் உண்மையான வழியில் செலுத்தினார். மேஜர் ஜனரல் டாமூர் (Tamure) இறந்துபோனபோது, ஜனங்களும் தம்மைப் போன்ற படைவீரர்களும், ஆகிய இவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, மந்திராலோசனை சபையை விட்டு ஹெட்குவார்டர் ஸ்டாபின் அஸிஸ்டெண்ட் விட்டு சீப் என்றவேலையை ஒப்புக்கொண்டார். இப்பெரிய அந்தஸ்துக்குரிய பொறுப்புகளும் கஷ்டங்களும், ஆகிய இவற்றிற்கு ஏற்றபடி பாரன் கொடாமாவுக்கு, ஞானமும், பகுத்தறிவும், வழி கோணாத நேர்மையும், என்னும் குன்றாத பிடிவாதமும் இருந்தன. இந்தப் பெரும் பண்புகளால் தம் வாழ் நாளெல்லாம் நல்ல பெயரெடுத்



தார். இவர் குணம் வெகு வலியது. இவர் முன்னிலையில் எவரும் மயங்கும்படியான ஒரு விசேஷகுணம் இவரிடத்தில் உண்டு.

ஜெனரல் கொடாமாவின் முகத்தைப் பார்க்கப் பார்க்க வேறே யாரிடத்திலு மில்லாத ஆசை உண்டாகிறது; அவர் நரம்பில் மேற் கத்தி இரத்தம் ஒரு பொட்டுக்கூட கலந்தில்லை யாயினும், அவர் முகத்தைப் பார்த்தால் மேற்றிசையாராகத் (Westerner) தோற்றுமே தவிர கீழ்த்திசையாராகத் (Oriental) தோற்றாது. அவர் கண்கள் பெரியனவாயும் அழகாயு மிருக்கும். அவர் முகத்துக் கூறுகள் ஸ்பஷ்டமாய் வரையறுக்கப் பட்டிருக்கும். அவரின் நிறம் ஒரு பிரான்சுக்காரனை விடக்கருப்பன்று. மேற்கத்தியானுக்குள்ள சக்தியும் விழிப்பும் அவரிடத்தில் கொஞ்சமேனும் குறைய வில்லை. அவர் உருவமோ நீண்டு நிமிர்ந்திருக்கும். அவர் போக்கோ (Bearing) யுத்தவீரர்போ லிருக்கும். அவர் இங்குமிருப்பார் அங்குமிருப்பார் எங்குமிருப்பார்; அவர் கண்ணுக்குத் தப்புவதொன்று மில்லை. அவர் ஸங்கதிகளைக் கண்டுபிடிப்பது, அவருக்குள்ள சுறுசுறுப்புப் போலவே ஆச்சரியத்தை உண்டாக்கும். அவர் ஒரே பார்வையில் இன்னது செய்ய வேண்டுமென்று தெரிந்து கொள்பவர்போல் காணப் படுவார். அவரைச் சுற்றியிருப்பவர்கள் எதைச் செய்வது அவசியமென்று நினைக்கிறார்களோ அதை அப்படி தினைத்து நிச்சயம் செய்வதற்கு முன்னாலே அவர் அப்படிச் செய்தே இருப்பார். அவர் நடத்தைகூட மேற்

கத்தியானைப்போல் காட்டுகிறதே ஒழிய வேறன்று. அவரிடத்தில் ஒரு விதமான பெரியமனுஷத்தனம் இருக்கிறது. அதனால் அவரண்டைக்கு எல்லோரும் ஆசையாய் அடைகிறார்கள். ஆனால், தான் எப்படி பெரிய தன்மையுடன் அன்னியரிடத்தில் நடந்துகொள்ளுகிறாரோ அப்படித் தம்மிடத்திலும் அன்னியர் நடந்துகொள்ளும்படிச் செய்கிறவர். இந்தச் சேனாதிபதியானவர் அன்பின் உருவே ஆயினும், இவரிடத்தில் சமயோசித மற்ற பிரஸ்தாபம் ஒருவரும் செய்யத் துணியார். அமெரிக்கர்கள்கூடத் தாங்கள் சங்கதிகள் தெரிந்துகொள்ள எவ்வளவு பிரயத்தனங்களோடு இருந்தபோதிலும் தளவாய் கொடாமா என்பவரிடத்தில் போய்ச் சங்கதிகளைக்கேட்டால் இவ்வளவுதான் சாத்தியம் இனிச் சாத்தியமன்று என்று அவர் சொல்ல, அந்தப் பாடத்தைக் கேட்டுத் திரும்பி விடுவார்கள்; கவசம் கட்டிய முஷ்டிக்காரரான ஜர்மானியர்களில் வெகு உயர்ந்த பலவான்களும் கொடாமா என்பவர் எதிரே வந்தால் உடனே வாய் பேசாமல் தலை வணங்கினார்போல் நடந்துகொள்வார்கள். வாஸ்தவம் என்னவென்றால், கொடாமா வெளிப்புறப்பட்டு விட்டால் யாரானாலும் தத்தம் நடத்தை நேர்த்தியாய் இருக்கவேண்டுமென்று சொல்லாமலே தெரிந்துகொள்வான். இதினால், கொடாமாவுக்கு எஜமானனான முக்கிய சேனாபதி ஓயாமாவைக் காட்டிலும் இவரிடத்தில் அயல் நாட்டார்க்கு அன்பு குறைவாயிருப்பது ஒருக்கால் விளங்கும்.

ஜென்டாரோ கொடாமா (Kodama) மனுஷர்



களிடத்தில் நேசத்தைக் காட்டிலும் அதிக நம்பிக்கையை யுண்டுபண்ணுகிறவர். அவரிடத்தில் பலஜனங்கள் போய்ச்சேர்வது, அவர் அவர்களைப் பார்த்தால் ஐயோ பாவம்! என்று பரிதபித்துப் பேசுவார் என்று அல்ல; அவர்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்வார் என்றே. அவரை எங்கேயாவது பார்க்கும்படி ஜப்பானியர்களுக்கு நேரிட்டால், மார்ஷல் ஓயாமா அல்லது யமகாட்டாவைப் பார்த்தபோதெல்லாம் வெகு ஆரவாரங் கலந்த களிக் கூற்றுகளுடன் பணிந்து வணங்குவதுபோல அவரை வணங்குவதில்லை; கையில் தீபதூபம் எடுத்துக்கொண்டு அவர் தலைமேல் பூ முதலியவற்றைச் (halo)சுற்றி நெடுஞ்சாண்கிடையாய் நமஸ்காரம் செய்ய வேண்டுமென்று கூட ஜப்பானியர்கள் நினைப்பதில்லை. இப்படியிருந்தும், மற்ற மக்களிடத்தில் காட்டிலும் அவரிடத்தில் ஜப்பானியர்கள் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்; இது எப்படியென்றால், அவர் பேரைச் சொன்ன உடனே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்கிறார்கள். அவரைச் சைனியத்தின் மூளையென்று சொல்லுகிறார்கள்; அதாவது, சைனியத்துக்காகப் புத்திப் பிரயோகம் செய்கிறவரும் முன் யோசனை செய்கிறவரும் யுக்திகள் சொல்லுகிறவரும் இவர்தான். இப்படி நினைத்து அவரை மதித்து நடக்கிறார்கள். குரோக்கி, ஒகு, நோட்ஸு, முதலிய படைத்தோழர்கள்மேல் எப்படிப்பட்ட உணர்ச்சிகொண்டிருக்கிறார்களோ அதற்கும், அவரிடத்தில்கொண்ட உணர்ச்சிக்கும் வெகு வேற்றுமையுண்டு.

ஜப்பானியரை அவர் கண்டுகொண்டதுபோல அவ்வளவு நன்றாய் மற்றவர்கள் கண்டுகொள்ளாததினால், ஜப்பானியர் அவரைப் புகழ்வதுபோல மற்றவர்களை புகழ்வதில்லை. ஜப்பானியருக்குக் கண்ணுக்குத் தெரியாத மாயங்கள் என்றால் அவற்றில் வெகு நம்பிக்கையும் அபிமானமுமுண்டு. அவரைப்பற்றி அவர்களுடைய கண்ணுக்கு ஏதோ வெகு மாயம் உள்ளதென்று தோன்றுகிறது; இப்படிப்பட்டவர் அயல் நாட்டார்க்கோ, உலக நடவடிக்கை அறிந்த புத்திமான் என்று காணப்படுவார், மாயமுள்ளவரென்று தோன்றார்.

---

காலஞ்சென்ற தளவாய் டாக்கியோ ஹிரோஸி

கப்பல் படைத்தலைவர் அட்மிரல் டாக்கியோ ஹிரோஸி என்பவர் கையுஷூ (Kyushu) என்னும் ஜப்பானியத்தீவார். இவர் கி. பி. 1904-ம் வருஷம் சீனாவில் போர்ட் ஆர்தர் (Port Arthur) என்னும் ருஷியத் துறைமுகப்பட்டணத்தை இரண்டாந்தரம் கப்பலால் முட்டடி போட்டபோது (Blockade) வெகு தீரராய் உயிர் மாண்டார். இவர் ஷிகெடேக்கே ஹிரோஸி என்பவரின் இரண்டாவது மகன்; மூத்தவர் காப்டன் காட்ஸூ ஹிகோ ஹிரோஸி என்பவர். ஒஷிமா என்ற கப்பலுக்குத் தலைமாலுமி. இவரைப்பற்றி ருஷிய ஜப்பானிய யுத்தத்துக்கு ஏற்பட்ட மாகஸீன் புஸ்தகத்தில் (Magazine) பின்வருமாறு காணப்படுகின்றது.—சிறு வயதிலிருந்து இவர்க்குக் குதிரை சவாரி என்றால் வெகுபிரியம். ஜப்பானியர் முஷ்டியுத்த வித்தையில் பேர் வாங்கினவர்; இவர்க்கு 15-வயதில் தம் குடும்பத்



தோடு டோக்கியோவுக்கு வந்து சேர்ந்து காலக்கிரமத்தில் மரக்கலப் போர்ப்பயிற்சி யடையும் பள்ளிக்கூடத்தில் (College) புலமைப் (efficiency) பட்டம் பெற்ற (Graduating) சிற்காலத்துக்குப் பிறகு ருஷியாவில் ஜப்பான் காரியஸ்தராபீசில் கப்பல் விஷயங்கள் தெரிந்துகொள்ள (Naval attache) நேமிக்கப்பட்டார்; அங்கு 5-வருஷம் வேலைசெய்து ருஷிய நாட்டின் உள் நிலைமை இப்படிப்பட்டதென்று சமாராய்த் தெரிந்துகொண்டார்; இப்படித் தெரிந்து கொள்வதில் அவர் ருஷிய உத்தியோகஸ்தர்களிடத்தில் சிநேகமாய் இருந்தது மிகவும் உதவிற்று; ஆகையால், ருஷியாவைப்பற்றித் தன் நாட்டுக்கு அனுப்பிய கடிதங்கள் யாவும் வெகு உபயோகமுள்ளனவாய் இருந்தன. ஜப்பானுக்குத் திரும்பிவந்தபோது ஸைபீரியா மஞ்சூரியா இந்தநாடுகளைக் காலால் கடந்து வழியே அந்நாடுகளின் பூகோளதத்துவத்தை நன்றாய்க் கற்றறிந்துகொண்டார். யுத்தம் கிளம்பினவுடன், இரணகளத்திற்கு முதல் முதல் இவருங்கூட அனுப்பப்பட்டார்; 1904-ம் ௵ பிப்பிரவரி௴ 24௳ போர்ட் ஆர்தர் துறைமுகத்தின் முகத்துவாரத்தை முற்றிலும் அடைத்துவிடும்படி 77 மரக்கலத்தால் முதல்முதல் முயன்றபோது இவர் "ஹொக்கோக்குமாரு" என்ற மரக்கலத்தின் தலைவர், இந்தப்படி அடைக்கும் துணிச்சலில் வெகு அருமையான தைரியத்தைக் காட்டினார்.

போர்ட் ஆர்தரை இரண்டாந்தரம் அடைப்பதற்கு மார்ச்சு௴ 24-ந் தேதியன்று முயன்றபோது, ஹிரோஸி

மறுபடியும் வீரத்தனம் காண்பித்தார். இந்தத் தடவை புகுயிமாறு (Fukui Maru) என்ற மரக்கலத்தின் தலைவராயிருந்தார். அவருடைய கப்பலும் சையோமாறு (Chiyo Maru), யாஹிக்கோ (yahiko) மாறு, யொனயாமா (Yoneyama) மாறு, இந்தமூன்று மரக்கலங்களுடனும் காலையில் 3½-மணிக்கு இரண்டு மைல் தூரத்தில் வந்துகொண்டிருந்தன; சத்துருவாகிய ருஷியர் துறைமுகத்தின் கோட்டைகளிலிருந்தும் சிறுகப்பல்களிலிருந்தும் வெகு மும்முரமாய் நெருப்பு கொட்டிக்கொண்டிருந்தும் இவர் பயப்படவில்லை; ஆயினும்,முகத்துவாரத்தை அடைத்துத்தான் போகவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு முன்னேபோய்முகத்துவாரத்தில் நுழைந்து இங்கே "புகுயிமாறு" என்ற கப்பல்தன் தலைமாலுமி ஹிரோஸி என்பவருடன் இருந்தபோது, ருஷியருடைய அழிக்கும் கப்பல் ஒன்றால்(Destroyer) அடிபுண்டு வெடித்து நீருண்டு முழுகிற்று; ஹிரோஸி தன் மாலுமிகளை ஒரு படகுக்குப் போகச்சொன்னார்; கடைசியில் இவரும் அப்படகுக்குப் போனார். ஆனால் அந்தப்படகில் வாரண்ட் ஆபீசர் ஸுகிநோவைக் காணவில்லை; ஆகையால் முழுகிவரும் தம் கப்பலுக்கு மூன்றுதரம் போனார், தம்முயிர் போனாலும் போகட்டுமென்று மூழ்கிவரும் கப்பலில் தேடித் தேடிப் பார்த்தார், அவர் அகப்படவில்லை. அலைகளோ கப்பலின் மேல்தட்டின்மேல் மோதத் தலைப்பட்டன. ஆகையால் தப்படகுக்குள் ஒரேபடியாய்க் குதித்தனர். படகும் பின் வாங்கத் தொடங்கிற்று. அப்போது



சத்துரு விட்ட ஒரு குண்டு அவர் மூளையைத் துளைத்து அவர் உடலை ஆழியில் அமுக்கினது. படகில் ஒரு சதைத் துண்டுதான் அகப்பட்டது. பாருங்கள்! இவர் சாவு எவ்வளவு தைரியமும் கண்ணியமுமானது! இவர் இத்துணிச்சலான ஊழியத்தில் சக்கிரவர்த்திக்கு எவ்வளவு நன்றி காட்டினார்! உயிர் போகக்கூடிய நேரத்தில் தன் கீழிருந்த மனுஷர்களை எவ்வளவு நேசித்தார், பாருங்கள்!

இவர் வெகு உள்ளழுத்தக்காரர் (Grave), வாய் பேசாதவர்; ஆரவாரம் என்றால் இவர்க்குதவாது. கடற்போர்ப்பள்ளிக்கூடத்தில் (Naval College)வாசித்துக்கொண்டிருந்தபோது, வீரத்தனத்துக்கும் மனோதிடத்துக்கும் வெகுபேர்போனவர். இவர் சாகும்போது 35-வயது; ஆனாலும் கலியாணமாகவில்லை, தரைப்படையாளிக்கும் கடற்போர்வீரனுக்கும் பெண்டாட்டி அனாவசியம் என்றிருந்தார். இவர் குணம் அவ்வளவு தைரியமாய்த் திடமுள்ளதாயிருப்பினும், இவர்க்குக் கொஞ்சம் புஸ்தகப் பைத்தியமுண்டு; ஸாஸெபோ என்ற இடத்தில் இப்போது எல்லோரும் பாடிக்கொண்டிருக்கும் பாட்டுகள் இவர்தான் இட்டுக் கட்டினவை. இவர் மரித்ததினமே இவர்க்கு இரண்டு உயர்ந்த இராணுவப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன.

## கடற்படைத்தலைவர்கள்

### அட்மிரல் டோகோ

கிழக்கத்தி நாடுகளின் * நெல்ஸன் (Nelson) என்று பேர்வாங்க யாவரும் ஆசைப்படுவான். அப்படிப்பட்ட பேரன்றோ அது! சிறந்த சாமர்த்தியமும் யுக்திபுத்தியும் பிடிவாதமும், டோகோ ஜப்பான் சீன யுத்தத்தில் முதல்முதல் வெகு நன்றாய்க்காண்பித்தார்; பத்து வருஷத்துக்குப் பிறகு போர்ட் ஆர்தர் என்னும் துறைமுகத்தை அடைக்கத் தலைப்பட்டபோதும் காண்பித்தார். கடைசியில் ருஷிய யுத்தத்தில் ஜப்பான்மீது வந்த ருஷியக் கடற்படையை ஒரே சண்டையில் அழித்துத் தமது தேசத்தைக் காப்பாற்றினதால் டோகோ கிழ்த்திசை நெல்ஸன் என்று பேரெடுத்தார். அவர் பார்வைக்குக் கறுப்புத்தாடி யுடையவர்; கறுப்பு மீசையுடையவர்; தம் கப்பல்மேல் இல்லாத போது, அவரைப்பார்த்தால் கப்பற்படை நடத்தும் உத்தியோகஸ்தர் என்று தோன்றவே தோன்றாது; கப்பல்மேடையில் இருக்கும்போது மாத்திரம் அவரை நாம் பார்ப்போமானால், அவரைவிட வேறொருவரும் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தராகக் காணப்படமாட்டார்; இந்தச்சப்த சமுத்திரத்திலும் அகப்படமாட்டார்.

* லார்ட் நெல்ஸன் என்பவர் மஹாகியாதிபெற்ற ஆங்கிலேயக் கப்பற்படைவீரர். அவர் 1805-ம் வருஷத்தில் ட்ரபால்கர் (Tratalgar) என்னும் ஒரு ஸ்பெயின் துறைமுகத்துக்கு அருகில் பிரான்சு தேசத்துக் கப்பற்படைகளைத் தோற்கடித்து அந்தச் சமயத்தில் இங்கிலாண்டுக்கு நேரிட்டிருந்த ஆபத்தினின்றும் அதைக் காப்பாற்றினார்.



1857-ம் ஸூ அக்டோபர்மீ 14-ம்உ பிறந்தார். ஆகையால், டோகோ ஏகாதிபத்தியத்தின் ஆழியிற் கிடக்கும் படைகளை நடத்த அவர்க்கு வயது போதாது. கடற்படை நடத்தும் மற்ற மாலுமிகள் போல இவரும் ஸட்சுமா என்னும் கூட்டத்தைச் சேர்ந்தவர்; இவர் சிறு வயதுமுதல் ஆழியிற் வாழும் ஒரு ஆவிபோல இருந்து வருகிறார். அவர்க்குக் கடல்மேல் வெகு ஆசை; கடல் வீரராய்ப் பிறந்தார்க்கன்றிக் கடல்மேல் ஒருவர்க்கும் அவ்வளவு ஆசை யிராது. ஜப்பான் தன் கப்பற் படைகளைப் புதிது புதிதாய்த் துணிச்சலான காரியங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று யோசனைகள் செய்துகொண்டிருந்த காலத்தில் இவர் சொற்ப விஷயங்களையும் படித்தறிவதில் காட்டின ஆசையைப் பார்த்து இவரை ஜப்பானிய அதிகாரிகள் இங்கிலாந்துக்கு அனுப்பிப் பயிற்றுவிக்கத் தீர்மானித்தார்கள். கி. பி. 1873-74-ம் ஆண்டுகளில் "வார்ஸ்டர்" மரக்கலத்தில் பயின்றுகொண்டிருந்தார். அக்காலத்து உத்தியோகஸ்தர்கள் இவர் நடத்தையை மிகவும் மேன்மையானது என்று குறித்தார்கள்; இவர் சாமர்த்தியம் வெகு அதிகமென்றும் சொல்லப்பட்டது. பிறகு ஒரு சண்டைக் கப்பலில் தாம் கற்றுக் கொண்டபடிச் செய்து பார்த்தார்; வேறொரு சண்டைக்கப்பலில் வெகு விவரமாயும் நுட்பமாயும் வேலையைக் கற்றுக்கொண்டார். பிறகு கிரீனிச் என்ற இடத்தில் இருக்கும் கடற்போர் வித்தியாசாலையில் (Naval College) போய்ச் சேர்ந்தார். அவர் அமரிக்கையுள்ள

வரும் முன்விழுந்து பேசாதவருமாய் (Reserved) எப்போதும் காணப்பட்டார். தம்மைப்போல் கடற்போர் பயின்ற பிரிட்டிஷ் பிள்ளைகளுக்கு இவர் வெகு இஷ்டமானவரானார்.

ஜப்பான் சீனா யுத்தம் தொடங்கின அன்றைக்கே "கோஷிங்" என்ற சீனாச்சண்டைக்கப்பலைக் கவிழ்த்துக் கப்பல் யுத்தத்தில் சிறந்த வீரரென முதல் முதல் பேர் எடுத்தார்:—இந்த யுத்தம் தொடங்கினவுடன் காப்டன் கால்ஸ்வர்த்தி (Galsworthy) என்ற ஆங்கிலேயன் ஒருவன் இந்தக் கோஷிங் என்ற கப்பலின் தலைவராயிருந்தான். இந்தக்கப்பல் இண்டோசைனா (Indo-China) நீராவிக்கப்பற் கம்பெனியாரது; அதிலிருந்த உத்தியோகஸ்தர்களும் மாலுமிகளும் ஆங்கிலேயரே. அதன் கொடியும் ஆங்கிலேயக் கொடியே; உண்மையில் அது ஒரு சீனாச்சண்டைக் கப்பல். அதில் சீனாப் படையாளிகள் நிறைந்து கிடந்தார்கள்; அந்தக் கப்பலை டோகோ முதல் முதல் பார்த்தபோது அச்சீனாப் படைகள் அங்கங்கே சாதகமான இடங்களுக்குக் கொண்டு போகப்பட்டுக்கொண்டிருந்தன. இந்தச் சமயத்தில் சீனர்கள், பிற்காலத்தில் போர்ட் ஆர்தரை ஜப்பானியர்கள் தாக்கியதற்குமுன் ருஷியர்கள் இருந்த ஸ்திதியில் இருந்தார்கள்:—யுத்தம் ஆரம்பித்தோமென்று ஒரு புகாரும் வெளிப்படவில்லை; ஆயினும், எல்லார்க்கும் சீனாவும் ஜப்பானும் தலையுடைத்துக்கொள்ளப் போகின்றன வென்றும் முதற்குண்டு சுடுவதைக் காதால் கேட்கவேண்டுமென்றும் காத்துக்



கிடந்தார்கள். ஜப்பானுக்குரிய முதல் கப்பல்படைக்குச் சேர்ந்த "நனிவா" கப்பலுக்கு டோகோ தலைவராக இருந்தார். நடுக்கடலில் "கோஷிங்கை" டோகோ பார்த்தார்; அப்போது டோகோ வெறும் துப்பாக்கிகளைக் குண்டில்லாமல் சுட்டார். சுட்ட உடன் சீனக்கப்பலான "கோஷிங்" ஓடாமல் நின்றுவிட்டது. அதுகண்டு டோகோவானவர் இந்தக் "கோஷிங்" கப்பல் தம் கப்பலான "நனிவா"வுடன் ஜப்பானுக்குப் போகவேண்டும் என்று சீனக்கப்பலுக்கு ஒரு சேதி அனுப்பித்தார்; சீனக்கப்பலின் தலைவரான கால்ஸ்வர்தி ஒப்புக்கொண்டார்; ஆனால் சீனா உத்தியோகஸ்தர்கள் கோபத்துடன் கத்தினார்கள்; தம் சீனக் கப்பலை ஜப்பானுக்குக்கொடுக்கக் கொஞ்சமும் இஷ்டமில்லை. ஆகையால் தம் தலைவரான கால்ஸ்வர்தியைக் கடலில் தூக்கி எறியப்போனார்கள்; அப்போது டோகோ அவருக்கு ஒரு குறிகாட்டிச் சீனர்களைக் கைவிட்டுத் தம்கப்பலுக்கு வரும்படிச் சொன்னார்; ஆயினும், சீனர்கள் அவரை அப்படிச் செய்யும்படி விடவில்லை. நாலுமணிநேரம் டோகோ அவர்க்காகப் பொறுமையாய்க் காத்திருந்தார்; இந்த நாலுமணி நேரமும் சீனர்களுக்குக் கடைசியாய்ப் புத்திவருமென்றே நம்பியிருந்தார். சீனர்களுக்குப் புத்திவரவுமில்லை, சீனர்கள் மேல் இவர் சகாயமாயிருக்க முடியவுமில்லை. முதல் முதல் சுட்ட குண்டு "கோஷிங்"கினுடைய என்ஜின் ரூம் (Engine Room) வழியாய் ஓட்டைபண்ணி உருவிச் சென்றது. அப்போது கோஷிங் ஒரு கற்பாறைபோல

முழுகத் தலைபட்டது; உடனே கால்ஸ்வர்தியும் (Galsworthy) அவருடைய பிரிடிஷ் தோழர்களும் கப்பலைவிட்டுக் குதித்தார்கள்; சீனப்படைகளும் குதித்தவர்களைப் பார்த்துச் சுட்டன. டோகோ எல்லாரையும் முழுகாமல் தம் கப்பலில் ஏற்றிக்கொண்டார். இதன்பிறகு யுத்தமுழுமையும் இந்த டோகோ என்ற சிறுவரான கடல்படைத்தலைவர் வெகு சண்டைகளில் பிரசித்தி பெற்றார். கடைசியாய் நடந்த வேஹைஹேவே என்ற சண்டையிலும் இவர்தான் பிரசித்திபெற்றார்; இச்சண்டையில் சீனர்களுக்கு வந்த நஷ்டத்துக்கு அளவில்லை. அப்போது முதல் ஒரு கப்பற்படைக்கு முக்கிய சேனாபதியாக்கப்பட்டார்; வைஸ் அட்மிரல் என்று பட்டம் பெற்றார்.

அட்மிரல் (Admiral) டோகோ சுத்த வெறும் வாளேந்தியே தவிர வேறல்லவென்று உலகமறியும். ஆயினும் உலகம் பல தடவை மோசம் போவதுண்டு; அவர் வெறும் போர்வீரரல்ல, போர்வீரரைக் காட்டிலும் மேலானவர். மனிதர்களை நிதானிக்க நேரிடும்போது போர்வீரரைவிட உயர்ந்த தகைமை கொண்டவராய்த் தோன்றுகிறார்; அட்மிரலுக்குரிய அதிக கஷ்டமான வேலைகளை அவர் கொண்டுமுடிக்கும் சுலபமான விதத்தைப் பார்த்து அவருடைய படைவீரர்கள் ஓயாமல் வியந்துகொண்டே இருக்கிறார்கள். தம் கீழ் ஊழியம் செய்ய அவர் உத்தியோகஸ்தர்களைப் பொறுக்கியெடுக்கும்போது தவறில்லாமல் பொறுக்கி எடுப்பதைப் பார்த்தும் வியக்கிறார்கள். நிப்பன் கப்



பற் படையில் சேர்ந்தவர்க்குள் பின்வருவதுபோல ஒருவார்த்தை வழங்குகிறது.—தம் சொந்தவிரலைப் போல் தம் கீழிருப்பவர்களைக் கையாளும் அட்மிரல் ஒருவரே இருக்கிறார்; அவர் டோகோ தான். சிருஷ்டியானது எப்படிச் சூன்யத்தை அறியாதோ அப்படி அட்மிரல் டோகோ தோல்வியை அறியமாட்டார். இந்த மாதிரியான சுபாவம் அவரிடத்தில் இருக்கிறபடியால் அவர் தோழர்கள் அவரைப் பரிகாசம் பண்ணுவதுபோல பலவிதக்கதைகள் சொல்லிச் சந்தோஷிக்கிறார்கள். மெல்ஜி அப்தத்தில (Meiji) * 15-மாண்டில் டோகோ அஸாமா என்ற கப்பலில் உத்தியோகம் செய்ய உததரவு பெற்றார். இதற்கு முன்னால் ஆஸ்ட்ரேலியா (Australia) வுக்கும் தம் கடலுக்கும் கப்பற்குழுவொன்று செலுத்திச் சென்றனர் என்பது வாஸ்தவம். ஆயினும், சண்டைக் கப்பலில் உத்தியோகம் செய்யவில்லை. ஒரு நாள் டோகோவின் கீழிருந்த ஒருசிறு உத்தியோகஸ்தன் டோகோ விடுத்த உத்தரவுகளில் ஒன்று தப்பென்று அவருடன் வாதித்தான். டோகோவுக்கு இந்தச் சிறு உத்தியோக்ஸ்தன் தம்முடன் வாதித்தது சரியென்று நன்றாய்த் தெரியும். ஆயினும், அவர் அவ்வுத்தியோகஸ்தன் மீது திருப்பிக்கொண்டு "அந்த உத்திரவு உன் தலைவனிட்ட உத்திரவு. நீ செய்ய வேண்டியதெல்

* ஷோகூன்பரம்பரையை 1867-ம் [illegible] சக்கிரவர்த்திக்குச் சர்வாதிகாரமும் பழயபடி கொடுக்கப்பட்டது முதல் "மெல்ஜி" அப்தம் என்று ஒரு புது அப்தம் ஜப்பானியர் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

லாம் அவனுத்திரவுக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டியது தவிர வேறொன்று மில்லை" என்றார்.

டோகோ அடக்கம் காட்டாதவராயிருக்கக் கூடுமாயினும் ஸ்வபாவத்தில் வெகு அடக்கமுள்ளவர். சீன ஜப்பான்யுத்தம் முடிந்தவுடன், அந்த யுத்தத்தின் சரித்திரத்தை எழுதும்படி ஒரு லெப்டினண்ட் ஏற்பாடானான். அந்த லெப்டினண்டினுடைய தலைவர்களுக்குத்தகாத மரியாதை செய்வதற்குப் பொய்கலந்த சரித்திரம் எழுதக்கூடாதென்று வற்புறுத்திச் சொன்னார். "உன் மனதில் நீ எப்போதும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு கடமையுண்டு. அது, நமது பின் தலைமுறையார்களுக்கு இந்த யுத்தத்தைச் சரியானபடி நடந்த பிரகாரம் எழுதி வைக்க வேண்டும்" என்று சொன்னார். அவர் தம் வேலைக்காரனிடம் நம்பிக்கை வைத்தபடி மற்ற யாவரும் வைப்பதில்லை.

முன் ஒரு வஸந்தகாலத்தில் ஜப்பான் நாட்டுக் கப்பல்கள் ஒருதரம் அணிவகுத்துப்பார்க்கப்பட்டது. அது கோப்(Kobe)என்னுமிடத்தில் சக்கிரவர்த்தி முன்பாக நடந்தது. டோகோவின் பழயகப்பலான "நனிவா" என்பது அங்கிருந்த கொடிக்கப்பல் எதிராகப்போனபோது, ருஷ்யஸ்தானிகத்திலிருந்து அங்குக் கடற்படைச்சங்கதிகள் தெரிந்துகொள்ள வந்திருந்த ஒருவர் (Naval Altache)"நனிவா" என்ற கப்பலைக் கண்டதும் டோகோவைப்பற்றிப் புகழ்ச்சியாய்ப் பேசினார். அதைச் சிறிதும் லக்ஷியம் பண்ணாமல் கப்பல்கள் திரியும் திரிச்சல்களின்மேல் தன் மனதை ஒடுக்கினார்.



அக்கப்பல்களின் அணிக்காட்சி முடிந்தவுடன் டக்கராப் (Takarabe) என்ற சிப்பந்தி ஆபீசருடன் "எல்லாம் சரிதான்! இதேமாதிரி நம்முடைய பயிற்சி(Discipline) கச்சிதமாய் எப்போதும் இருக்குமானால் நாம் தோல்வியடைவோம் என்ற பயம் நமக்கு வேண்டியதில்லை" என்று சொன்னார்.

வெகு புத்திசாலித்தனமாய்த் தன்கீழ் உழைப்பவர்களைப் பொறுக்கி அமர்த்திக் கொள்கிறவர்; ஆனால், தமக்கு வந்த ஜயத்தின் பெருமை எல்லாம் தமக்கே என்று சொல்லாமல் தம்கீழிருப்பாருக்கும் அப்பெருமையில் பங்குண்டு என்றுசொல்ல இஷ்டமுள்ளவர்; போர்ட் ஆர்தர் துறைமுகத்துக்கெதிரே நடந்த பல சண்டைகளைப்பற்றிப் போன ரிபோர்ட் ஒவ்வொன்றிலும் தம் கீழ் உழைக்கும் உத்தியோகஸ்தர்களும் படையாளிகளும் தாம்கொண்ட காரிய முடிவுறுமாறு பட்ட கஷ்டங்களைச்சொல்லித் தம்பேரை எடுப்பதே கிடையாது.

அட்மிரல் டோகோ யுத்தமுனைக்குப் புறப்படுமுன் தம் சுற்றத்தார் ஒருவரிடத்தில் "நம் கப்பல்களில் பாதியும் அவற்றிற்குரிய ஆட்களும் நம்மகாவலியனை சத்துருவை நசுக்குவதின்பொருட்டுச்செய்யும் முயற்சியில் மடிந்தாலும் குற்றமில்லை. அதற்கு நான் சித்தந்தான்" என்று ஒப்புக்கொண்டு பேசினார். பின்னும் "நெல்ஸன் என்பவர் ஜெயம் வரும் சமயத்தில் இறந்தார், நானும் அப்படியே ருஷ்யாவைத் தோற்கடிக்க உயிர் துறக்க முற்றிலும் சித்தந்தான்.

காலக்கிரமத்தில் நமக்கு ஜெயம் வருமென்பதில் எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை" என்றும் சொன்னார். இவர் ருஷிய யுத்தத்தில் செய்த பெருங்காரியங்களை அந்த அதிகாரத்தில் காண்க.

---

## அட்மிரல் காமிமூரா

இவர் டோகோவைக் காட்டிலும் ஜப்பானிலும் அதன் கப்பற்படைகளிலும் பெருமையில் குறைந்தவரல்லர்.

ஸட்ஸூமாக் கூட்டத்தாரில் ஒரு சாமுராயாய்ப் பிறந்தார். மிகச்சிறுவயதில் மிக்காடோவைத் திரும்பச் சிங்காதன மேற்றிய சண்டையில் சேர்ந்து போர் புரிந்தார். இந்தச் சண்டை நின்றவுடன் காமிமூரா ஜப்பானியக் கப்பற்படையைச் சேர்ந்தார். அப்போது தான் ஜப்பானியக் கப்பற்படையானது ஏற்பாடாய்க் கொண்டிருந்தது. இவர் டோக்கியோவில் ஏற்பட்டிருக்கும் கப்பற் போர்ப்பள்ளிக்கூடத்தில் (Naval-College) சேர்ந்து பயிற்சி பெற்றார். இந்தப் பள்ளி கி. பி. 1872-ம் ஆண்டுமுதலில் ஏற்பாடானது.

பல அந்தஸ்துகளைத் தாண்டி கடைசியாய் ஒரு கப்பற்படைக்குத் தலைவராய்ப்போனார். பிறகு சீனாவோடு யுத்தம் நடந்த காலத்தில் "அகிட்ஸூஷிமா" (Akitsushsma) என்ற கப்பற்படையின் தலைவரான போது அவர்பேர் வெளிக்கு வந்தது. சீனாவோடு நடந்த இந்த யுத்தத்தில் முக்கியமாய் நடந்த பெருங்கப்பற் சண்டைகளில் இவரும் சேர்ந்து போர் புரிந்தார்.



அந்தச் (மூன்று) சண்டைகளில் வந்த நஷ்டங்களால் சீனர்க்குக் கப்பல்கள் யாவும் அழிந்துபோயின. இந்த மூன்றில் முதற்சண்டை பங்டோ (Phungdo) வண்டை நடந்தது; பங்டோ என்பது ஒரு தீவு.

1894-ம் வருஷம் ஜூலைமாதம் 23-ந் தேதி 8 சண்டைக்கப்பல்கள் அடங்கிய ஜப்பானியக்கப்பற்படையானது ஸாஸேபோ (Sasebo) என்ற துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்டது. இந்தப்படைக்கு முன்னணியில் யோஷினோ (Yoshino) நனிவா (Naniwa) அகிட்ஸூஷிமா (Akitsushima) என்ற சண்டைக்கப்பல்கள் இருந்தன. அன்றைதினம் பங்டோவண்டை போம்போது சீனச்சண்டைக் கப்பல்கள் சில இவர் கண்ணுக்குப் புலப்பட்டன. உடனே அவற்றை ஜப்பானியர் துரத்திவிட்டார்கள். ஓடுவனவற்றைத் துரத்தும்போது காமிமூராவானவர் ட்ஸாவோகியாங் (Tsaokiang) என்ற சீனச்சண்டைக் கப்பலண்டைக்கு வந்து சரணமடையும்படி அதற்கு உத்திரவு செய்தார். அது உடனே ஒருதாம்கூடச் சுடாமல் தலைவணங்கிற்று. இப்படியாக, யுத்தத்தில் முதல் முதல் கிடைத்த பெரிய லாபம் காமிமூராவுக்கு வந்தது.

இவர் போட்ட இரண்டாம் கப்பல் சண்டை ஹேயாங் (Haiyang) என்ற இடத்தில் மஞ்சட் கடலில் 1894-ம் ஞு செப்டம்பர்மீ 17-ம் உ நடந்தது. ஹேயாங் என்றது கிஞ்சோ (Kinchow) தீபகற்பத்துக்குப் போகிற வழியில் இருக்கிறது. இந்த இடத்தில் ஒரு பெரிய சீனக்கப்பற்படை தங்கி

யிருந்தது. அப்போது நடந்த சண்டையில் இந்தச் சீனப்படை முற்றிலும் தோல்வியடைந்தது; நல்ல நல்ல கப்பல்கள் நாசமாயின; மிகுந்தவை வேஹைவே (Wei-hei-wei)க்கு ஓடிப்போயின. சண்டையின் போது காமிமூரா தம்கப்பலில் படைத்தலைவன் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை; ஆனால் பாய்மரத்தின்மேல் சிறுபீரங்கி வைக்கும் மேடையில் நின்றுகொண்டு யாதொரு காப்புமில்லாமல் தம்பீரங்கி சுடுவோனுக்கும் கப்பல் நடத்துவோனுக்கும் (Steerman) சரியானயுக்தி புத்திகள் சொல்லிக்கொடுத்தார். வெகுநேரம் அங்கே தம்மை நோக்கி நெருப்பு வந்துகொண்டிருந்தும் கொஞ்சமும் காயமடையவில்லை.

இவர்போட்ட மூன்றும் சண்டை வேஹைவே (We-ihei-wei)யில். இந்தச் சண்டை நடக்கும்போது ஜப்பானியர்களுக்குக் கப்பற்சண்டையில் டார்பிடோ (Torpedoes) என்ற வெடிகப்பலின் நிசமான உபயோகம் தெரிந்தது; இந்தச் சண்டையில் சீனக் கப்பற்படையை அட்மிரல் டிங் (Admiral Ting) என்றவர் வெகு தைரியமாய் நடத்தினார். நடத்தியும் சீனக் கப்பல்களெல்லாம் அழிந்துபோயின. அநேகம் பிடிபட்டும் போயின. இதற்குப் பிற்காலத்தில் போர்ட் ஆர்தர் என்ற துறைமுகத்தில் ஜப்பானியர் காட்டிய அதிசயங்களைப் பார்த்தால், வேஹைவேச் சண்டையில் கற்றுக்கொண்ட பாடத்தை மறக்கவில்லை என்று தெரிகிறது.

பத்து வருஷத்துக்கு முன்னால் ஜப்பான் எடுத்



துக்கொண்ட பெரிய யுத்தம் முடிந்தபிறகு, காமிமூராவுக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டு வெவ்வேறு சண்டைக்கப்பல்களுக்குத் தலைவராய் ஏற்பட்டார். சில வருஷங்களுக்குமுன் இங்கிலாண்டுக்குப் போய் எல்ஸ்விக் (Elswick)கிலும் இன்னும் மற்றக் கப்பல்துறைகளிலும் (Yards) கட்டப்பட்டுக்கொண்டிருந்த சண்டைக் கப்பல்கள் எவ்வளவுதூரம் கட்டப்பட்டிருக்கின்றன என்று விசாரித்து எழுதும்படி ஜப்பானியத் துரைத்தனத்தார் இவரை அனுப்பினார். அங்கே இவர் போன காரியங்களில், க்ளைட் (Clyde) துறைமுகத்தில் கட்டப்பட்ட ஆஷே (Ashai) என்ற சண்டைக்கப்பலை ஜப்பானுக்கு ஓட்டிக்கொண்டு வரும்படியும் இவர் உத்திரவிடப்பட்டார். இங்கிலாண்டில் இதற்கு ஏறக்குறைய ஓராண்டு கழிந்தபோது லண்டனில் ஜப்பானிய மரக்கல ஆபீசில் தம் வேலையைப் பார்த்துக்கொண்டு வந்ததால், அங்குப் பல ஆங்கிலேயர்களிடத்தில் தோழர்களாய்ப் பழகிவிட்டார். இங்கிலாண்டில் இருந்த காலத்திலேயே ரியர் அட்மிரல் என்ற உத்தியோகம் கொடுக்கப்பெற்றார். அன்றி, கப்பல்கட்டும் வித்தைக்குத் தலைவாத்தியாராய் வேலை பார்க்கும்படிச் செய்யப்பட்டார். பிறகு ஜப்பானுக்குத் திரும்பியபோது கல்வியிலாகாவில் கப்பற் போர்வித்தைக் கூட்டத்தார்க்கு (Naval Bureau) டைரெக்ட (Director)ராய் நேமிக்கப்பட்டார். 1902-3-ம் ஆண்டில் கப்பல் போர்வித்தை பயில்விக்கும் மூன்று மரக்கலங்களடங்கிய கப்பற்கூட்டம் (Squadron) ஒன்றுக்குத்

தலைவராய் ஏற்பாடானார். இந்த மூன்று கப்பலிலும் 200-மாணவர்களுக்கு மேலேயே போர் பயின்று வந்தார்கள். இவர்கள் யாவரும் பஸிபிக் சமுத்திரத்தில் (Pacific Ocean) நெடுகப் பிரயாணம் போய்ச் சுற்றித் திரிந்தார்கள். ஆஸ்ட்ரேலியா (Australia) வில் பல துறைமுகங்களுக்குச் சென்றபோது அங்கே ஒவ்வொரு இடத்திலும் நல்வரவு கூறப்பெற்றார்கள்.

பிறகு ஜப்பானுக்குத் திரும்பியபோது, ஜப்பானிய கப்பற்படையின் இரண்டாவது தொகுதி (Squadron) க்குப் பெரிய தலைவராய் நேமிக்கப்பட்டார். பல மாசங்களாய் வடக்கே வ்ளாடிவாஸ்ட்டாக் (Vladivostok) என்ற ருஷியத் துறைமுகத்தில் ருஷியக் கப்பற்றொகுதியைக் கண்ணுறப் பார்த்துக் கொண்டிருந்தும் அதை அடித்துத் தொலைக்க இவர்க்குச் சமயம் வாய்க்காமற் போயிற்று. ஆயினும் கடைசியில் ஒரு சமயம் வாய்த்தது; அப்போது ருஷிய மரக்கலமாகிய ரூரிக்கை (Rurik) முழுக்கி அக்கலத்துடன் வந்திருந்த மற்றக்கலங்களைத் துரத்தினார். இது ஒன்றே இவர் எவ்வளவு நன்றாயும் கடினமாயும் எதிரியின் மரக்கலங்களை அடித்துத் தள்ளுவார் என்று காட்டுகின்றது. இவரும் ருஷிய யுத்தத்தில் பெயர் பெற்றவர்; அதன் விவரங்களைப் பின்னுற் காண்க.

---

# CHAPTER III

# மூன்றாவது அதிகாரம்

## ஜப்பானின் அன்னிய யுத்தங்கள்

முதல்யுத்தம் செய்து ரைக்குத் தீவுகளைக் கைப்பற்றியது—இரண்டாம் யுத்தம் 1894-ம் ஆண்டு தொடங்கியது—கொரியாவில் சைனா ஏகாதிபத்தியம் செலுத்தியதா இல்லையா என்பது ஏற்படவில்லை—கொரியாவினால் ஜப்பானுக்கு வெகு கவலையுண்டாயிற்று—சைனா கொரியா விஷயமாய் ஒத்துழைக்க மறுத்தது—கொரியாவைச் சீர்திருத்த ஜப்பானே ஒண்டியாய்ப் புகுந்தது—சைனா அதற்குத் தடையாய்ச் சைனியத்தை அனுப்பித்தது—இரண்டு நாடுகளுக்கும் யுத்தம் மூண்டது—பியாங்யாங் என்ற இடத்துச் சண்டையில் சைனாவின் தோல்வி—யாலுநதிச் சண்டையில் சைனா தோல்வி யடைந்தது—அந்தத் தோல்வியால் சைனாவுக்குள் ஜப்பான் படையெடுத்துச் சென்றது—வேஹைவேக் கப்பற்சண்டை—சைனாவுக்குத் தோல்வி—சைனாவின் அட்மிரல் தற்கொலை புரிதல்—ஜப்பானுக்கும் சைனாவுக்கும் உடன்படிக்கை—பிராஞ்சு, ருஷியா, ஜர்மனி இம்மூன்று தேசங்களும் இவ்வுடன்படிக்கைக்குத் தடை சொல்லல்—ஜப்பான் இத்தடைக்கு எதிர்சொல்லப் பயந்து ஒப்புக்கொண்டது—ஜப்பான் சைனாவால் விடப்பட்ட பிரதேசங்களை இழந்தது—1900-ம் வருஷம் பாக்ஸர் கலகம்—ஐரோப்பியர் ஜப்பானைச் சைனாவுக்குத் துருப்பு அனுப்ப வேண்டிக்கொண்டார்கள்—அப்போது சைனாவில் ஜப்பானியப் படைவீரர் காட்டிய வீரமும் திறமும்—ஜப்பானுக்கு வந்த பேரும் பெருமையும்.

ஜப்பானானது மத்தியகாலத்துப் பாளையப்பட்டு முறையை ஒழித்துத் தற்காலத்து மேல்நாடுகளின் நாகரீகத்தை அனுஷ்டிக்கத் தலைப்பட்டது முதல் கடல் கடந்து நாலு தடவை யுத்தங்கள் நடத்தியிருக்கிறது. முதலாவது, 1874-ம் வருஷத்தில் பார்மோஸாத் தீவு விஷயமாய்ச் சைனாவுடன் தகரார் நேரிட, அத்தீவுக்கு ஜப்பானியத் துருப்புகள் போய் யுத்தத்துக்குச் சித்தமாயிருந்தன; அதைச்சைனா கேள்விப்பட்டு யுத்தம்செய்ய விருப்பமில்லாமல் சமாதானமாய்ப் போகப் பேச்சுகள் நடத்திற்று. ஜப்பானுக்கு அந்த விஷயமாய்ப் பிடித்த செலவுக்கு ஈடாக லக்ஷம் பவுன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. ஜப்பானும் தன் துருப்புகளைப் பார்மோஸாவிலிருந்து நீக்கிக்கொண்டது.

1876-ம் வருஷத்தில் ஜப்பான் சிற்றரசொன்றுக்குச் சொந்தமாயிருந்த லூசூத் தீவுகளில் ஜப்பானின் மற்றப்பாகங்களில் ஸ்தாபித்த புது ஏற்பாடுகளைப் போல அங்கும் புது ஏற்பாடுகள் ஸ்தாபிக்கப்பட, அத்தீவுகள் தன்னதிகாரத்துக் குட்பட்டனவென்றும் அவைகளில் ஜப்பான் தலையிடக்கூடாதென்றும் சைனா ஆக்ஷேபித்தது. ஜப்பான் அந்த ஆக்ஷேபத்தை ஒப்புக் கொள்ளாமல் தகரார் முடியாம லிருந்துகொண்டே யிருக்க, 1880-ம் வருஷத்தில் இரண்டு ராஜாங்கங்களுடைய பிரதிநிதிகள் பெக்கின் நகரத்தில் கூடி வட பாகம் ஜப்பானுக்கும், தென்பாகம் சைனாவுக்கும் என்று முடித்து அந்தப்படி ஒரு உடன்படிக்கை கையெழுத்தாகிற சமயத்தில் சைனாப் பிரதிநிதிகள் தங்களுக்கு



முடிவான ஏற்பாடுகள் செய்ய அதிகாரமில்லை என்று பின் வாங்கினார்கள். ஜப்பான் அதைக்கண்டு தீவுகள் அனைத்தையும் வசப்படுத்திக்கொண்டு ஜப்பானின் ஒரு பாகமாக நடத்தி வருகின்றது.

பிறகு 1894-ம் வருஷத்தில் சைனாவோடு யுத்தம் நடத்தி ஜப்பான் கீர்த்தியும் லாபமும் பெற்றது. இந்த யுத்தம் கொரியாதேசத்தில் சைனா ஜப்பானாகிய இரண்டு தேசங்களில் எது ஆதிக்கியம் பெற உரியது என்று நிச்சயிக்கும் நோக்கமாகச் செய்யப்பட்டது. கொரியாவானது இந்த இரண்டு தேசங்களுக்கும் மத்தியிலிருப்பதால் அது திறமையுடனும் அதன் ஜனங்கள் மன திருப்தி அடைந்திருக்கும் வண்ணமும் ஆட்சி செய்யப்படா விட்டால், அதில் ருஷியர் போன்ற அன்னியர் புகுந்து மேம்பாடு ஸ்தாபித்துக்கொண்டு, சைனா ஜப்பான் இரண்டையும் சமயத்துக்குத் தக்கபடி பயமுறுத்திக்கொண்டே யிருக்கக்கூடும். பெயருக்கு மாத்திரம் கொரியா வெகுகாலமாய்ச்சைனா ஏகாதிபத்தியத்திற்கு அடங்கியிருந்தது. கொரியா தனக்கு அடங்கியது என்று சொல்வதால் லாபம் உண்டாகுமானால், அப்படிச் சொல்வதும், அது சுவாதீன தேசமென்று சொல்வதால் பொறுப்பும் சங்கடமும் நிவர்த்தியாகுமானால் அப்படியே சொல்வதும், சைனாவுக்கு வழக்கமாயிருந்தது. எந்தச் சமயத்தில் கொரியாவின் ராஜாங்க நிர்வாகத்தில் தலையிடுவதால் சைனாவுக்கு லாபமுண்டோ அப்போது தலையிட்டு அதன் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதும் வழக்கமாயிருந்தது.

அக்காலத்தில் கொரியாவை ஆண்டுகொண்டிருந்த அரசர்கள் திறமையற்றவர்களாயும் ஜனங்களின் க்ஷேமத்தில் அக்கறை யில்லாதவர்களாயு மிருந்தமையால், நிர்வாகம் எவ்வித ஒழுங்கும் சீருமில்லாமல் நடத்தப்பட்டு, வரி வசூல் செய்வதும் நியாய விசாரணை செய்வதும் அந்தந்த உத்தியோகஸ்தரின் இஷ்டப்படி நடந்தன. உயர்வகுப்பார் தாழ்ந்த வகுப்பாரை இம்சிப்பதும், பலத்தவன் இளைத்தவனைக் கொள்ளை கொள்வதும், உத்தியோகஸ்தர் லஞ்சம் வாங்குவதும் சகஜமாயிருந்தன. தேசத்தின் க்ஷேமத்துக்குரிய எவ்வித முயற்சியும் ஆளுவோர் செய்யாமல் விவசாயம் கைத்தொழில் முதலிய ஜீவனோபாயங்களும் குறைந்து ஜனங்கள் வறுமையினாலும் சம்ரக்ஷிப்போரில்லாமலும் வருந்தினார்கள். சகிக்க முடியாதவர்களாய்ச் சில சமயங்களில் கீழ் வகுப்பார் அங்கங்குக் கலகங்கள் செய்யத் தலைப்பட்டார்கள். ஆளுவோர் அக்கலகங்களை அடக்கச் சக்தியற்றவர்களாய்ச் சைனாவின் ஒத்தாசையைத் தேடி அங்கிருந்து துருப்புக்களை வரவழைத்துக் கலகங்களை அடக்கி வந்தார்கள்.

கொரியா இந்த நிலைமையிலிருந்ததால் ஜப்பானுக்கு எப்போதும் அதைப்பற்றிக் கவலை உண்டாய்க் கொண்டிருந்தது. ருஷியாவாவது வேறெந்த ஐரோப்பிய ஜாதியாராவது அங்குச் செல்வாக்கு ஸ்தாபித்துக் கொண்டு ராஜாங்கத்தை வசப்படுத்திக்கொள்வது சுலபமென்று தெளிவாய்த் தோன்றிற்று. அதன் உள்விவகாரங்களில் சைனா பிரவேசிப்பது வழக்க



மாயிருந்தமையால் கொரியாவின் நிலைமையைச் சீர்திருத்தி அதன் ராஜாங்கமும் சுவாதீனமும் பலப்படச் செய்யவேண்டுமென்று ஜப்பான் சைனா ராஜாங்கத்தாரை அடிக்கடிக் கேட்டுக்கொண்டது. சைனாவோ கொரியாவில் அப்படிப்பட்ட பொறுப்பை ஏற்கச் சம்மதமில்லாமல் வீண் சாக்குப்போக்குகள் சொல்லிக்கொண்டு வந்தது. கொரியாவின் நிலைமையைத் தானும் சீர்ப்படுத்த சம்மதிக்காமலும், ஜப்பான் அந்தப் பொறுப்பை ஏற்றுச் செய்ய முன்வந்தால் அதற்கு இடங்கொடுக்காமலும் ஜப்பானுக் குண்டாயிருந்த கவலை தீர வழியில்லாமல் செய்துவந்தது.

மேலும், ஜப்பானிடத்தில் சைனாவுக்குச் சிலகாலமாக அசூயை உண்டாயிருந்தது. ஜப்பான் புது நாகரீக முறைகளை அனுஷ்டித்து, ஐரோப்பியரைப்போல் தோற்றங்கொள்ளப் பார்த்தது சைனாவுக்கு வெறுப்பையும் பொறாமையையும் உண்டுபண்ணிற்று. சைனா அநேக நூற்றாண்டுகளாய் மந்த புத்தியும் பயமுங்கொண்டதாய், இருந்த நிலைமையைவிட்டு அகலாமல் உளுத்துப்போய்க்கொண்டு வந்தது. வெகு காலமாய்த் தன்னைப்போலவே யிருந்த ஜப்பானானது புது வழிகளைப் பின்பற்றிப் பெருமை பாராட்டினது சைனாவுக்குப் பொறுக்கவில்லை. இதனாலேயும் கொரியாவாட்சி நிர்வாகத்தில் ஜப்பான் கொண்ட விருப்பங்கள் நிறைவேறுவதில் சைனா எவ்வித ஒற்றுணர்ச்சியும் காட்டவில்லை. ஜப்பான் கூடியவரையில் ஒத்துப்போகப் பார்த்தும் சைனா ஒத்துவராததால் ஜப்பான் தன்னுடைய

பிற்கால சாவதானத்தைக் கோரி தன்னிஷ்டப்படிச் செய்தல் அவசியமாயிற்று. இப்படிச்செய்ய ஜப்பான் ஒரு சமயத்தை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தது. கொரியாவின் ராஜஸ்தலமாகிய ஸியோலில் வசித்த ஜப்பானியர்களைச் சைனாக்காரர்கள் சில சமயங்களில் இம்சிக்க, அவர்களின் சம்ரக்ஷணைக்காகச் சில துருப்புக்களை அப்பட்டணத்தில் ஜப்பான் வைத்திருந்தது. சைனாவினுடைய துருப்புக்களும் சிலவிருந்தன. இந்த விருதேசத்துத் துருப்புக்களுக்கும் அடிக்கடிச் சண்டை நேரிட்டுக்கொண்டிருந்தபடியால், இனி யிரண்டில் எத்தேசமும் மற்றத் தேசத்துக்கு அறிவிக்காமல் கொரியாவுக்குத் துருப்புகள் அனுப்பக் கூடாதென்று உடன்படிக்கை செய்துகொண்டன.

ஜப்பான் கோரிக்கொண்டிருந்த சமயம் 1894-ம் வருஷம் மே மாதம் நேரிட்டது. கொரியாவின் தென் பாகத்தில் ஜனங்கள் கலகம் செய்து கிளம்பக் கொரியா கவர்ன்மெண்டார் அதை அடக்கச் சக்தியற்றவர்களாய் வழக்கம்போல் சைனாவின் உதவியைக் கேட்டார்கள். சைனாவும் அதற்கிணங்கி ஜப்பானுக்குத் தெரிவித்துவிட்டுக் கலகம் தோன்றினவிடத்திற்குத் துருப்புக்களை அனுப்பிற்று. ஜப்பானும் தமது லாப நஷ்டத்தைக் காக்கும்பொருட்டுத் துருப்புக்களை யனுப்பிற்று. இரு தேசத்தாருஞ் சேர்ந்து கலகத்தை யடக்கி இனிக் கலகம் நேரிடாமல் ராஜாங்கத்தைச் சீர்ப்படுத்தி யமைக்க முயலவேண்டுமென்பது ஜப்பானின் விருப்பமாயிருந்தாலும் சைனாவுக்கு அந்த வெண்ணம்



உண்டாகவேயில்லை. ஒருமுறை கொரியா தனக்குச் சுவாதீனப்பட்டதென்றும் அதன் ராஜாங்கமுறை தன்னிஷ்டத்தைப் பற்றினதென்றுஞ் சொல்ல, மற்றொரு முறை கொரியா சுவாதீனமுள்ள தேசமென்றும் அதில் பலாத்க்ாரமாய்த் திருத்தங்கள் செய்ய ஜப்பானுக்குப் பாத்தியமில்லையென்றுஞ் சொல்லிற்று. இப்படிச் சைனா இரண்டு விதமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தது ஜப்பானுக்குச் சங்கடத்தை யுண்டுபண்ணினபடியால், அதைச் சுவாதீன தேசமாகக்கொண்டு அதுவரையில் அத்துடன் நடவடிக்கை நடத்திக்கொண்டு வந்தபடியே இனியும் செய்யவேண்டுமென்று ஜப்பான் தீர்மானித்தது. நவீன நாகரீக முறைமையின்படித் திருத்தங்கள் செய்வது, சைனாவுக்குத் தன் விஷயத்திலே இஷ்டமில்லாமைபோல் கொரியாவில் அத்தகையத் திருத்தங்கள் செய்வதிலும் சிறிதுமிஷ்டமில்லை. ஆயினும் இரண்டு தேசங்களுக்கும் கொரியாவின் நிலைமை அபாயத்துக் கேதுவாயிருந்ததை யுணர்ந்து, ஜப்பான் திருத்தங்கள் செய்தே தீரவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தது.

இரண்டு ராஜாங்கத்தாரும் பொதுவாய் ஒரு கமிஷன் நியமித்துக் கொரியாவின் நிலைமையைத் திருத்த வேண்டுமென்று ஜப்பான் பிரேரேபித்தது. சைனா அதற்கு இணங்கவில்லை. ஆகையால், ஜப்பான் தன் சொந்தப் பொறுப்பின் பேரிலேயே திருத்தங்கள் செய்ய வாரம்பித்தது. சைனா ஜப்பானின் முயற்சியை எதிர்க்கும் நோக்கத்துடன் துருப்புக்களை அனுப்

பினது. இரண்டு தேசங்களும் யுத்தம் தொடரத் தயாராயிருந்த சமயத்தில், கொரியாவுக்குத் துருப்புக்கள் ஏற்றிப்போன மூன்று சைனாக்கப்பல்கள் ஜப்பான் கப்பல்களைப் பார்த்துச் சுட, ஜப்பானியர் சைனாக் கப்பல்கள் மூன்றையும் பிடித்துக்கொண்டார்கள். உடனே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

யுத்தம் ஆரம்பித்த சிலநாளுக்கெல்லாம் செப்டம்பர் மாதத்தில் பியாங்யாங் என்ற இடத்தில் இரு தேசத்துச் சைனியங்களுக்கும் பலமான சண்டை நேரிட்டு, சைனா சைனியம் எண்ணிக்கையிலும் பீரங்கிப்பலத்திலும் உயர்ந்ததாயிருந்தபோதிலும், ஜப்பானியரால் தோல்வியடைந்தது. சைனா சைனியத்தில் 6000-பேர்கள் மாண்டுபோக ஜப்பான் சைனியத்தில் நேரிட்ட சேதம் 700-க்குமேலில்லை. இந்த யுத்தம் நடந்த மறுநாள் கொரியாவின் வட எல்லையாகிய யாலு நதி முகத்துவாரத்துக்குச் சமீபத்தில் இருகட்சியாருக்கும் கடற்சண்டை நேரிட்டுச் சைனா தோல்வியடைந்தது. இந்தக் கடற்சண்டையிலும் சைனாவின் கப்பற்படை கப்பல்கள் எண்ணிக்கையிலும் ஆயுதங்களிலும் உயர்ந்தனவாயிருந்தபோதிலும், சைனா யுத்தவீரர் வெகு சௌரியங்காட்டிப் போர் செய்தபோதிலும், ஜப்பானியர் அவர்களது முன் ஜாக்கிரதையாலும் சைனியத்தின் கட்டுப்பாட்டாலும் வெற்றி பெற்றார்கள். இந்த வெற்றியினால் ஜப்பானியர் கடல் வழியாய்ச் சென்று சைனாவின் துறைமுகங்களைத் தாக்கிப் பிடித்தல் எளிதாயிற்று. அவ்வாறே, டாலியன்வான்



(Talianwan), போர்ட் ஆர்தர் (Port Arthur); வேஹைவே (Wei-hai-wei), ஆகிய மூன்று துறைமுகங்களும் ஐரோப்பிய நிபுணரின் உதவியினால் முதல் தரமாய் அரண் செய்யப்பட்டிருந்த போதிலும், ஜப்பானியப் படைகளால் பிடிபட்டுப் போயின. வேஹைவே துறைமுகத்தில் மட்டும் சைனாக்கப்பல் வீரர் சௌரியங் காட்டிப் பலமாய் யுத்தஞ் செய்தார்கள். ஆயினும் நாலு கப்பல்கள் ஜப்பானியரால் பிடிபடவே, மற்றக் கப்பல்கள் ஜப்பானியரிடம் அடைக்கலமாயின. சைனாத் தலைவனான அட்மிரல் டிங் (Admiral Ting) தற்கொலை புரிந்தான். ஜப்பானின் தரைப்படைகளில் ஒரு பாகம் யாலு நதியிலிருந்து மஞ்சூரியாவின் வடபக்கம் சென்று பலசண்டைகளில் வெற்றி பெற்று, மூக்டன் என்னும் துறைமுகத்தைப் பற்றியது. இரண்டாவது பாகம் மேற்கு முகமாய்ச்சென்று தென்மஞ்சூரியாவில் ந்யூச்வாங் (Newchwang) இங்கோ (Yingkow) என்ற பட்டணங்களைப் பிடித்தது. மூன்றாவது பாகம் தென்புறம் சென்று டாலியன்வானையும் போர்ட் ஆர்தரையும் பிடித்துக்கொண்டது. நாலாவது பாகம் கைப்பிங் (Kaiping) கைக் கைப்பற்றி இங்கோ (Yingkow) வுக்குச் சென்று அங்கு இரண்டாவது பாகத்துடன் கலந்து கொண்டது. ஐந்தாவது பாகம் போர்ட் ஆர்தரிலிருந்து வேஹைவேக்குச் சென்று அதைப் பிடித்துக்கொண்டது. ஜப்பானின் சைனியம் மொத்தம் 1,20,000 போர்வீரர்கள் அடங்கினதாய் $7\frac{1}{2}$-மாதம்

இந்த யுத்தத்தை நடத்தியது. இதில் ஜப்பானுக்கு நேரிட்ட சேதம் கொல்லப்பட்டுப் போனவர்கள் 1,005. காயப்பட்டுப் போனவர்கள் 4,922. வியாதியினால் இறந்தவர்கள் 16,866. யுத்தத்தால் நேரிட்ட மொத்தச் செலவு 2 கோடி பவுன்.

சைனா கவர்ன்மெண்டார் தக்க உத்தியோகஸ்தர்களை அனுப்பிச் சமாதானம் பேச ஜப்பானும் தன் பிரதம மந்திரி மார்க்விஸ் ஐட்டோவையும் அன்னிய மந்திரி கவுண்ட் மட்சுவையும் அனுப்பிச் சமாதானம் செய்து முடித்தது.

ஷிமானொசேகி (Shimonoseki) என்ற ஊரில் 1895-வருஷம் எப்பிரல் மாதம் 17-ம் தேதி உடன்படிக்கை செய்து முடிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையால் கொரியா முழு சுவாதீனம்பெற்ற தேசமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது; மஞ்சூரியாவில் ஒரு பாகம் ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்டது; பார்மோசா, பெஸ்காடோர்ஸ் என்ற தீவுகளும் கொடுக்கப்பட்டன; சைனா 20-கோடி டெயில்ஸ் யுத்தச்செலவுக்காக ஜப்பானுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது; (ஒரு டெயில் என்பது 5-ஷில்லிங் 3-பென்ஸ் அல்லது 2-ரூ 7-அணா மதிப்புக்கொண்டது). இந்தச் செலவு தொகை கொடுக்கப்படுகிறவரை வேஹைவே துறைமுகம் ஜப்பான் வசத்திலிருக்கச் சைனா சம்மதித்தது; சைனாதேசத்தில் வியாபார விஷயமாய் ஐரோப்பியர்களுக்குக் கிடைத்திருந்த சுதந்திரங்கள் ஜப்பானுக்கும் கொடுக்கப்பட்டன.



இந்த நிபந்தனைகள் அடங்கின உடன்படிக்கையை இரண்டு இராஜாங்கத்தாரும் உறுதி செய்தார்களோ இல்லையோ உடனே ருஷியா, பிரான்ஸ், ஜர்மெனி, ஆகிய மூன்று ராஜாங்கத்தார்களும் சேர்ந்து டோகியோவில் மிக்காடோவுக்கு ஒரு தௌத்திய நிருபம் அனுப்பி, அதில் சைனாவின் உட்புறத்தில் ஜப்பான் பெற்ற ஸ்தலங்களை ஜப்பான் நிரந்தரமாய்க் கட்டிக்கொள்ளக் கூடாதென்றும், கட்டிக்கொண்டால் கீழ் உலகத்தில் நிலையான சமாதானத்துக்கு அபாயம் நேரிடுமென்றும், அறிவித்தார்கள். மிக்காடோ சக்கிரவர்த்தியும் ஜப்பானிய ஜனங்களும் இதைக்கண்டு ஆச்சரியமும் கோபமும் அடைந்தார்கள். ஆயினும், இந்த மூன்று ராஜாங்கத்தார்களும் தௌத்திய லக்ஷணத்துக் குற்றவாறு மரியாதையான வார்த்தைகளை உபயோகப்படுத்தினாலும், ஜப்பான் மறுக்குமாயின் யுத்தம் தொடருவார்கள் என்பதே அவற்றின் உட்கருத்தாய் விளங்கினபடியால், மிக்காடோச் சக்கிரவர்த்தி அக்காலம் தமது தேசமிருந்த நிலைமையை நோக்கி, ஐரோப்பிய வல்லரசுகளின் ஆலோசனையை ஏற்றதாக விளம்பரப்படுத்தினார். ஜப்பான் தன் வெற்றியால் லாபம் பெறுவதை ருஷியா ஆட்சேபிப்பதும் எதிர்ப்பதும் சகஜமாயினும், ஒருக்கால் பிரான்சு தேசம் ருஷியாவுக்கு நேசனானதால் அதுவும் அப்படிச் செய்வது ஆச்சரியமல்லவாயினும், ஜப்பானுக்கு உண்மையான நண்பன் எனச்சொல்லிக் கொண்ட ஜர்மெனி தேசம் மற்ற இரண்டுடன் சேர்ந்தது ஜப்பானுக்கு

இணங்கவில்லை. ஜப்பானானது சைனாவில் புகுந்து ஆதிக்கியம் ஸ்தாபித்துக் கோடிக்கணக்காயுள்ள சைனா ஜனங்களை வெள்ளமாக வளைத்துக் கூட்டிக்கொண்டு ஐரோப்பிய தேசங்களின்மீது எழுந்து அங்குத் தனது ஜயவிருதுகளை நாட்டக்கூடுமென்று பயந்து ஜர்மனிச் சக்கிரவர்த்தி இப்படிச் செய்தாரென்று, பிற்பாடு ஒரு காலத்தில் ஜப்பானியருக்குத் தெரிய வந்தபோது அவர்களுக்குண்டான நகைப்பானது ஆதியில் உண்டான கோபத்தையும் வெறுப்பையும் சற்றுத் தணித்தது. இவ்வாறு ஜப்பான் போரில் அரும்பாடுபட்டு வெற்றியால் சம்பாதித்த பலன்களில் முக்கியமானதாகிய மஞ்சூரியாவின் ஒரு பாகத்தைப் பெற்றதைப் பலாத்காரமாய் இழக்கும்படி நேரிட்டது. ஜப்பான் யுத்தத்தால் களைத்துப்போயிருந்தபடியால் ஐரோப்பிய வல்லரசுகளோடு எதிர்த்து நிற்பதற்கு அது சமயமல்லவென்று தணிந்துபோய் அதன் விவேகத்தை நிரூபித்தது.

---

## சைனாபாக்ஸர் யுத்தம்

1900-ம் வருஷம் பிற்பாகத்தில் சைனாவில் பிச்சிலி என்ற மாகாணத்தில் ஒருகலகம் நேரிட்டது. சைனா சக்கிரவர்த்தியின் வம்சத்தினிடத்திலும் அத்தேசத்தில் வியாபாரிகளாயும் கிறிஸ்தவப்பாதிரிகளாயும் வசித்த அன்னியர்களிடத்திலும் சைனா ஜனங்களில் சிலர் வைத்திருந்த விரோதத்தால் இந்தக்கலகம் நேரிட்டது. பிச்சிலி மாகாணத்தில்தான் சைனாவின் ராஜஸ்தானமாகிய பிகின் பட்டணமும் டீண்ட்ஸின்



என்ற வியாபார ஸ்தலமும் உள்ளனவாகையால், அங்கு வசித்த திரளான அன்னியர்களுக்கு ஆபத்து நேரிடும் போலிருந்தது. அமெரிக்கா ராஜாங்கத்தாரும் சில ஐரோப்பிய ராஜாங்கத்தார்களும் இந்த ஆபத்தைத் தவிர்க்கும்படித் துருப்புகள் அனுப்ப வேண்டியவர்களாயிருக்க, வெகு தொலைவிலிருந்து இந்தத் துருப்புகள் வரவேண்டியிருந்ததால், சமீபத்திலிருக்கும் ஜப்பானிய ராஜாங்கத்தாரைத் தாமசமின்றித் துருப்புகள் அனுப்பிப் பிகின், டீண்ட்ஸின் ஆகிய இரண்டு ஸ்தலங்களிலுமிருந்த ஐரோப்பியர்களைக் காக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். ஜப்பானியர் யோசனையின்றி இந்த வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. ஏற்கெனவே அத்தேசத்தார் சைனிய பலமும் செல்வமும் மேல்நாட்டாரைப் போல் நாகரீகத் தேர்ச்சியும் பெற்று வருவதைக்கண்டு ஐரோப்பியர் பொறாமை கொண்டிருந்தபடியால், இந்தவேண்டுகோளுக்கு அவர்கள் ஆவலுடன் இணங்குவதாகக் காட்டிக்கொள்ளல் விவேகமாகாதென்று சிந்தித்தார்கள். ஆயினும், ஐரோப்பிய ராஜாங்கத்தாரின் சங்கடத்தையும் அவர்கள் தங்களிடத்தில் காட்டின மதிப்பையும் நம்பிக்கையையும் மனதிற்கொண்டு ஜப்பானியக் கவர்ன்மெண்டார் 21,000-துருப்புகளைப் பிச்சிலிக்கு அனுப்பினார்கள். பிறகு, சற்றுத் தாமசமாய் ஐரோப்பியத் துருப்புகளும் அமெரிக்கத் துருப்புகளும் வந்தன. இவைகள் நடுக் கோடை வெப்பத்தில் பிகின்மீது சென்று கலகக்காரர்களைத்

தாக்கி வெகு கஷ்டப்பட்டுப் பிகினில் அடைபட்டிருந்த ஐரோப்பியர்களை விடுவித்ததில் ஜப்பானியத் துருப்புகள் அமெரிக்கா ஐரோப்பியத் துருப்புகளுக்குச் சமானமாகப் போர்செய்ததுமன்றி, போர்த்தொழிலில் தேர்ந்த மேல்நாட்டு நிபுணர்கள் குற்றங் குறைகள் சொல்லக்கூடாத வண்ணம் நடந்து கொண்டன. அதைப்பார்த்து ஐரோப்பியர் வியந்து, ஜப்பானியர் தங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளத் தக்கவர்களென்று நினைக்க ஆரம்பித்தார்கள். பிறகு, 1902-ம் வருஷம் பிப்ரவரி மாசத்தில் ஜப்பானும் கிரேட் பிரிட்டனும் நேச உடன்படிக்கை செய்துகொண்டபோது, ஜப்பானியரிடத்தில் ஐரோப்பியர் வைக்க ஆரம்பித்த மதிப்பு அதிகப்பட்டது.

---

# CHAPTER IV

# நான்காவது அதிகாரம்

## ருஷியா யுத்தம்

ருஷியாவி னண்மையால் ஜப்பானுக்குற்ற அபாயம்—ருஷியா ஏஷியாவின் வடக்கே நல்ல துறைமுகம் வேண்டிச் செய்த முயற்சிகள்—ருஷியர் போர்ட் ஆர்தரைக் குத்தகைக்கு வாங்கியது—பாக்ஸர் கலகம்—மஞ்சூரியாவில் ருஷியர் ஊன்றிக்கொண்டது—ஜப்பான் இதைக்கண்டு பயப்படுதல்—ஜப்பான் யுத்தத்துக்குச் சித்தமாதல்—ருஷியாவைக் கொரியா விஷயமாய் உடன்படிக்கைக்குக் கூப்பிடுதல்—ருஷியா பதில் கொடாமல் காலந்தள்ளவே ஜப்பான் யுத்தம் தொடங்கல்—ஜப்பான் போர்ட் ஆர்தர் துறைமுகத் துவாரத்தை அடைக்க முயன்றும் முற்றிலும் பயன்படவில்லை—தரைச்சண்டை பலப்பட்டது—யாலுநதிச் சண்டையால் ருஷியர் கொரியாவைவிட்டு மஞ்சூரியா ஓடினது—26-5-04-ல் கின்சௌநான்ஷான் சண்டை—லியோயங் சண்டைக்கு முயற்சி—போர்ட்டு ஆர்தர் கப்பல்கள் சிதறுண்டன—லியோயங் சண்டை—போர்ட்டு ஆர்தர் துறைமுகம் தலைவணங்கினது—முக்டன் சண்டை 21-நாள் நடந்தது—ட்ஸுஷிமாவண்டைக் கப்பற்சண்டையில் ருஷியர் நாசமுண்டது—ருஷியக் கப்பற் படைத்தலைவர் ரோஜஸ்ட்வென்ஸ்கி ஜப்பானியர் கையிற் சிறைபட்டது—சமாதானம் இருகட்சிக்காரர்களுக்கும் இஷ்டம்—சமாதானத்துக்குக் காரணங்கள்—அமெரிக்காத் துரைத்தனத் தலைவராகிய பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சமா

*தான மத்தியஸ்தம் செய்யப் புகுந்தது—ஜப்பானியர்க்கு இருந்த சமாதான நோக்கம்—ருஷியாவின் பிடிவாதம்—ஜப்பானுடைய தாராளகுணம்—சமாதானத்தின் நிபந்தனைகள்—சமாதானம் முடிந்தது.*

ஜப்பானியர் தாங்கள் ஒரு ஜனமெனப் பிரக்கினை அடைந்த கால முதல் அன்னிய தேசத்தாரின் ஆக்கிரமத்தை நினைத்துப் பயங்கொண்டிருந்தாலும், ருஷியாவினால் அவர்களுக்குண்டான பயத்தைப்போல வேறெத்தேசத்தினாலும் உண்டானதில்லை. ருஷியாவானது 30-வருஷ காலமாய் ஏஷியாவின் கீழ்ப்பாகத்தில் தனது ஆதிக்கியத்தை ஸ்தாபித்து, தென்முகம் நோக்கி வந்து, ஜப்பானுக்கும் சைனாவுக்கும் மத்தியில் உறைப்னியால் எப்போதும் மூடப்பட்டிராத ஒரு துறைமுகத்தைப் பெறவேண்டுமென்று விருப்பங்கொண்டதாய்த் தக்க முயற்சிகள் செய்து வந்தது. இந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டே ஜப்பான் சைனா யுத்தத்திலடைந்த வெற்றியால் மஞ்சூரியாவின் ஒருபாகத்தைப் பெற்றபோது, ருஷியா ஜப்பானை அங்கு வைக்கக்கூடாதென்று எண்ணி, ஜர்மனியையும் பிரான்ஸையும் கைக்குள் போட்டுக்கொண்டு ஜப்பான் மஞ்சூரியாவை விட்டுவிடும்படிச் செய்து விட்டது. அப்போது ஜப்பானுக் குண்டான மனக்கொதிப்பும் மானக்குறைவும் அளவிடக் கூடியனவல்ல. பிறகு, சைனாவில் பாக்ஸர் கலகம் ஒய்ந்ததும், ஜப்பானுக்கும் சைனாவுக்கும் மத்தியிலுள்ள போர்ட் ஆர்தர் என்னும் துறைமுகத்தை ருஷியா நீண்டகாலத்துக்குக் குத்தகையாகப்பெற்று, கோடிக்கணக்கான திரவியத்தைச்



செலவுசெய்து அரண்செய்து வைத்தது. அந்தத் துறைமுகத்துக்கும் டால்னி என்ற மஞ்சூரியாவின் துறைமுகம் ஒன்றுக்கும் ரயில்பாதை போட்டுக்கொள்ளும்படியாகச் சைனாவினுடைய அனுமதியையும் பெற்று அப்படியே போட்டுவிட்டது. எவ்விதமாயாவது சைனாவை வஞ்சித்து மஞ்சூரியாவை வசப்படுத்திக் கொண்டு காலவளவில் கொரியாவை விழுங்கிச் சைனாவிலும் ஒரு பாகத்தைப் பற்றிக்கொள்ள வேண்டுமென்று ருஷியா கருத்துக் கொண்டிருந்தது. பாக்ஸர் கலகத்துக்கு இறுதியில் கலகக்காரர்கள் சிலர் மஞ்சூரியாவின் எல்லைக்குள் பூந்து ருஷியரைத் தாக்கினார்கள் என்ற சாக்கை வைத்துக்கொண்டு, மஞ்சூரியாவில் ருஷியத் துருப்புகளை நாட்டிற்று. மஞ்சூரியாவுக்கு வடக்கிலுள்ள சைபீரியாத் தேசமானது ருஷியாவைச்சேர்ந்ததாயிருந்தும், அந்தச்சைபீரியாவும் சைபீரியாவைச் சுற்றியுள்ள கடலும் எப்போதும் உறைபனியால் மூடியிருப்பதால், ருஷியாவின் கப்பல்வியாபாரத்துக்கு இசைந்த துறைமுகம் அங்கு இல்லை. ஆகையால், மஞ்சூரியாவின் கீழ்ப்பாகத்திலும் சைனாவின் கீழ்ப்பாகத்திலும் எக்காலத்திலும் கப்பல் ஓடக்கூடிய துறைமுகங்கள் பெறவேண்டுமென்பது ருஷியாவின் வெகு கால நோக்கம். அதற்காகவே, போர்ட் ஆர்தரையும் டால்னியையும் தனது துறைமுகங்களாக்கிக்கொண்டது. 10-வருஷ காலத்துக்குள் மஞ்சூரியாவில் மிகுந்த திரவியத்தைச் செலவு செய்து, ரயில்பாதைகளும் ரஸ்தாக்களும் போட்டுப் பட்ட

ணங்கள் கட்டி, தனது ஆதிக்கியத்தைப் பலப்படுத்திக்கொண்டது. வசிக்க ஜனங்களில்லாவிட்டாலும் பட்டணங்கள்மட்டும் சிறப்பாய்க் கட்டப்பட்டன. இப்படிக் கட்டப்பட்ட பட்டணங்களில் ஹார்பின் ஒன்று. இந்த ஹார்பின் பட்டணத்தில்தான் கி. பி. 1909-ம் வருஷம் அக்டோபர் மாசத்தில் பிரின்ஸ் ஐட்டோ ருஷிய மந்திரியை அவ்வூர் ரயில்வே ஸ்டேஷனில் சந்திக்கப்போன சமயத்தில், கொரியாத் தேசத்தானாகிய ஒரு வெறியன் ஐட்டோவைச் சுட்டு வீழ்த்தினான்.

ருஷியா இவ்வாறு மஞ்சூரியாவில் ஸ்திரமாயும் பலமாயும் ஊன்றிக்கொள்ளப் பார்ப்பதை எண்ணி, அங்கு வியாபாரம் நடத்தும் மற்றத் தேசத்தார் சமுசயப்பட்டார்கள். ருஷியாவானது தனக்கு எவ்விதக் கெட்டெண்ணமுமில்லையென்றும், எத்தேசத்தாரானாலும், ஜப்பானியருங்கூட, பேதமில்லாமல் வியாபாரம் செய்யலாமென்றும், சொல்லிக்கொண்டது. 1903-ம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ம் தேதியன்று தனது துருப்புகளை அவ்விடம்விட்டு அகற்றிவிடுவதாகவும், சந்தேகமில்லாத வாக்குறுதி கூறிற்று; கூறியும், அப்படி அகற்றுவதாக எவ்விதக்குறியும் காட்டவில்லை. வரவரத் தனது நிலைமையை மஞ்சூரியாவில் பலப்படுத்திக்கொள்ளும் எண்ணங்கொண்டதாகக் காட்டிற்றேயன்றி, மஞ்சூரியா சைனாவைச் சேர்ந்ததாகையால் அதைப்பற்றின விவகாரங்கள் சைனாவின் விருப்பப்படி நடக்கவேண்டுமென்று ஒப்புக்கொண்டதாகக் காட்



டிக்கொள்ளவில்லை. போர்ட் ஆர்தர் துறைமுகத்தில் 26-போர்க்கப்பல்கள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன.

இவைகளை எல்லாம் கண்டு ஜப்பான் அச்சமுறத் தலைப்பட்டது. வெகுகாலமாய் ருஷியாவிடம் வைத்திருந்த சமுசயம் உறுதிப்பட்டது. ருஷியாவின் பேராசையையும் கபட்டுச் செய்கைகளையும் அடக்குகிற வரையில் ஜப்பானுக்குச் சாவதானமில்லை என்று பயமுண்டாயிற்று. சமாதான உபாயங்களால் ருஷியா வழிப்படாதென்று ஜப்பான் நன்றாய் அறிந்திருந்தது. அதினாலேயே சைனாயுத்தம் முடிந்ததும், ஜப்பான் ருஷியாவுடன் யுத்தம் நடத்தத் தயார்செய்துகொண்டு வந்தது. யுத்தச்செலவுக்கு ஈடாகத் தனக்குச் சைனாகொடுத்த சுமார் 48,75,00,000 ரூபாயிற் பெரும் பாகத்தைப் போர்க்கப்பல்கள் செய்வதிலும் பீரங்கிகள் முதலிய யுத்தத் தளவாடங்கள் தயார்செய்வதிலும் செலவிட்டது. தரைப் படைகளையும் கடற்படைகளையும் தக்கபடி பயிற்சிகள் செய்வித்து ருஷியாவுடன் யுத்தம் செய்வதற்குப் போதுமான திறமையை அடையும்படி செய்துவந்தது. ஜப்பான் எப்போதும் எவ்விஷயத்திலும் அவசரப்பட்டுத் தடுமாறும் தேசமல்ல. பொறுமையுடன் அவசியமான சகல முன் ஜாக்கிரதைகளையும் செய்துகொண்டு ருஷியாவைச் சண்டைக்கிழுத்து வெற்றிபெறலாமென்று நம்பிக்கையுண்டானவுடன், அத்தேசத்துக்கும் தனக்கும் உண்டாயிருந்த வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்ளுமாறு ருஷியாவுடன் பேச்சுக்கள் நடத்த ஆரம்பித்தது.

இத்தகைய நிலைமை சம்பவிக்கக் கூடுமென்று முன்னதாக அறிந்து 1902-ம் வருஷம் ஜனவரிமீ 30உ ஜப்பான் இங்கிலாண்டுடன் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டது. அதில் முக்கியமான நிபந்தனை என்னவென்றால், இங்கிலாண்டும் ஜப்பானும் தூரமானகீழ்வெளிகளில் தத்தம் உரிமைகள்கெடாமல் இருக்கும்படி அவற்றைக் காப்பாற்றிக் கொள்வதில், எந்த வல்லரசுடனாவது இவ்விரண்டில் ஒரு தேசம் யுத்தம் செய்யும்படி நேரிட்டால், அப்போது எதிரியுடன் வேறே ஏதாவது வல்லரசு அவ் யுத்தத்தில் கலந்து கொண்டால், இவ்விரண்டு தேசங்களும் ஒன்றாய்க் கலந்து ஒன்றுக்கொன்று துணையாய் யுத்தம் புரிய வேண்டும். இந்த உடன்படிக்கையின்படி, யுத்தத்தில் ருஷியாவோடு ஜர்மனி, பிரான்சு போல மற்ற எந்த வல்லரசாவது சேர்ந்துகொள்ளும் பட்சத்தில் ஜப்பானுடன் இங்கிலாண்டு சேர்வது கட்டாயமாகும்.

கொரியாத் தேசமானது முற்றிலும் சுவாதீனத்துடன் இருப்பது ஜப்பானின் சாவதானத்துக்கு இன்றியமையாத தாகையால், ருஷியா கொரியாவின் பக்கத்தில் மஞ்சூரியா நாட்டில் ஸ்திரமாய் ஊன்றிக் கொள்வது ஜப்பானுக்கு அச்சத்தை யுண்டுபண்ணிற்று. இதை ஜப்பான் ருஷியாவுக்கு எடுத்துச் சொல்லி, கொரியாவின் சுவாதீனத்துக்குற்றபடி புது ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று ருஷியாவைக் கேட்க, ருஷியா ஒரு வருஷகாலம் பேச்சை வளர்த்துச் சரியான பதில் சொல்லாமல் ஜப்பானுடன் யுத்தம் செய்வ



தற்கு முன் ஜாக்கிரதைகள் மட்டும் செய்து வந்தது. ஜப்பான் இதையுணர்ந்து, இனி பேச்சுகள் நடத்துவதில் பயனில்லை என்று நிச்சயித்து, 1904-ம் வருஷம் பிப்ரவரி மாசம் தௌத்திய சம்பந்தங்களை நிறுத்திவிட்டு*யுத்தத்துக்கு ஆரம்பித்து விட்டது.

---

### யுத்தம்

யுத்த ஆரம்பத்தில் ஜப்பானியருக்கு இடைவிடாது வெற்றி கிடைத்து வந்தது. போர்ட் ஆர்தரில் அட்மிரல் டோகோ ருஷியக் கப்பல்களை முழுக அடித்ததுமன்றி அட்மிரல் உரியூ செமல்போ என்ற துறைமுகத்தில் வேறு ருஷியக் கப்பல்கள் சிலவற்றை யழித்தார். விளாடிவாஸ்டாக் என்ற ருஷியத் துறைமுகத்திலிருந்து சில ருஷியக் கப்பல்கள் புறப்பட்டு ஜப்பான் கப்பல் ஒன்றை முழுகவடித்து ஜப்பானிய சாமான்களையும் மனிதரையும்சேதப்படுத்தின. போர்ட் ஆர்தர் துறைமுகத்து உள்ளேவரும் வழியை ஜப்பானியர் தங்கள் கப்பல்களை அமுக்கி அடைத்து விடப்பார்த்தார்கள்; ஆயினும் அது முற்றிலும் பயன்படவில்லை.

இப்படியிருக்கத் தரைச்சண்டை பலமாய் ஆரம்பித்தது. பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் சில சில்லரை வெற்றிகளுக்குப் பிறகு எப்பிரல் மாதத்தில் கொரியாவின் வட எல்லையாகிய யாலுநதிக்கரையில் ஜப்பானிய சைன்னியம் ஜெனரல் குரோக்கியால் நடத்தப்பட்டு ருஷியரை முறியடிக்கவே, ருஷியர் கொரியாவை விட்டு விலகிப்போனதுமன்றி ஜப்பானியர் யாலு நதி

யைத்தாண்டி மஞ்சூரியாவில் உறுதியான நிலைமையைப்பெற்றனர். இந்தச் சமயத்தில் ஜெனரல் ஓகு இரண்டாவது ஜப்பானிய சைன்னியத்தை நடத்தி, மஞ்சூரியாவில் வந்து இறங்கி, வடபக்கமாய்ச் சென்று, மேமீ 26வ. ருஷிய சைன்னியத்தைச் சந்தித்து, 16-மணிநேரம் கடும் யுத்தம் நடத்தி,கின்சௌ,நான்ஷான் குன்றுகள், இந்த இடங்களைப் பற்றிக்கொண்டனர். இதற்கு இரண்டுநாள் பிறகு டால்னி துறைமுகத்தை வசப்படுத்திக்கொண்டனர். டால்னியிலின்று ஜப்பானிய சைனியம் லியோயங்குக்குச் செல்ல, அங்கே ருஷியச் சேனாதிபதி ஜெனரல் குரோபாட்கின் பலமான பிரயத்தினங்கள் செய்து தீர்மானமான சண்டை ஒன்றை எதிர்பார்த்திருந்தார்.

இப்படியிருக்க, ஜப்பானியர் தெற்கே போர்ட் ஆர்தர் துறைமுகத்தின் முற்றுகையைக் கடலினின்றும் கரையினின்றும் ஆரம்பித்தனர். துவக்கத்தில் ஜப்பானியக் கப்பல்கள் ருஷியக் கப்பல்களால் மிகுந்த சேதத்தை யடைந்தன வாகையால் அட்மிரல் டோகோ விலகி விட்டார். முற்றுகையைத் தரைப் படைகள் நடத்தின. அங்கு அடைக்கப்பட்டிருந்த ருஷியக் கப்பல்கள் அதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு வடக்கே ருஷியத் துறைமுகமாகிய விளாடிவாஸ்டாக்குக்குப்போகலாமென்று புறப்பட, அக்கப்பல்களை ஜப்பானியக் கப்பல்கள் பின் தொடர்ந்து நடு சமுத்திரத்தில் சண்டை செய்து சேதப்படுத்திவிட்டன. சில ருஷிய கப்பல்கள் போர்ட் ஆர்தருக்குத் திரும்பி ஓடி



விட்டன; சில முழுகவடிக்கப்பட்டன; சில பக்கத்திலிருந்த அன்னியத் துறைமுகங்களுக்குப் போய்த் தப்பித்துக்கொண்டன. ஜப்பானியருக்கு அதிக உயிர்ச்சேதம் நேரிட்டாலும் ஒரு கப்பல்கூட சேதமாகவில்லை.* போர்ட் ஆர்தரிலிருந்து புறப்பட்ட ருஷியக் கப்பல்களின் கதி இப்படியாக, விளாடிவாஸ்டாக்கிலிருந்து போர்ட் ஆர்தருக்குத் துணை செய்யப் புறப்பட்ட ருஷியக் கப்பல்களை ஜப்பானியக் கப்பற்படைத் தலைவர் அட்மிரல் காமிமுரா துரத்திச் சண்டை செய்து ஒரு கப்பலை அடியோடு முழுகவடித்தும் மற்றக் கப்பல்களை விளாடிவாஸ்டாக்குக்கு ஓடிப்போகும்படி செய்தும் சத்துருவுக்குப்பலமான நஷ்டத்தை உண்டு பண்ணினார். முழுகிப்போன கப்பலிலிருந்து 600-ருஷியரை ஜப்பானியர் தங்கள் கப்பலில் எற்றிவிட்டுப் பிழைக்கச் செய்தார்கள். இவர்கள் அநேகமாய் ஜப்பானியருடைய நெருப்பினால் பலமாய்க் காயம்பட்டிருந்தார்கள். விளாடிவாஸ்டாக்குக்குத் திரும்பிப்போன கப்பல்களில் ஒன்றும் பிறகு பிரயோஜனப்படாமலே போய்விட்டது.

இப்படி ஜப்பானியருக்குக் கடலில் சத்துருவில்லாமல் போனபடியால் லியோயங் சண்டையை விசேஷ ஊக்கத்துடன் நடத்தினார்கள். ஜெனரல் (1)ஓயாமாவும், அவருடன் (2)நோட்ஸு,(3) ஓகு,(4) குரோக்கி, ஆகிய ஜெனரல்களும் 2,40,000 சைனியங்களை நடத்தி 10-தினம்யுத்தம்செய்து ஜெனரல்குரோபாட்கின் நடத்தின 2-லக்ஷம் ருஷியரைத் தோற்கவடித்தார்கள். குரோ

பாட்கின் தம் சைனியத்தோடு தப்பிப் போய்விட்டாலும், அவர் பக்கத்தில் 20-ஆயிரம் ருஷியர்கள் மாண்டார்கள். அநேக விலை பெற்ற சொத்துக்களையும் இழந்தனர். ஜப்பானியருக்குச் சேதம் 17-ஆயிரம் ஆட்கள்.

லயோயங்கிலிருந்து ருஷியர் மூக்டனுக்குச் சென்றனர். அங்கே குரோபாட்கினுக்குப் புதிதாய்ச் சைனியங்களும் சாமான்களும் வந்திருந்தன. ருஷிய ராஜஸ்தலமாகிய செண்ட்பீடர்ஸ்பர்க்கிலிருந்து மூக்டனுக்கு ருஷியர் ஒரு ஒற்றைப்பாதை ரெயில் போட்டிருக்கிறார்கள். அந்த ரெயில் வழியாய் எவ்வளவு சைன்னியங்களும் சாமான்களும் அனுப்பலாமோ அவ்வளவு சைன்னியங்களும் சாமான்களும் அனுப்பப்பட்டன. குரோபாட்கின் தன்னாலான முயற்சி செய்து தெற்கே போர்ட் ஆர்தருக்கு உதவியாகச் செல்லவேண்டுமென்று தீர்மானித்து அங்கிருந்து புறப்பட, மூன்று நாள் பிரயாணத்துக்குப் பிறகு ஜப்பானியரை அக்டோபர் மீ 6உ எதிர்த்தார். 8-நாள் வெகு கடுமையான சண்டைநடந்து சுமார் 45-ஆயிரம் ருஷியர் சேதமாக மறுபடியும் குரோபாட்கின் மூக்டன் போய்ச் சேர்ந்தார். இந்தச் சண்டையில் ஜப்பானியருக்குச் சேதம் 15—ஆயிரம் ஆட்களுக்கு அதிகமில்லை.

போர்ட் ஆர்தர் துறைமுகத்தைச் சுமார் லக்ஷம் துருப்புகளுடன் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த; ஜெனரல் நோகி ஆகஸ்டு மாதம் அந்தப்பட்ட



ணத்தைத்தாக்கிக் கைப்பற்றலாமென்று முயல, வெகு சேதப்பட்டும் அது நிறைவேறாமல் முற்றுகை போட வாரம்பித்தார். 1904-ம் வருஷம் டிசம்பர் மாதம் வரையில் இந்த முற்றுகை நடந்தது. தற்காலம் யுத்த சாஸ்திரி வல்லோர் கண்டு பிடித்திருக்கும் சகல யந்திரோபாயங்களையும் இருகக்ஷியாரும் உபயோகித்து ஒருவரையொருவர் தாக்கிச் சேதப்படுத்தினார்கள். அடிக்கடி கைகலந்து சண்டையும்செய்தார்கள். சிறிது சிறிதாய் ஜப்பானியர் வெளிப்பக்கத்து அரண்களைக் கைப்பற்றிக் கொண்டு கடைசியில் ஒரு உன்னதமானஸ்தலத்தின் மேலேறி அங்கிருந்துகொண்டுமுற்றுகையை நடத்தினார்கள். அங்கிருந்து விடுத்த குண்டுகள் பட்டணத்தை நாலாபக்கத்திலும் சின்னபின்னப்படுத்தினது மன்றி துறைமுகத்திலிருந்த கப்பல்களையும் தாக்கிச் சேதப்படுத்தின. ருஷியப்படைத்தலைவரான ஜெனரல் ஸ்டோயெஸல் (Stoessel) வெகு பராக்கிரமவானானாலும், தம்மண்டையிலிருந்த மருந்து முதலிய சாமான்களும் உணவுப்பொருள்களும் குறைந்துபோய் விட்டபடியாலும், குரோபாட்கினிடமிருந்தாவது அல்லது வரும் வரும் என்று எதிர்பார்த்திருந்த ருஷிய பால்டிக் படையினாலாவது உதவி கிடைக்கப்போகிற தில்லையென்று நிச்சயமாகத் தோன்றினபடியாலும், சமாதானப்பேச்சு விட்டார். சமாதானம் முடிப்பதற்கு முன் ருஷியர் தங்கள் கப்பல்கள் ஜப்பானியர் கையில் அகப்படாதிருக்கும்பொருட்டு அவைகளை முழுகவடித்துவிட்டுச் சமாதானத்தை

முடித்தார்கள். 40-ஆயிரம் ருஷியர் ஜப்பானியருக்குச் சிறைப்பட்டனர். அளவற்ற சொத்துக்களும் வசமாயின.

இவ்வாறு போர்ட் ஆர்தரைக் கைப்பற்றிவிட்டு ஜெனரல் நோகி வடக்கே மூக்டனிலிருந்த மற்ற ஜப்பானிய சைனியங்களுடன் சேர்ந்துகொள்ளச் சென்றார். நோகியின் சைனியத்தையும் சேர்த்து அங்கே 5-லக்ஷம் ஜப்பானியப் போர்வீரிருந்தனர். ருஷியருக்கும் புது சைனியம் வந்து குரோபாட்கின் வசம் 4-லக்ஷம் போர்வீரர் இருந்தனர். ருஷியரைச் சர்வ பிரயத்தனமும் செய்து நசுக்கி யுத்தத்தை முடித்துவிட வேண்டுமென்பது ஜப்பானியரின் கருத்து. ஜெனரல் ஓயாமா முக்கிய சேனாபதியாகச் சண்டைக்குரிய உபாயங்களை முன்னதாகவே வகுத்து அந்தந்தச் சேனாபதிகளை அங்கங்குச் சண்டை நடத்தும்படி ஏற்படுத்தினார். ஜெனரல் குரோக்கியும் அட்மிரல் காமிமூராவும் மூக்டனுக்குக் கீழ்ப்பக்கமிருந்து சத்துருவைத் தாக்கவேண்டும். மேற்பக்கம் ஜெனரல் நோகி தமது பழுத்த போர்வீரர்களுடன் சத்துரு தப்பித் தோடாமல் காத்து நிற்கவேண்டும், மத்திய பாகத்தை ஜெனரல் நோட்ஸுவும் ஜெனரல் ஓகுவும் தாக்கவேண்டும். இப்படி அணிவகுத்த உபாயங்கள் நினைத்தபடி கைகூடுமானால் ருஷிய சைன்னியம் நசமாய் விடும் என்று ஜப்பானியத் தலைவர்கள் நம்பினார்கள். மூன்று வாரம் அல்லது 21-நாள் யுத்தம் நடந்தது. குண்டும் நெருப்பும் செய்த சேதங்களுடன் மழையும் குளிரும்



சேர்ந்து சேதங்கள் செய்தன. ருஷியர் வெகு பராக்கிரமத்துடன் சண்டை செய்தார்கள். ஆயினும், ஜப்பானியருக்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதறுண்டு வடபக்கமாய் ஓடினர். ஓடின ருஷியர்களைப் புதிதாய் வந்த ஒரு ருஷிய சேனாபதி சேர்த்து தங்களை விரட்டிக்கொண்டுவந்த ஜப்பானியரை எதிர்த்தான்; எதிர்த்தும் பயனில்லை. ஜயசீலர் கையில் 70-பெரிய பீரங்கிகளும் அளவற்ற மருந்து முதலிய சாமான்களும் அகப்பட்டன. ருஷியர் பக்கத்தில் 1,50,000 ஜனங்கள் சேதப்பட்டார்கள். ஜப்பானியர் பக்கத்தில் அதில் மூன்றில் ஒரு பாகத்துக்கு அதிகமில்லை.

---

### ஜப்பான் சமுத்திரத்தில் ருஷியப்படைத் தோல்வி

இப்படி மஞ்சூரியாவில் பிரமாதமான சண்டை நடந்துகொண்டிருக்க, ருஷியர் தம் கீழ்ச்சமுத்திரத்துக் கப்பற்படை அடைந்த தோல்விகளுக்குப் பரிகாரம் செய்யப்பால்ட்டிக்கடற்படை ஐரோப்பாவைச் சுற்றி வந்து, ஆசியாவையடுத்த சமுத்திரங்களைத் தாண்டி, ஜப்பான் கடலில் ஜப்பானியப்படைகளை வென்று, ருஷியரிழந்த நற்பெயரை மீண்டும் நாட்ட நோக்கமாய்ப் புறப்பட்டது. ருஷியரது இந்த நோக்கம் வீண்கனவென்று உலகத்தார் நினைத்தார்கள். அதற்குத் தக்கபடி ருஷியப்படையை நடத்தின அட்மிரல் ரோஜஸ்டுவென்ஸ்கி ஆரம்பத்திலேயே ஒரு பெரும் தப்பிதம் செய்தார். சிலதினம் யாத்திரை செய்து நார்த் ஸீ (North Sea) என்கிற கடலுக்கு வந்தபோது, அங்கு

மீன் பிடித்துக்கொண்டிருந்த சில பிரிட்டிஷ் படகுகளை ஜப்பானியச் சண்டைக் கப்பல்களென்று பயத்தால் நினைத்து அவைகளின்மீது சுட அந்தப் படகுகளுக்குச் சிறிது சேதம் நேரிட்டது. இந்தச் செய்தி பிரிட்டிஷ் தேசமெட்டினதும், பிரிட்டிஷ் மந்திரிகள் ருஷியக் கவர்ன்மெண்டைச் சமாதானம் கேட்டு 65-ஆயிரம் பவுன் நஷ்ட ஈடு வாங்கினார்கள். இந்தப் புத்தி மயக்கமான தப்பிதத்தால் அட்மிரல் ரோஜஸ்டுவென்ஸ்கியின் பெயர் கேலிக்கு இடமாயிற்று.

பல சமுத்திரங்களைத் தாண்டிக்கொண்டு ஜப்பானுக் கருகில் அதற்குப் போகும் வழியிலுள்ள கீழ்ச் சமுத்திரத்திற்கு வருகிறதற்குள்ளாக மேமீ அல்லது ஏழு மாதகாலமாய்விட்டது. 1905-ம் வருஷம் எப்ரல்மீ 8-தேதி சிங்கப்பூருக்கு வந்து அங்கிருந்து பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான இந்டோ சைனா (Indo-China) வைச்சேர்ந்த கேம்ரான்குடாவில் (Kamran Bay) சிலகாலம் அந்த ருஷியப்படை தங்கிற்று. பிராஞ்சியர் நடுநிலைமையில் இருக்கவேண்டியவர்களானபடியால் ருஷியக் கப்பல்களுக்கு இடம் கொடுத்தது பிசகென்று ஜப்பானியர் முறையிட்டார்கள். முறையிட்டும் ருஷியர் அங்கேயே தங்கியிருந்து பின்னால் வந்துகொண்டிருந்த மற்றொரு கடற்படை ரோஜஸ்டுவென்ஸ்கியைக் கலந்துகொண்டதும், அவர் முன்னோக்கிப் புறப்பட்டார். ஜப்பானை அணுகாமல் பசிபிக் சமுத்திரத்தின் வழியாய்ச் சென்று விளாடிவாஸ்டாக்குக்குப் போய்விடலாமா, அல்லது கொரியாக் கடலில்



புகுந்து அங்குக் காத்துக்கொண்டிருந்த ஜப்பானியப் படையை எதிர்த்து ஒரே சண்டையில் தோல்வியோ வெற்றியோ அடைந்து யுத்தத்தை முடித்துவிடலாமா வென்று இரண்டுவிதமாய் யோசனை செய்தார். என்ன செய்வாரோவென்று உலகத்தார் ஆவலுடன் நோக்கியிருந்தனர். ரோஜஸ்டுவென்ஸ்கி கொரியாக் கடலில் புகுந்து சண்டைசெய்து பார்ப்பதே சரியென்று தீர்மானித்து அந்த முகமாகவே சென்றனர்.

சண்டையில் எதிர்த்து நின்ற இரண்டு படைகளில் ருஷியர் பக்கத்தில் 6-பெரும் கப்பல்கள் புதியனவாயிருந்தன. ஜப்பானியர் பக்கத்தில் 4-கப்பல்கள் தானிருந்தன. ஆயினும், மற்ற உதவிக் கப்பல்கள் விஷயத்தில் ஜப்பானியரே மேலாயிருந்தனர். ஆயினும், கப்பல்கள் எவ்வாறாயின் என்ன? யுத்த வீரர்களின் சாமார்த்தியத்தைப் பற்றினதன்றோ, சண்டையில் தோல்வியும் வெற்றியும்? ருஷிய வீரர் அதுவரையில் கடற்சண்டையில் சண்டைசெய்து வழக்கப்பட்டவர்களல்ல. ஜப்பானிய வீரரோ பலசண்டைகள் செய்து பழுத்துப் போனவர்கள்; படைகளை நடத்தின தலைவர்களில் ரோஜஸ்டுவென்ஸ்கியின் சாமர்த்தியம் நார்த் ஸீ தடுமாற்றத்தால் வெளியாயிற்று. ஜப்பானியத் தலைவரான அட்மிரல் டோகோ என்றாலோ, சரித்திரம் தோன்றின காலம் முதல் சப்த சமுத்திரங்களுள் எதிலும் யுத்தம் நடத்தின வீரர் எவரானாலும் அவருக்கு நிகரெனக் கூடியவர் அல்ல.

1905-ம் ௵ மேமாதம் 27-தேதி ஜப்பானிய

சரித்திரத்தில் மகா முக்கியமான தினமாயிற்று. அன்று காலை 5-மணிக்கு ருஷியப் படைகள் ஈஸ்டுசானலை (East Channel) நோக்கி, ட்ஸுஷிமாத் தீவுக்கும் ஜப்பானுக்கும் மத்தியில் போய்க் கொண்டிருப்பதாகச் சேதி வந்தது. சிலகாலமாய் மசாம்போ (Masampo) என்ற துறைமுகத்தில் உலகத்தாருக்குத் தம்மைப் பற்றி எதுவும் தெரியாதவண்ணம் மறைந்திருந்த அட்மிரல் டோகோ அந்தச் செய்தியைக் கேட்டவுடனே புறப்பட்டு வடபக்கமாய் ருஷியப் படையைத் தாண்டிச் செல்லும்படி புறப்பட்டார். அட்மிரல் காமிமூரா, யுரியூ, தேவா, காடாவோகா, இந்நால்வரும் தென்கிழக்குப் பக்கமாய் ருஷியப்படையின் பின்பக்கத்தை வளைத்துக்கொண்டு சென்றனர். பகல் 1½-மணிக்கு டோகோவுக்குப் பின்பக்கத்தில் சூரியன் பிரகாசிக்கவும் காற்று வீசவும் அவர் ருஷிய பீரங்கிப் படையாளிகளுக்கு முன் தோன்றினர். எதிர்பார்த்திருந்த சமயம் வந்துவிட்டது. சண்டை தொடங்குவதற்கு முன்னாக அட்மிரல் டோகோவினுடைய துவஜம் நாட்டப்பட்டிருந்த கப்பலில் பின்வரும் வார்த்தைகள் படைவீரர் கண்ணில் தோன்றிப் பிரகாசித்தன:—

"(ஜப்பானிய) ஏகாதிபத்தியத்தின் கதி இந்தச் சண்டையைப் பொருத்தது. ஒவ்வொருவனும் தன் சக்தி கொண்டமட்டில் செய்யக்கடவன்."

இந்தவார்த்தைகளைக் கண்ட ஜப்பானிய வீரர்கள் மனதில் உற்சாகம் ஜனித்துப்பொங்க, அந்தக்ஷணமே சண்டையாரம்பித்தது. சில நிமிஷங்களுக்குள் இரண்டு



படைகளுக்கும் வித்தியாசம் ஸ்பஷ்டமாயிற்று. ருஷியருடைய கப்பல்கள் ஒவ்வொன்றும் சுட்டுச் சேதப்படுத்தப்பட்டும் கவிழ்க்கப்பட்டும் போயின. அநேக கப்பல்கள் எரியத்தலைப்பட்டன. முக்கால்மணி நேரத்துக்குள் சண்டையின் முடிவு தெரிந்து போயிற்று. 3-மணிக்கு ருஷியக் கப்பல் ஒஸ்லாப்யா (Oslabya) என்பது முழுகிற்று. 4¾-மணிக்கு மற்றொரு கப்பல் கினியாஸ் சுவாராப் (Kiniaz Suvaroff) என்பது அதே கதியாயிற்று. ஒருகப்பல் முழுகுவதென்றால் அதனுடைய விலை 10-லக்ஷக் கணக்காய் நஷ்டப்படுவது மல்லாமல் அதிலுள்ள பீரங்கி முதலிய யுத்த தளவாடங்களும் ஆயிரக்கணக்கான போர் வீரர்களும் அவர்களுக்கு வேண்டிய ஆகாராதி வஸ்துக்களும் நஷ்டம் என்பதை அறிக. மாலைப் பொழுதுக்குள் ருஷியப் படையில் பெரும்பாலும் அழிந்து போயிற்று. காலையில் 4-கப்பல்கள் மிகுந்திருக்க, அவைகளையும் ஜப்பானியர் சுற்றிக்கொண்டதால் அவர்களுக்கு அவைகள் வசமாயின. அட்மிரல் ரோஜஸ்டுவென்ஸ்கியின் கப்பல் முழுகிப் போகும் தருணத்தில் அவர் அதை விட்டு மிகுந்த காயத்துடன் ஒருசிறுகப்பலில் தப்பிக்கொண்டார். அதுவும் பிடிபடவே அவரை ஜப்பானியர் சிறைப்படுத்தினர்கள். கடைசியில் ஒரே காவற்கப்பலும் மூன்று அழிக்குங் கப்பலும் விளாடிவாஸ்டாக்குக்குப் போய்ச்சேர்ந்தன. இரண்டு கப்பல்கள் ஷாங்காய்க்குப் போய் தப்பிக் கொண்டன. 3-காவற்கப்பல்கள் மனிலாக்குடாவில் அடைக்கலம் பெற்றன. மற்றவைகளில் முழுகிப்போன

வைகள் போகப் பாக்கி அனைத்தும் ஜப்பானியருக்கு வசப்பட்டன. 7000-ருஷ்யர் ஜப்பானியர் வசம் சிறையாயினர். இன்னும் எத்தனையாயிரம் பேரோ சண்டையில் மாண்டவர்போகக் கடலில் கப்பலுடன் முழுகிப்போயினர். ஜப்பானியர் பக்கத்தில் சேதமெல்லாம் *3-டார்ப்பெடோ படகுகளும் 116-வீரரும் சேதமானதுடன் 538 வீரர் காயம்பட்டனர். இந்த வெற்றியுடன் ருஷிய ஜப்பானிய யுத்தம் முடிந்தது. அநேக அமிசங்களில் 20-ம் நூற்றாண்டில் முதல் யுத்தமாக நடந்த இந்த மகாயுத்தம் நிகரற்ற பிரதானியம் கொண்டதாயிருந்தது. அது ஜப்பானின் வன்மையைப் பிரகாசிக்கச் செய்ததுமன்றி, ருஷியாவின் தன்னரசால் அது உண்மையில் எவ்வளவு பலஹீனம் கொண்டதென்றும் காட்டிற்று.

---

## சமாதானப் பேச்சுகள்

மூக்டன் சண்டைக்குப் பிறகும் கொரியா ஜலசந்தியில் நடந்த கடற்சண்டைக்குப் பிறகும் ஜப்பானுடைய நிலைமையும் ருஷியாவினுடைய நிலைமையும் முறையே இன்னவிதமாயிருந்ததென்று இப்போது நாம் கவனிப்போம். ஜப்பானியர் யுத்தம் ஆரம்பித்தது முதல் வெற்றிகளை ஒன்றன்பின் ஒன்றாய்ப் பெற்று அவர்களுடைய கீர்த்தி உலகமெங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது. ருஷியாவோ தனது பெயரையும்

* டார்ப்பெடோ படகென்பது கடலில் அமிழ்ந்திருந்து சத்துருவின் கப்பல் தெரியாமல் அதன்மேல் பம்போது இடியென்று வெடித்துச் சத்துருக்கப்பலை நாசப்படுத்துவது.



சைன்னியங்களையுமிழந்து மனத்தளர்ச்சி கொண்டிருந்தது. அது நம்பியிருந்த கடற்படை பாழாகிவிட்டது. ஆனால், குரோபாட்கினுக்குப் பின் வந்த சேனாபதி புதிதான சைனியங்களைத் தருவித்து யுத்தத்தை நீட்டிக்கொண்டு போயிருக்கக்கூடும். சக்கிரவர்த்தியின் மந்திரிகள் அப்படியே தீர்மானிக்கவும் கூடும். ஆனால், ஆரம்பத்திலிருந்த தைரியமும் நம்பிக்கையும் இப்போதில்லை. ஆழந்தெரியாமல் காலிட்டுக்கொண்டோமென்ற எண்ணம் ருஷியர் மனதில் போராடத் தொடங்கிற்று. யுத்தத்தின் பருமனையும் விளைவுகளையும் இப்போது அறியத்தலைப்பட்டார்கள். தம் பெயருக்குக் கேடில்லாமல் யுத்தத்தை முடிக்கக் கூடுமானால் ஸார் சக்கிரவர்த்தி அப்படிச்செய்ய இணங்குவாரென்று நம்ப இடமுண்டாயிற்று. ஜப்பானியரும் இந்தப்பிரமாதமான யுத்தத்தில் லட்சக்கணக்கான சைனியங்களைத் திரட்டநேரிட்டு ஆயிரக்கணக்கான உயிர்களையும் மாய்த்துக் கொண்டனர். அளவற்ற செல்வமும் செலவாகி விட்டது. கொரியாவை முற்றிலும் ஜப்பான் வசப்படுத்திக் கொண்டு அதில் நீள ஒரு ரயில் பாதை போட்டிருந்தபடியால், அந்த ரயில்பாதைவழியாய் ஜப்பானியர் சைனியம் மஞ்சூரியாவில் வந்திறங்கி மேன்மேலும் யுத்தத்தைப் பெருக்கக்கூடும். ஆயினும், இதுவரையில் யுத்தம் நடந்த இடமெல்லாம் ஜப்பானியர் சுலபமாய் எட்டக்கூடிய தூரத்தில் இருந்தது. மூக்டனைக் கடந்து செல்லும்பட்சத்தில் இந்த வசதி நின்று போய் வடபக்கம் எவ்வளவு தூரம் ஒத்திச் செல்லுகிறார்களோ

அவ்வளவு தூரம் சைனியங்களையும் அவைகளுக்கு வேண்டிய தளவாடங்களையும் தருவித்தல் கஷ்டமாய் முடியும். ஒருக்கால் தோல்வி நேரிடும்பட்சத்தில் தோல்வியடைந்த சைனியம் ஜப்பான் திரும்பிச் சேர்வதற்குள் அழிந்தே போகக்கூடும்! கணக்கில்லாத சைனியமும் அளவில்லாத பணமும் ஜப்பானுக்கு எப்படிக் கிடைத்துக்கொண்டிருக்கும்! இந்த நிலைமையில் ஜப்பான் யுத்தத்தைப் பொருத்தமான சமயத்தில் முடிப்பதே சரியென்று சிலர் மனதில் எண்ணம் உண்டாயிற்று.

இப்படியிருக்கும் தருணத்தில், அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ராஜாங்கத் தலைவரான பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஐரோப்பிய வல்லரசரோடு ஆலோசனை செய்துகொண்டு ருஷியச் சக்கிரவர்த்தியுடன் சமாதானப் பிரேரணைகள் செய்தார். ருஷியா ஜப்பான் இருதேசங்களுக்கும் போரை முடிப்பதில் அந்தரங்கத்தில் சம்மதமாயினும் வெளியில் பரபரப்பு காட்டாமலிருந்தன. ருஷியாவில் அச்சமயத்தில் தோன்றின பல சங்கடங்களால் சமாதானம் செய்வதே விரும்பத்தக்கதாகப் புலப்பட்டது. சைனியங்களுக்குள் திருப்தியாவது உத்சாகமாவது இல்லை. ஜனங்களும் ஸார் சக்கிரவர்த்தியின் கொடுங்கோன்மையால் துன்புற்றவர்களாய் ராஜாங்கமுறையில் பல திருத்தங்களை வேண்டிக் கலக்கங்கள் செய்தார்கள். ஜப்பானின் வெற்றி, ஜனங்களும் சக்கிரவர்த்தியும் தேசாபிமானமாகிய ஒரே உணர்ச்சியால் கட்டுப்பட்டுப் பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் கொண்டு போர் நடத்தியதா



லுற்றதென்று ருஷியர் அறியத் தலைப்பட்டார்கள். ருஷியச் சக்கிரவர்த்தியும் அதை ஒருவாறு உணர்ந்து ஜனங்களின் விருப்பங்களுக்கு இணங்கும் நோக்கங் கொண்டவராகக் காட்டிக்கொண்டனர்.

ஜப்பானியரும் எந்த நோக்கத்தின் பொருட்டு யுத்தம் ஆரம்பித்தனரோ. அந்த நோக்கம் நிறைவேறிப்போயிற்று. கொரியாவைக் கைவசப்படுத்திக்கொண்டு மஞ்சூரியாவைவிட்டு ருஷியரைத் துரத்திவிட்டார்கள். இனி வீண் பெருமைக்காகவும், போர்ச் செலவுக்கு ஈடுபெறலாமென்ற ஆசைக்காகவும் யுத்தத்தை நடத்திக்கொண்டு போவது ஜப்பானியரின் இயல்புக்கு உற்றதல்ல. யுத்தத்தை முடித்துச் சமாதானத்தை ஸ்தாபித்துப் பிறகு தங்கள் தேசத்தில் செய்யவேண்டிய காரியங்கள் அநேகம் இருந்தன. புதிதாய்க் கிடைத்த பிரதேசங்களில் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெற பல வழிகளில் முயற்சிகள் அவசியம். ருஷியாவைப் போல் கண்ணை மூடிக்கொண்டு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் செய்துகொண்டு போகும்படியான நிலைமையில் ஜப்பான் இல்லை. அமைதியுற்ற காலத்தில செய்யக்கூடிய முயற்சிகளாலேயே அது முன்னுக்கு வரக்கூடியதேயன்றி யுத்தத்தில் பெறக்கூடிய பெருமையால் அது முன்னுக்கு வரக்கூடியதல்ல. இவைகளையெல்லாம் மனதிற்கொண்டு ஜப்பானிய ராஜதந்திரிகள் சமாதானத்தை விரும்பினவர்களாகவே இருந்தார்கள். ஆயினும், இரு கட்சியாரும் வெளிக்குப்

போர் நடத்த சித்தமாயிருப்பவர்கள்போலவே நடத்தையிலும் பேச்சிலும் காட்டிக் கொண்டார்கள்.

---

## சமாதான முடிவு

ருஷியா பேசின பேச்சுகளால் சமாதானம் முடிவது அசாத்தியமென்றே எல்லாராலும் நினைக்கப்பட்டது. தோற்றுப்போன தேசம் வெற்றிபெற்ற தேசத்தைப் போலத் தனக்குச் சாதகமான நிபந்தனைகளுடன் சமாதானம் செய்துகொள்ளவிரும்பினால், அது எப்படிச் சாத்தியமாகும்? ருஷியா அப்படியே பேசிக்கொண்டு வந்தது. ஒரு பைசாவேனும் ஜப்பானுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதில்லை யென்றும், தனது பூர்வீக பூமிகளில் ஒரு அடியேனும் இழப்பதில்லை யென்றும், தற்காலம் தோல்வி யடைந்தாலும், எத்தனை வருஷமானாலும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தச் சித்தமாயிருப்பதாகவும் சொல்லிக்கொண்டு வந்தது ஆரம்பத்தில் வீண் டம்பப் பேச்சென்று உலகத்தார் நினைத்தார்கள். ஆயினும், வரவர ருஷியாவுக்கு இந்த மூர்க்க எண்ணம் வாஸ்தவமாயிருப்பதாகத் தெரிந்து சமாதானம் முடியாதென்று அச்சம் உண்டாகி வந்தது. ஜப்பான் கேட்ட நிபந்தனைகள் கடுமையானவைகளா யில்லையாயினும், முழுதிலும் வெற்றியையே பெற்று வந்த கட்சியார் நியாயமாகக் கேட்கக்கூடிய நிபந்தனைகளையே அது கேட்டதாயினும், எவ்வளவு தூரம் ருஷியாவுக்கு விட்டுக் கொடுக்கக் கூடுமோ அவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்தே வந்தது.



ஜப்பான் வணங்க வணங்க, ருஷியா உயரக்கிளம்பிக் கொண்டு போயிற்று. மிஸ்டர் ரூஸ்வெல்ட் வெகு கவலைப்பட்டுப் போனார். சமாதானம் உண்டாக வேண்டுமென்று கோரியிருந்த இங்கிலண்டு போன்ற தேசங்களிலும் பெருங்கவலை யுண்டாயிற்று. ஜப்பானியருக்கு ஆத்திரமுண்டாகி, நஷ்ட ஈடு விஷயத்தில் விட்டுக் கொடுத்தல் அசாத்தியமென்றே சொல்லி வந்தார்கள். அப்படியிருக்கையில், திடீரென்று ஜப்பான் சக்கிரவர்த்தியும் அவருடைய மந்திரிகளும் தீர்க்காலோசனை செய்து, நஷ்ட ஈடு கேட்பதை நிறுத்தும்படியாயும், வேறு இரண்டொரு நிபந்தனைகளை வற்புறுத்தாமல் விட்டுவிடும்படியாயும் போர்ட்ஸ்மத்தில் தங்கள் ஸ்தானிகருக்கு உத்தரவனுப்பினார்கள். ஜப்பானது பெருந்தன்மையை ஐரோப்பியரும் அமெரிக்கரும் புகழ்ந்து பேசினார்கள். அதன் மற்ற மேலான குணங்களையும் எடுத்துப் புகழ்ந்தனர். ஜப்பானுக்குத் தன்னலம் பற்றின பெரும் உத்தேசங்கள் மனதில் இருந்ததினால் இப்படி நஷ்டப்பட்டாவது சமாதானம் செய்ய முடிவு செய்தது. அப்படிச் செய்யாவிட்டால், ஏராளமான பணத்தைக் கடன் வாங்கிச் செலவுசெய்து ஜனங்களின் தலையில் தாங்க முடியாத பளுவைச் சுமத்துவது மன்றி, தேசத்தில் அவசியமாகவும் வெகு லாபகரமாகவும் செய்யவேண்டிய திருத்தங்கள் செய்யப்படாமல் தடைபட்டுப்போகும். தற்காலம் ஜப்பான் மகோன்னத தசையிலிருந்த போதிலும், சென்ற 50-வருஷ காலமாகத் தான் புதுநாகரீகத்

துறைகளில் இறங்கி ஆட்சி நடத்தி வருகின்றது. அதன் வியாபாரம், கைத்தொழில், ஜனங்களது கல்வியபிவிர்த்தி, ஆகிய முக்கியமான விஷயங்களை இன்னும் நீண்டகாலம் கவலையுடன் கவனிக்கவேண்டிய நிலைமையிலிருந்தது. கொரியா அதற்கிப்போது சுவாதீனமாகிவிட்டது. சைனுவுக்கும் இதுவரையில் ஐரோப்பியரது பேராசையால் நேரிட்டிருந்த அபாயங்களும் இந்த யுத்தத்தால் நீங்கின. சமாதானம் குடிகொண்டு யுத்தக் கவலையற்று வெகுகாலம் முன் முயற்சிகள் செய்தால் மட்டும் மேலே சொன்ன பெருங்கடமை நிறைவேறும். இப்படி நிறைவேறும் எண்ணத்துடனும், தான் தனக்குள்ளேயே செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்து முடிக்கும் எண்ணத்துடனுமே, தற்காலம் சிறிது நஷ்டம் நேரிட்டாலும், சமாதானம் செய்ய நிச்சயித்தது. இந்த நிலைமையில், சமாதானத்தைப் பற்றின ஆலோசனை ஆகஸ்டுமாசம் 9-ம் தேதி ஆரம்பித்தது. முதல் எடுப்பிலேயே, ருஷியப் பிரதிநிதிகள் ஜப்பானுக்கு ருஷியா நஷ்டஈடு கொடுப்பதையும் தனக்குச் சொந்தமான பிரதேசம் எதையும் கொடுப்பதையும் பற்றின பேச்சுக்குச் செவிகொடுக்க மறுத்தார்கள். உண்மையில், இவ்விரண்டையும் பெறவேணுமென்ற எண்ணம் ஜப்பான் சக்கிரவர்த்தி மனதிலாவது மூத்த மந்திரிகள் மனதிலாவது இல்லை, பாரன் காமுராவுக்கும் இந்தமாதிரிக் கட்டளைகள் கொடுக்கப்பட்டுமில்லை. மஞ்சூரியாவில் ஜப்பான் சாத்தியமான வியாபார வசதிகள் பெறுவதும், கொரியாவில் பூரணமான



மேலதிகாரமும், ஜப்பானடுத்த கடலில் மற்ற ஜாதியாருக்கு உண்டான பாத்தியங்கள் ஜப்பானுக்குக் கிடைப்பதுமே, முக்கிய நோக்கங்களாகக் கொள்ளப்பட்டன. இவைகளில் கொரியாவில் கேட்டதை ருஷியப் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டார்கள். லியோடங் தீபகர்ப்பத்தை ருஷியா குத்தகை வாங்கியிருந்தது ஜப்பானுக்கு மாற்றப்படவும், சாங்சனுக்குத் தென் பக்கத்திலுள்ள கீழ்ச் சைனு ரெயில்வேயையும் அவ்வாறே மாற்றவும், ஸைபீரியன் கடற்கரையில் மீன்பிடிக்க ஜப்பானுக்குச் சுதந்திரம் கொடுக்கவும் ஒப்புக்கொண்டார்கள். சீனுவைச் சேர்ந்த ஸ்தலங்களில் ருஷியா செய்திருந்த ஆக்கிரமங்களை இழக்கவும் யுத்தத்தில் ஜப்பான் தன் வெற்றிகளால் பெற்றவைகளைக் கொடுத்துவிடவும் ருஷியா கொடுக்கச்சம்மதித்தாலும், மேற்சொன்ன இரண்டு விஷயங்களைப்பற்றிக் கடைசிவரையில் பிடிவாதம் காட்டிற்று. சகேலியன் தீவு முழுவதையும் கொடுத்துவிடவாவது, இரண்டு தேசங்களையும் சேராமல் மற்றத் தேசங்களைச் சேர்ந்த துறைமுகங்களில் முழுகிக்கிடந்த ருஷியப் போர்க்கப்பல்களை இழந்துவிடவாவது, கீழ்த்திசையில் ருஷியாவின் போர்க்கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைக்கவாவது கண்டிப்பாய் மறுத்தது. இவ்வாறு ருஷியா ஜப்பானுக்குப் பிடிகொடுக்காமல் ஒரேபிடியா யிருந்ததைப்பார்த்துச் சமாதானப் பேச்சுகள் முடிவில் நிறைவேறாமற் போகுமோ வென்று பயந்தவர்களுண்டு. ஆயினும், அந்தச் சமயத்தில் இங்கிலாந்துடன் ஏற்கனவே 1902-ம்

ஆண்டில் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கையானது புதுப்பிக்கப்பட்டுப் போய் மஞ்சூரியாவில் ஜப்பானுக்கு நிலையான ஸ்தானமும் கிடைத்துப்போனபடியால் மூத்தமந்திரிகள் இனிப் பேச்சை வளர்த்துக் கொண்டு போவதில் பயனில்லையென்று நினைத்தார்கள். அவ்வாறே ஆகஸ்டுமாதம் 28-ம் தேதி பாரன் காமுராவுக்கு ஒரு நீண்ட தந்தி அனுப்பித்தார்கள். அதில் நஷ்ட ஈடு கேட்பதை நிறுத்திவிடவும் சகேலியன் தீவின் வடபாகத்தை ருஷியாவுக்குக் கொடுத்துவிடவும் ஒப்புக்கொள்ள அவருக்கு உத்திரவு செய்யப்பட்டது.

இவ்வாறு சமாதானம் முடிவு பெற்றது. அதை இரண்டு சக்கிரவர்த்திகளும் உறுதிப்படுத்துமுன் அரைகுறையான செய்திகள் பத்திரிகைகளில் தோன்றின; தந்திகள் மூலமாய் டோக்கியோவுக்கு எட்டவே ஜப்பானியர் மனதில் பெரும் கொதிப்புண்டாயிற்று. தங்கள் தேசத்திற்கு வெற்றிகளால் கிடைத்த சாதகங்களை மந்திரிகள் மனத்தளர்ச்சியால் இழந்துவிட்டனரென்றும், ஜப்பானின் பெருமையும் கவுரவமும்போய்விட்டனவென்றும், சமாதான நிபந்தனைகளைச் சக்கிரவர்த்தி ஒப்புக்கொள்ளக்கூடாதென்றும் டோகியோ ஜனங்கள் மிகுந்த ஆத்திரங்கொண்டு கலகம் செய்தார்கள். மற்ற இடங்களிலும் கலகங்கள் நேர்ந்தன. சக்கிரவர்த்திக்குப் பலவிடங்களிலிருந்து பல விண்ணப்பங்கள் செய்யப்பட்டன. இப்படி ஜனங்கள் மனம் கோபத்தால் பொங்கிக் கொண்டிருந்தபோதிலும், மந்



திரிகள் சமாதர்ன நிபந்தனைகளை ஏற்று உறுதி செய்யும்படி சக்கிரவர்த்திக்கு ஆலோசனை சொன்னார்கள். இப்படியிருந்த சமயத்தில் இங்கிலாந்தோடு புதிதாய்ச் செய்யப்பட்ட உடன்படிக்கை பிரசுரம் செய்யப்பட்டது. அதினால் ஜனங்களுக்குச் சற்று ஆத்திரம் அடங்க, ருஷியாவுடன் செய்த சமாதான நிபந்தனைகள் முழுதும் வெளிவந்தபோது அவைகள் ஜனங்கள் ஆதியில் நினைத்தபடி அவ்வளவு கேடுள்ளவைகளாய் இல்லையென்று கண்டுகொள்ள, அதனாலும் ஆத்திரம் குறைந்தது. பிரிட்டிஷ் கீழ்க்கடற் படைகளுக்குத் தலைவரான அட்மிரல் நோயல், கோப் (Kobe), யோகஹாமா, ஆகிய துறைமுகங்களுக்குப்போக, அவரை ஜப்பானியக் கடற்படை அதிகாரிகள் வரவேற்றுப் பெரும் ஆரவாரத்துடன் சகோதரபாவம் கொண்டாடினார்கள். ஜப்பானியப் போர்வீரர்கள் கடலிலும் தரையிலும் காட்டின சௌரியத்தையும் தேசபக்தியையும் புகழ்ந்து சக்கிரவர்த்தி ஒரு பத்திரம் பிரசுரம் செய்தார். ஜப்பானியரின் வெற்றி பூர்த்தி பெறுதற்குக் காரணமாயிருந்த அட்மிரல் டோகோவும் அவருடைய ஆபீஸர்களும் வெகு ஆடம்பரத்துடன் டோகியோவில் ஊர்வலம் வந்ததையும் அக்டோபர் 22-23-ம் தேதிகளில் கடற்படை வரிசையாய் அணிவகுக்கப் பட்டிருந்த காட்சியையும் பார்த்த ஜனங்கள் திருப்தியடைந்து, தங்கள் தேசத்தினது பெருமையும் கவுரவமும் குறைந்து போகவில்லை என்றும் பிற்காலம் உலகத்து வல்லரசுகளுள் அதன் ஸ்தானம் சிறப்புற்று விளங்குமென்

னும் நம்பிக்கை கொண்டார்கள். போர்ட்ஸ்மத்தில் சமாதானத்தை முடித்து வைத்த பாரன் காமுராவுக்குச் சக்கிரவர்த்தி தம் சந்நிதானத்துக்கு வரவழைத்துப் பேட்டி கொடுத்து அவர்மீது பலவிதமான சன்மானங்களைச் சுமத்தினார். உடனே அவரைச் சீனாவுக்கு அனுப்பிச் சமாதான நிபந்தனைகளின்படி அங்கு ராஜாங்கத்தாரோடு செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆக்கியாபித்தார். நவம்பர் 5-ம் தேதி, பிதுர்க்களுடைய ஆராதனை ஸ்தலத்தில் தேசமடைந்த வெற்றிகளுக்காகப் பிரார்த்தனைகள் நிறைவேற்றப்பட்டன. சில தினங்களுக்குப் பிறகு, ஐசே என்ற ஸ்தலத்திலுள்ள ஆலயத்தில் தமது பிதுர்க்களுக்குத் தாம் பெற்ற வெற்றியைக் கிரமப்படி அறிவித்தார். மார்ஷல் ஓயாமாவும் அவர்கீழுள்ள படைத்தலைவர்களும் அவ்வாறே குரோக்கியும் அவர் கீழுள்ள படைத்தலைவர்களும் வெவ்வேறு தினங்களில் சக்கிரவர்த்தியால் வரவேற்கப்பட்டுச் சன்மானங்கள் பெற்றார்கள். டிசம்பர் மாசம் 21-ம்தேதி மார்க்விஸ் ஐட்டோ கொரியாவில் ரெஸிடெண்டு ஜெனரலாக நியமனம் பெற்றுச் சென்றார். அதே மாசம் 28-ம்தேதி ஐப்பானியப் பார்லிமெண்டின் 22-வது கூட்டம் ஆரம்பித்தது. இவ்வாறு யுத்தம் ஓய்ந்து கலகங்களும் அமர்ந்து ஜனங்கள் மனதில் திருப்தியும் அமைதியும் எப்போதும் போல் நிலைபெற, அவ்வருஷம் முடிந்தது.

# CHAPTER V

# ஐந்தாவது அதிகாரம்

## ஐப்பானின் ராஜீய அமைப்பு

புறநாட்டு அரசமைப்புகளை ஆராய்ந்து ஐப்பானியர் தம் நாட்டுக்கு உற்றதை ஏற்று அமைத்துக் கொண்டது— அரசமைப்பில் சக்கிரவர்த்திக்கு அதிகாரம்—சக்கிரவர்த்தியும் ஆர்டினன்ஸுகளும்—பிரின்ஸ் ஐட்டோவும் பார்லிமெண்ட் விதிகளும்—ஐப்பானியப் பார்லிமெண்டும் அதன் அங்கத்தினர்களும்—பார்லிமெண்டின் அதிகாரம்.

ஐப்பான் தேசத்து ராஜாங்கம் பழய காலத்து மாதிரியாய் நடத்தப்பட்டது நின்று, தற்காலத்து மேற்றிசை மாதிரியாய் நடத்தப்படத் தொடங்கின போது, அத்தேசத்து ராஜதந்திரிகள் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலுமுள்ள ராஜீய அமைப்பு மாதிரிகளைப் பரிசோதித்து, உற்ற அம்சங்களை ஏற்று, தங்கள் தேசத்துக்குப் புதிதாய் ராஜீய அமைப்பு செய்துகொண்டார்கள். பிரதிநிதிகளின்படி ராஜாங்கம் நடத்தும் முறை இங்கிலாந்தில் ஆதியில் பிறக்க, மற்றத் தேசத்தார் அதைப்பார்த்துப் பார்லிமெண்டு ஸ்தாபனங்கள் செய்துகொண்டார்களானாலும், இங்கிலாந்தினுடைய மாதிரியானது ஐப்பானுக்குற்றதாய்த் தோன்றாமல் ஐப்பானிய ராஜதந்திரிகள், சில அம்சங்களில் பிரான்சு தேசத்தைப்போலவும், சில அம்சங்க

ளில் ஜெர்மனி தேசத்தைப்போலவும் தங்கள் தேசத்தில் பிரதிநிதி துரைத்தன முறையை ஸ்தாபித்தார்கள். சக்கிரவர்த்தி தம் விருப்பப்படிச் சட்டங்கள் செய்வதும், வரிகள் விதிப்பதும், செலவுகள் செய்வதும், மற்றப்படி ஜனங்களுடைய நன்மை தீமைகளுக்கு வேண்டியவைகளைப் பிரேரிப்பதும், தற்காலத்துக்குப் பொருந்திய முறையல்லவென்று நிச்சயித்தாலும், ஜப்பானிய தேசாபிமானிகள் பிரிட்டிஷ் தேசத்திலுள்ளதுபோல் பார்லிமெண்டு சபைகளுக்கே சகல அதிகாரத்தையுங் கொடுத்துச் சக்கிரவர்த்தியின் அதிகாரத்தையும் பெருமையையும் குறைப்பது சரியல்லவென்று நினைத்தார்கள். ராஜாங்கத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அதிகாரமும் சக்கிரவர்த்தியையும் அவருடைய மந்திரிகளையும் சேர்ந்தன. பார்லிமெண்டு சபையானது சக்கிரவர்த்தியின் உத்தரவின்பேரில் வரிகள் விதிக்கவும் சட்டங்கள் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. மேற்றிசை நாடுகள் சிலவற்றில் பார்லிமெண்டானது அதற்குள்ள அதிகாரத்தைக்கொண்டு நிர்வாகக் கவர்ன்மெண்டைச் சுவாதீனமற்றதாய் பலக்குறைவுறச்செய்துவிடுகிறது; சில சமயங்களில் ராஜாங்க அதிகாரத்துக்குத் தலைப்பு, நிர்வாக கவர்ன்மெண்டா பார்லிமெண்டா வென்ற சந்தேகமுண்டாகி, நிர்வாகம் குழப்பமுற்றுப் போகின்றது. கக்ஷிப் பிரதிகக்ஷிகளால் ஜனங்களின் தேசாபிமானமும் சக்தியும் பிரிவுபட்டுத் தேசத்தின் க்ஷேமத்துக்கு ஒருங்கே பயன்படாமற் போகின்றன. இப்படி நேரிடாமல் ஜப்பானிய ராஜ-



தந்திரிகள் நிர்வாக அதிகாரத்தின் தலைப்பைச் சக்கிரவர்த்தியினிடத்திலேயேநிறுத்தி ஜனங்கள் கக்ஷிப்பிரதிகக்ஷிகளைச் சார்ந்து நிர்வாகத்தைப் பலவீனப்படுத்தாமல் சக்கிரவர்த்தியையே தங்கள் நன்மைக்கு எதிர்பார்த்திருக்கிறவர்களாய்ச் செய்திருக்கிறார்கள். சக்கிரவர்த்தி எந்த நிமிஷத்திலும் தம்முன்னோரின் பெருமையையும் அந்தப் பெருமையால் தமக்கு உண்டாயிருக்கும் பெருமையையும் சொல்லிக்கொள்ளுகிறவராய்ப் பிரஜைகளால் பூஜிக்கப்பட்டு வருகிறார். அவருடைய அதிகாரம் மற்றெவருடைய அதிகாரத்தையும் சார்ந்ததாகவாவது அதற்குக் கீழ்ப்பட்டதாகவாவது இருக்கக்கூடாது. ஆகையினாலேதான், தம் தேசத்தின் ஆட்சிக்கு ஆதாரமான ராஜதர்ம மூலவிதிகளை அவரே விதித்திருக்கிறார். இப்போது, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் லார்ட்ஸ் சபையின் அதிகாரத்தைக் குறைத்து அத்தேசத்து ராஜீய அமைப்பை மாற்றக் காமன்ஸ் சபையார் நிச்சயித்து மகாராஜா அதற்கு இணங்கும்படி அவரை நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் அப்படிச் செய்தல் சாத்தியமல்ல. ராஜீய அமைப்பை ஆதியில் விதித்தவர் சக்கிரவர்த்தி. அதை இனி மாற்றுவதும் திருத்துவதும் அவருடைய விருப்பமேயன்றிப் பிரஜைகளுக்காவது பிரஜைகளின் பிரதிநிதிகளுக்காவது அதிகாரமில்லை. சட்டங்கள் செய்ய அனுமதி கொடுக்கிறவரும் அவர்; அவைகளைப் பிரசுரம் செய்கிறவரும் அவர். டயட்

(Diet) டைக் (அதாவது பார்லிமெண்டை) கூட்டுகிற வரும் கலைக்கிறவரும் அவர்தான்.

டயட் ஒத்திவைக்கப்பட் டிருக்குங் காலத்தில் சக்கிரவர்த்தி ஆர்டினன்ஸ் அல்லது ஒழுங்குகள் விடுப் பார். அவைகள் பார்லிமெண்டு சட்டங்கள் போலவே அநுஷ்டானம் பெறக்கூடியனவாயிருக்கும். ஆயினும் அடுத்தமுறை டயட் கூடுகிறவரையில்தான் அவை கள் அமுலில் இருக்கக் கூடியன. ராணுவ உத்தியோ கஸ்தர்களையும் சிவில் உத்தியோகஸ்தர்களையும் வைப்ப வரும் எடுப்பவரும் அவரே. சகல யோக்கியதாப் பட் டங்களும் உயர்குலப்பதவிகளும் அவரே கொடுக்கக் கூடியவர். கடற்படைக்கும் தரைப்படைக்கும் ஆதித் தலைவர் அவர்தான். யுத்தம் ஆரம்பிப்பதற்கும் சமா தானம் செய்வதற்கும் அன்னிய ராஜாங்கத்தோடு உடன்படிக்கை செய்வதற்கும் அவருக்கே சுதந்திரம். தேசத்தில் எவ்விடத்திலேனும் கலகம் முதலியவை தோன்றினால், அதை முற்றுகைக்குட்பட்ட நிலைமை யில் வைத்து அங்கு ராணுவச்சட்டத்தைச் செலுத்த அவர் கட்டளை இடக்கூடும். தண்டனைப்பட்டவர்களை மன்னித்தலும் அவர்கள் தண்டனையைக் குறைத் தலும் அவர்கள் இழந்து விட்ட உரிமைகளை அவர்களுக் குத் திரும்பிக் கொடுத்தலும் சக்கிரவர்த்தியினுடைய சுதந்திரம். அவ்வாறே நாணயங்களடிப்பதும் நிறைகள் அளவைகள் ஏற்படுத்துவதும் அவருடையனவாம்.

சக்கிரவர்த்தியின் சுதந்திரங்களைப் பற்றியும் பெரு மையைப் பற்றியும் ஜப்பானுடைய ராஜ்ய அமைப்பு



விதிகளை ஆதியில் வகுத்து வரைந்த பிரின்ஸ் இட்டோ பின்வருமாறு எழுதுகிறார்:—" பரிசுத்தமான (ஜப்பா னிய) ராஜபீடம் வானமும் பூமியும் தனியாய்ப் பிரிந்த காலத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டது. சக்கிரவர்த்தி வானத்திலிருந்து வந்தவர், தெய்வத்தன்மை யுள்ளவர், பரிசுத்தமானவர். பிரஜைகளை யெல்லாம் தாண்டி உயர்ந்து வீற்றிருப்பவர். அவர் பூஜாருகர், தீண்டப் படாதவர். சட்டத்தை அவர் உபசரிக்கவேண்டியவராயி னும், சட்டத்துக்கு அவர் உத்திரவாதி என்று எந்தச் சட்டத்தாலும் எவரும் விதிக்க வல்லமை பெற்றிருக்க வில்லை. சக்கிரவர்த்தியின் சரீரம் எவருடைய அப சாரத்தையும் பொறுக்காம லிருப்பதோடு அவரைப் பற்றி மரியாதைத் தாழ்வாய்ப் பேசுதலும் விவகரித்த லும் இயலாது. ராஜ்யத்தை ஆளுவதும் நடத்துவது மாகிய பாத்தியத்தைச் சக்கிரவர்த்தி பரம்பராப்ராப்த மாய்ப் பெற்றிருக்க, அவருடைய சந்ததியாருக்கும் அதை அவ்வாறே விடுகின்றனர். தேசத்தையாள வும் ஜனங்களைப் பரிபாலிக்கவும் அவசியமான நானாவிதச் சட்டநிரூபண அதிகாரங்களும் நிர்வாக அதி காரங்களும் மேன்மை தங்கிய சக்கிரவர்த்தியினிடம் கலந்து அமைந்திருக்கின்றன. தேசத்தின் ராஜ்ய வாழ்க்கையின் பற்பல கிளைகளைச் சூத்திரதாரிபோல் தம் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறார். சக்கிரவர்த்தி யே ஒரு ராஜ்ய அமைப்பை நிச்சயித்து, அதை மூலாதாரமான சட்டமாக்கி, அதை ராஜாவும் பிரஜை களும் ஒன்றுபோல் அநுஷ்டிக்கும்படிச் செய்திருக்

கிறார். அதன் ஒவ்வொரு பிரசுரத்தையும் தவறாமலும் அசட்டையின்றியும் அனுஷ்டிக்கப் படவேண்டும். தாம் வானத்தால் பெற்ற கடமைகளைத் தாம் எவ்வளவு தூரம் பயபக்தியுடன் மேற்கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டும் பொருட்டுச் சக்கிரவர்த்தி இவ்வாறு செய்திருக்கிறார்.”

இம்பீரியல் டயட் அல்லது பார்லிமெண்டு இரண்டு சபைகள் அடங்கினது. பிரிட்டிஷ் பார்லிமெண்டைப்போல், அதுவும் ஒரு லார்டு சபையும் ஜனப் பிரதிநிதிகள் அடங்கின ஒரு காமன்ஸ் சபையும் அடங்கினது. இந்த இரண்டு சபைகளின் அமைப்பைப்பற்றியும் அவைகளுக்கு மெம்பர்களை நியமிப்பதைப்பற்றியும் மற்ற விபரங்களைப்பற்றியும் வெவ்வேறு சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. லார்ட்ஸ் அல்லது பியர்ஸ் சபையில் 5 விதமான மெம்பர்கள் உண்டு:— (1) சக்கிரவர்த்தியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். (2)பிரின்ஸ்,மார்க்விஸ் என்ற பட்டங்கள் பெற்றவர்கள். (3) கவுண்ட், வைகவுண்ட், பாரன், இந்த அந்தஸ்துக்கள் பெற்றவர்கள் தங்களைச் சேர்ந்தவர்களிலிருந்து யாவரைப் பிரதிநிதிகளாக நியமிக்கிறார்களோ அவர்கள். இப்படி நியமிக்கப்பட்டவர்கள் அந்தந்த அந்தஸ்து மொத்தத் தொகையில் ஐவரில் ஒருவருக்கு மேற்படாமலிருக்க வேண்டும். இவர்கள் 7 வருஷத்துக்கு ஸ்தானம் வகிப்பார்கள். (4) தேசத்துக்கு உழைத்துக் கீர்த்தி பெற்றவர்களென்றும் கல்விமான்களென்றும் ஆயுள் பரியந்தம் அந்தச் சபையில் மெம்பர்க



ளாயிருக்கும்படிச் சக்கிரவர்த்தியால் நியமிக்கப்பட்டோர்கள். (5) ஒவ்வொரு பட்டணத்திலும் ஜில்லாவிலும் உயர்ந்த வரி கொடுப்போரில் முதல் 15 பெயர்கள் தங்களுக்குள்ளாக ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுத்துச் சக்கிரவர்த்தியால் நியமனம் பெற்றவர்கள். இவர்களும் 7 வருஷந்தான் மெம்பர்களாயிருப்பார்கள். இந்த வகுப்பு மெம்பர்களும் அவர்களுக்கு முந்திச் சொல்லப்பட்ட மெம்பர்களும் தலைமுறை தத்துவமாய் மெம்பர்களாயிருப்பவர்களின் தொகையை மீறக்கூடாது.

ஜனப்பிரதிநிதிச் சபை அல்லது காமன்ஸ் சபையில் சுமார் 376-மெம்பர்கள் உண்டு. ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் சில யோக்கியதையுள்ள எலக்டர்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். எலக்டர் 25-வயதுக்குக் குறையாமலிருக்க வேண்டும். அவன் எந்த இடத்துக்குப் பிரதிநிதியை நியமிக்கிறானோ அந்த இடத்தில் ஸ்திரமாய் வசிக்கிறவனாயும் நியமனம் செய்யும் வருஷத்திற்கு முந்தின வருஷம் அங்கேயே வசித்தவனாயு மிருக்கவேண்டும். அவன் 20-ஷில்லிங்குக்குக் குறையாமல் வரி கொடுக்கிறவனாயிருக்கவேண்டும். அபேக்ஷகர் அல்லது காண்டிடேட்டுகளுக்கு யோக்கியதை எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆனால்,30-வயதுக்குக் குறையாமலிருக்க வேண்டும். உத்தியோகஸ்தர்கள் அபேட்சகர்களாய் முன் வரக்கூடாது. கடற்படை தரைப்படை இவைகளில் உத்தியோகஸ்தர்களா யிருப்பவர்கள் நியமனம்

செய்யவும் அபேட்சகராய் நிற்கவும் கூடாது. சில குற்றம் செய்து தண்டனைப்பட்டவர்களும் இவ்வாறு தடுக்கப்பட்டிருக்கிறார்கள். உயர்குலங்களின் தலைவர்கள் பிரதிநிதி சபையில் மெம்பர்களாகக் கூடாது. தலைவர்களல்லாத மற்றவர்கள் பியர்ஸ் சபையில் மெம்பர்களாயிராவிட்டால், ஜனப்பிரதிநிதி சபையில் மெம்பர்களாகி அங்கு ஓட் கொடுக்கலாம். பார்லிமெண்டு நியமனங்கள் ஜூலை மாசத்தில் ஒரே தினத்தில் செய்யப்படும். ஓட் செய்வது, நம் தேசத்தில் நடப்பது போல் இரகசியமாய்ப் பெட்டிகளில் நியமனச் சீட்டுகளைப் போட்டுச் செய்யப்படும். பிரதிநிதிச் சபையில் மெம்பர்கள் 4-வருஷம் ஸ்தானம் வகித்திருப்பார்கள். அவர்களுக்கு வருஷம் 80-பவுன் சம்பளம். இந்தச் சபை ஒருமுறை சக்கிரவர்த்தியின் உத்தரவால் கலைக்கப்பட்டுப்போனால், 5-மாதத்துக்குள்ளாக அதை மறுபடியும் கூட்டவேண்டும். ஒவ்வொரு வருஷமும் சபை கூடி மூன்று மாதம் கலையாமலிருக்கும். கவர்ன்மெண்டு இஷ்டப்பட்டால் மூன்று மாதத்துக்கு அதிகமாயும் கலையாமலிருக்கலாம். பார்லிமெண்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்போது கூட, விசேஷ காரணங்களுக்காகக் கவர்ன்மெண்டு அச்சபையைக் கூட்டலாம். நடவடிக்கைகள் பகிரங்கமாகவே யிருக்கும். ஆனால், சபையில் நடத்தப்படும் அலுவல்கள் கமிட்டிகளால் நடத்தப்பட்டு அவைகளின் நடவடிக்கைகள் இரகசியமாயிருக்கும். மெம்பர்கள் பெரும் தப்பிதம் செய்தாலன்றி, அல்லது உள்நாட்டுக் கலகத்திலாவது அன்னிய தொந்தரவி



லாவது சம்பந்தப்பட்ட குற்றம் செய்தாலன்றிக் கைது செய்யப்படுவதில்லை. சக்கிரவர்த்தியின் குடும்ப சம்பந்தமான சட்டத்தைத் தவிர மற்றச் சட்டம் எதுவானாலும் இம்பீரியல் டயட்டில் நிறைவேற வேண்டும். மசோதாக்கள் (Bills) கவர்ன்மெண்டால் அதாவது மந்திரிகளால் பிரேரிக்கப்படலாம், அல்லது பார்லிமெண்டில் எந்தச் சபையிலாவது கொண்டுவரப்படலாம். எந்தச் சபையும் சக்கிரவர்த்திக்கு விக்கியாபன பத்திரம் செய்துகொள்ளலாம், ஜனங்களிடத்திலிருந்து விண்ணப்பங்களும் வாங்கலாம். மந்திரிகளும் கவர்ன்மெண்டால் அனுப்புவிக்கப்படுவோரும் பார்லிமெண்டில் எந்தச் சபையிலாவது போயிருக்கலாம். ஆனால், எந்தச் சபையில் அவர்கள் மெம்பர்களல்லவோ அந்தச் சபையில் ஓட் கொடுக்கக்கூடாது. இரண்டு சபைகளுக்கும் பிரசிடெண்டும் வைஸ்பிரசிடெண்டும் சக்கிரவர்த்தியால் நியமிக்கப்படுவார்கள். பிரதிநிதி சபையில் மட்டும், அந்தச் சபையால் தெரிந்தெடுக்கப்பட்ட மூவரில் ஒருவரை பிரசிடெண்டாக நியமிக்கவேண்டும். இரண்டு சபைகளுக்குமுள்ள பரஸ்பர சம்பந்தங்கள் கான்ஸ்டிடூஷனிலேயே வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

எத்தேசத்திலும் பிரதிநிதிவாதிகளால் ராஜாங்கம் நடத்தப்படும் பட்சத்தில், பார்லிமெண்டுக்கு வரவு செலவின்பேரில் பூரண அதிகாரம் கிடைத்து, அந்த அதிகாரத்தைக்கொண்டு பார்லிமெண்டானது தன் விருப்பப்படி ராஜாங்கம் நடத்தப்படும்படிச் செய்யும்.

பார்லிமெண்டின் இந்த அதிகாரத்தை ஜப்பானிய ராஜதந்திரிகள் கூடியவரையில் குறைத்து அமைத்திருக்கிறார்கள். கான்ஸ்டிடியூஷன் விதிகளின்படி புதுவரி விதிப்பதும் உள்ள வரியை மாற்றுவதும் கடன்வாங்குவதும் பார்லிமெண்டின் அதிகாரம். வருஷாவருஷம் பட்ஜெட்டையும் இந்தப் பார்லிமெண்டே பிரேரிப்பதால் கவர்ன்மெண்டின் வரவு செலவையும் தனக்குட்பட்டதாக்கிக் கொண்டிருக்கின்றது. ஆயினும், சக்கிரவர்த்தியின் குடும்பச் செலவுகளைப்பற்றிப் பார்லிமெண்டுக்கு ஒரு அதிகாரமுமில்லை. அவைகளை மொத்தத்தில் அதிகப்படுத்த வேண்டுமானால் மட்டும் பார்லிமெண்டின் சம்மதம் வேண்டும். வேறு சில செலவுகளையும் கவர்ன்மெண்டின், அதாவது, மந்திரி சபையின் சம்மதமில்லாமல் தள்ளிவிடவாவது குறைக்கவாவது அதற்கு அதிகாரமில்லை. அபாயக்காலத்தில் சக்கிரவர்த்தி தம் சொந்த உத்தரவினாலேயே, பார்லிமெண்டின் சம்மதத்தைப் பெறுவதற்கு முன்னமேயே, அவசியமெனத் தோன்றுகிற சில செலவுகளைச் செய்யலாம். கடைசியாக, பார்லிமெண்டு ஒத்திவைக்கப்பட்டிருப்பது பற்றி அந்த வருஷத்து பட்ஜெட்டு நிறைவேறாமலிருக்குமானால், முன் வருஷத்து பட்ஜெட்டின்படி கவர்ன்மெண்டு செலவு செய்துகொண்டு போகலாம். பார்லிமெண்டைக் கூட்டுவது சக்கிரவர்த்தியின் சுதந்திரமாகையால், அதைத் தன் இஷ்டமான காலம்வரையில் கூட்டாமலே இருந்துவிடலாம். இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் கான்ஸ்டிடியூஷன் விதிகளிலேயே அமைக்கப்பட்



டிருப்பதால், அவைகளை எடுக்கவாவது மாற்றவாவது பார்லிமெண்டுக்கு அதிகாரமில்லை. கான்ஸ்டிடியூஷன் விதிகளைப் பார்லிமெண்டுச்சட்டங்கள் மீறக் கூடியனவல்ல.

இவைகளெல்லாம் கவர்ன்மெண்டின் வரவு செலவுகளில் பார்லிமெண்டுக்குள்ள அதிகாரம் வரையறையற்ற தல்லவெனத் தெரிகிறது. ஜப்பானின் ராஜீய அமைப்பு ச்வேச்சாபத்திய (Despotism) மல்லவாயினும், ஜனநாயக (Democracy) மல்ல. ஜப்பான் பார்லிமெண்டு 1890-ம் வருஷத்தில் முதற்றடவையாகக் கூடினது. இந்த 20-வருஷத்துக்குள்ளாகப் பார்லிமெண்டில் கக்ஷிபிரதிகக்ஷிப் பேதங்கள் புசல்போல் அடித்து வருகின்றன வாயினும், பிரிட்டிஷ் தேசத்தில் அத்தகைய பேதங்கள் ராஜாங்கத்தின் நிர்வாக முறையை அப்போதப்போது வேறுபடுத்தி வந்திருப்பதுபோல, ஜப்பானில் வேறுபடுத்தாமல் ஒரேவிதமான முன்னேற்ற நெறியில் சென்று கொண்டிருக்கின்றன.

மேலே சொன்னபடி வரவு செலவு நிர்வாகத்தில் பார்லிமெண்டுக்கு வரையறையற்ற அதிகாரமில்லையாயினும், அதற்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் தேசத்து வரவையும் செலவையும் சமயோசிதமாய்ப் பெருக்கவும் குறைக்கவும் போதுமானது. இப்படிப் பெருக்குவதும் குறைப்பதும் பார்லிமெண்டின் பாத்தியங்களிற் பிரதானமானது. அதற்கு மற்றப் பாத்தியங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன: (1) ஜனங்களிடத்தி

லிருந்து விண்ணப்பங்கள் பெறுவது; (2) சக்கிரவர்த்திக்கு விக்கியாபனம் செய்துகொண்டு வேண்டுவ வேண்டாதவற்றை அறிவிப்பது; (3) கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளான மந்திரிகளைக் கேள்விகள் கேட்டுப் பதில்கள் பெற்றுச் சமாதானங்கள் கேட்பது. இவை மூன்றும் வரவு செலவுகளை நிர்வகிக்கும் பாத்தியத்துடன் சேர்ந்து பார்லிமெண்டுக்குத் தேசத்தின் கதியை நிகழ்த்துவதில் முக்கியமான வல்லமை கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஜப்பானியப் பார்லிமெண்டு ஜன நாயகமல்லவென்று சொன்னேன். பிரிட்டிஷ் தேசத்துப் பார்லிமெண்டு வரவர ஜனநாயக இயல்பை யடைந்துகொண்டு வர, அதற்கு ராஜ்யத் தலைவர்கள் உதவி செய்வோராய் இருக்கிறார்கள். ஜப்பானிலோ பார்லிமெண்டு ஜன நாயக வியல்பை யடையக்கூடாதென்ற எண்ணத்துடனே அதன் ராஜீய யமைப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த எண்ணத்துக்குச் சாதகமாகத்தான் சக்கிரவர்த்திக்குத் தனியான பாத்தியங்கள் மூல விதிகளிலேயே நிச்சயிக்கப்பட்டிருப்பதுமன்றி, பீயர்ஸ் அல்லது லார்ட்ஸ் சபைக்கும் காமன்ஸ் அல்லது சாமானியர் சபைக்கும் ஏற்றத் தாழ்வில்லாத அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் காமன்ஸ் சபைக்குத்தான் வரவு செலவைப்பற்றின சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. லார்ட்ஸ் சபைக்கு அதில் பிரவேசிக்க அதிகாரமேயில்லை. சில சமயங்களில் அந்தச் சபை அப்படிப் பிர



வேசிக்கிறதென்றோ அதன் அமைப்பையும் அதிகாரத்தையும் மாற்றியும் குறைத்தும் சட்டம் செய்துவிட அத்தேசத்தில் தற்காலம் கலக்கம் செய்யப்பட்டு வருகின்றது. ஜப்பானில் ஒரு சபையை மீறி மற்றச் சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. சாமானியர் சபையில் கக்ஷிப்பிரதிகக்ஷி பேதங்கள் நேரிட்டு அதன் சக்தியும் நோக்கமும் அப்போதைப் போது வேறுபடக்கூடுமென்றும் அப்படி வேறுபடுவதால் தேசத்தின் முன்னேற்றம் ஒரே நிதானமாய்ச் செல்லாமற் றடைப்படக் கூடுமென்றும் அந்தச் சபைக்குப் பிரதியாக லார்ட்ஸ் சபை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த லார்ட்ஸ் சபையில் விசாலமான சொத்துக்கள் படைத்தவர்களும் தேசத்துக்கு வெகு காலம் உழைத்துச் சக்கிரவர்த்தியின் நன்மதிப்பைப் பெற்றவர்களும் ஞானவான்களும் சாஸ்திர விற்பன்னர்களும் மெம்பர்களா யிருப்பார்களானதால், சாமானிய ஜனங்கள் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் செய்து வேற்றுமைப்படுவதுபோல் வேற்றுமைப் படமாட்டார்கள்; பழமைகளை யகற்றுவதிலும் புதுமைகளை ஏற்பதிலும் சமரஸ புத்தியைக் காட்டுவார்கள்; முன் செல்ல விரும்பும் தீவிரகக்ஷியாரையும் உள்ளதைக் காக்க விரும்பும் நிதானக்கக்ஷியாரையும் கட்டுப்படுத்திச் செலுத்த வல்லவராவார்கள்; பொறுப்பை யுணராமல் மனம்போனபடி விவாதங்கள் செய்வதைத் தடுப்பார்கள்; மூல விதிகளை அவசரப்பட்டு மாற்றாமல் அவைகள் எக்காலமும் ஸ்திரமாயிருக்க முயலுவார்கள்;

ஆளுவோரும் ஆளப்படுவோரும் ஐக்கிய பாவங் கொண்டு ஒத்துழைக்கும்படிச் செய்வார்கள்; தேசத்தின் வளப்பமும் ஜனங்களின் க்ஷேமமும் இடையூறாமல் அவைகளைச் சாவதானப் படுத்துவார்கள். பியர்ஸ் சபை ஏற்பட்டிருப்பதின் நோக்கம் சட்ட நிர்மாணத்தில் உயர்ந்த வகுப்பாருக்குப் பங்கு கிடைக்க வேண்டுமென்று மாத்திரமல்ல, ஜனங்களில் யார் யார் பெருஞ்சொத்துக்கள் உள்ளவர்களோ, நல்ல படிப்பாளிகளோ, தேசத்துக் குழைத்தவர்களோ, அவர்களைச் சேர்ப்பதால் ராஜாங்கம் நடத்துவதில் புத்தியும் அனுபோகமும் விடாமுயற்சியும் சக்திகளாக வமையும் என்றதே நோக்கமாம்.

---

# CHAPTER VI

# ஆறாவது அதிகாரம்

## பிரஜைகளின் பாத்தியங்களும் கடமைகளும்

*ஜப்பானியப் பிரஜைகளும் அந்நியர்களும்—ஜப்பானியர்களின் பாத்தியங்கள்—கடமைகள்—வரிகள்—சட்டங்கள்—சரீர சுதந்தரங்கள்—அந்தரங்கக் கடிதங்கள்—சொத்துக்கள் — மதாராதனைச் சடங்குகள்—ஜனங்களும், ராஜிய விவகாரங்களும், சமூக விவகாரங்களும்—சக்கிரவர்த்திக்கு மனுச்செய்தல்—மிலிட்டரிச் சட்டங்கள்.*

மேற்றிசைத் தேசங்களைப்போல ஜப்பானிலும் பிரஜைகள் ராஜீய அமைப்பு விதிகளால் சுதந்திரங்களும் கடமைகளும் பெற்றிருக்கிறார்கள். சைனியத்தில் உத்தியோகஸ்தராக நியமனம் பெறுவது பழைய காலத்தில் உயர்ந்த அந்தஸ்தைப்பற்றி இருந்தது போலிராமல், அந்தஸ்து பேதமின்றி எல்லா வகுப்பாரும் கொண்டாடக்கூடிய பாத்தியமாயிருக்கின்றது. எல்லா மனிதரும் சம பாத்தியம் பெற்றவர்கள். எவனுக்குப் போதுமான வயதும் படிப்பும் உண்டோ, எவன் கவர்ன்மெண்டுக்கு வரி செலுத்துகிறானோ, அவனுடைய அந்தஸ்தும் குலமும் எவ்வாறாயினும், கவர்ன்மெண்டு சேவகத்தில் அவன் எந்த உத்தியோகத்தையும் பெறக்கூடியவன். இந்தப் பாத்தியம் சாமானியமாய் அங்கு வசிக்கும் அன்னியருக்கில்லை. ஜப்பானியப்

பிரஜைகள் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் அமிசங்களி லொன்று. தேசத்தின் வாழ்க்கையையும் பெருமையை யும் சுவாதீனத்தையும் காக்கக் கடமைப்பட்டிருக் கிறார்கள். பிரஜைகளில் ஒவ்வொருவனும் இருபது வய தானதும் கடற்படையிலாவது தரைப்படையிலாவது அமரக்கடமைப்பட்டவன். 17-வயது முதல் 40-வயது வரையுமுள்ள எவனும் சைனியப் பட்டிகளில் பதிவு செய்யப்பட்டு யுத்தம் நேரிடும்பட்சத்தில் யுத்தத்துக்குச் செல்லக் கடமைப்பட்டவன். இப்படி அந்தஸ்து பேதம் வகுப்புப் பேதமின்றிப் புருஷபிரஜை எவனும் சைனி யத்தில் சேவிக்க வேண்டியவனாகக் கட்டாயப்படுத்தப் படுவதால், அவனுடைய தேசாபிமானமும் சரீரதிட னும் யுத்தப்பிரியமும் வளர்ந்து, ஜனசமூகமே போர்க் குணங்களில் தளர்ச்சியடையாமலிருக்கின்றது. சைனி யத்தில் சேவிப்பது எப்படியோ அப்படியே கவர்ன் மெண்டுக்கு வரி கொடுப்பதும் ஜனவாழ்க்கைக்கு இன்றி யமையாத தாகையால், அதுவும் பிரஜைகளுடைய கடமையாகும். இப்படிக் கொடுக்கப்படும் வரியானது அரசன் கொடுங்கோல் செலுத்திப் பிரஜைகளை இம் சித்து வாங்கும் சமர்ப்பணமல்ல; அல்லது, அரசன் சிலவிதமான சகாயம் செய்வதாகச் சொல்லி அதற்கு ஈடாக வழங்கும் பிரதி பிரயோசனமல்ல. 'எப்படிச் சூரியனானவன் அவனுடைய ஆயிரக்கணக்கான கிர ணங்களால் பூமியினின்று சாரத்தை இழுத்து, மறுபடி யும் அந்தப்பூமியின் நன்மையின் பொருட்டுப் பத் தாயிர லக்ஷக்கணக்கான தாரைகள்கொண்ட மழை



ரூபமாய் அதைத் திருப்பிக் கொடுக்கிறானோ, அப்படிக் கொடுக்கையில், எப்படிச் சூரியன் பூமியை இம்சிக்கா மல் இழுத்துப் பிரதிபிரயோஜனத்தை விரும்பாமல்கொ டுக்கிறானோ அப்படியே ராஜாவானவன் பிரஜைகளை இம் சிக்காமலும் அவர்களிடம் பிரதி பிரயோசனத்தை விரும்பாமலும் இறைகொள்கின்றான். தேசசம்ரக்ஷணைக் காக ராஜா வரி வாங்குகிறான். அந்தத்தேசத்து ரக்ஷணைக் காகவே பிரஜைகள் வரி கொடுக்கிறார்கள். இது இரு பக்ஷத்தில் தர்மமாகக் கொள்ளப்பட வேண்டுமேயன்றி வேறு விசேஷ நோக்கம் கொண்டதாக மதிக்கக்கூடாது. ஒவ்வொரு பிரஜையும் எந்த இடத்திலும் ஸ்திரமாகவா வது சிலகாலத்துக்காவது வசிக்கவும், வாசஸ்தலத் தை மாற்றவும், எந்த இடத்தில் எந்த அலுவலானாலும் அதைச்செய்யவும், ராஜாங்க நிர்ப்பந்தம் எதுவுமின்றிப் பாத்தியம் பெற்றிருக்கிறான். இந்தப் பாத்தியம் சில விசேஷ காரணங்களை நோக்கிப் பார்லிமெண்டு செய்யும் சட்டத்தால் பாதிக்கப் படலாமேயன்றிக் கவர்ன் மெண்டு உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய உத்திர வினால் அதைப்பாதிக்க அதிகாரம் பெற்றவர்களல்ல.

சரீர சுதந்திரம் தக்க காவல்களால் உறுதி செய் யப்பட்டிருக்கிறது. சட்டத்தில் வியக்தமாய் சொல்லப் பட்டிருக்கும் குற்றங்களுக்காக மாத்திரம் அதில் குறிக் கப்பட்டிருக்கும் முறைப்படியே, ஜப்பானியப் பிரஜை எவனையும் கைது செய்தலாவது சிறைப்படுத்தலாவது விசாரணை செய்தலாவது கூடும். என்ன அர்டத்தையா னாலும், சட்டத்தின் தெளிவான நிபந்தனைகளின்படி யன்

லாமல் அவன் தண்டிக்கப் படக்கூடாது. ஒரு போலீஸ் அல்லது ஜயில் உத்தியோகஸ்தன் சட்டப்படிக்கன்றி வேறுவிதமாய் எவனையாவது கைது செய்தாலும் சிறைப்படுத்தினாலும் இம்சித்தாலும், அந்த உத்தியோகஸ்தன் மற்ற எந்தச் சாமானிய மனுஷனையும்விடக் கடுமையாய்த் தண்டிக்கப் படுவான். குற்ற விசாரணை செய்கிற விஷயத்தில் எந்த விசாரணையும் போலீஸ் உத்தியோகஸ்தர் முன்னல்லாமல் ஒரு நியாய அதிகாரி முன்னேயே நடக்கவேண்டும். விசாரணை செய்யப்படுவோனுக்குத் தன் பட்சமாய் வாதித்துக்கொள்ள இடங்கொடுக்கப் பட்டிருக்கின்றது. விசாரணை பகிரங்கமாகவே நடக்கும். குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவனிடமிருந்து குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டவாறு வாக்குமூலம் பெறும்படி எந்த நியாய அதிகாரியாவது போலீஸ் அதிகாரியாவது பலவந்தம் செய்வானானால், அவன் கடுந்தண்டனைக்கு உட்படுவான். சட்டத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து விதிக்கப்படாத தண்டனை செல்லமாட்டாது. பிரஜைகளின் சம்ரட்சணையின் பொருட்டுச் செய்யப்பட்டிருக்கும் திட்டங்கள் ஜப்பானில் இவ்வளவு கண்டிப்பாயிருக்கின்றன. பழையகாலத்து அனுஷ்டானத்திலிருந்த துர்வழக்கங்கள் நீக்கப்பட்டு, தற்காலம் ஐரோப்பிய நாடுகளில் சரீர சுதந்திரம் எப்படிக் காவல் செய்யப்பட்டிருக்கின்றதோ, அப்படியே ஜப்பானிலும் காவல் செய்யப்பட்டிருக்கின்றது. வாசஸ்தலங்கள் எவ்வித ஆக்கிரமத்தி



னின்றும் காக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரஜையும் தன் வீடு தான் அதில் சாவதானமாய் வசிக்கக்கூடிய இடமென நம்பியிருக்கலாம். வீட்டில் வசிப்பவருடைய அனுமதியில்லாமல் அவ்வீட்டில் வேறு எவனேனும் புகப்பாத்தியமில்லை. எந்த உத்தியோகஸ்தராவது—போலீஸ், ஜூடிஷல், அல்லது சிவில் உத்தியோகஸ்தராவது—எந்தச் சிவில் அல்லது கிரிமினல் கேசிலும், அல்லது நிர்வாக விவகாரத்திலும், சட்டத்தில் சொல்லப்படும் நிபந்தனைகளை அனுசரித்த விதமாயன்றி வேறுவிதமாய் வீட்டில் வசிப்பவனுடைய சம்மதமில்லாமல் அதில் புகுந்தால், அந்த உத்தியோகஸ்தர் சட்ட விரோதமான குற்றம் செய்ததாகவே கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

ஒருவருக்கொருவர் எழுதிக்கொள்ளும் கடிதங்களின் ரகசியமும் சட்டத்தால் காக்கப்பட்டிருக்கின்றது. இப்படிக் காப்பது தற்காலத்து நாகரீகத்தின்படி ஜனங்களுக்குரிய பெரும் நன்மையாகக் கருதப்படுகின்றது. ஆகையால், குற்றங்களைக் கண்டுபிடிக்கச் செய்யும் சோதனையிலும், யுத்தம் அல்லது வேறு ஆபத்து நேரிட்ட காலத்திலும், சட்ட நிபந்தனைகளில் வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களிலும், அந்தரங்கக் கடிதங்களை உடைத்துப் பார்த்தல், அழித்துவிடல், குற்றமல்ல. மற்றச் சமயங்களில் இப்படிச் செய்தல் தண்டனைக்கு உட்பட்டதாயிருக்கும்.

சொத்து பாத்தியமும் இவ்வாறே காக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தப்பாத்தியம் ராஜிய அதிகா

ரத்துக்கு மீறினதல்ல, சட்ட நிபந்தனைகளுக்கு அடங்கினதாக இருத்தலவசியம்; அது அன்னியரால் பலாத்காரமாய் பற்றக்கூடியதல்ல; ஆயினும், சொத்து விரும்புவோர் அவ்விருப்பத்தை எப்போதுமே எவ்விடத்திலும் நிறைவேற்றக்கூடியவரல்ல. உதாரணமாக, ஒரு கோட்டை அல்லது அரணைச் சுற்றியுள்ள எல்லையைத் தாண்டி, சிலதூரம்வரையில் சிலவிதமான கட்டிடங்கள் கட்டப்படக் கூடாதென்று தடை செய்வது அவசியமாகும்; அப்படித் தடைசெய்வதால் தடைப்பட்டவனுக்குக் கவர்ன்மெண்டு ஈடுசெய்து கொடுப்பது அவசியமல்ல. பூமியின் கீழுள்ள சுரங்கப் பொருள்கள் சுரங்கங்களைப் பற்றிச் செய்யப்படும் சட்டங்களுக்கு உட்பட்டன. காடுகளும் அப்படியே கவர்ன்மெண்டு செய்யும் சட்டங்களின் நிர்ப்பந்தங்களுக்கு அடங்கினவை. ரயில் போகும் பாதையில் இரு பக்கங்களிலும் சிலதூரம் வரையில் மரங்கள் வளர்ப்பது தடைசெய்யப் பட்டிருக்கிறது. சவங்கள் அடக்கம் செய்யப்படும் இடங்களுக்கு அருகாமையில் கிணறுகள் வெட்டுவது தடுக்கப்பட்டிருக்கிறது. சொத்து சம்பந்தமாய் உண்டாகும் பாத்தியமானது சில வரையறைகட்கு உட்பட்டதென்று மேற்கண்ட உதாரணங்களால் அறியலாம். இவைகளால் பிரதி மனுஷனுடைய சொத்து பாத்தியம் அவனுடைய சரீரத்தைப்போல் ராஜ்யத்தின் ஏகதேச நன்மை தீமைகளுக்குப் பொருந்தினபடி கட்டுப்பட வேண்டும். சொத்து பாத்தியமானது அந்தந்தப் பிரஜையினுடைய தனி



பாத்தியத்தைப் பற்றின சட்டத்துக்குள் அடங்கினது. தேசத்தை ஆளும் பாத்தியமோ சமூக முழுமையும் பற்றின சட்டத்துக்குள் அடங்கினது. ஆனாலும், முதற் சொன்ன தனி பாத்தியச் சட்டமானது பின்னாற் சொன்ன சமூக பாத்திய சட்டத்துக்கு விரோதமல்ல. எப்போது அவசியம் நேரிடுகிறதோ, அப்போது பொது நலத்தை யுத்தேசித்து எந்த மனுஷனையும், அவன் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படாவிட்டாலும், அவன் சொத்தை இழந்து விடும்படி கட்டாயப்படுத்தப் படலாம். தேசத்தைப் பரிபாலிக்கும் அரசனுக்கு இந்தமாதிரிக் கட்டாயப்படுத்தும் சுதந்திரம் உரியது. ஆனால், அந்தச் சுதந்திரம் கிரமமான சட்டநிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செலுத்தப்படவேண்டும். ஒருவன் தன் சொந்த சொத்தைப் பொது நலத்தின் பொருட்டு இழந்துவிடும்படி கவர்ன்மெண்டால் கட்டாயப் படுத்தப் படும்போது, அவனுக்கு நியாயமான நஷ்ட ஈடுகொடுப்பது யுக்தமாகும். சொத்து பாத்தியத்துக்கு ஏற்பட்டிருக்கும் வரையறைகள் பார்லிமெண்டு செய்யும் சட்டத்தால் நிர்ணயிக்கப் படவேண்டுமேயன்றி அரசனது ஆக்கினையால் நிர்ணயிக்கப்படக்கூடாதென்று ஜப்பானது அரசமைப்பு (Constitution) தெளிவாய்க் கூறுகின்றது.

நம்பிக்கையும் நிச்சயமும் மனதின் விகாரங்கள்; தெய்வம் இதுவென்றும், அதை ஆராதிக்கும் விதம் இதுவென்றும், ஒருவனுக்குள்ள நம்பிக்கையிலாவது நிச்சயத்திலாவது அன்னியனாயினும் அரசனாயினும்,

பிரவேசிக்கப் பாத்தியம் பெற்றவனல்ல. ஆனால், ஆராதனை செய்யும் சடங்குகள் முதலியவைகளைப்பற்றியும், மதப்பிரசங்கங்களைப்பற்றியும், மதப்பிரசாரம் செய்யும் விதத்தைப்பற்றியும், மதசங்கங்களும் கூட்டங்களும் நடத்துவதைப்பற்றியும், சில நிர்ப்பந்தங்கள் சட்டத்தாலும் போலீஸ் அதிகாரத்தாலும் உண்டாக்குவது அவசியம். இல்லாவிட்டால், பொது அமைதியும் ஒழுங்கும் காப்புபெறா. எந்தமதத்தைத் தழுவுவோனானாலும் தன் தெய்வத்துக்குத் தொண்டுசெய்யும் நியாயத்தைக் கொண்டு தேசத்துச் சட்டக்கட்டுகளை மீறி நடப்பதும், அவனும் மற்றவர்களைப்போல் ஒரு பிரஜையாயிருக்க அவன்மட்டும் அரசனுக்குரிய தனது கடமைகளினின்றும் விலகினவனாகக் கருதிக்கொள்வதும், பொருந்தா. இவ்வாறு, சமயக்கொள்கைகள் அவனவன் மனதிலேயே இருந்து வருகிறவரையில் எவ்வித நிர்ப்பந்தமுமில்லாமல் முழு சுவாதீனமும் பெற்றிருந்தாலும், அந்தக் கொள்கைகள் ஆராதனைச் சடங்குகளில் வெளியாகும்போதும், அவைகளைப் பரவச்செய்யும் வழிகளில் வெளியாகும் போதும், சட்டத்தாலும் அதிகாரிகளின் ஒழுங்குகளினாலும் சில நிர்ப்பந்தங்களுக்கு அடங்கியிருப்பது அவசியம். பிரஜைகளுக்குரிய கடமைகளைப் பிரஜைகள் செலுத்த வேண்டும். இதுவே அரசமைப்பின் சித்தாந்தம். மதபாத்தியங்களுக்கும் ராஜீய பாத்தியங்களுக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தத்தை அது இவ்வாறு வரையறுத்திருக்கிறது. பேச்சுக்கள், எழுத்துக்கள், பிரசுரங்கள், பொதுக்



கூட்டங்கள், சங்கங்கள், இவைகளின் மூலமாக மனிதர் ராஜீய விவகாரங்களிலும் சமூக விவகாரங்களிலும் தங்களுடைய செல்வாக்கைச் செலுத்துகிறார்கள். ஆனால், இவைகளில் ஒவ்வொன்றும் கூரிய வாள் போன்றதாகையால், அதைத் தப்பாய் உபயோகித்தல் அன்னியருக்கும் சமூகத்துக்கும் ராஜாங்கத்துக்கும் கேடு விளைக்கக்கூடும். ஒருவனுடைய நல்ல பெயருக்குக் கேடுண்டாகும்போதும், பொதுவாய் அமைதியின்மை கிளம்பிக் கலகம் நேரிடும்போதும், குற்றத் தொழில் செய்யத் தூண்டுதலாகும்போதும், மேற்சொன்னவைகள் சட்ட நியந்தனைகளால் தண்டிக்கப்படுவதும் போலீஸ் திட்டங்களால் தடுக்கப்படுவதும் அவசியமாகும். ஆனால், இப்படித் தண்டிப்பதும் தடுப்பதும் பார்லிமெண்டில் செய்யப்படும் சட்டத்தாலும் அந்தச் சட்டத்தின்படி அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தராலும் செய்யப்பட வேண்டுமேயன்றி, கவர்ன்மெண்டு அது செய்யும் ஒழுங்குகளாற் செய்யக்கூடாது. இந்த ஒழுங்குகள் பார்லிமெண்டின் சட்டப்படி செய்யப்பட்டனவாயிருந்தாற் செல்லும். பார்லிமெண்டு சட்டத்தை அனுசரிக்காமல் கவர்ன்மெண்டு அதன் இஷ்டப்படி செய்த ஒழுங்குகள் செல்லமாட்டா.

சக்கிரவர்த்தி தம் பிரஜைகள்மீது கருணைகொண்டு பெருந்தன்மையுடன் செய்திருக்கும் கான்ஸ்டிட்யூஷனால் ஜனங்கள் தங்கள் குறைகளையும் விருப்பங்களையும் சொல்லி மனு செய்துகொள்ளச் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், மனு செய்துகொள்கிறவர்கள் மரி

யாதைக்கு விரோதமாய் நடந்துகொள்ளக்கூடாது; நடந்துகொண்டு தங்களுக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தைத் தப்பாக உபயோகித்துக் கொள்ளக் கூடாது; அதாவது, சக்கிரவர்த்தியிடம் மதிப்புக் குறைவைக் காட்டக் கூடாது; மற்றவர்களுடைய இரகசியங்களை வெளிப்படுத்தி அவர்களை நிந்தித்து எழுதவாவது பேசவாவது கூடாது; அப்படிச்செய்வது சன்மார்க்க விதிகளால் முற்றிலும் கண்டிக்கப்படுகின்றது. ஆகையால், மனு செய்து கொள்ளும் ஜன சுதந்திரத்தைச் சட்டத்தாலும், ஆர்டினன்ஸாலும் (அரசனது ஆக்கினையாலும்,) அல்லது டயட் (பார்லிமெண்டு) செய்யும் விதிகளாலும், கட்டுப்படுத்துவது அவசியம். ஆதியில் மனு செய்துகொள்ளும் சுதந்திரம் அரசனிடம் மட்டும் செல்வதாயிருந்தது. பிறகு பார்லிமெண்டிடமும் ராஜாங்கத் தலைவர்களிடமும் செல்லுவதாக விசாலிக்கப்பட்டது. தனிமனிதனுடைய உரிமையாலும், பொதுப்பட்ட உரிமையாலும், எதைப்பற்றி மனுசெய்து கொண்டாலும், சட்டத்தால் அதற்குத் தடையில்லை.

ஜப்பானிய கான்ஸ்டிடூஷன் இவ்வாறு பிரஜைகளுடைய தனி பாத்தியங்களைக் காப்பதுமன்றி, பிரஜைகளின் மீது அதிகாரம் செலுத்தும் ராஜாங்கத்தின் பாத்தியங்களையும் வரையறைக் குட்படுத்தியிருக்கின்றது. ஆனால், திடீரென நேரிடும் ஆபத்துக்காலங்களில் ராஜ்யம் நிலை நிற்கவேண்டிய பந்தோபஸ்துகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட காலங்களில் ராஜ்யத்தின் இருப்பே சந்தேகமாய் விடக்கூடியது.



ஜனங்களுடைய வாழ்க்கைக்கும் கேடு நேரிடக்கூடும். வேறு பல பெருந்தீங்குகளும் உண்டாகக் கூடும். இவைகளைத் தவிர்ப்பதற்குச் சாமானியமான காலங்களில் செலுத்தப்படும் சட்டத்தையும் ஜனங்கள் அனுபவிக்கும் பாத்தியங்களையும், ஒருவாறு அடக்கிவைத்தல் அவசியமாகக்கூடும். அப்படி அவசியமாகும் போது, அப்படியே அடக்கிவைக்கக் கான்ஸ்டிடூஷன் இடங்கொடுக்கிறது. இப்படி இடங்கொடுக்கும்படி கான்ஸ்டிடூஷனை அமைப்பது அரசனது சுதந்திரமாய் மட்டுமிராமல் அவனுடைய மேலான கடமையுமாகும்.

போர்ச்சேவகர்கள் யுத்தகளத்தில் மிலிட்டரிச் சட்டங்களையும் கட்டளைகளையும் அனுசரிக்கவேண்டும். கீழ்ப்படுவதே அவர்களுடைய முதற்கடமை. ஆகையால், சிவில் இலாகாக்களில் அனுஷ்டிக்கப்படும் சட்டங்களும் ஒழுங்குகளும் மிலிட்டரி இலாகாவில் எவ்வளவு தூரம் பொருந்தாவோ, அவ்வளவு தூரம் அவைகள் செல்லமாட்டா. உதாரணமாக, ராணுவச் சேவகத்திலிருக்கிறவர்கள் ராணுவங்களின் அமைப்பு முதலியவைகளைப்பற்றிக் குணதோஷங்கள் சொல்லவாவது, ராஜீய விஷயங்களைப்பற்றி விவகரிக்கவாவது, சங்கங்களாகச் சேர்ந்து பொது விஷயங்களைப்பற்றி மனு முதலானவைகள் செய்து கலக்கங்களைக் கிளப்பவாவது, இடம் பெற்றிருக்கவில்லை.

CHAPTER VII

# ஏழாவது அதிகாரம்

## பிதுர் பூஜை

*பிதுர் பூஜையும் மேல்நாட்டாரும்—பிதுர் பூஜைக்குக் காரணங்கள்—பிதுர் பூசையின் பிரிவுகள்—சக்கிரவர்த்தியும் பிதுர் பூசையும்—பிதுர் பூசையும் விவாகமும்—விவாக ஒழுங்குகளும் சட்டங்களும்—விவாகத்தை ரத்து செய்யக் காரணங்கள்.*

பிதுர்க்களைப் பூஜைசெய்யும் வழக்கம் நம்தேசத்திலுள்ளது போல ஜப்பானிலும் உண்டு. மேல் நாட்டாருள் இந்த வழக்கமில்லாததினால் இந்தப் பிதுர் பூஜைக்கு விரோதமான ஒரு காரணம் அவர்களாற் சொல்லப்படுகின்றது. பூதப்பிரேத பிசாசங்களுக்குப் பயப்பட்டுப் பலி முதலியவை இடுவதுபோல், பிதுர்க்களுக்கும் பயப்பட்டு அவர்களுக்குத் தர்ப்பணம் செய்வதும் அவர்களுக்குப் பூஜை செய்வதும் வழக்கமாக ஏற்பட்டிருக்கிறதென்கிறார்கள். மிலேச்ச ஜாதிகளுள் இந்த வழக்கம் எவ்வாறு ஜனித்ததாயினும், இந்தியாவிலும் ஜப்பானிலும் நம்முன்னோர்களிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பும் பக்தியும் காரணமாக இந்த வழக்கம் ஏற்பட்டிருக்கிறதே யன்றிப் பயத்தாலல்ல. முன்னோர்களிடத்தில் நாம் ஏன் பயம் வைக்கவேண்டும்? அவர்கள் உயிருடனிருந்த காலத்தில் புத்திர



பௌத்திராதிகளை அன்புடன் நடத்தி உபகாரம் பெற்றனரேயன்றித் தம்மைக்கண்டும் நினைத்தும் பயப்படும்படியான கொடுமைகள் செய்தவர்களல்ல. பெரியோர் நன்னடத்தையும் அறிவும் ஆக்கினையும் நமக்குப் பிரமாணமாகி அவர்களைப்போல் நாம் நடந்து அவர்களுடைய நற்பெயரைக் காப்பாற்றுவது நமது கடமையென்று உணருகிறோம். பெரியோர் செய்தபடிச் செய்யென்று நம்முன் விதியாகச் சொல்லப்படுவது அவர்களிடத்தில் நாம் வைத்திருக்கும் பக்தியாலல்லாமல் பயத்தால் இருக்குமா? பெரியோரைப் பூஜித்துத் திருப்தி செய்து அவர்களுடைய வாழ்த்தைப் பெறுவதும் அவர்களுக்கு அதிருப்தியான காரியத்தைச் செய்து அவர்களுடைய சாபம்பெறும விருப்பதும் நமது விருப்பம். பிதுர்க்களை யுத்தேசித்து நாம் தர்ப்பணம் செய்வதும், சிராத்தம் செய்வதும், வழக்கமாயிருப்பதுபோல், ஜப்பானியர் அவர்களுடைய முன்னோரது ஜனனத்தைக் கொண்டாடுவதும், சமாதி ஸ்தலங்களைத் தரிசிப்பதும், அங்குப் பிதுர்க்களை யுத்தேசித்துப் பிண்டம், பலம், தோயம் கொடுப்பதும், தூபதீபங்கள் காட்டுவதும், வணங்குவதும்,—இவைகளெல்லாம் அவர்களுடைய ஞாபகத்தால் நமக்குண்டாகும் அன்பாலும் மரியாதையாலுமேயன்றி அவர்களைப்பற்றின பயம் நம்மனதில் ஜனிப்பதாலல்ல என்று ஒரு ஜப்பானிய ஆசிரியர் (By Professor Nobushige Hozumi) எழுதுகிறார். பிதுர்பூஜை அத்தேசத்தில் 2000-வருஷ காலமாக எல்லா ஜனங்களாலும் சர்வ சாதாரணமாய்ச்

செய்யப்பட்டு வருகின்றது. ஆதியில் ஏற்பட்ட மதம் அதுதான். சீனாவிலிருந்து வந்த கன்புஸியஸ் என்ற ஞானியின் மதமும் இந்தியாவிலிருந்து வந்த பௌத்த மதமும் பின்னால் ஜனங்கள் மனதை யொருவாறு கவர்ந்தனவாயினும் இந்த அனாதி வழக்கத்தை மாற்ற இயலாதனவாயின.

இந்தப் பிதுர்பூஜையில் மூன்று விதமுண்டு. சக்கிரவர்த்தியின் மூதாதைகளைப் பூஜித்தல். இதைச் சக்கிரவர்த்தி பதவி வகிக்கும் ஒவ்வொருவரும் செய்யக்கடமைப்பட்டிருப்பதுமன்றி, எல்லா ஜனங்களும் இந்தப் பூஜை செய்யவேண்டும். இந்தச் சக்கிரவர்த்தி பூஜைக்குத் தனியான கோவில்கள் இருக்கின்றன. அபபடியே ஒவ்வொரு கோத்திரத்தாரும் (Clansmen) அக்கோத்திரத்தைச் சேர்ந்த முன்னோர்களைப் பூஜிக்கவேண்டும். இந்தப் பூஜைக்காகக் கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கோவில்களில் உத்ஸவங்கள் நடத்தப்படும்போது கோத்திரக்காரர்கள் பல விடங்களிலிருந்து வந்து சேருவார்கள்.

அந்தந்தக் குடும்பத்தினுடைய பிதுர்க்களும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் பூஜிக்கப்படுவார்கள். வீட்டிலேயே பூஜை செய்வதும் அல்லது தனியான கோவில்களில் பூஜை செய்வதும் வழக்கமுண்டு. இந்த இடங்களில் விக்கிரகங்கள் வைத்துப் பூஜை செய்வதாகத் தெரியவில்லை. பலிபீடங்களில் அன்னம், பழம், புஷ்பம் முதலியவைகள் நிவேதனம் செய்யப்படும். பூஜை ஸ்தலங்கள் விசேஷமாய் அலங்கரிக்கப்பட்டுப்



பூசாரிகள் வந்து பூஜை நடத்துவார்கள். தரிசிக்க வருவோர் நல்ல வஸ்திரங்களுடன் வந்து அவர்களுக்கு இஷ்டமான பதார்த்தங்களை நிவேதனமாகக் கொண்டு வந்து பிதுர்க்களை யுத்தேசித்துக் கையைக் கொட்டிக் கொண்டு அவர்களுடைய ஆசிர்வாதத்தைப் பிரார்த்திப்பார்கள். ஷின்டோ மதத்தினரானால் மாமிசத்தையும் பலியாகக் கொடுப்பார்கள். பௌத்த மதத்தினர் ஜீவஹிம்ஸை கூடாதென்று கொள்கை கொண்டவர்களானதால், கந்தமூல பதார்த்தங்களையே பலியாகக் கொடுப்பார்கள்.

ராஜீய அமைப்பானது 1889-ம் வருஷத்தில் பிப்பரவரி மாசம் 11-ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டது. அன்னிய தேசத்தாரின் ஆக்கிரமங்களால் ஜப்பானின் சுவாதீனமே போய்விடுமென்று பயந்தவர்களாய் ஐரோப்பியரைப்போல தாங்களும் ராஜ்யத்தைச் செலுத்தவேண்டுமென்று அத்தேசத்து ராஜதந்திரிகள் அந்த நவீன அமைப்பை ஏற்றபோதிலும், பூர்வம் ஜப்பானியச் சக்கிரவர்த்திகள் தங்கள் ஜனபரிபாலனத்தில் அனுஷ்டித்து வந்த கொள்கைகளே அதற்கு ஆதாரமென்றும் மனுஷ இயல்பு முற்போக்கு கொண்டதாகையால் தற்காலத்து விசேஷ நிலைமைகளுக்குத் தக்கபடி ராஜ்யத்தை அமைத்துக்கொள்வது அவசியமென்றும் சொல்லப்பட்டது. புது அமைப்பை விளம்பரம்செய்த சமயத்தில் சக்கிரவர்த்தி பின்வருமாறு பேசினார். "நமது குடும்பத்தின் ஸ்தாபகரான முதற் சக்கிரவர்த்தியும் அவருக்குப் பின்

வந்த நமது மூதாதைகளும் நம் பிரஜைகளின் முன்னோர்களது ஆதரவையும் உதவியையுங் கொண்டு நமது ஏகாதிபத்தியத்தை நாட்டினார்கள். அதன் அஸ்திவாரம் எப்போதும் அசையக் கூடியதல்ல. புண்ணியவான்களான நம்முன்னோர்களது உத்தமகுணங்களினாலேயே நமது தேசத்துச் சரித்திரம் பிரகாசித்து வருகின்றது, பிரஜைகளுடைய ராஜபக்தியும் சௌரியமும் அவர்களுடைய தேசாபிமானமும் பொதுப் பான்மையும் இதற்குத் துணையாய் நின்றன." இப்போதுள்ள சக்கிரவர்த்தியானவர் இப்படிச் சொல்லிவிட்டு அரண்மனையிலுள்ள பலபீடஸ்தானத்துக்குப் போய் தம் பிதுர்க்களைத் தியானித்துக்கொண்டு தாம் விளம்பரம் செய்த அமைப்பின் விதிகளின்படி ராஜ்யத்தை நடத்துவதாகப் பிரமாணம் செய்தார். ஒவ்வொரு புதுச்சக்கிரவர்த்தியும் சிம்மாசனத்தில் ஏறும்போது தம் பிதுர்க்களுக்குப் பிரார்த்தனை செலுத்திப் பலியிடுவதும் ஆதிசக்கிரவர்த்தியினால் அவர்வமிசத்தினருக்குப் பொக்கிஷமாய்க் கிடைக்கவேண்டுமென்று வைக்கப்பட்ட ஒரு ஆதர்ஸமும் ஒரு கட்கமும் ஒரு இரத்தினமும் பெற்றுக்கொள்வார். மேறகூறியவற்றால் ஜப்பானது தற்கால ராஜிய அமைப்புங்கூட பிதுர்பூஜை வழக்கத்தையொட்டி ஏற்பட்டிருக்கிறதென்று விசிதமாகிறது.

விவாக ஏற்பாடுகளும் இந்த வழக்கத்தை அனுசரித்துச் செய்யப்பட்டிருக்கின்றன. வம்சம் விருத்தியாவதற்கும் பிதுர்க்களுக்குத் திருப்தி செய்து வைப்ப



தற்கும் புத்திர சந்தானம் உண்டாகும்படியாகவே விவாகம் செய்யப்படுகிறது. ஹிந்துக்களில் புத்திரனில்லாமல் மரிக்கிறவன் நரகத்தில் விழுகிறானென்றும், அவனை அதனின்று மீட்கிறவன்தான் புத்திரனென்றும் எப்படி நம்பப்படுகிறதோ, அப்படியே ஜப்பானிலும் நம்பப்படுகிறது. ஆகையினால், புத்திரபாக்கியமில்லாதவன் வேறு எந்தப் பாக்கியமிருந்தாலும் துர்ப்பாக்கியனாகக் கொள்ளப்படுகிறான். விவாகம் செய்துகொள்ளும் பிள்ளையாவது பெண்ணாவது பெற்றோர்களுடைய அனுமதியையும் குடும்பத்திற் சேர்ந்த மற்றவர்களுடைய அனுமதியையும் பெற்று விவாகம் செய்துகொள்ளவேண்டும். அப்படிச் சம்மதம் பெறாமல் விவாகம் செய்யப்பட்டால் குடும்பத்தலைவர் ஒரு வருஷத்திற்குள்ளாக விவாகம் செய்துகொண்டவரைக் குடும்பத்தினின்று விலக்கி விடலாமென்று சட்டமிருக்கின்றது. அல்லது விவாகம் செய்துகொண்டு வேறு குடும்பத்தைச் சேர்ந்துவிட்டால் பிறகு அப்படி விவாகம் செய்துகொண்டவர்கள் பிரிந்து போகும்படி நேரிடும்போது, அவர்கள் பழைய குடும்பத்திற் சேராமல் நிறுத்திவிடலாம். புருஷனுக்கு 30-வயதும் ஸ்திரீக்கு 25-வயதும் ஆனபிறகு விவாகம் நடக்கும் பட்சத்தில் பெற்றோர்களுடைய சம்மதம் வேண்டுவதில்லை. அப்படிச் சம்மதமில்லாமல் நடக்கும் விவாகங்களைப் பெற்றோர் கோர்ட் மூலமாய் ரத்துசெய்து விடலாம். 1868-ம் வருஷத்துப் புதிய ஏற்பாட்டுக்கு முன்னிருந்த வழக்கப்படி சாமுராய் வகுப்பார் குடும்

பத்தில் மூத்த குமாரனுக்கு மட்டும் கிரமமான விவாகமுண்டு. மற்றப் பிள்ளைகளுக்குக் கிரமமான விவாகமில்லை. மலையாளத்து நம்பூத்ரி பிராமணருள் இந்த வழக்கமே இருந்து கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணமென்னவென்றால், மூத்த குமாரனே வம்சத்தை விர்த்திசெய்யக் கூடியவன்; அவனே பிதுர்க்களுக்குத் திருப்திசெய்யக் கூடியவன். இந்தவழக்கம் இப்போது ஜப்பானில் மாறிவிட்டது. சக்கிரவர்த்தி விவாகம் செய்து கொள்ளும்போது, ஆதிகுடும்ப ஸ்தாபகரான முதற் சக்கிரவர்த்தியின் கோவில் முன்பாகச் செய்துகொள்ள வேண்டும். சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் தங்கள் விவாகத்தை அங்கே அறிவித்துவிட்டுத் தம்முன்னோர்களது மற்ற சமாதி ஸ்தானங்களுக்கும் போய் அங்கே தங்கள் விவாகத்தை அறிவிக்கவேண்டும். அந்தச் சமயங்களில் தக்க சடங்குகளும் நடக்கும். விவாகமான ஒரு புருஷன் பூர்வ வழக்கப்படித் தன் மனைவியை ஒதுக்கிவிடலாம்; (1) புத்திரவதியாயிராமை, (பெண் பிறந்தாற் போதாது குமாரன் பிறந்து வம்சஸ்தாபனம் செய்து முன்னோருக்குத் தர்ப்பணம் செய்யக்கூடியவனா யிருக்கவேண்டும்), (2) விபசாரம், (3) புருஷனுடைய பெற்றோர்களுக்கு அடங்காமை, (4) வாயாடித்தனம், (5) திருட்டு, (6) பொறாமை, (7) கெட்டரோகம்; இந்தக் காரணங்கள் ஹிந்து சாஸ்திரத்திலும் சொல்லப் பட்டிருக்கின்றன. தற்காலத்துச் சட்டப்படி, இந்தக்காரணங்களை நீக்கிப் பின்வரும் காரணங்கள் சொல்லப்பட்டிருகின்றன: (1) கணவன் உயி



ரோடிருக்கையில் வேறு கணவனை மணம் புரிதல், (2) விபசாரம், (3) புருஷனைக் கைவிடுதல், (4) கொடுமை அல்லது சகிப்பரிய அவமதிப்பு, (5) சில குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படுதல். குடும்பத்தில் பிள்ளை இல்லாவிட்டாலும் அல்லது பெண்மாத்திரம் இருந்தாலும் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். குடும்பத்தில் பெண்ணிருந்தால் ஸ்வீகாரப்பிள்ளை அவளை விவாகம் செய்துகொள்வது வழக்கம். ஹிந்துக்களிலுள்ளதுபோல ஜப்பானியரிலும் பிதுர்க்களைக் கரையேற்றுவதே ஸ்வீகாரம் செய்துகொள்வதின் நோக்கமாகையால் ஞாதிகளில் ஒருவனை ஸ்வீகாரம் செய்து கொள்வது ஒழுங்காயிருந்தது. இப்போது அதில்லை. பெண்ணைக்கொண்ட மருமகனையும் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். ஸ்வீகாரபிதாவும் ஸ்வீகாரப் பிள்ளையும் பரஸ்பர சம்மதத்தின் பேரிலாவது அல்லது கோர்ட் மூலமாயாவது ஸ்வீகாரத்தை ரத்து செய்துவிடலாம். குடும்பச் சொத்துக்குப் பாத்தியஸ்தன் குடும்பத் தலைவனாகிறான். குடும்பத் தலைவனே பிதுர்க்களுக்குக் கர்மம் செய்யவேண்டியவன்.

# CHAPTER VIII

# எட்டாவது அதிகாரம்

## புஷிடோ?

### அல்லது ஜப்பானிய க்ஷத்திரிய தர்மம்

*சாமுராய் வகுப்பார்—அவருடைய பூர்விக விசேஷகுணங்கள்—புஷிடோ மதம்—ஷின்டோ மதம்—கன்பூஷியஸ் மதம்—மக்களின் சரீரம்—தந்தைக்கு முன் மகன் மரித்தல்—புஷிடோ ஏற்ற சாமுராயின் ஒழுக்கம்—புண்ணிய பாபங்களுக்குச் சுவர்க்க நரகங்கள் உண்டு என்பது ஜப்பானியருக்குள் இல்லை—தர்மம் அதர்மம்—உத்தம புருஷன்—தேசாபிமானம் ராஜாபிமானம்—சாமுராய் ஸ்திரீகளின் ஒழுக்கம்—சுகதுக்கம்—சாமுராய் ஒருவன் தற்கொலை செய்துகொள்ளும் வழக்கம்—வயிறு அறுத்துக்கொள்ளும் வழக்கம்—30-ஆண்டுமுன் பேர் ஊர் இல்லாத தேசமாயிருந்த ஜப்பான் புஷிடோ மதத்தால் ஒரு பெரு வல்லரசாயிற்று.*

ஜப்பான் தேசத்தில் பாளையப்பட்டு ஸ்தாபன முறை நிலைத்திருந்த காலத்தில் சாமுராயென்ற ஒரு வகுப்பார் பிரபலமாயிருந்தார்கள். இந்தப்பாளையப் பட்டு முறை தற்கால ஜப்பானில் எடுபட்டுப் போன போதிலும், சாமுராய் வகுப்பார் எப்போதும்போலவே பிரபலமாயிருந்து வருகிறார்கள். இவர்கள் பூர்வம் இந்தியாவிலிருந்த க்ஷத்திரியர்களைப்போல யுத்தம் செய்வோராயும் சில விசேஷ ஆண்மைக் குணங் கொண்டவர்



களாயும் இருப்பவர்கள். பழைய ஜப்பானில் ஒவ்வொரு சிற்றரசனையும் சுற்றி இந்தச் சாமுராய் வகுப்பார் இருந்து அவ்வரசருக்காக யுத்தம் செய்வதும் ஆலோசனை சொல்வதுமாயிருந்தார்கள். க்ஷத்திரியர்களுக்குச் சில உத்தமமான குணங்கள் உரித்தனவாய், அக்குணங்களிலிருந்து அவர்கள் நழுவினால் அது அவர்களுக்கு அவமானமென்று கருதப்பட்டது போல் சாமுராய்களுக்கும் சில குணங்கள் உரித்தனவென்றும், அவைகளுக்குத் தகாதவண்ணமாய் நடந்துகொள்ளுதல் அவர்களுக்கு அவமானமென்றும் கருதப்பட்டது. ஆண்மை, சத்தியம், பராக்கிரமம், தன் மறுப்பு, ரோசம், இவை போன்ற குணங்கள் இந்தச் சாமுராய் வகுப்பாருக்கு உரியனவாயிருந்தன; ஆயினும், நம் தேசத்தில் இன்னின்ன வருணத்தாருக்கு இன்னின்ன தர்மங்களென்று வரையறுத்துச் சொல்லும் சாஸ்திரங்களிருப்பது போல, ஜப்பானில் சாமுராய் வகுப்பாருக்கு இது தான் தருமமென்று விதிக்கும் சாஸ்திரமில்லை. உண்மையில், ஹிந்துக்களுக்கு வேதம், சாஸ்திரம், இதிகாச புராணங்கள் ஏற்பட்டு ஹிந்துக்களின் ஆசாரங்களையும் புருஷார்த்தங்களையும் வரையறுத்துக் கூறியிருப்பதுபோல ஜப்பானில் அப்படிக் கூறியிருக்கும் நூல்கள் இல்லை. பாரம்பரையாய்ச் சாம்பிரதாய பலத்தால் இந்தச் சாமுராய் வகுப்பாருக்குச் சில விசேஷ குணங்களும், நடத்தையும், தன்மையும் உண்டாயிருக்கின்றன. புஷிடோ என்பது ஒரு ஸ்தாபனமல்ல. அது எந்தப் பெரியோராலும் ஆரம்பத்தில் ஸ்தாபிக்

கப்பட்டதல்ல. நமது வேதத்தைப்போல் கடவுளால் சில மகான்களுக்குப் போதித்து அருளப்பட்டது மல்ல. புஷிடோ தர்மத்தின் சாரம் ஆண்மை. அதற்குப் பிரமாணம் அவரவர் மனதில் தோன்றும் உணர்ச்சியே. நல்ல காரியம் செய்வதில் பெருமையும், கெட்ட காரியம் செய்வதில் வெட்கமும் மனித இயற்கையில் தோன்றுவதே பிரமாணம். இது தர்க்க நியாயங்களால் நிரூபிக்கப்பட்டதாக அனுஷ்டிக்கப்படவில்லை. அவரவர் அந்தக்கரணங்களில் சாட்சிபூதமாய் விளங்கும் கடவுளுடைய கற்பனையே ஆதாரம்.

ஜப்பானியருடைய ஆதிமதமாகிய ஷிண்டோ மதத்தில் புஷிடோ வேரூன்றி முளைத்துப் பிறகு சீன தேசத்தாரின் மதமாகிய கன்பூஷியமதமும், (Confucianism), இந்தியாவில் ஜனித்து அங்கிருந்து சைனாவுக்கும், சைனாவிலிருந்து கொரியாவுக்கும், கொரியாவிலிருந்து ஜப்பானுக்கும், போன பௌத்த மதமும் அதற்கு எருப்போல் அமைய, காலவளவில் ஜப்பானியருக்கு இயற்கையான ஒழுக்க உணர்ச்சிகளைத் தன்னுள் கொண்டு நிலையான உருவம் பெற்றது.

ஷிண்டோமத மென்பது இயற்கையையும் மூதாதைகளையும் ஆராதிக்கும் மதம். கடவுள் உன் இருதயத்திலேயே இருக்கிறார். அங்கிருந்துகொண்டு தர்மம் இது, அதர்மம் இது, என்று உனக்கு வகுத்துக் கூறுகின்றார். அவரது ஆக்ஞைப்படி நடப்பாயானால் உனக்கு வேறுமதம் வேண்டியதில்லை. உன் முன்னோர்களைத் தொழு. உன் மாதா பிதாக்களும், அவர்களைப்



பெற்றோர்களும் உன் ஜனனத்துக்குக் காரணமானதையால், உன் வாழ்க்கையானது அவர்களிடமிருந்து நீ பெற்றவரம். அவ்வாறே, உன் பின்னோரும் உன்னுடைய வாழ்க்கையையும் நடத்தையையும் ஆதாரமாகக் கொண்டு உய்வர். உன் தேசத்தில் சமாதானத்துக்கும் சாவதானத்துக்கும் காரணம் உன் அரசன். உன்னையும் உன் உடன்வாசிகளையும் பரிபாலிப்பவர் அவரே. ஆகையால், அவரை நீ தொழுதல் கடமையாகும். இவ்வாறு ஷிண்டோமதமானது அந்தக்கரண சாக்ஷியைப் பிரமாணமாகவும், மூதாதைகளும் அரசனும் தெய்வங்களாகவும் கற்பிக்க, இந்தக் கற்பனையே விரிந்து வளர்ந்து ஜப்பானியரது ஒழுக்க நெறியாயிற்று. சைனதேசத்து ஞானியாகிய கன்பூஷியஸ் என்பவர் ஐந்து விதமான தர்மங்களைப் போதித்தார். பெற்றோருக்கும் பிள்ளைக்கும், புருஷருக்கும் ஸ்திரீக்கும், எஜமானனுக்கும் சேவகனுக்கும், அண்ணன் தம்பிக்கும், சிநேகிதருக்குமுள்ள பரஸ்பர சம்மந்தத்தை இந்தஞானி போதிக்க, ஜப்பானியர் அவர் போதித்ததைச் சைனாவிலிருந்து மற்றப் பல ஒழுக்கமுறைகளை ஏற்றது போல ஏற்றார்கள். ஏற்றாலும், அந்தச் சீன ஞானியினுடைய வாசகங்கள் மட்டும் நூதனமாயிருந்தனவேயன்றிக் கருத்துக்கள் ஜப்பானியர் முற்கனவே அறிந்தவைகளாயிருந்தன.

பௌத்த மதமும் லௌகிக சுகங்கள் அற்பம் அநித்தியம் என்றும், சத்கருமங்களும் சத்குணங்களுமே ஜீவனுக்கு முக்தியென்றும் அந்தமுக்தியானது ஆத்ம

போதம், தியானம் முதலிய சாதகங்களால் பெறக்கூடிய தென்றும் போதித்ததால் அதனாலேயும் புஷிடோ பலம் பெற்றது.

நமது சரீரம் நம்முன்னோர்கள் நமக்கு அளித்த கொடை. அதனுள் ஹிருதயமாகிய கர்ப்பக்கிரகத்தில் சர்வேஸ்வரன் வசிக்கிறார். அவருடைய பணிவிடையிலும், பெற்றோர், அரசன், இவர்களுடைய பணிவிடையிலும், உழைப்பதே ஜன்மத்தின் உத்தேசம். அந்தச்சரீரம் அதன் சுகத்துக்காக மட்டும் போஷிக்கப் படத் தக்கதல்ல. ஆத்மாவுக்கு ஒரு ஆபரணமாக அது சிலகாலம் தோன்றியிருக்கின்றது. நாம் சுகித்திருந்தால் நம்பெற்றோர் சந்தோஷப் படுவார்கள். கடவுளுக்கும் அரசனுக்கும் வழிப்பாடு செய்தல் எளிதாகும். ஜப்பானியரில் பெற்றோர் இருக்க, பிள்ளை மரிப்பானானால் தன்பெற்றோரைப் பார்த்து, "ஐயோ! நான் உங்களுக்கு முன்னாற்போக விதியாயிற்றே. நான் ஜீவித்திருந்தால், உங்களுக்குப் பணிவிடை செய்து உங்களைச் சுகிக்கச் செய்யலாமே. உங்களுக்கு வார்த்திகம் வரும்போது நானில்லாமல் வருந்துவீர்களே. எல்லாம் ஈசன்செயல்.!" என்று சொல்லிக்கொண்டு மரிப்பானாம்.

புஷிடோ விதிகளை மேற்கொண்ட சாமுராய் வகுப்பார், "ஆரம்பத்தில் உன்னை வெற்றிகொள், பிறகு உன் தேசரையும், பிறகு உன் விரோதிகளையும் வெற்றி கொள். இந்தமூன்று வெற்றிகளுமே ஜயசீலனைக் குறிக்கும் லக்ஷணங்கள்" என்பார். யுத்தகாலமானாலும் சமா



தான காலமானாலும், எவ்வித ஆபத்துக்கள் நேர்ந்தாலும் மனம் சலியாமலிருத்தல்; எதிர்பாராத அபாயம் நேரிடும்போது மனக்குழப்பம் அடையாதிருத்தல்; துக்கங்களும் அபஜயங்களும் சம்பவிக்கும்போது தைரியத்தைக் கைவிடாமலிருத்தல்;—இவைகளும் பொதுவாய்த் தன்னடக்கமும் காரிய நிர்வாகியான எவனுக்கும் அவசியமான குணங்களாகப் பயிலப்பட்டன.

நல்ல கருமங்களுக்குச் சொர்க்கமும், பாவச்செயல்களுக்கு நரகமும், ஜப்பானியர் மதத்தில் இல்லை. ஹிந்துக்களைப்போல கர்மத்தால் ஜன்மம் உண்டாகிறதென்று ஜப்பானியர் நம்புகிறவர்களுமல்ல. புண்ணியத்துக்கும் பாபத்துக்கும் பேதமானது அந்தக்கரண சாக்ஷித்துவத்திலேயே ஜனிக்கின்றது. ஆகையால், புஷிடோ விதிகளின்படி எண்ணமும் கருமமும் ஒன்றாகவே மதிக்கப்பட்டன. ஹிந்து சாஸ்திரத்தின்படி மனோவாக்குக்காயம் ஆகிய திரிகரணங்களால் செய்யப்படுகிறவைகள் ஒரே மாதிரியாய்ப் புண்ணிய பாவங்களாகுமென்று விதிக்கப்பட்டிருப்பன போல ஜப்பானியருடைய புஷிடோ தர்மத்திலும் விதிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையான பராக்கிரமத்துக்குச் சத்தியமே முக்கிய லக்ஷணமென்று நம்மில் க்ஷத்திரிய தர்மம் இருப்பதுபோல, ஜப்பானிய சாமுராய் வகுப்பாரிலும் சத்தியம் தவறின பராக்கிரமம் (Courage) பராக்கிரமம் அல்லவென்று கொள்ளப்படுகிறது. சௌரியமென்பதும் தர்மத்துக்குக் கட்டுப்பட்டதாயிருக்க வேண்டும். தர்மத்தை மீறின சௌரியம் (Valour)

அசாத் தன்மையாகும். பராக்கிரமும் சௌரியமும் தர்மத்தைக் காப்பதற்காகவே பிரயோகிக்கப்பட வேண்டும். தர்மமென்பது பலனை உத்தேசித்து நிர்ணயிக்கக்கூடியதல்ல. எது நல்லபலனைத் தருகின்றதோ அது தர்மமென்றும், எது நல்லபலனைத் தரவில்லையோ அது அதர்மமென்றும், பாகுபாடு செய்யத்தக்கதல்ல. அந்தக்காரணத்தில் எது எப்படிப் பிரதிபலிக்கிறதோ அது அப்படியே நல்லது கெட்டதாகக் கொள்ளப்படும்.

உத்தம புருஷனுக்குக் கருணை முக்கிய லக்ஷணமென்று புஷிடோ கற்பித்தது. எளியவனை இம்சிப்பதும், சரணமடைந்தவனைத் தண்டிப்பதும், ஸ்திரீகளைக் கொடுமையாய் நடத்துவதும், உத்தம புருஷனுக்கு லக்ஷணமல்ல. அனுதாபம், கருணைமுதலிய நற்சிந்தைக் குற்ற குணங்கள் இராஜகுணங்களைக் கவருதற்குப் பெரு பயமானதால், கன்பூஷியஸ் (Confucius) போன்ற ஞானவான்கள் அக்குணங்கள் அரசர்களுக்கு அவசியமென்று வற்புறுத்திப் போதித்தனர். புஷிடோ தர்மத்தின்படி ராஜபக்தி செய்வது முக்கிய கடமையானதால் ஜப்பானியருள் அந்த ராஜ பக்தி தேசபக்தியாக விரிந்தது. அரசனுக்குப் பொருளும், பெருமையும், பூஜியதையும் அவன் ஆளும் தேசத்திலேயே உண்டாவதால், அவனிடத்தில் பிரஜைகள் வைக்கவேண்டிய பக்தி தேசத்தின் மேலும் வைக்க வேண்டியவர்களானார்கள். தங்கள் அரசன் ஆளும் தேசத்தினின்றல்லவோ ஜனங்கள் புசிக்க உணவும்,



வசிக்க வீடும் பெறுகின்றனர். இந்த உணர்ச்சியும் அரசனைத் தெய்வம்போல் உபாசிக்கும் வழக்கமும் தேசாபிமானத்தை வளர்க்கின்றன. ஜப்பானியரது தேசாபிமானத்துக்கு இன்னொரு காரணமும் உண்டு. தம் முன்னோரது அஸ்தி சேஷங்களைத் தன்னுள் அடக்கிக் காப்பது தம் ஜன்மதேசமல்லவோ?

சாமுராய் வகுப்பாரைச் சேர்ந்த ஜப்பானிய ஸ்திரீகள் நமது ஆதிகாலத்து க்ஷத்திரிய ஸ்திரீகளைப்போல வன்மை, மென்மை, இரண்டுவிதமான குணங்களைப் பயின்றனர். சங்கடகாலத்தில் தங்களை இரக்ஷித்துக் கொள்ளவும் மானத்தைக் காத்து உயிர் துறக்கவும் பயின்றனர். ஆபத்துகள் எதிர்ப்பட்டால் தங்களையும் தங்கள் குழந்தைகளையும் காக்கும்வண்ணம் பல போர் முறைகள் ஸ்திரீகளுக்குக் கற்பிக்கப்பட்டன. மென்மைக்குணங்கள் அவர்களுக்குத் தகாவென்றும் ஏற்படவில்லை. சங்கீதம், நர்த்தனம், படிப்பு, பூக்கோத்தல் முதலியவைகளையும் அவர்கள் கற்றதுண்டு. சாமுராய் ஸ்திரீகள் பெருமூச்சுவிட்டும் கண்ணீர்சொரிந்தும் துக்கத்தைக் காட்டுதல் அவர்க்கும் பொருந்தியதல்ல. "ஒரு பழய பாழுங் கிணற்றடியில் படர்ந்திருக்கும் பாசியானது மேலே நின்று பார்ப்பவர் கண்ணுக்குத் தன் இலைகள் ஆடுவதை மட்டும் காட்டக்கூடும்; என் இருதயத்தில் பதுங்கிக் கிடக்கும் துக்கங்களை அன்னியருக்கு எப்போதும் காட்டிக் கொடுக்க வேண்டாம்" என்று ஜப்பானியர் பாடுவது வழக்கமாம். சுகதுக்கங்களை அடக்கும் ஸ்வபாவம் ஜப்பா

ணியாது பயிற்சியில் ஒரு முக்கிய அம்சம். ஆகையால், ஜப்பானியர் ஹிருதயத்தில் சுகமோ துக்கமோ தோன்றினால் உடனே அதைத் தங்கள் விவேகத்தால் அடக்கிவிடுகிறார்கள். ஒருவனுக்குக் கோப மூண்டானால், வெறிகொண்டு புலம்பக் கூடாது; அதை நகைப்பால் மறைத்து விடவேண்டும். எவ்விதத் துக்கம் நேரிட்டாலும் அழுது கண்ணீர் விடாமல் நகைத்து மறைக்கவேண்டும். ஜப்பானியர் எப்போதும் மலர்ந்த முகமும் உத்சாக குணமும் உள்ளவர்களென்றும் முக்கியமாய்ப் பெண்கள் இப்படி இருப்பவர்களென்றும் அன்னியர் சொல்லுகிறதுண்டு. ஆனால், அவர்களுடைய நகைப்பு உண்மையானதல்ல; தன் துக்கங்களைப் பிறருக்குப் படும்படி வெளிக்காட்டி அவர்களையும் துக்கப்படும்படிச் செய்வது மரியாதையல்லவென்று எண்ணத்தினால் மனதில் தோன்றும் சுகதுக்கங்கள் எவற்றையும் நகைப்பால் மூடும் வழக்கம் உண்டாயிருக்கின்றது. ஒருவனது விருப்பு வெறுப்புகளைக் கூடியிருப்பவர்களுக்கு அனாவசியமாய்ச் சொல்லி ஆத்திரமும் வேதனையும் உண்டாக்குவது சரியல்லவென்பது கீழ்நாட்டாரது கொள்கை. இங்கியர் ஒருவர் ஒரு பெரிய மனுஷனிடத்தில் யாசகமாவது வேறுதபவாவது பெறப் போவாரானால், எங்கு வந்தாயென்று பெரியமனுஷன் கேட்க, பார்த்துப் போகலாமென்று வந்தேன், என்பான். இப்படியே ஜப்பானியன் ஒருவன் முகத்தில் களையில்லாதிருப்பதைப் பார்த்து என்ன துக்கம் உன் மனதை வேதனைப் படுத்துகிறதென்றால் ஒன்றுமில்லை



என்பான். ஒருவனுக்கு அநேக சுகதுக்கங்கள் எப்போதும் தோன்றிக்கொண்டிருக்கலாம். அவைகளைப் பற்றி வெளியே புலம்பிப் பிறருக்கு வேதனை யுண்டு பண்ணுவது என்ன நியாயம்? நம்முடன் கூடியிருப்பவருக்கு நம்மால் சந்தோஷம் உண்டாக வேண்டுமேயன்றி விசனம் உண்டாகக்கூடாது. இது ஹிந்துக்கள் ஜப்பானியர்போன்ற கீழ்நாட்டாரது வழக்கம். இதையறியாமல் மேல்நாட்டு அன்னியர் இந்த வழக்கம் பொய் சொல்லுவதை யொக்குமென்று பழிக்கிறார்கள்.

புஷிடோ விதிகள் சாமானிய ஜனங்களது அனுஷ்டானத்தில் வராமல் ஒரு வகுப்பாரால் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததால் இந்த விதிகள் காலவளவில் மிக்க நுட்பத்தையும் கடுமையையும் கொண்டனவாயின. ஒரு சாமுராய் இந்த விதிகளை மீறி நடந்து அவமானப்படுவானானால் அவன் தற்கொலை செய்துகொள்வதே அவனுக்குத் தண்டனையாக விதிக்கப்பட்டது. இந்தத் தற்கொலைக்கு ஜப்பானிய பாஷையில் ஹாரிகாரி என்று பெயர். தன் கத்தியால் தன் அடிவயிற்றை அறுத்துக்கொண்டு மாளுவதுதான் இந்தத் தற்கொலை. சில சமயங்களில் இது கவர்ன்மெண்டாலும் விதிக்கப்படும். சாமானியமாய், தன் ரோசத்தைக் காட்டிக்கொள்ளவும் அவமானத்தினின்று தப்பவும் இம்மாதிரி கொலை செய்துகொள்வது உண்டு. இது ஒரு பெருமையாகவும் கருதப்படும். ஒருவன் மானக்கேடான செய்கை செய்து அதற்காக அவனைத் தண்டிக்க

வேண்டுமென்று கவர்ன்மெண்டுக்குத் தோன்றினால், அவனுக்கு ஹரிகாரி செய்துகொள்ளும் சுதந்திரம் இல்லையென்று மறுத்து விடப்படும். தான் குற்றம் செய்தவனல்லவென்று ஒருவனுக்கு நிச்சயமாயிருந்தாலும் அவன் உயிரை லக்ஷியம்பண்ணாத மானி என்று பிறர் அறியும்பொருட்டு இரண்டு பக்கமும் கூரான தன் கத்தியால் மேற்கண்டவாறு அடிவயிற்றை அறுத்துக் கொண்டு மாளுவான். ஜப்பானியர் அடிவயிற்றில் ஆத்துமா வசிக்கின்றது என்று நம்புகிறவர்களானதால், அடிவயிற்றை அறுத்துக்கொள்வது வழக்கமாயிற்று.

இவ்வாறு மானமே ஜப்பானியரின் ஒழுக்கத்துக்குப் பிரமாணம். தன்மனதுக்குத் தான் திருப்தி செய்து கொள்வதிலும் உலகத்தார் ஒப்புக்கொள்ளும்படி நடப்பதிலும் இந்த மானமான விவேக புத்தியே வழி காட்டியாயிருப்பது; வேறு சாஸ்திரமில்லை, சட்டமில்லை; பெரியோர் முற்காலத்தில் எழுதிவைத்த நூல்களுமில்லை; ஒவ்வொரு ஜப்பானியர் மனதிலும் இயற்கையாகவே தோன்றும் இந்த உணர்ச்சியே அவர்களை ஒழுக்கத்தில் கட்டுப்படுத்தி யிருப்பது. தேசபக்திக்கும் ராஜபக்திக்கும் அதுவே ஆதாரம். இப்படியிருப்பதைத் திருத்தி ஜப்பானியரின் நல்லொழுக்கத்துக்கு வேறு உறுதியான ஆதாரம் கற்பிக்க வேண்டுமென்று பலர் பல உபாயங்களைச் சொல்லுகிறார்கள். பௌத்தமதமும் கன்புஷியமதமும் அந்தேசத்தார் ஒருவாறு அனுஷ்டிக்கிறவைகளானாலும், மேற்சொன்ன இந்தப் புஷிடோ வுணர்ச்சியில் வேரூன்றினவைக



ளல்ல. கிறிஸ்தவமதம் அனுஷ்டிக்கப்படுமானால், ஜப்பானியரின் ஒழுக்கம் உறுதிபெற்றுச் சீர் அடையுமென்று கிறிஸ்தவப்பாதிரிகள் சொல்லுகிறார்கள். ஆனால், ஜப்பானியத்தலைவர்கள் அதை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. புதுமதங்களும் புது உபாயங்களும் அநாதிகாலமாய் ஜப்பானியர் மனதில் ஊறியிருக்கும் மான அவமான விவேக புத்தியை அகற்றி அதன் ஸ்தானத்தை ஏற்கக் கூடியவைகளல்ல. சுமார் 30-வருஷத்துக்கு முன்னால் ஜப்பான் ஒருபொருட்படுத்தப்படாத தேசமாயிருந்து, இப்போது உலகத்துவல்லரசுகளில் ஒன்றாய் உன்னதம் பெற்றிருப்பது இந்தப் புஷிடோவினாலேயே. தற்கால அவசியங்களுக்கு ஏற்றபடி ஜப்பான் என்ன புதுமைகளை அங்கீகரித்தாலும் புஷிடோவை மாற்றப் போகிறதில்லை. எல்லாப் புதுமைகளும் அதைப் பலப்படுத்துமேயன்றிப் பலவீனப்படுத்தா வென்று ஜப்பானிய புத்திமான்கள் சொல்லுகிறார்கள். அன்னிய தேசங்களைப்பார்த்து ஜப்பான் கற்றுக்கொண்டதென்று அதற்கு இளப்பமாய்ப் பேசுகிறவர்களும் உண்டு. கற்றுக்கொண்டால் என்ன? முன்னேக்கு கொண்ட எத்தேசமும் அன்னியரைப்பார்த்துக் கற்றுக்கொள்வது சகஜம். ஆதியில் கிரேக்கு ஜாதியார் இந்தியரையும் அரேபியரையும் பார்த்துக் கற்றுக் கொண்டார்கள். ரோமானியர் கிரேக்கரைப்பார்த்துக் கற்றுக்கொண்டார்கள். கிறிஸ்தவரான ஸ்பெயின் தேசத்தார் மகம்மதியரான மூர்ஜாதியாரைப் பார்த்துக் கற்றுக்கொண்டார்கள். ஸாரஸெனியரைப் பார்த்து

ஐரோப்பிய ஜாதியார் மத்திய காலத்தில் ஷிவல்ரி என்கிற க்ஷாத்திரிய தர்மத்தைக் கற்றுக்கொண்டு அதை ஒரு ஸ்தாபனமாக்கி அனுஷ்டித்து வந்தார்கள். தற்காலம் ஹிந்துக்களாகிய நாம் மேல் நாட்டாரைப் பார்த்து எவ்வளவோ புதுமைகளை ஏற்று வருகிறோம்! புதுமைகளை ஏற்க இணங்காமல் பூர்வீக அனுஷ்டானங்களையே தற்காலத்திலும் பின்பற்றி வந்த சைனு தேசத்தாரின் கதி என்ன? ஆதலால், அயலாரைப் பார்த்துக் கற்றுக்கொள்வதில் நன்மையேயொழிய தீமையில்லை. ஆயினும், அந்தந்த ஜனங்களுக்கு அநாதி காலமுதல் இயற்கையாய் அமைந்து வந்த நாகரிகம் அப்போதப்போது உசிதமாய்த்தோன்றும் புதுமைகளால் உருமாறுவது அவசியமல்ல. ஜப்பான்தேசம் எவ்வளவு விஷயங்களில் அன்னியரைப் பார்த்து அப்போதப்போது உசிதமெனத் தோன்றுவனவற்றைக் கற்றுக்கொண்டாலும், அப்படிக்கற்றுக்கொள்பவற்றையெல்லாம் அத்தேசத்தார் தங்கள் நாகரிகத்தில் அடக்கிக்கலந்து அந்த நாகரிகத்தைப் பலப்படுத்துவார்களேயன்றி மாற்றிவிடமாட்டார்கள்.

# CHAPTER IX

# ஒன்பதாவது அதிகாரம்

## ஜயுஜிட்ஸூ,

## அல்லது தேகப்பயிற்சி

அற்ப ஜப்பானியர்களுக்குத்தேகபலம் கிடைத்தவாறு—மிஸ்டர் ஹென்ரி இர்விங் ஹான்காக்கும் ஜயுஜிட்ஸூவும்—ஜயுஜிட்ஸூவும் உடற்பயிற்சியும்—டாளி (Tali) என்னும் ஜப்பானியக் கைச்சண்டைக்காரர்—1900-மாண்டில் சீனாவில் பாக்ஸர் கலகத்தில் ஜப்பானியர் எதிர்த்த பேர்—ஜயுஜிட்ஸூவால் விரோதியைக் கீழே வீழ்த்தல்—ஜயுஜிட்ஸூவைக் கற்றுக்கொடுக்கும் விதம்—ஜப்பான் தேகப்பயிற்சியும் ஆங்கிலேய தேகப்பயிற்சியும்—தேகப்பயிற்சியின் முடிவுக்குறி—ஜயுஜிட்ஸூவுக்கும் பொறுமை வேண்டும்—சரியான சாப்பாடு வேண்டும்—மிஸ்டர் காஹெ என்னும் ஜப்பானியர்—அவர் செய்யும் ஜூடோ என்ற உடற்பயிற்சி வித்தை—ஜூடோவும் ருஷிய யுத்தமும்—ஜப்பானியர் சத்தமாய் இருக்கும் காரணம்.

பார்வைக்கு அற்பமாய் இருக்கும்ஜப்பானியர்கள் வெகு தேகபலம் படைத்தவர்களாயும் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு போகும் குணம் படைத்தவர்களாயும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் சாப்பிடும் சாப்பாடும் இளம் வயதில் அவர்கள் செய்யும் உடற்பயிற்சியும் தானென்று சொல்லப்படுகின்றது. ஜயு-

ஜிட்ஸு (Jiu-Jitsu) என்றால் சதை கரைத்தல் (Muscle-breaking) என்று பெயர்; ஆனால், அது பிரத்தியக்ஷத்தில் கண்ணாரப் பார்ப்பதில், ஏராளமாய்ச் சதையைப்பெருக்கும்படியாய்த்தேகத்தைப்பயிற்றுவிக்கும் அப்பியாசமாய் இருக்கிறது. இந்த அப்பியாசத்தைப் பற்றி மிஸ்டர்ஹென்ரி இர்விங் ஹான்காக்(Mr. Henry Irving Hancock) ஒரு புஸ்தகம் வெளியிட்டிருக்கிறார். அதில் இதைப்பற்றிப் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

ஜயுஜிட்ஸுவை நன்றாய்க்கற்றுக்கொள்ள நான்கு வருஷம் பிடிக்கும். முதல் முதல் சரீரக் கூறுகளைத் தெரிந்துகொள்வதன்றிச் சாப்பிடவேண்டிய சாப்பாட்டைப்பற்றியும், ஹைட்ரோபதி (Hydropathy) அல்லது ஜலோப சிகிச்சை செய்வதைப்பற்றியும், வீட்டிலும் வெளியிலும் வசிப்பதைப்பற்றியும், முற்றிலும் அறிந்துகொள்ளவேண்டும். இன்னும் மற்றப்படி நல்ல வாழ்க்கைக்குரிய முறைகளையும் கற்றறியவேண்டும். பிறகு, தன்னைத்தான் காத்துக்கொள்ளும்பொருட்டும் சதையில் பலமுண்டாகும்பொருட்டும் உடம்பில் எந்தப்பாகத்தை இறுக்கி அமுக்குகிறபடி அமுக்கினால் அதில் விசேஷ நோயுண்டாய்ச் சிறிது நேரம் சீவனற்றுப் போய்விடுமோ அந்தப்பாகத்தை அறிந்துகொள்ளவும் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுகின்றது.

இப்போது டானி (Tani) என்று ஜப்பானியக் கைச்சண்டைக்காரர் ஒருவர் லண்டனில் (London) இருக்கிறார். அவரைப் பார்த்தவர்கள் ஜயுஜிட்ஸு



என்றபடித் தம்உடலைப் பயிற்சி செய்வித்ததின் காரணமாயே அவர்க்கு ஏராளமான பலமும் யுக்தியும் உள்ளன என்று ஒப்புக்கொள்வார்கள். கி. பி. 1900 மாண்டில் சைனாவில் குத்துச் சண்டைக்காரர்கள் கலகம் செய்து (Boxer Rebellion) ஐரோப்பியர்க்கு விரோதமாய்க் கிளம்பினபோது, ஐரோப்பியரும் ஜப்பானியரும் சைனாவில் புகுந்து சீனர்களைத் தாக்கிய காலத்தில் உயர்ந்து கட்டுமஸ்தர்களான (Sturdy) அமெரிக்கர்களைக் காட்டிலும் 100-க்கு 50-வீழுக்காடு அதிக தீவிரமாய் நாட்டைக்கடந்து போனார்கள் என்று எடுத்த பெயருங்கூட இந்த "ஜயுஜிட்ஸு" என்னும் வித்தையால்தான் என்று சொல்லப்படுகிறது.

ஆராய்ந்து பார்க்கும்போது சில நரம்புச் சதைகளைக் கட்டைவிரலால் அழுத்துவதினால், தேகத்தில் அசக்தம் உண்டாகலாம் என்றும், மோசத்தனமான ஒரு விரோதியை அடித்து வீழ்த்தும்படி நம்கையால் அடித்தால் அவன் கையை முறித்துவிடலாமென்றும் தெரிகிறது. யார்க்காவது பரீக்ஷார்த்தமாய்த் தெரிந்துகொள்ள இஷ்டமுள்ளவர்கள் தம் தேகத்திலேயே இந்த நரம்புத்தசைகள் இன்னவை என்று சித்தமாய்க் கண்டுபிடித்துக் கொள்ளலாம். அதிக அனுபவமில்லாத ஒரு பகைவனைப் பிடித்துப் பலமற்றுப்போம்படிச் செய்வது இப்படி என்று வெகுசீக்கிரம் கற்றுக்கொடுக்கலாம்.

இப்படிக் கற்றுக்கொண்டு தேர்ச்சிபெறும் காலமெல்லாம், கர்லாக்கள் (Clubs), டம்பல்கள் (Dum-

bells), முதலியவற்றைக் கையாள்வதில்லை. பள்ளிகளில் முக்கால்வாசியும் ஒருவரை ஒருவர் எதிர்த்தல் என்னும் முறையைக் கைக்கொண்டு இரண்டு மாணவர்களை ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கச்சொல்லி இந்த ஜயுஜிட்ஸுவை நன்றாய்க் கற்றுக்கொடுக்கிறார்கள். ஜப்பானியரின் தேகப்பயிற்சி இங்கிலாந்தில் பள்ளியில் கற்கும் தேகப்பயிற்சிக்கு முற்றிலும் வேறுபட்டது; ஆயினும், ஜப்பானியர் செய்யும் தேகப்பயிற்சியால், 120-பவுன் எடையுள்ள ஒரு ஜப்பானியன் 175-பவுன் எடையுள்ள ஆங்கிலேயன், அமெரிக்கன், இவர்களைக் காட்டிலும் பலசாலி என்று பெருமை சொல்லிக் கொள்ளப்படுகிறது.

ஜப்பானிய னொருவனுக்கு ஒவ்வொரு சதையும் (Muscle) பெருகிக் கெட்டிப்பட்டாலொழிய அவனுக்குத் தேகப்பயிற்சி முடிந்து விட்டதென்று சொல்ல வொண்ணாது. ஒருவன் எவ்வளவு குள்ளனானாலும், அவனுக்கு நல்ல தேகமாத்திரம் இருந்துவிட்டால், அவன் இந்த ஜயுஜிட்ஸுவால் ஆச்சரியமான பலத்தைப் பெறுவான். இதெல்லாம் பொறுமையிருந்தால் தான் முடியும்; இது ஒருவாரம் இரண்டு வாரத்தில் கற்றுக்கொள்ளக் கூடியதன்று; சதையைப் பெருக்க வேண்டுமென்றால், மாசக்கணக்காய் சாப்பாடு சரியாய்ச் சாப்பிடவேண்டும்; இப்படிச் சாப்பிடுவதால்தான் இந்த வித்தையால் வரக்கூடிய பலமெல்லாம் வருகிறது. இதற்குப்பிறகு இரத்தப்பையையும் (Heart) காற்றுப்பையையும் (Lungs) சரியானபடி வளரு



மாறுபார்க்கவேண்டும். இவ்விரண்டும் பலமாய்இருந்தாலொழிய, சாப்பாடு சரியாய்ச்சாப்பிடப் பழகின பிறகு சதையை நசுக்கி ஒடுக்கத்தொடங்கியபோது உண்டாகும் கஷ்டங்களுக்கு அவ்விரண்டும் ஈடு கொடுக்கா.

மிஸ்டர் கானோ (Mr. Kano) என்பவர் இந்த மாதிரியாய்த் தேகப்பயிற்சி செய்வதை நன்றாய் அறிந்து விளக்குபவர். இவர் ஜயுஜிட்ஸு என்ற வித்தையை வெகு நன்றாய்க் கற்றவராதலால் அதில் சில மாறுபாடுகள் உண்டாக்கி, அந்த வித்தையை முற்றுபடுத்தி, அதற்கு "ஜூடோ" எனப் புதிய பேரும் கொடுத்து வழங்கி வருகிறார். இந்த ஜூடோ என்பது பள்ளிகள் எல்லாவற்றிலுமல்லாமல் தரைப்படையிலும் கடற்படையிலுங்கூட கற்றுக்கொடுக்கப்படுகிறது. ருஷ்ய ஜப்பானிய யுத்தத்தில் பிரசித்திபெற்ற பல தளவாய்களும் கப்பற்படைத் தலைவர்களும் இந்தக் கானோ என்பவரின் சிஷ்யர்கள். அவர் பயிற்சி செய்யும் சாலைக்குக் கோடோக்வான் (Kodokwan) என்று பேர். இந்தச் சாலையிலிருந்து நாடெங்கும் உபாத்தியாயர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். பிரத்தியக்ஷமாய்க் கண்ணாற் பயிற்சிசெய்வதே யல்லாமல், வெகு சாஸ்திரோக்தமான பிரசங்கங்களும் விவாதங்களுங்கூட நடக்கின்றன. இந்தப் பிரசங்கங்களினாலும் விவாதங்களினாலும் இக்காலத்தில் ஜப்பானியர்களுக்குள் மல்லர்கள் வெகு சிறப்பான நாகரீகம்பெற்று வருகிறார்கள்; ஜப்பானியப் படைகளுக்கு வெகு அதிசயமான பயிற்சியும் உண்டாகின்றது.

ஜப்பானியர் தங்கள் உடலை மிகத் தூய்மையாய் வைத்துக் கொள்கிறார்கள். இது தெய்வபக்திக்குரிய ஸ்நானபான ஜப தபாதிகளால் அன்று; நடு வகுப்பாரான ஆங்கிலேயரும் மேலாந்தஸ்துள்ள ஆங்கிலேயரும் தேகத்தைச் சுத்தமாக்காமலே, காலையில் குளிர்ந்த தொட்டிகளில் குளிக்கும்படி அவர்களைத் தூண்டும் சுகாதார சாஸ்திரத்தில் கூறிய ஒழுங்குகளால் அன்று; ஆனால், வெறுமனே உடலின் தூய்மைக்காகவே. ஏழைகளும் பணக்காரர்களும் ஒருவரைப்போல் அனைவரும் வெகு சூடான தண்ணீரில் தேகத்தை வேக வைப்பது போல் தினம் ஒரு தடவையாவது குளித்து எழுந்திருக்கிறார்கள்—110-டிகிரிச் சூடுள்ள (பாஹ்ரான்ஹீட்) தண்ணீரில் ஜப்பானியர் குளிப்பதை மேற்கத்தியார் பார்த்தால், ஐயோ! தேகம் வெந்துபோமே! என்று திகைப்பார்கள்; இந்தச் சுத்தத்துக்காக ஜப்பானியர்களுக்கு வெகு கண்ணியம் உண்டு!

# CHAPTER X

# பத்தாவது அதிகாரம்

## ஜப்பானிய ஸ்திரீகள்

முற்காலநிலைமை—ஆரியமதங்களும் ஜப்பானிய ஸ்திரீகளும்—பௌத்தம்—ஸ்திரீகளுக்குரிய விதிகள்—2. சாமானிய ஸ்திரீகள்—அன்னியர்களின் அபிப்பிராயம்—இரண்டு கதைகள்—மூத்தோர்க்கு மரியாதை—பெண் குழந்தைகள் முதல் முதல் கற்கவேண்டிய பாடம்—பெண்கள்செய்யும் வீட்டுவேலைகள்—இந்தமாதிரி வீட்டு வேலை செய்வது மேலான உயர்வகுப்பார்தான் செய்ய மாட்டார்கள்—மணமான சிறு பெண்கள்—சிறுபெண்ணின் மணம்—கணவனைத் தகப்பன் தேடி வைப்பான்—இந்தக் கணவனை மறு பேச்சில்லாது மணப்பாள்—மணந்து மாமிவீடு போன சிறுமி அங்கொரு வேலைக்காரியாவாள்—பொழுதுவிடிந்ததும் முதற்கடமை மாமி மாமனுக்கேயன்றிக் கணவனுக்கன்று—மாமிமாமனில்லாதபெண்ணும் அகமுடையாளன்று, அகங்காப்பவளே—ஜப்பானியக் கிழவிகள்—சொற்ப வயதிலேயே கிழத்தனம் வருகிறது—அப்படி வருவது ஒரு குறையன்று—என்குறையன்று?—சக்கிரவர்த்தினி—3. சாமுராய் ஸ்திரீகள்—அவர்கள் தம்தேசத்தில் கொண்டநிலை—புதிய ஜப்பானும் சாமுராய்ப் பெண்களும்—அவர்களுக்குண்டான புதிய ஆசை—4. கற்ற ஸ்திரீகள்—கல்வி அபிவிருத்தி—அதைப்பற்றிச் சாமானிய ஜனங்களின் அபிப்பிராயம்—மேல்தரப்படிப்பும் உண்டாயிற்று—பெண்க

ளுக்கென்று ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது—ஸ்தாபித்த மூன்றும் வருஷம் 1,000 பெண்கள் படித்தார்கள்—படிக்கும் பெண்களுக்குத் தாதிமார்கள்—தாதிமார் கற்பிக்கும் வித்தைகள்—கற்றமாதரும் அந்நிய வாடிக்கைகளும்—கல்வியும் மதமும்—5. ஸ்திரீகளின் சில தொழில்கள்—ஸ்திரீகள் அம்பட்டவேலையும் செய்வார்கள்—வேலைசெய்து பிழைப்பது சாமானிய ஸ்திரீகளே—உயர்குல ஸ்திரீகள் தாதிமார்களாய் வைத்திய சாலைகளில் அமர்வார்கள்—பெண் தேசாபிமானச் சங்கம்—இது செய்துவரும் தொழில்—மதாசாரியர்களாயும் அமர்கிறார்கள்—புத்தகாலத்தில் படித்த பெண்கள் செய்யும் செய்கைகள்—பெண்களில் சோம்பேறித்தனம் கிடையாது.

---

## 1. முற்கால நிலைமை

இந்தியஸ்திரீகளைப்போல் ஜப்பானிய ஸ்திரீகளும் ஆதிகாலத்தில் புத்திசாலிகளாயும் சரீரவல்லமையுள்ளவர்களாயும் இருந்ததாகவும், பிறகு கால பேதங்களால் அவர்களுடைய திறமையும் செல்வாக்கும் குறைந்துபோய் மடமையில் ஆழ்ந்து விட்டதாகவும், சமீபத்தில் மேல்நாட்டாரது சகவாசத்தால் ஸ்திரீகள் மறுபடியும் உயர்ந்த நிலைமைக்கு வந்து கொண்டிருப்பதாகவும், தெரிகிறது. பூர்வகாலத்தில் நம்முடைய க்ஷத்திரிய ஸ்திரீகள் எப்படிச் சாமர்த்திய சாலிகளாகவும் போர் புரியக்கூட வல்லவர்களாயும் இருந்தார்களோ அப்படியே ஜப்பானிய ஸ்திரீகளும் இருந்தார்கள்; சைனாவிலிருந்து கன்பூஷிய மதமும் இந்தியாவிலிருந்து பௌத்தமதமும் புகுந்து பிரபலமான பிறகுதான் அவர்களுடைய நிலைமை தாழ்வடைந்தது. ஸ்திரீகளும் புருஷர்களும் சமமான அந்தஸ்திலிருந்தார்கள். ராஜாங்கத்திற்கூட ஸ்திரீகளுக்குச் செல்வாக்கு இருந்தது. சில ஸ்திரீகள் ராஜ்ஜியமாண்டதாகவும் சொல்லப்படுகிறது; ஸ்திரீகள் நூலாசிரியர்களாகவும் புகழ் பெற்றார்கள். அவர்களுடைய கற்பு மாசற்றதாகி எல்லாராலும் மதிக்கப்பெற்றது. அவர்கள் எப்போதும் உல்லாசகுணமும் முகமலர்ச்சியுமுள்ளவர்களாய்ப் புருஷருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்து வந்தார்கள். அக்காலத்தில் ஸ்திரீகளின் கல்விக்காகப் பள்ளிக்கூடங்கள் இருந்ததாகத் தெரியவில்லையாயினும், அப்பாலார் கற்றவர்களாகவே இருந்தார்கள். அன்னிய மதங்கள் பிரவேசிக்கத் தொடங்கின காலத்தில் ஜப்பானிய ஸ்திரீகள் கௌரவமான நிலைமையிலேயே இருந்தார்கள். பௌத்தமதம் பிரவேசித்தபோது அதைப் பிரபலம் செய்ய முயன்றவர்கள் முக்கியமாய் ஸ்திரீகளாகவே இருந்தார்கள். அந்த மதத்தை ஆராய்ச்சிசெய்து அதன் உண்மைகளை அறியும்பொருட்டு ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களில் முக்கியமான மூவர் ஸ்திரீகளென்றால், அக்காலத்தில் அத்தேசத்து ஸ்திரீகளின் கல்வித்திறமைக்கும் செல்வாக்குக்கும் வேறு சான்று வேண்டுமோ ஆயினும், அன்னிய மதங்களின் பிராபல்லியம் நிலைத்தபோது, ஸ்திரீகளின் நிலைமை தாழ ஆரம்பித்தது. மத்தியகாலத்தில் சிற்றரசர்களது அதிகாரம் பெருகி

யுத்தமே தேசத்தாரது பிரதானத்தொழிலா யமைந்தபோது, ஸ்திரீகளின் அந்தஸ்து பின்னும் தாழ்ந்தது. ஸ்திரீகள் பொதுக்காரியங்களிற் கலப்பது நின்றுபோய் அவர்களுடைய புத்தியும் கடமையும் வீட்டுக்குள்ளேயே அடங்கினவாயின; வீட்டுக்குள் செய்யவேண்டிய காரியங்களை அவர்கள் ஒருவாறு கற்றபோதிலும், அவர்கள் மனம் கல்வியால் பயிற்சி பெற்றதில்லை. ஸ்திரீகளின் ஒழுக்கத்தைப்பற்றி ஹிந்துதர்மசாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருப்பதுபோல அவர்களுக்கும் மூன்று விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. பாலியத்தில் பெற்றோர்க்கும், யௌவனத்தில் புருஷருக்கும், வார்த்திகத்தில் பிள்ளைக்கும் அடங்கியிருக்கவேண்டும். பொதுவில், அக்காலத்தில் சமூக அமைப்பானது ஸ்திரீகள் உயர்ந்த நிலைமையை அடைவதை அசாதியமாக்கிவிட்டதுபோலவே இருந்தது. இந்தியாவிலும் ஸ்திரீகளின் நிலைமை இப்படியே இருந்ததன்றோ? ஆதிகாலத்தில் படிப்பிலும் திறமையிலும் செல்வாக்கிலும் புருஷருக்குச் சமானமாகவே இருந்தது; பிறகு மத்தியகாலங்களில் ஈனமான நிலைமைக்கு வந்து இப்போது மேல்நாட்டாரது சகவாசத்தால் மறுபடியும் நல்ல நிலைமைக்கு வருவார்கள் போல் தோன்றுகிறதன்றோ? ஜப்பானிலும் மேல்நாட்டார் சகவாசம் உண்டாகவே, அத்தேசத்து ஸ்திரீகள் மத்தியகாலத்தின் நிலைமையினின்றும் மீட்சிபெற்றுப் படிப்பும் திறமையும் செல்வாக்கும் உள்ளவர்களாகி வருகிறார்கள்.

---



## 2. சாமானிய ஸ்திரீகள்

ஆங்கிலேயரில் அநேகர் நேர்த்தியான தபால் சீட்டுகளைப் பார்த்தும் கெய்ஷா (Geisha) போன்ற வெகு பிரபலமாய் ஆடப்பட்ட பல நாடகப் புஸ்தகங்கள் வாசித்தும் ஜப்பானியப் பெண்களைப்பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால், ஜப்பானிய ஸ்திரீகள் வண்ணாப்பூச்சிபோல் அழகு பண்ணிக்கொண்டு சந்தோஷமாயும் விசனமற்றும் மினுக்குத்தளுக்காயும் இருப்பவர்கள் என்று நினைக்க இடமுண்டு. அப்படி நினைப்பவர்கள் பெரும் பிசகு செய்தவர்கள் ஆவார்கள். இந்தத்தப்பான மதிப்பை இரண்டு சிறு கதைகளைச் சொல்லி அகற்ற முயலுவேன். பிறகு, ஜப்பானிய ஸ்திரீகளின் வாழ்க்கையைப் புதிய நோக்கத்தோடு நோக்கல் இயலும்.

1-வது கதை,—கி. பி. 1895-ம்வருஷம் ஜப்பான் சீனாவோடு சண்டைசெய்து ஜெயித்தது. இது ஒரு பழங்கதை. "அக்காகி" (Akagi) என்ற சண்டைக்கப்பலின் தலைவர் ஸாக்கமாட்டோ (Sakamato) என்பவர். மஞ்சட்கடலில் ஒரு பெரும் சண்டை நடந்தபோது, சண்டை மும்முரமாயிருந்த இடத்திற்போய் அவர் உயிர் மாண்டார். உடனே இந்தத் துக்கச் செய்தி ஸாக்கமாட்டோவின் குடும்பத்துக்கு ஒரு தூதன் வழியாய்ச் சொல்லி அனுப்பப்பட்டது. அவருடைய கிழத்தாயார் இந்தத்தூதனைப் பார்த்தவுடன், அத்தூதன், கதையெல்லாவற்றையும் சொல்லி அவன் சாவையும் சொன்னான். தாயார் அது கேட்டும் ஒரு பொட்டு நீர்

கூட அவள் கண்ணில் ததும்பவில்லை. பிறகு அவளுடைய முகத்தை உற்றுப்பார்த்து "ஆகையால் நீ சொல்லுகிற சேதியைப்பார்த்தால், என்பிள்ளை இந்தத் தடவை ஏதோ விதமாய் உபயோகப்பட்டது போலக் காண்கின்றது" என்று சொன்னாள். இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது அந்த அம்மாளுக்குத் துக்கமானது தொண்டையி லடைத்துக்கொண்டது, அவள் முகத்தில் தத்தளித்தது. அப்படியிருந்தும், அந்த அம்மாள் வெகு இறுமாப்புடன் மேற்சொன்னபடி கண்ணில் ஒரு நீர்த்துளியாவது இல்லாமல், கொஞ்சமும் தடுமாற்ற மில்லாமற் பேசினாள்.

இதில் வண்ணாப் பூச்சித்தனம் கொஞ்சமும் இல்லை. ஆயினும் இந்த அம்மாள் மற்ற ஜப்பானியத் தாய்மார்கள் போன்றவளே யன்றி வேறல்ல.

2-வது கதை—இதே யுத்தத்தில் இக்கதையும் நடந்தது. இந்தக் கதையின் நாயகிக்கு அப்போது தான் 20-வயது முடிந்தது. மணம் செய்துகொண்டு அதிக நாளாகவில்லை. அவளுடைய புருஷன் ஒருபடையாளி. அவன் சேனைக்குப் போனான்; அங்கே அவன் உயிர் துறந்தான். இந்தச் சிறு மனைவி தன் கணவன் இறந்ததைக் கேட்டாள்; உடனே தன் வேலைக்காரர்களை அனுப்பிவிட்டாள்; வீட்டைப் பார்த்து மூடினாள்; தன் சிநேகிதர்களுக்கு மங்கலக் கடிதங்கள் (Farewell letters) எழுதினாள். மணமகள் உடுப்புடுத்துத் தன்கணவன் பொம்மைக்குச் சேவித்து ஒரு கத்தியால் தன்னை மார்பில் குத்திக்கொண்டு மாண்



டாள். கணவனண்டை போகலாமென்று இப்படிச் செய்தாளாம்! இதில் விசனமில்லாத்தனமும் தளுக்கு மினுக்கும் கொஞ்சமும் இல்லை; ஆயினும் இந்தப் பெண் ஜப்பான் தேசத்திலுள்ள மற்றப் பெண்களைப் போன்றவளே யன்றி வேறல்ல.

பல நூற்றாண்டுகளாய்ப் பயிற்சி பெற்றவர்கள் ஆதலால் ஜப்பானியப் பெண்கள் முணுமுணுப்பில்லாமல் கஷ்டப்படவும் பிரதிசொல்லாமல் கீழ்ப்படிந்து நடக்கவும் வழக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை முழுதையும் விளக்கும் ரகஸ்யம் என்னவென்றால், வழக்கப்படி. அவர்கள் வணங்கவேண்டியவர்கள் யார்யாரோ அவரவர்களுக்கெல்லாம் சந்தோஷமாயும் இஷ்டத்துடனும் வணங்கும் வழக்கமாம்.

கீழ் நாடுகளிலெல்லாம் மேற்றிசையாருடைய கவனத்தைக் கவர்வது யாதெனில், சிறுவர் தம் பெற்றோரையே யல்லாமல் தம்மைக் காட்டிலும் பெரியோராய் உள்ளவர்களை யெல்லாம் மரியாதையுடனும் பக்தியுடனும் வணங்குவதாம். வளர்ந்து வரும் பெண்குழந்தைகள் முதல் முதல் கற்றுக் கொள்ளும் பாடம், பெரியோர் சொன்ன உத்திரவு ஒப்புக்கொள்ளத் தக்கதோ தகாததோ, நியாயமோ அநியாயமோ, அந்த உத்திரவின்படி நடக்க வேண்டியதாம். அக்காள் தங்கைகளுக்குள் தமக்கையே எல்லா விஷயத்திலும் முந்திக் கொள்ளவேண்டும்; கூப்பிடுவதும் அக்காள் என்று அர்த்தமாகும்படியான பட்டமிட்டுக் கூப்பிடுவார்கள்.

இதற்குப்பிறகு வீட்டுவேலைகளை வேலைக்காரர்கள் கையில் விட்டுவிட்டுத் தாம் சும்மா இருக்கக்கூடாதென்று கற்பிக்கப்படுவார்கள்; சமைக்கவும், தெருவில் விற்கும் சாமான்களை வாங்கவும், துணி தோய்க்கவும், கூப்பிட்டால் வேலைக்காரர்கள்போல் பதில்சொல்லவும், பெண்களுக்குத்தெரியவேண்டும். தகப்பன்விருந்தாளிகளுக்கு மரியாதைசெய்ய விரும்பினால், தகப்பனுக்குப் பின்னால் நின்று பல உண்டிகளை எடுத்துக் கொடுத்துப் பல பானங்களை ஊற்றிக் கொடுக்கவேண்டும். இந்தமாதிரிச் செய்வது பெண்களுக்கு இளப்பமல்ல; யார் மனக்களிப்புடன் ஊழியம் செய்தாலும், அவர் மெச்சப்படுவார்.

இங்ஙனம் வீட்டு வேலைகளைக் கருத்துடன் செய்பவர்கள் கீழ்வகுப்பாரே என்று நினைக்கவேண்டாம். மேலான உயர் வகுப்பாரைத் தவிர மற்ற யாவரும் செய்வார்கள்.

இப்படி வீட்டு வேலைகளைச் சுறுசுறுப்பாகவும் லஜ்ஜையில்லாமலும் செய்யச் சிறுவயதிலிருந்தே கற்றுக்கொள்வார்கள். ஆயினும், ஜப்பானியப் பெண்களுக்குத் தளுக்கு மினுக்காய் நடக்கத் தெரியாது; அவர்கள் பரபரப்புள்ளவர்கள் அன்று; மேனாட்டுச்சிறுமிகள் சிறுவரைக்கவருமாறு பலஜாலங்கள் செய்கிறது போல செய்யத்தெரியாது; அவளுக்குப் பதினாறு வயதானவுடன் தகப்பன் ஒரு புருஷனைத் தேடி வைப்பான்; இந்தப் புருஷனை அவள் முணு முணுக்காது ஒப்புக்கொள்வாள்; அவள் அதைத் தலை விதியாய்



நினைப்பாள்; இப்படித்தான் நமது கலியாணம் எப்போதும் நடக்குமென்று எண்ணுவாள்; நாம் கலியாணமாகாத கன்னிக்கிழவியாய் இருப்போமென்று ஒருபோதும் நினைக்கமாட்டாள்; அவளுக்குக் கலியாணமானவுடன் புருஷன் வீட்டுக்குப்போய்ப் புருஷனோடு வாழ்வதில் அவனது குடும்பத்தில் ஒருத்தியாய்க் கலந்து போகிறாள்; ஏனென்றால், புதிதாய் மணந்த சிறுவன் தன் குடும்பத்தை விட்டுத்தனியாய்ச் சம்ஸாரம் செய்யக் கனவும் காணமாட்டான். கணவன் வீட்டில் இச்சிறு மனைவி எஜமானியல்ல; மாமியிட்ட வேலையைச் செய்யச் சித்தமாயிருப்பாள். பொழுது விடிந்தால் அவள் முதற்கடமை மாமி மாமனுக்குச் செய்யப்படுமேயல்லாமல் கணவனுக்கல்ல. மாமிக்கு இச்சிறு பெண் ஒரு புதிய வேலைக்காரி என்றே சொல்லவேண்டும்.

கணவனுக்குப் பெற்றோரில்லாமற் போனாலும், மனைவி தன் கணவனுக்குச் சமானமான ஸ்தானங் கொண்டவளன்று; மாமி மாமனில்லாத அவள் அகமுடையாளன்று, அகங்காப்பாள், தலைவேலைக்காரி; எல்லாப் பண்டிகைகளையும் சடங்குகளையும் ஒழுங்குபடுத்தி ஏற்பாடு செய்கிறவள். தன் கணவனுடன் வெளியே போவது வெகு அரிது; அப்படிப்போனால், அவள் தன் புருஷன் வேலைக்காரியைப்போலத்தான் போவாள். சக்கிரவர்த்தியின் மனைவியார்கூட சக்கிரவர்த்திக்குத் தாமே பணிவிடை செய்யாமல் தப்ப முடியாது.

பொழுது விடிந்தவுடன், மனைவி முதல் முதல் எழுந்திருக்கிறாள்; இரவெல்லாம் எரிந்துகொண்டிருந்த சிறிய விளக்கை அவிக்கிறாள்; பிறகு அழகு பண்ணிக்கொண்டு உடைகள் உடுத்திக்கொண்டு, வேலைக்காரர்களை எழுப்பிவிடுகிறாள்; பிறகு காலைச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்கிறாள்; இப்படியெல்லாவற்றையும் சித்தம்பண்ணி வைத்துவிட்டுத் தன் புருஷனை எழுப்புகிறாள். இந்தப்புருஷன் வேலைசெய்ய வெளிப்புறப்பட்டபோது, புருஷனுக்கு வேண்டிய பாதக்குறடு (Sandal), புஸ்தகம், குடை முதலானவற்றை வாசற்படியண்டை வைத்துக்கொண்டு சித்தமாய்க் காத்திருக்கிறாள்.

ஜப்பானியப் பெண்களுக்கு வயது முதிர முதிரக், கிழத்தனம் வருதற்கு முன்னாலேயே அழகு குறைந்து போகிறது. 35-வயதில் தன் கன்னத்துச் சந்தமே போய்விடுகிறது. கண்களில் பிரகாசம் இருக்கிறதில்லை. பார்க்கப்பார்க்க இன்பந்தரும்படிச் சிறுவயதிற் கட்டழகி முதுமையில் காய்ந்து உலர்ந்த மேனியாளாவாள். ஆயினும், அவள் இப்படியாய்ப்போனோமே யென்று துக்கப்படுகிறதில்லை; அழகு பண்ணிக்கொண்டு சிறு பெண்ணாய்க் காண முயல்கிறதில்லை. தன் வயதுக்குத் தக்கபடி தன் உடையை உடுப்பாள். தன் சிறு வயதில் மூத்தோர்க்குப் பணிவிடை செய்வது சற்குணமாக நினைத்து நெடுநாளாய் இடைவிடாமல் பணிவிடை செய்து வந்ததுபோல், இப்போது தன் கிழவயதில் தன் மருமகள் தனக்குப் பணிவிடை செய்யக்



கிடைத்திருக்கிறாள் என்றும் அதனால் இன்பசுகமாய் இருக்கலாம் என்றும் தெரிந்து கொள்ளுகிறாள்.

ஜப்பான் சரித்திரம் தெரிந்தவர்கள், சக்கிரவர்த்தியானவர் அதிகாரம் செல்வாக்கு ஒன்றுமில்லாமல் வெகுநாள் வெறும் பொம்மைபோல் இருந்ததை அறிவார்கள். அதிகாரமெல்லாம் ஷோகன்கள் கையிலும் அவரையடுத்திருந்த டாய்மியாஸ் (Daimios) என்ற பிரபுக்களிடத்திலும் இருந்தது. இந்த டாய்மியாஸ்களுக்குச் சாமுராய் என்பவர்கள் ஊழியஞ் செய்தார்கள். இந்தச் சாமுராய் என்பவர்கள் போர்விருப்பமுள்ளவர்கள், படித்தவர்கள்; இவர்கள் கடைசியாய் நாட்டுக்கு நிஜமான தலைவர்கள் ஆனார்கள். இப்போது கூட, இந்தச் சாமுராயின் தலைமுறையார்களே ஜப்பானுடைய பெருமையைக் காப்பாற்றி வருகிறார்கள். இவர்களின் மனைவியார்களுக்கு இப்போதுள்ள ஜப்பானியர்கள் மேல் வெகு செல்வாக்குண்டு; ஆகையால், ஜப்பான் தேசத்து ஸ்திரீகளைப் பற்றிச் சொல்லும்போது சாமுராய் ஸ்திரீகளைப் பற்றிச் சொல்லாமற் போனால் அது சம்பூரணமாகாது.

---

### 3. சாமுராய் ஸ்திரீகள்

முற்காலத்தில் டாய்மியாஸ் (Daimios) களின் மனைவியாருடைய வேலைக்காரிகளாய் இந்தச் சாமுராய் ஸ்திரீகள் இருந்தார்கள்; மிகத் தாழ்ந்த ஊழியங்கள் செய்துவந்தார்கள்; டாய்மியாஸ் (Daimios) என்பவர்கள் போன்ற பல்வான்களின் மனைவிமாருக்கு

ஏவல் புரிவது ஒரு கண்ணியமான ஸ்வதந்திரம் என்று பாவித்தார்கள். ஆனால், அம்மனைவிமாருக்கு ஊழியம் செய்யும் வேலைகளை அன்றி மற்ற வேலைகளும் செய்வார்கள்; டாய்மியா(Daimios)வும் அவன் பரிவாரங்களும் வீடுவிட்டு வெளியேறியபோது, அவன் வீட்டைச் சாமுராய்ப் பெண்கள் சத்துருவாராமல் காப்பது கடமை. சத்துரு வருவானானால், அப்போது போர் வேஷம் பூண்டு ஆண்பிள்ளை போல் சண்டை செய்வதுண்டு; அவர்கள் நல்ல பேரும் கீர்த்தியும் கெடாமல் மல்யுத்தம் புரிவதுண்டு; சிலவேளையில், தம் புருஷர்களைத் திருட்டுத்தனமாய்க் கொன்றுவிட்ட கொலை பாதகர்களைப் பழிவாங்கும் பொருட்டுச் சண்டை போடுவதுண்டு.

இதெல்லாம் நல்லதே! ஜப்பான் இப்போது புதுவிதமாய்த் திரும்பிவிட்டது. சக்கிரவர்த்தி சிங்காதனமேறி யிருக்கிறார். அவர் இராச்சியம் இப்போது மேற்கத்தி மாதிரியாய் மெல்ல மெல்ல மாறிக்கொண்டு வருகிறது. ஆனால், சாமுராய் ஸ்திரீகள் என்னானார்கள்? அவர்களைத்தான் இப்போது ஜப்பான் நம்பியிருக்கிறது! அவர்கள் வாத்திமார்களாயும் தாதிமார்களாயும் உழைக்கிறார்கள்; அமரிக்கையான காலங்களுக்குரிய சாந்தோபாயங்களால் போர் செய்வார்களேயன்றி யுத்தத்துக்குரிய குரூரமான ஆயுதங்களை ஏந்தமாட்டார்கள்; அப்படிச்செய்ய அவசியமில்லை. ஜப்பானியஸ்திரீகளில் சாமுராய் ஸ்திரீகள் புத்திசாலிகள். தம் நாட்டு ஸ்திரீகளை உயர்ந்த நிலைக்குத் தூக்கிவிட ஏற்கனவே பல செய்து



வருகிறார்கள். அவர்களுக்கு ஆண்மக்களுக்குள்ள புத்தியுண்டு. அவர்களில் பலருக்குத் தங்கள் தேசத்து ஸ்திரீகள் குடும்ப நிர்வாகத்தில் ஸ்வதந்திரம் பெற்றிருக்கவேண்டுமென்பதும், கணவனைக்கட்டும் தகப்பனைக்கட்டுமே ஆண்பிள்ளைகளின் புத்தி எப்படிப்போகிறதோ அப்படிச் செய்ய வேண்டியவர்களாகிப், பராதீனமுற்றிருப்பது மாற வேண்டுமென்பதும், ஆசையாய் இருக்கின்றன; அதாவது, தங்கள் பூர்வீக வழக்கத்தை விட்டு ஐரோப்பிய ஸ்திரீகள் போல மாற வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த விருப்பம் நிறைவேறி விடுமென்று சிலர் நினைக்கிறார்கள்.

---

## 4. கற்ற ஸ்திரீகள்

மற்ற எல்லாவிஷயங்களிலும் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதுபோல, பெண்படிப்பு விஷயத்திலும் புதிய ஏற்பாடுகள் தீவிரமாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. ஐரோப்பிய நாகரீகத்துக்குக் கல்வியே மூலகாரணமென்று ஜப்பானியர் அறிந்துகொண்டார்கள். துவக்கத்தில் கிறிஸ்தவப் பாதிரிகள் பெண்களுக்குத் தனியாய்ப் பள்ளிக்கூடங்கள் வைத்துத் தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக ஸ்திரீகளுக்குப் படிப்பு சொல்லி வைத்தார்கள். ராஜாங்கத்தார் பாதிரிகளின் முயற்சிக்கு உதவி செய்ததோடு தாங்களாகவும் கல்விச்சாலைகள் ஸ்தாபித்து நடத்த ஆரம்பித்தார்கள். பிள்ளைகளைப் போல பெண்களும் 6-வயதுமுதல் 12-வயது வரையில் பள்ளிக்கூடங்களில் வாசிப்பது

கட்டாயமென்று சட்டம் செய்தார்கள். கீழ்த்தரப் படிப்புக்காக அநேக ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டது மன்றி உயர்தரப் படிப்புக்காக ஒரு ஹை ஸ்கூலும் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாறு பெண்கள்கல்வி அபிவிர்த்தியாகிக் கொண்டு வருகையில், சாமானிய ஜனங்களுக்கு அதில் ஒருவிதமான அருவருப்பு தோன்றத் தொடங்கிற்று; நவீனப் படிப்பினால் பெண்கள் கெட்டுப் போகிறார்கள், கருவமும் டம்பமும் அடங்காமையும் உண்டாகி வருகின்றன. அவர்களுடைய துர்நடத்தையால் வீட்டில் அமைதிகுறைந்து போகின்றது. ஜப்பானிய ஸ்திரீகளுடைய உத்தம லக்ஷணங்கள் இல்லாமல் படிப்பு கற்ற பெண்கள் பெரியோரிடத்தில் மரியாதையும் அடக்கமும் இல்லாதவர்களாகிவிட்டார்கள். ஸ்திரீகளுக்கு வீட்டுக்காரியங்களைச் செய்யக் கற்பதும் நன்னடத்தையிற் பயிற்சி பெறுவதும் அவசியமேயன்றி, அவர்களுக்கு உயர்ந்த நூற்பயிற்சி அநாவசியம்,—இவ்விதமாகச் சாமானிய ஜனங்கள் எண்ணத்தலைப்பட்டார்கள். நம்தேசத்தில் தற்காலம் பெண்கல்வியைப்பற்றி இவ்வாறு நினைப்பவர்கள் இருக்கிறார்களல்லவா?

சாமானிய ஜனங்கள் என்ன எண்ணினாலும், பிள்ளைகளின் படிப்பைப்போல பெண்களின் படிப்பு வேகமாய் விர்த்தியாகி வந்தது. ராஜாங்கத்தார் ஸ்தாபித்த உயர்தர ஸ்கூல்களன்றிச் சொந்த ஸ்கூல்களும் தர்மவான்களால் ஸ்தாபிக்கப்பட்டன. படிப்புப் பெறும் பெண்களின் தொகை அதிகப்பட்டு வந்



தது. அவர்களுக்கென்று பத்திரிகைகளும், மாகஸீன்களும் (மாதம் ஒரு முறை அல்லது இன்னும் நீண்ட காலத்துக்கு ஒரு முறை பிரசாரம் செய்யப்படும் நானா விஷயங்கள் அடங்கின புஸ்தகங்களும்), சிறு புஸ்தகங்களும், பெரும் புஸ்தகங்களும், பிரசாரம் செய்யப்பட்டன. பெண் கல்வியில் இருந்த அருவருப்பு குறைந்து அதைப் பரவச்செய்வதில் உத்ஸாகம் உண்டாயிற்று. இந்தப் புது உணர்ச்சியின் பயனாக 1901-ம் வருஷத்தில் பெண்களுக்கென்று ஒரு சர்வகலாசாலை (University) ஸ்தாபிக்கப்பட்டது. அதில் வீட்டு வேலைகள் கற்பிக்க ஒரு பாகமும், ஜப்பானிய நூல்களைக் கற்பிக்க ஒரு பாகமும், ஆங்கில நூல்களைக் கற்பிக்க ஒரு பாகமும், அமைக்கப்பட்டன. முதல் வருஷத்தில் 500-பெண்களும், இரண்டாவது வருஷத்தில 800-பெண்களும், மூன்றாவது வருஷத்தில் 1,000-பெண்களும் சேர்ந்து கற்றார்களென்றால், ஜப்பானிய ஸ்திரீகளுக்குக் கல்வியில் உண்டாகிவந்த உத்ஸாகப் பெருக்கத்துக்கு வேறு அத்தாக்ஷி என்ன வேண்டும்!

இவ்வாறு ஸ்திரீகளுக்கு, ஆண் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதுபோலவே உயர்ந்த கல்வி கற்பிப்பதில், பிறகு அவர்கள் தங்கள் குடும்பங்களுக்குத் திரும்பிப் போகும்போது, வீட்டுக்காரியங்கள் செய்ய விருப்பமாவது சக்தியாவது இல்லாதவர்களாயிருக்கக்கூடாது, என்பதை ஜப்பானியக் கல்விமான்கள் அறிந்திருக்கிறார்கள். டோகியோவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மேற்கண்ட யூனிவர்ஸிட்டியில் தூரமான பல விடங்களி

விருந்து பெண்கள் போய் வாசிப்பதுமன்றி யூனிவர்ஸிட்டிக் கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் விடுதிகளில் 500-பெண்கள் வரையில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு வீட்டு வேலைகள் சொல்லிக் கொடுக்கவும், பொதுவாய் அவர்களுடைய நடத்தையை ஒழுங்குப்படுத்தவும், தாதிமார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தாதிமார்களிடத்தில் பெண்கள் சமையல் செய்தல் முதலான சகல வீட்டுக் காரியங்களையும் செய்து கற்றுக்கொள்கிறார்கள். வீட்டிலிருந்து குடும்பங்களை நிர்வகிக்கும் ஸ்திரீகள் எவ்வாறு நடக்கவேண்டுமோ அவ்வாறு நடந்து பழகிக்கொள்கிறார்கள். இப்படிப் பழக்கம் பெற்ற ஸ்திரீகள் கல்வி முடிந்த பிறகு வீடுசெல்லும்போது, வீட்டு வேலைகளைச் செய்யத் திறமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். கல்வி கற்றவர்கள் ஆனபடியால், பழைய காலத்து ஸ்திரீகளை விட இவர்கள் வீட்டு வேலைகளை யுக்தியாயும் செலவு மட்டாயும் முன் பின் யோசனையுடனும் செய்யக்கூடியவர்களாகிறார்கள். படித்த பெண்கள் வீட்டு வேலைக்கு உதவமாட்டார்களென்ற பழிக்கு இடமில்லாமற் போகின்றது. ஸ்கூல் படிப்பும் வீட்டுக் கடமையும் ஒவ்வுவன அல்லவென்று உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் பெண்கல்விக்கு ஆட்சேபம் சொல்லப்பட்டு வருகிறது. ஐரோப்பிய தேசங்களிலும் இந்த ஆட்சேபம் இல்லாமலில்லை. ஏஷியா தேசங்களில் ஐரோப்பிய தேசங்களிலெப்படியோ அப்படி உயர்தரக்கல்வி சொல்லி வைக்கப்படும்போது, இந்த



ஆட்சேபத்துக்கு இடம் தோன்றுமோ தோன்றாதோ, தெரியவேண்டும். ஜப்பானியக் கல்வியாளர்கள் டோகியோ யூனிவர்ஸிட்டியில் செய்யும் முயற்சி முற்றிலும் நிறைவேறுமானால், அப்போது, பெண்களின் மனப்பயிற்சிக்குச் சொல்லப்படும் இந்த ஆட்சேபம் ஒருக்கால் காலவளவில் நீங்கியே விடக்கூடும். இவ்வாறு கல்வி கற்ற பெண்கள் வீட்டுக்கடமையைச் செலுத்தத் திறமையுடையவர்களாவதோடுகூடத், தம்பாலார்க்குரிய விசேஷ குணங்களையும் பொதுவாய் ஜப்பானிய ஸ்திரீகளில் உத்தமிகள் என்று பேர் வாங்கினவர்களுடைய மாதிரிகளையும் பின்பற்றித் தங்கள் இனத்தாரின் பூஷணங்கள் போல அவற்றைக் காத்தல்வேண்டும். ஜப்பானியர் தற்காலம் அன்னிய தேசங்களிலிருந்து அநேக புதுமைகளைத் தங்கள் நாகரீகத்தில் அமைத்துக்கொண்டு வந்தாலும், தங்கள் ஜனத்தாருக்குரிய விசேஷ லக்ஷணங்களை மறக்கவில்லை. ஒரு ஜனத்தார் உலகத்து மற்ற ஜனத்தாருடன் பழகுகையில், மற்ற ஜனத்தாருடைய நல்ல குணங்களையும் மாதிரிகளையும் அங்கீகரிக்காமல் முற்றிலுமிருத்தல் சாத்தியமல்ல. அவசியமானவைகளை அங்கீகரிக்கையில், அநாதிகாலமாய்ப் பரம்பரையாய் நிலைபெற்றிருக்கும் குணவிசேஷங்களை மாற்றுதல் சாத்தியமுமல்ல, நல்லதுமல்ல. ஆங்கிலேயரைப் பார்த்தும் பிரான்ஸ-க்காரரைப் பார்த்தும் ஜப்பானியர் எவ்வளவு புதுமைகளைக் கற்றாலும் ஜப்பானியர் ஜப்பானியராகவே இருக்கவேண்டுமென்பது அத்தேசாபிமானிக

ளின் விருப்பம். ஜப்பானிய ஸ்திரீகள் வெளித்தோற்றத்தில் எவ்வளவு மாறினாலும், அவர்களுடைய அந்தரங்க ஸ்வபாவமானது மாறாமலே எப்போதும் போலிருக்கும்.

நமது தேசத்தில் பெண்கல்வியைப்பற்றிச் சில அம்சங்களில் அபிப்பிராய பேதங்கள் இருப்பனபோல ஜப்பானிலும் இருக்கின்றன. பெண்களுக்குப் புத்திப் பயிற்சி செய்வதில், வீட்டுக் காரியங்களைச் செய்யவும் குழந்தைகளை வளர்க்கவும் எவ்வளவு பயிற்சி அவசியமோ அவ்வளவுமட்டும் செய்விப்பதா? அல்லது, அவர்கள் வீட்டுக்கு வெளியில் உலக விவகார சம்பந்தமான விஷயங்களிற் கலப்பது பொருத்தமெனக்கருதி, அதற்குத் தகுந்த புத்திப்பயிற்சி செய்விப்பதா? என்று அபிப்பிராய பேதம் இருக்கின்றது. டோகியோ பெண் யூனிவர்ஸிட்டியை ஸ்தாபித்த ஜின்ஸோ நருஸே(Professor Jinzo.Naruse) இரண்டாவதாய் குறித்த அபிப்பிராயத்தைக் கொண்டவர். புருஷருக்கு ஸ்திரீகள் உதவியாயிருக்கவேண்டுமானால், புருஷர் சமூக நன்மைக்குற்ற பொதுக் காரியங்களைச் செய்யக் கடமைப் பட்டிருப்பதுபோல ஸ்திரீகளும் கடமைப்பட்டிருப்பதாகக் கொள்ளவேண்டும். புருஷர் ஜீவனோபாயத்துக்குற்ற அலுவலைச் செய்து மிகுந்த நேரத்தைச் சமூக நன்மையின் பொருட்டுச் செலவு செய்வதுபோல் ஸ்திரீகளும் வீட்டுக் கடமைகளைச் செலுத்தி மிகுந்த நேரத்தைச் சமூக நன்மையின் பொருட்டுத் தம்பாலாருடன் சேர்ந்தாவது புருஷருடன் கலந்தாவது செல



விடவேண்டும். புருஷரும் ஸ்திரீயும் சமூகத்தின் இரண்டு கண்கள்போலக் கருதப் படுவார்களாயின் ஒருகண் பார்வையற்றிருப்பது திருஷ்டி வன்மைக்கு உற்றதாகமாட்டாது. ஸ்திரீகளின் உதவியின்றிப் புருஷரின் முயற்சிகள் முற்றிலும் பயன்படா. அல்லது, அவைகளுக்கு இடையூறுகள் நேரிட்டு வெகு தாமசத்தின்பேரிலேயே அவைகள் பயன்படும். ப்ரொபஸர் ஜின்ஸோ நருஸேயின் அபிப்பிராயப்படி ஸ்திரீகள் சமூக நன்மையில் கருத்து வைக்கவேண்டுமானால், அவர்களுக்குப் புருஷருக்கொத்தபடி உயர்ந்த விசாலித்த புத்திப்பயிற்சி அவசியம். புருஷருக்குள்ள திறமைகள் ஸ்திரீகளுக்குமுண்டு. சமயங்கள் கிடைக்குமானால் ஸ்திரீகள் எந்தவழியிலும் தம் முயற்சியைச் செலுத்திப் புகழ்பெறக் கூடியவர்கள். ராஜதந்திரம், தௌத்தியம், பொருதல், இவைகளிலுங்கூட ஸ்திரீகள் பிரவேசித்துப் புகழ்ச்சி பெற்றிருக்கிறார்கள். உலக சரித்திரத்தில் எவ்வளவோ திருஷ்டாந்தங்கள் சொல்லக்கூடும். நமது இந்துசரித்திரத்திலேயே பலவற்றை எடுத்துக் காட்டக்கூடும். ஆகையால், ஸ்திரீகளின் கல்விப் பயிற்சிக்கு முடிவாவது எல்லையாவது இல்லை. ப்ரொபஸர் ஜின்ஸோ நருஸே யூனிவர்ஸிட்டியில் எவ்வளவும் மதபோதம் கூடாதென்கிறார். வித்யா ஸ்தாபனங்களுக்கும் மதத்துக்கும் சம்பந்தமே கூடாதாம். நாஸ்திகமத போதகமும் கூடாதென்கிறார். கவர்ன்மெண்டு கல்விச்சாலையை நடத்தும் சில போதகர் சிறுவர் மனதில் நாஸ்திக விதைகளை ஊன்றுகிறார்களாம்.

அது பிசகென்று இந்த ப்ரொபஸர் கண்டிருக்கிறார். அம்மாதிரி எம்மதமானாலும் அதற்குச் சார்பான உணர்ச்சியை வளர்த்தலும் கூடாதென்கிறார். கல்விச் சாலைகள் நடுநிலையைப் பற்றியிருப்பதே நலமென்பது இவர் அபிப்பிராயம். தற்காலம் இந்தியாவில் புது அபிப்பிராயம் இப்படியில்லை, கல்விச்சாலைகள் இந்த நடுநிலையைப் பற்றியிருப்பதால் பிள்ளைகள் மனம் துன்மார்க்கத்திற் செல்வதாகி ஆபத்துக்கிடமாகி யிருக்கிறதென்று எங்குப் பார்த்தாலும் அதிருப்தி யுண்டாயிருக்கின்றது. சிறுவரின் கல்விப் பயிற்சியில் மதப் பயிற்சியும் ஒழுக்கப் பயிற்சியும் கலக்கவேண்டுமென்பது உலகத்தில் எப்பாகத்திலும் பொது அபிப்பிராயமாயிருக்க, ஜப்பானில் மட்டும் வேறுவிதமாயிருப்பது அத்தேசத்து விந்தைகளில் ஒன்றெனக் கொள்ளல் வேண்டும்.

---

## 5. ஸ்திரீகளின் சிலதொழில்கள்

ஜப்பான் தேசத்து ஸ்திரீகள் எப்படிப் பொழுது போக்குகிறார்களென்பதைப் பற்றி அங்கு வசிக்கும் ஓர் இந்தியர் "லேடீஸ் மாகஜீன்" என்கிற மாதாந்தப் பத்திரிகையில் சில விவரங்களைக் குறிப்பிட்டெழுதுகிறார். நம் தேசத்தில் ஸ்திரீகள் பொதுவாய் வேலை செய்து சம்பாதிப்பது வழக்கமல்ல. கேவலம் கூலிக்காரர்கள் வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீகள் மட்டும் வீட்டுக்கு வெளியே போய்ச் சம்பாதிப்பதுண்டு. மற்ற வகுப்புகளைச்சேர்ந்த ஸ்திரீகள் வீட்டுவேலைகளைச் செய்



வார்களேயன்றி வெளியே போய்ப் புருஷரைப்போல் சம்பாதிப்பது வழக்கமில்லை. நம் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டுமென்று சொல்லும்போது, சாமானிய ஜனங்கள் ஸ்திரீகள் படித்துச் சம்பாதிக்கப் போகிறார்களாவென்று அதை ஒரு ஆக்ஷேபமாகச் சொல்லுகிறார்கள். ஜப்பான் தேசத்து ஸ்திரீகளின் நிலைமை வேறு மாதிரியாக இருப்பதாகத் தெரிகின்றது. விவசாய வேலையும் கூலிவேலையும் செய்யும் ஸ்திரீகளன்றி மற்ற ஸ்திரீகள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயினும், ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து சம்பாதிப்பது வழக்கம். உயர்ந்த வகுப்பு ஸ்திரீகளும் வேலை செய்கிறதுண்டு. வேலை எதற்குச் செய்கிறார்களென்றால் "என்ன பைத்தியக்காரனா யிருக்கிறாய்? வேலை செய்யாமல் தூக்கத்திலும் வீண்பேச்சிலும் காலம் கழிக்கவேண்டுமா?" என்று இந்த ஸ்திரீகள் பதில் சொல்லுவார்கள். ஜப்பானில் ஆண்பிள்ளைகளைப்போல் பெண்பிள்ளைகளும் ஸ்கூல்களில் வாசிப்பது கட்டாயமாய் செய்யப்பட்டிருக்கின்றது. இலவசமாக ஆறு வருஷகாலம் கீழ்த்தர ஸ்கூல்களில் படிப்பு பெறுவார்கள். ஆகையால், எந்தப்பெண் எந்த வேலை செய்தாலும், அவள் படித்தவளாகவே யிருப்பாள். இன்னவேலை செய்வது இன்னவேலை செய்வதில்லை, என்கிற வித்தியாசமில்லை. அம்பட்ட வேலை செய்வார்கள், ஷாப்புகளில் வேலை செய்வார்கள். பாக்டரி அல்லது தொழிற்சாலைகளில் வேலை செய்து கூலி பெறுவார்கள். சங்கீத வாத்தியங்கள் செய்வதிலும்

சங்கீதம் சொல்லி வைப்பதிலும், ஜீவனஞ் செய்வார்கள். போஸ்ட் ஆபீசுகளிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் குமாஸ்தாக்களாக இருப்பார்கள். தையல் வேலை செய்வார்கள். இந்த நானாவித வேலைகளுக்குத் தினம் ஆறு அணா முதல் $1\frac{1}{2}$-ரூபாய் வரையில் கூலி கிடைக்குமாம்.

இந்த வேலைகள் அனைத்தும் சாமான்னிய மத்திய வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள் செய்ய, சம்பாதித்து ஜீவித்தல் அவசியம் இல்லாத உயர்குல ஸ்திரீகள் சும்மாவிருப்பதில்லை. இவர்களில் அநேகர் வைத்திய சாலைகளில் தாதிமார்களாய் அமர்கிறார்கள். தாதி வேலை செய்கிறதற்குப் படிப்பு அவசியமாகையால், அத்தொழிலுக்காக ஏற்பட்டிருக்கும் ஸ்கூல்களில் பயிற்சி பெறுவார்கள். ஜப்பானில் ஸ்திரீகளடங்கிய தேசாபிமான சங்கம் ஒன்று இருக்கின்றது. அதில் தேசத்தில் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த ஸ்திரீகள் மெம்பர்களாய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தேசம் சமாதானமாயிருக்கும் காலங்களில் பொது நலத்தின் பொருட்டு மதம், ஒழுக்கம், கல்வி, தொழில், இத்தகைய பற்பல துறைகளில் வேலை செய்வார்கள். ஜப்பானியரது மதம் பௌத்தமதமாகையால் அந்த மதத்தை — போதிக்கும் ஆசாரியர்களாய்ப் பல ஸ்திரீகள் வேலைசெய்வார்கள். யுத்தகாலங்களில் இந்தத் தேசாபிமான சங்கத்தில் சேர்ந்த ஸ்திரீகள் யுத்தத்துக்குச் சென்றிருக்கும் போர்வீரர்களுக்கு அவசியமான உடை, உக்கிடி முதலிய பதார்த்தங்களைச் செய்து



அனுப்புவார்கள். சில ஸ்திரீகள் யுத்தகளத்துக்கே சென்று அங்குக் காயப்பட்டவர்களுக்கும் வியாதி வந்தவர்களுக்கும் தாதிமார்களாய்ப் பணிவிடை செய்வார்கள். இவ்வாறு ஸ்திரீகளும் புருஷரைப்போல படித்தவர்களாயும் தேசாபிமான முள்ளவர்களாயும் சோம்பல் என்பதே இல்லாமலுழைக்கிறவர்களாயும் இருப்பார்களானல், ஜப்பான் தேசம் சொற்ப காலத்துக்குள் உன்னத நிலைமைக்கு வந்திருப்பது ஆச்சரியமல்ல.

---

# CHAPTER XI

# பதினோராவது அதிகாரம்

## தொழில்கள்

விவசாயம்—ஜப்பானில் விளையும் விளைச்சலே ஜப்பானியர்களுக்குப் போதாது—இதைப்பற்றி ஜப்பானியத் துரைத்தனத்தார் படும் கவலையும் சிரமமும்—துணைத் தொழில்கள்—பட்டு, தேயிலை, சுரங்கப்பொருள், விறகு, நெசவு, காயிதம், பாய், முதலியன—பட்டுத் தொழில்—முதலில் சீனரால் கற்பிக்கப்பட்டது—பட்டுப்பூச்சி வளர்த்தல், பட்டுசெய்தல் இரண்டும் விவசாயத்துக்கு அடுத்தபடியான தொழில்—ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு தனியான அறையில் பட்டுப்பூச்சி வளர்க்கப்படும்—பட்டுப்பூச்சியின் தீனியாகிய மல்பெரிச் செடிகள் தனிப்பயிராய் வளர்க்கப்படுகின்றது—இதற்கு இராஜாங்கத்தாரின் ஒத்தாசை—தேயிலை—இந்தியாவில் வெற்றிலை எப்படியோ அப்படி ஜப்பானில் தேயிலை—தேநீர் கொடுத்துத் தோழமை தேடுவது வழக்கம்—தேநீர் பால் போட்டுண்பதில்லை—மீன் பிடித்தல்—மீன் ஆகாரமும் உரமுமாம்—இந்தியாவில் உப்புப்போல ஜப்பானில் புகையிலை.

இந்தியாவைப்போல் ஜப்பானிலும் விவசாயமே ஜனங்களின் முக்கிய ஜீவனாதாரம். மேல்நாட்டாருடைய சம்மந்த முண்டானபிறகு கைத்தொழில்கள் தோன்றி வந்தாலும், ஜனங்களில் நூற்றுக்கு 60-பாகத்தினர் விவசாயம் செய்து ஜீவிக்கிறார்கள். ஜப்பானில் பூமி



விசேஷ வளப்பம் பெற்றதல்ல, கால்நடைகளுமில்லை. பௌத்த மதத்தினரானதால் ஜனங்கள் மாமிசம் உண்ணாதது இதற்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. விவசாயிகள் சரீரத்தை உழைத்தே எல்லாக் காரியங்களும் செய்கிறார்கள். சொற்ப விஸ்தீரணமுள்ள பூமியிலிருந்து ஏராளமான ஜனத்தொகைக்கு ஆகாரம் கிடைக்கவேண்டி யிருப்பதால், இந்தத் தொழில் வெகு கவலையுடன் திறமையாய்ச் செய்யப்பட்டு வருகின்றது. நானாவிதமான எருக்களை யூட்டிப் பூமியைக் கொழுக்கச்செய்து வளப்பமில்லாத நிலமும் நன்றாய் விளையும்படிச் செய்யப்படுகிறது. நம் தேசத்து ஜமீன்தார்கள், மிராசுதார்கள், இவர்களைப்போல் ஜப்பானில் பெரும் சொத்துள்ள விவசாயிகள் இல்லை. சராசரி $2\frac{1}{2}$-எக்கரா விஸ்தீரணமுள்ள சொத்துக்களே பெரும்பான்மை யானவைகள். வீட்டைச் சிறுகக் கட்டி விசாலமான புறக்கடையில் கொஞ்சமேனும் வீண் போகாமற் பயிர் செய்கிறார்கள். ஜப்பானிலும் சைனாவிலும் விவசாயம் திறமையாய் நடத்தப்படுவது போல் உலகத்தில் எத்தேசத்திலும் அவ்வளவு திறமையாய் நடத்தப் படுவதில்லையென்று சொல்லப்படுகிறது. விவசாயத்தைப் பற்றித் தனியாய் ஒரு அதிகாரத்தில் வரையப்பட்டிருப்பதைக்காண்க.

ஜப்பானியர் விசேஷமாய் அரிசியையே சாப்பிடுகிறவர்கள். அதுவும் மச்சமுமே(Fish) அவர்களுடைய முக்கிய உணவு. கோதுமை, சோளம், கேழ்வரகு, முதலிய மற்றத் தானியங்கள் இந்தியாவில் விளைவது

போல் அங்கு விளையவில்லை, மேட்டுப் பூமிகளில் மாத்திரம் கொஞ்சம் விளைகின்றன. ஜனத்தொகை வருஷம் 4-அல்லது 5-லக்ஷமாக அதிகப்பட்டுக்கொண்டு வருகிறபடியால், ஜனங்களுக்கு வேண்டிய ஆகாரம் முற்றிலும் ஜப்பானிய பூமியிலிருந்து பெறமுடியுமோவென்று ராஜாங்கத்தார் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு உரம்போட்டு எவ்வளவு திறமையாய் விவசாயஞ் செய்தாலும், பூமி கொடுக்கக்கூடியதைத்தான் கொடுக்குமேயன்றி, மேன்மேலும் அதிகமாய் விளைந்துகொண்டே போகாது. ஜனத்தொகையோ அப்படியல்ல, அதன் வளர்ச்சிக்கு அவதியில்லை. ஆகையால், ஒன்று, ஜனங்கள் அன்னிய தேசங்களுக்குப் போய் ஜீவிக்கவேண்டும், அல்லது தேசத்தில் விளையும் உணவுப்பொருள்கள் அதிகமாக வேண்டும். இங்கிலாந்தைப்போல உணவுப் பொருள்களை அன்னிய தேசங்களிலிருந்து தருவிக்கலாம். அப்படித்தருவிக்கும்போது, அவைகளுக்கு ஈடாகத் தேசத்தில் கைத்தொழிற் பொருட்கள் செய்யப்பட்டு ஏற்றுமதியாகவேண்டும். இந்த நிலைமைக்கு ஜப்பான் இன்னும் வரவில்லை. சமீபத்தில் ஜப்பான் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட அன்னிய தேசங்களிற் போதுமான இடமிருக்கின்றது. பார்மோஸா, ஸகேலியன், இந்தத் தீவுகளிலும் சமீபத்தில் ஜப்பான் தன்னுள் சேர்த்துக் கொண்ட கொரியாவிலும் ஜப்பானிய விவசாயிகள் குடியேறி விசாலமான பூமிகளைச் சேர்த்துப் பயிர் செய்யக்கூடும்; ஆனால், அப்படி ஜீவிக்கக்கூடியவர்கள்



அதிகமில்லை. ஆகையால், தேசத்தில் விளையும் உணவுப் பொருள்களை அதிகப்படுத்துவதே சரியென்று ராஜாங்கத்தார் கவலை கொண்டு முயற்சிசெய்து வருகிறார்கள்.

எந்தத் தேசத்தில் விவசாயம் பிரதானமான தொழிலா யிருக்கின்றதோ அந்தத்தேசத்தில் விவசாயத்துக்குத் துணையாய் வேறு சில்லறைத் தொழில்கள் குடும்பத்தில் செய்யப் பட்டாலன்றி ஜனங்கள் கஷ்டமில்லாமல் ஜீவிக்க மாட்டார்கள். இந்தியாவில் ஆதியில் இம்மாதிரித் துணைத் தொழில்கள் இருந்தன; விவசாயத்தோடு கூட ஒவ்வொரு குடும்பத்திலும் ஸ்திரீகளும் சிறுவர்களும் நூல் நூற்கும் வழக்கம் இருந்தது. இந்தச் சில்லறைத் தொழில்கள் இப்போது அநேகமாய் நின்றுபோய்விட்டபடியால் விவசாயிகளின் நிலைமை முன்போல் சுகமுள்ளதாயில்லை. ஜப்பானில் இம்மாதிரித் துணைத்தொழில்கள் பலவிருந்து வருகின்றன. அநேக குடும்பங்களில் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழில் செய்யப்பட்டு வருகின்றது. தேயிலைப்பயிரும் அநேக விவசாயிகள் செய்வதுண்டு. விவசாயம் செய்யாத மற்ற ஜனங்களுக்கு வேறு தொழில்களிருக்கின்றன. நிலக்கரி, செம்பு, வேறு வஸ்துக்கள் சுரங்கங்களிற் கிடைக்கிறபடியால் அவைகளை எடுத்து ஜீவிக்கிறவர்கள் பலர். மீன் பிடித்தும் அதை யொட்டின மற்றத் தொழில்கள் செய்தும் சுமார் 25-லக்ஷம் ஜனங்கள் ஜீவிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜப்பான் தேசத்துப் பூமியானது நூற்றுக்கு முக்கால்பாகம் காடுகளடங்கியதாயிருப்பதால் அதில் கிடைக்கக்கூடிய

பொருள்களையும் விறகையும் விற்று ஜீவிப்பவர்கள் பலர். வீட்டுக்குள் செய்யப்படும் தொழில்களில் நெசவுத் தொழில் சாதாரணமானது. இந்தத்தொழில் செய்யும் வீடுகள் 5-லக்ஷமெனவும் வேறு வேலை செய்வோர் சுமார் 8-லக்ஷமெனவும் கணக்கிடப் படுகிறது. ஜப்பானியர் ஒருவிதமான காகிதம் செய்வதில் பேர் போனவர்கள். அந்தக்காகிதம் அச்சடிக்கவும் எழுதவும் பிரயோசனப்படாதாயினும், திரைகளும் விசிறிகளும் வேறு விசித்திர சாமான்களும் செய்ய உபயோகப்படுகின்றது. ஸ்திரீகள் வீட்டுவேலை செய்த நேரம் போக ஒழிந்த நேரத்திற் செய்யும் தொழில்கள் பாய் முடைவதைச் சேர்க்கவேண்டும். அநேக வீடுகளில் சிறுவர்கள் தீப்பெட்டிகளைச்சுற்றிக் காகிதம் ஒட்டுதலும், மேலே லேபில் போடுதலும், பட்டுப்பூச்சி வளர்ப்பதில் உதவி செய்தலும், தேயிலை பொறுக்குவதுமாய்க் குடும்பத்துச் சம்பாத்தியத்தோடுகூட சொற்ப சம்பாத்தியம் செய்கிறார்கள். இவர்கள் தினம் சம்பாதிப்பது ஒரு அணாவுக்கு மேலாகாதானாலும், குடும்பச் செலவுக்குக் கைகண்ட சகாயமாகின்றது. இவ்விதமாக ஜப்பான் ஜனங்களுக்கு ஜீவனோபாயமான தொழில்கள் நாட்டுப்புறங்களிலுங் குக்கிராமங்களிலும் செய்யப்பட்டு வருகின்றன. உதாரணமாக, ஓஸாகா பட்டினத்தில் புருஸ் (Brush) செய்யும் ஒரு பாக்டரியில் வேலை செய்வோர் 600-பேர் இருந்தாலும், அங்குப் புருஸ்கள் அரைகுறையாய்ச் செய்யப்பட்டு நாட்டுப் புறங்களில் பலகிராமங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கே,



வீடுகளில் சிறு குழந்தைகள் அவைகளில் மயிர்க் குச்சுகளையோ வேறு விறைப்பான குச்சுகளையோ நட்டுக்கட்டி, மேற்படி பாக்டரிக்குத் திருப்பி அனுப்புகிறார்கள். இம்மாதிரி வீட்டுத் தொழில்கள் நம் இந்தியாவில் அழிந்துபோனது நம் ஜனங்களின் வறுமைக்கு ஒரு முக்கிய காரணமாய்க் கருதப்பட வேண்டும்.

ஜப்பான் பூமியில் ஏறக்குறைய முக்கால் பாகம் காடுகள், ஐந்தில் ஒரு பாகந்தான் விவசாயம் செய்யப் படுகிறது. இவ்வளவு குறுகிய விவசாயத்தால்தான் 50-லக்ஷம் ஜனங்களுக்கு ஆகாரங் கிடைக்க வேண்டும். ஜப்பானியர் விவசாயத்தில் வெகு கூர்மையான கவனம் செலுத்துகிறவர்களானாலும், சமீபத்தில் அவர்கள் உருளைக்கிழங்கு கரும்பு முதலிய தோட்டப்பயிர் செய்வதில் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார்கள். முன் செல்லவேண்டுமென்ற ஊக்கமேலிட்ட ஜனங்களுக்கு எந்த வழியிற்றான் அபிவிருத்தி அசாத்தியம்! மேற்கண்ட தொழில்களைத்தவிரப் பழங்கள் பயிர் செய்யும் தொழிலை ஜப்பானியர் வெகு தீவிரமாய்ப் பின்பற்றி வருகிறார்கள். பேரிக்காய்கள், ஆரஞ்சுகள், பெர்ஸிம்மன்கள், பீச்சுகள் இவைகள் எப்போதும் ஜப்பானில் பயிர் செய்யப்படுவனவாயினும், சமீபத்தில் அவைகளுடைய தோற்றமும் உருசியும் அதிகநன்றாயிருக்கும்படிப் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. தற்காலம் ஆப்பில்களும், அன்னிய தேசத்து ஆரஞ்சுகளும், பீச்சுகளும், ப்ளம்களும்,

பேரிக்காய்களும், திராட்சைகளும் பட்டினங்களில் எங்கும் பார்த்தாலும் விற்கப்பட்டு ஏழைகளுங்கூட சொற்ப விலைக்கு வாங்கி உண்ணுகிறார்கள். நம் பட்டினங்களில் சாக்கடையோரங்களில் விற்கும் முறுக்குச் சுண்டலைக் காலணாவுக்கு வாங்கி உண்ணும் ஒரு கூலியாள் அவற்றிற்குப் பதிலாய் மனோகரமான ஆப்பில், ஆரஞ்சு, போன்ற பழம் ஒன்றை வாங்கி உண்டால், அவனுக்கு வியாதியும் வராது, சரீர சுகமும் விருத்தியாகும். ஜப்பானிலிருந்து வெளி நாடுகளுக்குப் போகும் பழங்களும் கறி காய்களும் பத்து லக்ஷக்கணக்காய் மதிக்கப்படுமானால், இந்திய ஜனங்கள் ஜப்பானியரைப் பார்த்துக் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களில் இதுவும் ஒன்றென்று சொல்லவும் வேண்டுமா?

ஜப்பானில் பட்டு செய்தல் கிளைத்தொழிலாய் இருந்து வருகிறது. ஆதிகாலத்தில் சைனாவிலிருந்து பட்டு செய்வோரும் பட்டுப்பூச்சி வளர்ப்போரும் ஜப்பானுக்குப்போய் அங்கங்கே குடியேறி ஜனங்களுக்கு அந்த வித்தையைச் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். அதுமுதல் பட்டுப்பூச்சி வளர்த்தலும பட்டு செய்தலும் பிரபலமாகி விவசாயத்துக்கு இரண்டாவதான முக்கிய தொழிலாகச் செய்யப்படுகின்றன, ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு தனியான அறையில் பூச்சிகள் வளர்க்கப்படும். இப்படி வளர்க்கும் குடும்பங்கள் 1901-ம் வருஷத்தில் 24,75,819-யும், பட்டு செய்வோர் 4,21,941 பேராயுமிருந்தார்களானால் அந்தத்தொழில் எவ்வளவு விசாலமாய்ச் செய்யப்பட்டு வருகிறதென்பது விளங்



கும். பட்டுப்பூச்சிகளுக்கு ஆகாரமாகிய மல்பரிச் செடிகள், அதாவது முசுக்கட்டைச் செடிகள், தனிப் பயிராகப் பயிர்செய்யப் படுவதுமன்றி விவசாய பூமிகளுக்கு வேலிகளாகவும் பயிர் செய்யப் படுகின்றன. பூச்சிகள் வியாதியால் மாளாமல் சாஸ்திரோபாயங்களை அனுஷ்டித்துத் தொழிலைப் பலப்படுத்த ராஜாங்கத்தார் வேண்டிய முயற்சிகள் செய்து வருகிறார்கள். தற்காலம் ஜப்பானிலிருந்து பட்டு அதிகமாய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இப்படி ஏற்றுமதி செய்யப்படும் பட்டு 1901-ம் வருஷத்தில் சுமார் $10\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டது; கழிவுபட்டு (Waste silk) ஏற்றுமதியானது சுமார் 75 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ளது.

ஜப்பான் தேசத்தில் தேயிலை அபரிமிதமாய்ப் பயிர் செய்யப்படுகிறது. நம் தேசத்தில் வெற்றிலை பாக்கு எப்படியோ, அப்படி அங்குத் தேயிலை மனசுக்கு உத்ஸாகம் கொடுக்கக் கூடியதும், உபசார வஸ்துவுமானதென்று மதிக்கப்படுகின்றது. தேத்தண்ணீர் பருகுவதால் உடம்பில் உதிரபுஷ்டி யுண்டாவதுடன் மனசின் சக்திகளும் தீவிரம் பெறுகின்றனவென்று நம்பப்படுகின்றது. வீட்டில் ஒவ்வொருவரும் இதை வழக்கமாய் உபயோகப்படுத்துவதுமல்லாமல், அதிதி ஸத்காரத்தில் ஒரு அம்சமாக, வந்தவர் நேசரானாலும், அன்னியரானாலும், அவருக்குத் தேத் தண்ணீர் கொடுத்து உபசரிப்பது வழக்கம். ஒருவருக்கொருவர் தேத்தண்ணீர் கொடுத்து நேசம் சம்பாதிப்பது சர்வ சாதாரண வழக்கம். ஜப்பானில் விளையும்

தேயிலை 1,900-ம் வருஷத்தில் 6,20,00,000 பவுன் நிறையுள்ளதாயிருந்தது. பெரும்பான்மையும் இது ஜப்பானிலேயே செலவானாலும் மேற்கண்ட வருஷத்தில் வெளியேற்றப்பட்ட தேயிலை 1½-கோடிரூபாய் மதிப்புள்ளது. விசேஷமாய் அமெரிக்காவிற்கே அத்தேசத்தில் விளையும் தேயிலை அனுப்பப்படுகிறது. ஜப்பானில் மாடுகளில்லாததினால் ஜப்பானியர் நம்மைப்போல் பால் கலந்து தேநீர் குடிப்பது வழக்கமல்ல.

ஜப்பானியருடைய ஆகாரப் பொருள்களில் மீன் ஒன்றென்று நாம் ஏற்கனவே சொன்னோம். ஜப்பான் தேசம் 6 பெரிய தீவுகளும் பல சிறுதீவுகளும் அடங்கிய தேசமாகையால், சமுத்திரத்திற் கிடைக்கும் மீன்களை ஆகாரத்துக்காகவும் பூமிக்கு உரத்துக்காகவும் உபயோகப்படுத்தப் பிடிப்பது பெருந்தொழிலாக அமைந்திருக்கின்றது. இந்தத் தொழிலால் 9 லக்ஷம் குடும்பங்கள் அல்லது 30-லக்ஷம் ஜனங்கள் ஜீவிக்கிறார்கள்.

இந்தத்தொழிலை ராஜாங்கத்தார் வெகு கவலையாக ஆதரித்து வருகிறார்கள். இந்தியாவில் உப்பு எப்படி ராஜாங்கத்தார் மாத்திரம் பயிர் செய்யக்கூடிய வஸ்துவோ, அப்படி ஜப்பானில் புகையிலை ராஜாங்கத்தாரைத் தவிர மற்றவர் பயிர் செய்யக்கூடியதல்ல.

# CHAPTER XII

# பன்னிரண்டாவது அதிகாரம்

## விவசாயம்

*ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் ஜப்பான் சென்றது—விவசாயத்தைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதினது—ஜப்பான் பூமி பயிர்ச்செலவுக் குற்றதல்ல—ஆயினும் ஜப்பானியர்க்கு விவசாயமே முக்கிய ஜீவனம்—ஜப்பானியர்களின் லட்சியம்—இந்தியர் ஜப்பானியர் போலன்று—ஜப்பானில் கோடைகாலத்துப் பயிர்கள்—நிலத் தீர்வை—6-வருஷத்துக்கு ஒருதரம் அது மாற்றப்படலாம்—செட்டில்மெண்டு செய்யும் விதம்—புகையிலை வரி ரூ. 4,80,00,000—பூமியின் சாரம் குறையாமல் காக்கப்படுகின்றது—பயிர்களின் மதிப்பு—ஜப்பானியர் சீனர்களின் விவசாயம்—இவர்களுடைய விவசாயத்தின் விசேஷம்—முக்கியமான எரு மக்களின் மலம்—மலத்துரம் சேர்க்கும் விதம்—மற்ற உரங்கள்—கலவை எரு—அது உபயோகமாகும் விதம்—கோழியின் எச்சமும் எருவே—காடுகள் மூன்று விதம்—விவசாயத்துக்குத் துரைத்தனத்தார் செய்யும் உதவி—விவசாயமும் வியாபாரமும்—விவசாயத்தறிவு பரவச் செய்யல்.*

சென்னை ராஜதானியில் சிலகாலம் ரெவினியூ போர்ட் மெம்பராயும் பாமின் (Famine) கமிஷனராயுமிருந்த ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் (Sir Frederic Nicholson) சில வருஷங்களுக்கு முன்னால் ஜப்பானுக்குப் போய், அங்குள்ள மீன்தொழிலைப்பற்றி விசாரணை

செய்து, ரிபோர்ட்டுச் செய்யும்படிச் சென்னைக் கவர்ன்மெண்டால் அனுப்பப்பட்டார். நமது விவசாயிகளின் நிலைமையில் அவர் விசேஷக் கருத்து கொண்டவரானதால், ஜப்பானிற் போயிருந்த சமயத்தில் அங்கு விவசாயம் வெகு திறமையாய் நடத்தப்படுவதைக் கண்டு, அதைப்பற்றின சில முக்கியமான விவரங்கள் நம் விவசாயிகள் தெரிந்துகொள்ளுதல் நலமென்றெண்ணி, ஒரு புஸ்தகம் பிரசுரித்திருக்கிறார். அப்புஸ்தகத்திலிருந்து ஜப்பான் விவசாய முறையைப் பற்றின சில குறிப்புகளை இன்று எடுத்து எழுதுகிறேன்.

ஜப்பான் தேசமானது இயற்கையாக விவசாயத்துக்கு ஏற்ற தேசமல்ல. பூமி விசேஷ வளப்பம் பெற்றதல்ல; கால்நடைகளில்லை. உலோக சம்பந்தமான உரங்களும் கிடைப்பதில்லை. விவசாயத்துக்குத் தகுந்த பூமியின் விஸ்தீரணம் குறைவாயிருக்க, திரளான ஜனங்களுக்கு அதிலிருந்து உணவுப் பொருள்களைப் பெறவேண்டியதாயிருக்கின்றது. அன்னிய தேசங்களிலிருந்து உணவுப் பொருள்களாவது உரமாவது வருவதுமில்லை. விவசாயிகள் கொடுக்கவேண்டியிருக்கும் தீர்வையும் பளுவாயிருக்கின்றது. இப்படியிருந்தும், விவசாயமே பல்லாயிர வருஷங்களாக ஜனங்களின் பிரதானத் தொழிலாக வந்த அத்தேசத்தில் பூமி சளைத்துப் போகாமலிருப்பதோடுகூட, உயர்ந்த விகிதமாகவே விளைந்து வருகின்றது. இந்திய விவசாயிகளைப்போல ஜப்பானியரும் சொற்ப நிலத்தைப் பயிர் செய்கிறவர்கள். சமீபகாலம் வரையில் உலகத்தா



ரோடு எவ்வித சம்பந்தமுமில்லாமல் தனித்து வாழ்ந்தவர்கள். இப்படியெல்லாமிருந்தும், ஜப்பானியர் புஷ்டியான ஆகாரம் பெற்று மனவலி உடல்வலி குன்றாத போர் வீரர்களாய் மதிக்கப்பட்டு வருவதெப்படி? இந்தக் கேள்வி ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் கேட்டு, ஜப்பானிய விவசாயிகள் பயிர் செய்யும் திறமையும் உரம் போடும் ஜாக்கிரதையும் அவற்றால் அவர்கள் போதுமான ஆகாரம் பெறுவதுமே காரணமென்று பதில் சொல்கிறார். எவ்வளவு சொற்பமான பூமியானாலும் அதை ஜப்பானியர் வீண் போக்குகிறவர்களல்ல. அப்படியே கழிபட்ட எந்தவஸ்துவானாலும் அதை உபயோகிக்காமலிருக்கமாட்டார்கள். நிமிஷப் பொழுதையும் வீணே கழிக்கமாட்டார்கள். உழைப்பதில் களைப்பையாவது சோம்பலையாவது அறியாதவர்கள். இதுவரையில் ஜப்பானிய ஜனங்களைப் புஷ்டியாய்ப் போஷித்து வந்தது மூலதனமாவது, படிப்பாவது, கவர்ன்மெண்டின் சகாயமாவது, வெளியிலிருந்துவந்த உரமாவது, உணவாவது அல்ல. ஒவ்வொரு விவசாயிக்கும் என்ன சக்தியுண்டோ, என்ன வஸ்துக்கள் கிடைக்குமோ, அவைகளை வெகு ஜாக்கிரதையாயும், திறமையாயும் உபயோகப்படுத்துவது வழக்கம். எவ்வளவு அருவருப்பான வஸ்துவானாலும் அதைத் தள்ளிவிடமாட்டார்கள். எவ்வளவு கஷ்டமான வேலையானாலும் அதில் சோம்பற்படமாட்டார்கள். இதுவே ஜப்பானியரைப் போஷித்துத் திடசாலிகளாக்கியிருக்கிறது.

இருந்த நிலைமையிலேயே இராமல் முன் செல்ல விரும்பும் ஜனங்களுக்கு ஒரு பெரிய லக்ஷணம் என்னவென்றால், புதுக்கருத்துகளைக் கிரகித்து அவைகளின்படி செய்வதும், நிலைமைகள் மாறும்போது மாற்றத்துக்குத்தக்கபடி நடந்துகொள்வதும், யார் பெரியோர்களாய் ஜனங்களை நடத்த முன் வருகிறார்களோ அவர்களை மதித்து நம்புவதுமாம். இந்த லக்ஷணம் நம்இந்திய ஜனங்களுக்கில்லாமல் அவர்களை முன் செலுத்தும் பெரியோர் பலமுறை துக்கத்தாலும் ஏமாற்றத்தாலும் சோர்வடைகிறார்கள். நிலைமைகள் மாறி வரும்போது அவ்வைகளைக் குறிப்பிடும் குணம் அவர்களிடத்தில் இல்லை. அவைகளை எடுத்துச் சொன்னாலும், நம்பாமலிருப்பதும் அல்லது பரிகாசம் செய்வதும் அவர்களுடைய சுபாவம். மாறிவரும் நிலைமைகளுக்குத் தக்கபடி புதுமைகள் அவசியமெனத் தோன்றினாலும், ஜனங்கள் சிரத்தையாவது சுறுசுறுப்பாவது காட்டுவதில்லை. நம் தேசத்தில் புதுக்கருத்துகள் வேரூன்ற நீண்டகாலம் வேண்டியிருக்கின்றது. ஜப்பானிலோ, புதுக்கருத்துகளைப் பரபரப்புடன் ஏற்கும் சுபாவம் ஜனங்களுக்கிருப்பதால் அதன் தற்கால சரித்திரம் சாத்தியமாயிற்று. எத்தேசத்திலும் விவசாய வகுப்பார் பழைய மாதிரிகளைப் பின்பற்றுவோராய் புதுமாதிரிகளை ஏற்கச் சம்மதமற்றவர்களாயிருப்பார்கள். ஜப்பானிலோ, அநேக நூற்றாண்டுகளாய் உலகத்து மற்ற ஜனங்களோடு சம்பந்தமில்லாமற் தனித்து வாழ்ந்த ஜனங்கள் திடீரென்று ஐரோப்



பாவின் புது நாகரீகத்தை ஏற்று, தங்கள் வாழ்க்கையில் பல புதுமைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்துக்குத் தகுந்த ஸ்தல விஸ்தீரணத்தை அதிகப்படுத்த முடியாமலிருந்தும், ஜனத்தொகை அதிகரித்து வந்ததால், அதிக உணவுப்பொருள் பெறுதல் அவசியமாகவே, புதிதான விவசாய முறைகளை அனுஷ்டித்துப் பூமி அதிகமாய் விளையும்படிச் செய்து வருகிறார்கள்.

ஜப்பானில் எப்பாகங்களில் விவசாயம் செய்யக்கூடுமோ அப்பாகங்களில் சீதோஷ்ண நிலைமையானது முற்றிலும் உற்றதாகவே இருக்கின்றது. பருவகாலங்கள் தவறாமல் காலமழை போதுமானவளவு பெய்கின்றது. சீதளகாலத்தில் குளிர் அதிகமானாலும், கோடைகாலத்தில் பயிர் செழிப்பாய் வளரக்கூடியது. நெல், புகையிலை, சோளம், சர்க்கரை, வள்ளிக்கிழங்கு (Sweet potato) பருத்தி, இவைகள் கோடைகாலத்தில் நன்றாய்ப் பயிராகின்றன. சீதோஷ்ண நிலைமையானது பயிருக்குச் சாதகமாயிருந்தால் விவசாயிகள் ஆசைப்பட்டுப் பயிருக்கு மேற் பயிர்செய்து நிலத்தைச் சளைத்துப் போகச் செய்வார்கள். அப்படியே நம்தேசத்தில் பல இடங்களில் நிலம் சளைத்துப் போய்விட்டதென்பதில் சந்தேகமில்லை. ஆகையால், நிலத்துக்குத் தக்க உரம் போட்டு அது சளைக்காமலிருக்கச் செய்யவேண்டும். ஜப்பானின் பூமி வளப்பமுள்ளதல்ல வென்றேன். ஆனால், அதில் செலவிடப்படும் உழைப்பினாலும் ஊக்தினாலும், அதிவிருஷ்டி அனாவிருஷ்டியின்றிக் காலப்படி

பெய்யும் மழையினாலும், பூமி கொழுப்பான நிலைமையில் வைக்கப்படுகிறது.

எத்தேசத்திலும் விவசாயத்துக்கும் ராஜாங்கத்துக்குமுள்ள சம்பந்தம் விவசாயிகளின் நிலைமையைப் பாதிக்கக்கூடியது. இந்தியாவில் இந்தச் சம்பந்தம் விவசாயிகளின் க்ஷேமத்துக்கு முழுதிலும் பொருந்தினதாயில்லை என்று அநேகர் அபிப்பிராயப் படுகிறபடியால், ஜப்பானில் இது எப்படியிருக்கிறதென்று காட்டி ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் விஸ்தாரமாய் எழுதுகிறார். அதிலிருந்து சிலவற்றை இங்குப் பெயர்த்தெழுதுகிறேன். ஜப்பான் புது நாகரீகத்தை ஏற்றதற்கு முன்னால் நிலத்தீர்வை தானியமாகவே வசூல் செய்யப்பட்டது. பிறகு நிலத்துக்கு என்னவிலை கிடைக்குமோ அதில் ஆதியில் நூற்றுக்கு 3-வீதமும் பிறகு 2½-வீதமும் நாணயமாக வசூல் செய்யப்பட்டது. யுத்தம் முதலான விசேஷ காலங்களில் இந்த விகிதத்தைக் கவர்ன்மெண்டு அதிகப் படுத்தலாம். சைனாவோடும் ருஷியாவோடும் யுத்தம் நடந்தபோது அப்படியே செய்யப்பட்டது. 6-வருஷத்துக்கு ஒருமுறை புது செட்டில்மெண்டு செய்து தீர்வை விகிதங்கள் மாற்றப்படலாம். ஜப்பானில் செட்டில்மெண்டு செய்த விதமாவது:—நிலத்தின் பெறுமானம் எல்லா விடங்களிலும் திட்டம் போடப்பட்டது. நிலத்தின் தரம், அதன் விலை, முந்தின 5-வருஷங்களின் சராசரி வருஷ மாசூல், இவைகளையும் கவனித்து அஸ்ஸஸ்மெண்டு விகிதம் நிச்சயிக்கப்பட்டது. நிலத்தின் சாரமும், மாசூலை விற்கக்கூடிய இடமும்



மற்ற ஸ்தல விவரங்களும் கவனிக்கப்பட்டன. நிலத்தின் பெறுமானத்தில் நூற்றுக்கு 11·77 நன்செய் நிலங்களுக்கும், நூற்றுக்கு 11·29 புன்செய் நிலங்களுக்கும், சாமானிய காலங்களில் மொத்த விளைச்சலாகக் கொள்ளப்பட்டன. இந்த விளைச்சல் பின் வரும் அட்டவணைப்படிப் பாகிக்கப்பட்டது. நஞ்சைநிலம், அதாவது நெற்பயிராகும் நிலம் ஏக்கராவுக்கு 325-ரூபாய் பெறுமானமாகவும், புன்செய் நிலத்துக்கு ஒரு ஏக்கராவுக்கு 125-ரூபாய் பெறுமானமாகவும் உதாரணங்களாகக் கொள்ளப்பட்டன.

---

அட்டவணை

| இனங்கள் | நஞ்சை (நெற்பயிர்) ஏக்கராவுக்கு 325-ரூபாய் | | புஞ்சை ஏக்கராவுக்கு 125-ரூபாய் | |
|---|---|---|---|---|
| | நூற்றுக்கு வரி விகிதம். | ஏக்கராவுக்கு வரி விகிதம். ரூ. அ. | நூற்றுக்கு வரி விகிதம். | ஏக்கராவுக்கு வரி விகிதம். ரூ. அ. |
| சர்க்கார்வரி | 2·5 | 8—2 | 2·5 | 3—2 |
| ஸ்தல வரிகள் | 2·5 | 8—2 | 2·5 | 3—2 |
| விவசாயச்செலவு | 2·77 | 9—0 | 2·29 | 2—14 |
| எல்லாம் போக லாபம். | 4·0 | 13—0 | 4·0 | 5—0 |
| மொத்தம் | 11·77 | 38—4 | 11·29 | 14—2 |

ஒவ்வொரு நிலத்திற்கும் சராசரி 5-வருஷத்து விளைச்சலை அளவிட்டு அதே காலத்தில்சராசரி விலையையும் நிதானித்து விவசாயிக்குச் செலவு போகக் கிடைக்கும் லாபத்தை 25-ஆல் பெருக்கி நிலத்தின் பெறுமானம் கணக்கிடப்பட்டது. மாசூலின் மதிப்பு 100-ரூபாயாக வைத்துக்கொண்டால், அதில் சர்க்கார் வரி 21·24, ஸ்தலவரிகள் 21·24, விவசாயச் செலவுகள் 23·52, எல்லாம்போகப் பாக்கி லாபம் 34. சர்க்காருக்குக் கொடுக்கப்படும் நிலவரி மாத்திரம் விவசாயிகள் கொடுக்கவேண்டிய பளுவல்ல, மற்ற வகுப்பாரைப் போல விவசாயிகள் பொறுக்கவேண்டிய வேறு பளுக்களும் உண்டு.

ஒவ்வொருவரும், புருஷனானாலும் ஸ்திரீயானாலும், சுருட்டு குடிக்கிற வழக்கமுண்டாகையால், கவர்ன்மெண்டாரின் ஏகதேசப் பயிராகிய (Monopoly) புகையிலைக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரியினால் கவர்ன்மெண்டுக்கு மொத்தம் ரெவினியூ 4,80,00,000 ரூபாய் கிடைப்பதைப் பார்க்கும்போது, ஒரு விவசாயக் குடும்பத்தில் சராசரி $5\frac{1}{2}$ மனுஷர்களென்று வைத்துக்கொண்டால், இந்தக் குடும்பத்திற்கு இந்த இனத்தில் $5\frac{1}{2}$ ரூபாய் செலவாகும்; அதாவது, நிலவரி யன்றிப் புகையிலை வரியும் தலைக்கு ஒரு ரூபாயாக விவசாயிகள் கொடுக்கவேண்டி யிருக்கின்றது. ஜப்பானில் உப்பும், புகையிலையைப்போல், கவர்ன்மெண்டே பயிர் செய்யக்கூடுமாகையால், உப்பு வரியாகவும் விவசாயிகள் தலைக்கு $\frac{1}{4}$ ரூபாய் கொடுப்பதாக அந்தக் கவர்ன்மெண்



டின் 1905-ம் வருஷத்து பட்ஜட்டினால் தெரிகிறது. சாராய வகையில் கவர்ன்மெண்டுக்குக் கிடைக்கும் ரெவினியூ மொத்தம் 9,49,00,000 ரூபாய். செலவாகும் சாராயம் தலைக்கு 3 காலனுக்கு அதிகமாகவேயுள்ளது. ஆகவே தலைக்கு 2 ரூபாய் விகிதம் இந்த இனத்தில் சர்க்காருக்கு வரி கொடுக்கப்படுகிறது. யுத்தம் முதலான காலங்களில் இந்த வரி விகிதங்கள் அதிகப்படும். முனிசிபாலிடிகள் இல்லாத இடங்களில் வீட்டு வரியும் உண்டு. இந்த வரியினால் 578 லக்ஷம் ரூபாய் ரெவினியூ கிடைக்கின்றது. அதாவது, முனிசிபாலிடி இல்லாத இடங்களில் 60 லக்ஷத்துக்கு அதிகமான குடும்பங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டால், தலைக்கு 9-ரூபாய் வரியாகின்றது. இம்மாதிரி விவசாயிகள் நேராகக் கொடுக்கவேண்டிய நிலவரியைத் தவிர வேறுவரிகளும் அவர்கள் மீது பளுவாய்ச் சுமந்திருக்கின்றன. புகையிலை வரியும் சாராய வரியும் அவ்வஸ்துக்களை உபயோகப்படுத்தாதவன் கொடுக்க வேண்டியதில்லையாயினும், பல காரணங்களால் அவைகள் அவசியமானவைகளாய் விட்டனவாகையால், அவ்விரண்டு வரியும் அநேகமாய் எல்லாரும் கொடுக்கும்படி ஆகிவிட்டன. தேசத்தின் சீதோஷ்ண நிலைமை ஒருகாரணம்; விவசாயிகள் சேற்றிலும் மழையிலும் நின்று வேலைசெய்ய வேண்டியிருப்பது மற்றொரு காரணம்; நெற்பயிராகும் வயல்களில் எல்லாவேலையும் விவசாயிகளே புருஷனும் ஸ்திரீயும் இடுப்புமட்டும் சேற்றில் நின்றுகொண்டு

செய்யவேண்டும் குதிரைகளாவது மாடுகளாவது இல்லையென்று ஏற்கெனவே சொன்னேனல்லவா; ஆகையால், நம் தேசத்தில் மாடுகள் செய்யும் வேலையைக்கூட ஜப்பானில் மனுஷனே செய்யவேண்டும்; ஆகையால், இவ்விரண்டு லாஹிரி வஸ்துக்களும் விவசாயிகள் கையாள்கிறார்கள். இவ்வாறு புகையிலையும் சாராயமும் அவசியமான வஸ்துக்களாகி அவைகளுக்காகவும் கொடுக்கப்படும் வரிகளைச் சேர்த்தால், ஜப்பானிய விவசாயிகள் தாங்கும் வரிப்பளு குறைந்ததல்ல. இவ்வளவு பளுவான வரியைத் தாங்குவது, பூமி ஒரே மாதிரியாய் நன்றாய் விளைந்து தானியங்களும் நல்ல விலைக்கு விற்றால் மாத்திரம் சாத்தியமென்று காட்டுவதற்காக இந்த வரி விகிதங்களை மேலெடுத்துச் சொன்னேன். தலைமுறையளவாய் ஓயாமல் நிலத்தைப் பயிர்செய்துகொண்டு போகும்போது, அது சளைத்துப் போகக்கூடியதை நோக்கி ஜப்பானியர் தகுந்த உரங்களைப்போட்டு அதன் புஷ்டி குறையாமல் வைத்துக் கொள்கிறார்கள். நிலத்தின் வளம் குறையக்குறைய நிலத்தில் சம்பந்தப்படாத வேறு வஸ்துக்களை அதாவது, மீன்கள், காட்டுத்தழைகள் போன்றவை எருக்களாக உபயோகப்படுத்திக் குறைந்த வளப்பத்தை ஈட்டேற்றுகிறார்கள்.

1902-ம் வருஷத்தில் மொத்தம் 1,64,24,584-எக்கரா நிலத்தில் உணவுப் பொருள்கள், பட்டு, தேயிலை, வைக்கோல் முதலிய பயிர்களின் மதிப்பு 144-கோடி ரூபாயாகக் கணக்கிடப்பட்டது. இந்தக்கணக்கில்,



பட்டு, தேயிலை இவைகளின் மதிப்பாகிய 17-கோடி ரூபாயும், வைக்கோலுக்காக 13-கோடி ரூபாயும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாக்கி 114-கோடி ரூபாய் மற்ற உணவுப் பொருட் பயிர்களின் மதிப்பு. ஆகவே, மல்பரிச்செடிப் பயிருக்காகவும் தேயிலைப் பயிர்க்காகவும் 8,97,000-எக்கரா நிலத்தைக் கழித்துப் பாக்கி 155·2-லக்ஷம் எக்கரா நிலத்தில் உண்டான பயிர்களின் மதிப்பு 114-கோடி ரூபாயாகிறது. அதாவது, ஒரு எக்கரா பயிர்நிலத்தின் விளைச்சலினுடைய மதிப்பு ரூபாய் 73·5; வைக்கோலைச் சேர்த்து 82-ரூபாய். இந்த இனங்களைத் தவிர ஆடுமாடு உள்ளவரையில் கிடைக்கக்கூடிய தயிர், பால் வகையின் மதிப்பு 62-லக்ஷமும், கோழி, வாத்துகள், முட்டைகள் முதலியனவற்றின் மதிப்பு 259-லக்ஷமும், கொட்டில் எரு 355-லக்ஷமும், கசாப்புக்கடை மாம்ஸம் 262-லக்ஷமும், ஆகிய இவைகளை விவசாயத்தொழிற்பொருள்களின் மதிப்பிற் சேர்த்தால் மொத்தம் அப்பொருள்களின் மதிப்பு 153·5-கோடி ரூபாயாகிறது. இவ்வளவு பொருள்களும் 124·6 லக்ஷம் எக்கரா நிலத்தைப் பயிர் செய்வோரால் உண்டாக்கப்படுகிறபடியால், ஒரு எக்கரா நிலத்துக்குக் கிடைக்கும் விளைச்சல் சராசரி 123 ரூபாயாக மதிக்கப்படலாம். விவசாயிகள் நிலத்தைப் பயிர்செய்து விளைச்சல் பெறுவதைத் தவிர, வீட்டில் தயிர், பால், வெண்ணெய் முதலியன செய்தும், கோழி வாத்து முதலியன வளர்த்தும், முட்டைகள் விற்றும், சம்பாதிக்கக்கூடும். ஆடுமாடுகுதிரைகளை அடைத்துவைக்

கும் கொட்டில்களிற் கிடைக்கும் எருவையும் பணமாக்கலாம். இவைகளெல்லாம் விவசாயிகளின் சம்பாத்தியமாகவே கொள்ளவேண்டும். நம்தேசத்து விவசாயிகள் ஜப்பானிய விவசாயிகளைப்போல் புத்தியுடன் உழைப்பார்களானால், இவ்விதமாய்க் கிடைக்கும் சம்பாத்தியத்தை விவசாயத்தாற் கிடைக்கும் சம்பாத்தியத்தோடு சேர்க்கும்போது, அவர்களின் நிலைமை இப்போதைப்போல் அவ்வளவு கேடாயிராது. ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் மேற்கண்டவாறு கணக்கிடுவதில், ஜப்பானியர் தங்கள் புறக்கடைகளிற் கறி காய்கள் பயிர்செய்து சம்பாதிப்பதை விட்டுவிட்டார். அதையும் விவசாயிகளின் சம்பாத்தியத்தில் சேர்க்க வேண்டும்.

---

## விவசாயத்தின் பொதுவான லக்ஷணங்கள்

ரீன் (Rein) என்ற ஒரு ஜர்மானியர்:—ஜப்பானியர் பண்ணைப்பயிர் சீனரின் பண்ணைப்பயிரை விட உயர்ந்தது. ஜர்மனியிலுள்ள பட்டணங்களுக் கருகில் எப்படித் தோட்டங்கள் சாஸ்திரப்படிப் பயிர் செய்யப் படுகின்றனவோ, எப்படி மார்கெட்டுகளுக்கு வேண்டிய கறிகாய்கள் பயிர்செய்யப்படுகின்றனவோ, அப்படி ஜப்பானியர் தங்கள் நிலத்தைப் பயிர் செய்கிறார்கள். அப்படிப் பயிர் செய்யவேண்டியதற்கு அவசியமான வசதிகள் வேண்டியமட்டும் இருக்கின்றன. மழை குறைவின்றிப் பெய்கின்றது. கால்வாய்களும் வெட்டப்படுகின்றன. வேலைக்காரர்களுக்குக் குறைவில்லை.



ஸ்திரீகளும் குழந்தைகளுங்கூட வயல்களில் வேலை செய்கிறார்கள்,—என்றார். விவசாயத்தின் நிலைமையைப் பற்றியும், என்ன எரு கிடைக்குமோ அதை ஜாக்கிரதையாய் உபயோகப் படுத்துவதைப்பற்றியும், அதை உபயோகப் படுத்துவதில் விவசாயிகள் காட்டும் சிக்கனம் புத்தி இவைகளைப் பற்றியும், ஜலம் பாய்ச்சுவதில் ஜாக்கிரதையைப் பற்றியும், வயலைச் சுத்தமாய் வைத்துக் கொள்வதில் விவசாயிகள் உழைக்கும் உழைப்பைப் பற்றியும், இந்த ஜர்மானியர் புகழுகிறார். இவர் இவ்வாறு புகழ்ந்தபோதிலும், வேறு சில ஐரோப்பியர் சீனரின் விவசாயந்தான் உயர்ந்ததென்று அபிப்பிராயப் படுகிறார்கள். வெகு ஜாக்கிரதையாய்ப் பயிரைப் பார்ப்பதிலும் ஒரு துரும்பேனும் வீணாக்காமல் உபயோகப் படுத்துவதிலும் யுக்தியிலும் சீனருக்கு மிஞ்சியில்லை என்கிறார்கள். பூமி, காலம், வேலை, எரு, இவை நான்கையும் சிறிதேனும் வீணாக்காமல் யுக்தியாய் உபயோகப்படுத்திப் பலன்பெறும் விஷயத்தில் சீனரும் ஜப்பானியரும் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவரல்லவென்று ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் அபிப்பிராயப் படுகிறார்.

ஜப்பானியர் விவசாயத்திற்கு என்னென்ன உரங்கள் கிடைக்குமோ அவைகளை யெல்லாம் ஜாக்கிரதையாய்ச் சேர்ப்பதும், அவைகளைப் பயிர்களுக்குத் தக்கபடி சிக்கனமாய் உபயோகிப்பதும், அவர்களுடைய அதிசயமான சுறுசுறுப்பும், இந்திய விவசாயிகள் கவனிக்கவேண்டியன. ஒரு அடி நிலமானாலும் அது

வீணாய்க்கிடக்க விடுவதில்லை. வீட்டைக் கூடிய வரையில் சிறுகக்கட்டி, கொல்லைப்புறத்தை நீட்டி, கொல்லை வாயிற்படிவரையில் பயிர் செய்வது ஜப்பானியரின் வழக்கம். இவ்வாறு நிலத்தை வீண்போக்காதிருப்பது முதல் விசேஷம். இரண்டாவது, விவசாயத்தை எவ்விதக்குறைவுமின்றி முழு ஜாக்கிரதையோடும் செய்தல். எவ்விடத்திலும் அசட்டை தோன்றுவதில்லை. எதைப்பார்த்தாலும் வெகு திறமையாய்ச் செய்யப்பட்டிருப்பதாகவே தோன்றும். அருமையான சிங்காரத் தோட்டம் எப்படிக் காக்கப்படுமோ அப்படி ஒவ்வொரு பயிரும் காக்கப்படும். நிற்க, பூமியில் உழைக்கும் உழைப்பு எதுவென்றும் எவ்விதமென்றும் கவனிக்கவேண்டும். எந்த வேலையானாலும் கைகளால் அல்லது மண்வெட்டியால் செய்யப்படுமேயன்றி மாடுகளாவது குதிரையாவது அருமையாகவே உபயோகப்படுத்தப்படும். முக்கியமாய் உபயோகப்படுத்தப்படும் கருவிகள் மண்வெட்டியும் கடப்பாறையுமே யன்றிக் கலப்பையல்ல. பண்ணைகள் சிறியனவாயிருப்பதால் மாடுகள் அல்லது குதிரைகள் உபயோகப்படுத்துவது அவசியமில்லை. விவசாயிகள் தங்கள் கைகளினாலும் சாமானியக்கருவிகளினாலும் அவசியமான வேலைகளையெல்லாம் செய்து விடலாம். மேலும், ஜப்பானியர் பௌத்த மதத்தினராகையால், மாமிசம் புசிப்பவரல்ல. மாமிசத்துக்காகவாவது ஆடுமாடுகளை வளர்க்கவேண்டிய அவசியமில்லை. ஜப்பானியப் பண்ணைகள் சராசரி 2½ ஏக்கராவுக்கு அதிகப்பட்டனவல்ல.



ஒரு குடும்பத்திலுள்ள ஸ்திரீ புருஷர் சிறுவர் அனைவரும் வேலை செய்யும்போது அவர்களுடைய வேலையே போதுமானது.

இவ்வாறு ஒரு அடி நிலத்தையாவது வீண்போக்காமற், சர்வ ஜாக்கிரதையுடன் அசட்டை சிறிதும் செய்யாமல், பயிர் செய்வதுமன்றி, நிலத்திற்கு உரமிடும் திறமையையும் ஜப்பானிய விவசாயத்தின் விசேஷ சிலாக்கியமாகச் சொல்லவேண்டும். இந்தியாவில் பயிருக்கு ஜீவாதாரம் பூமியென்று எண்ணி பயிர் மேற்பயிர் செய்து, அதன் சாரத்தை வற்ற அடிப்பது வழக்கம். பாங்கியில் பணம் போட்டிருந்தால் அது எப்படிச் சிறிது சிறிதாய் வாங்கிச் செலவு செய்யப்படுமோ, அப்படிப் பூமியில் அமைக்கப்பட்டுள்ள சாரம் சிறிது சிறிதாய் பயிரை ஊட்ட உபயோகப்படுத்தப்படுகின்றது. உண்மையில் சிருஷ்டி வேறு விதமாயிருக்கின்றது. ஜீவனுள்ள வஸ்துக்கள் பிராணிகளானாலும் மரவகைகளானாலும்,ஒருவகை மற்றவகையைத் தாங்கிப் போஷிப்பதாயிருக்கிறது. இதற்குப் பூமி கருவியே யொழிய ஆதாரமல்ல. எப்படியெனில், மரவகைகள் ஈனும் பொருள்கள் பிராணிகளைப் போஷிப்பதும் பிராணிகள் அவைகளுடைய எச்சங்களால் மரவகைகளைப்போஷிப்பதும் இவ்விரண்டுக்கும் பூமி ஆதாரமாயிருப்பதும் இயல்பு. மரவகைகள் பூமியிற் பயிராகிப் பிராணிகளைப் போஷிக்கின்றன. பிராணிகள் பூமியை வலுப்படுத்தி மரவகைகளைப் போஷிக்கின்றன. இந்த உண்மையை ஜப்பானியர் அறிந்

திருக்கிறார்கள். எந்தப் பயிரை நட்டாலும் ஜப்பானியர் உரமிடாமல் நடுவதில்லை. எந்த உரமானாலும் அதை வெறும் அசுத்தமென எறிந்து வீணாக்குவதில்லை; வளப்பமற்ற பூமியைக்கூட உரத்தால் வலுப்படுத்திப் பயிர் செய்கிறார்கள்.

ஜப்பானியர் உபயோகிக்கும் உரங்கள் எவையெனில்;—மனிதர் மலம், இதுதான் முதற்றரமான உரம்; புண்ணாக்குகள்; கலவை எரு; தழைகள்; கொட்டிலெரு. இவைகளில் முதற்சொன்ன எருவைப் பற்றி ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் கூச்சமில்லாமல் விஸ்தாரமாய்த் தம் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். இது இந்தியாவுக்கு மகா முக்கியமானதென்றும், இதனால் வருஷம் கோடிக்கணக்கான மதிப்புள்ள பயிர் உண்டாக்கக்கூடியதென்றும், விவசாயத் திறமைக்கு ஒரு மூலகாரணமென்றும், பூமியின் வலுவுக்கும் வளப்பத்துக்கும் ஏதுவென்றும், வரட்சியாலும் பஞ்சத்தாலும் விளையும் தீங்கைக் குறைக்கக்கூடியதென்றும், விவசாய நிலைமையிலும் சுகாதார நிலைமையிலும் திருத்தம் செய்யக்கூடியதென்றும், சொல்லுகிறார். பட்டினங்களிலும் கிராமாந்தரங்களிலும் இந்த உரத்தைச் சேகரிக்கும் விதத்தைப்பற்றி நுட்பமான விபரங்களுடன் எழுதுகிறார். அதைக் காப்பாற்றி வைக்கும் விதத்தைப்பற்றியும் எழுதுகிறார். இப்படிச் சேகரிக்கப்படும் மலத்தின் அளவு இவ்வளவென்றும் அதன் பண மதிப்பு இவ்வளவென்றும் சொல்லுகிறார். இதை உபயோகிப்பதால், பயிரின் விளைவு எவ்வளவு அதிக



மாகிறதென்றும் சொல்லுகிறார். முடிவில், முக்கியமாய்க் கவனிக்கப் படவேண்டிய விஷயம் இன்னதென்று பின்வருமாறு தொகுத்துச் சொல்லுகிறார். அதாவது, “மேலேகண்ட கணக்குகள் கூடியவரை சரியாயிருந்தாலும் அல்லது முற்றிலும் பிசகாயிருந்தாலும், உரமாகச் சேர்க்கப்படும் மலத்தின் பண மதிப்பு 10-கோடி ரூபாயானாலும் 5-கோடி ரூபாயானாலும்; இதன் உபயோகத்தால் கிடைக்கக்கூடிய ஜாஸ்தி மாசூல் 60-ஆயிரம் அல்லது 30-ஆயிரம் லக்ஷம் பவுன் நிறையுள்ள தானியமானாலும்; இந்த அதிக விளைவால் 120-லக்ஷம் அல்லது 60-லக்ஷம் ஜனங்கள் உணவு பெற்றாலும்; கால்நடைகளிலும் 20-லக்ஷமோ அல்லது 10-லக்ஷமோ தீனி பெறுமானாலும்; இப்படி இம்மல எருவின் பிரயோசனத்தை நாம் எவ்வளவு குறைத்துச் சொன்னாலும், ஜப்பான் தேசத்து விவசாய முறையில் மல உரத்தை முக்கியமான ஆதாரமாகக் கொள்ளவேண்டும். எதை எப்படி ஏறத்தாழச் சொல்ல வேண்டுமானாலும், ஜப்பானில் விவசாயபூமி தற்காலம் புஷ்டியான நிலைமையில் இருப்பதற்கு இந்த மல உரமே முக்கிய காரணம்.”

இன்னொரு முக்கியமான விஷயமும் கவனிக்க வேண்டும்: மனிதரது மலம் வீடுகளிலும் வீடுகளுக்குப் பக்கத்திலும் கிடந்து உலர்ந்து மக்கி சரீரசுகத்துக்குக் கேடு விளைப்பதை விட, அதைக் கிராமத்தினின்று தூரத்தில் வயல்களில் போட்டு மக்கும்படிச் செய்து பயிர்களுக்குப் புஷ்டி தரத்தக்க உணவாக்குவது

எவ்வளவோ சிரேஷ்டம். ஆனால், விவசாயகாலத்தில் வயல் பக்கங்களில் திரிவோர்க்கு இந்த உரத்தின் துர்நாற்றத்தால் அருவருப்பு உண்டாவதைக் கருதி அது பயிருக்கு எவ்வளவு உபயோகமுள்ளதானாலும், தற்காலத்து நாகரீகமான ஜனங்கள் அதைக்கையாண்டு உபயோகிப்பது சாத்தியமல்லவென்று, ஆட்சேபம் சொல்லக்கூடும். ஆயினும், பெரிய பட்டினங்களில் சாக்கடை நாற்றமும் அடைபட்ட சாக்கடைகளிலிருந்து கிளம்பும் ஆவியும் அருவருப்பைக் கொடுக்கக்கூடியனவல்லவா ? வழக்கப்பட்டுப்போனால் எதிலும் அசங்கியம் தோன்றாது. நம் தேசத்து கிராமாந்தரங்களில், சிறிய பட்டினங்களிலுங்கூட, இந்த அசங்கியமான வஸ்து வீடுகளுக்குப் பக்கத்திலும் ஆறுகள் குளங்கள் கிணறுகள் ஆகிய ஜலாதாரவோரங்களிலும் கிடந்தபடி கிடந்து மக்கி ஆகாயத்தைக்கெடுத்து, ஜலத்தையும் அசுத்தப்படுத்துகின்றது. ஜப்பானியர், அவர்கள் வழக்கத்தைப் போல இந்த வஸ்துவை வெகு ஜாக்கிரதையாய்ச் சேர்த்து, முதலில் தொட்டிகளிற் போட்டுப் புளிக்கவைத்துப் பிறகு வயல்களிற் கொண்டுபோய்ப் போடுகிறார்கள். இந்த வழக்கத்தையும் நம் தேசத்து வழக்கத்தையும் ஒத்து பார்க்கும்போது, ஜப்பானியர் வழக்கம் குற்றமற்றதென்றே சொல்லவேண்டும். ஜப்பானில் மலத்தைச் சேர்த்துக் குவிக்கும் இடத்தில் ஜனங்களுக்குத் தொந்திரவாவது ஆபத்தாவதில்லை. அதைச்சேர்க்கும்போதும் வயலில் அது கிடைக்கும் போதுமே அருவருப்பு உண்டாவதைத்தவிர வேறு



கேடில்லை. இந்தியாவிலோ, இது வருஷமெல்லாம் ஜனங்களுக்கு அபாயத்தைத் தரக்கூடிய இடங்களில், அவையாவன, வீட்டுப் பக்கங்களிலும் ஜலாதாரவோரங்களிலும் கவனிப்பாரின்றிக் கிடக்கவிடப்படுகிறது. வெய்யிலில் இது சீக்கிரம் உலர்ந்து துர்நாற்றம் ஓய்ந்து போனாலும், ஒரு மழைபெய்தால் அப்போது பூமியிலிருந்து கிளம்பும் துர்வாசனை அரைமைல் மட்டும் வீசி ஜனசௌக்கியத்துக்கு ஆபத்து விளைக்கின்றது.

---

### மற்றவுரங்கள்

மனிதர் மலத்துக்கு இரண்டாவதாக ஜப்பானியர் மீன்களை நல்ல உரமாக மதிக்கிறார்கள். 20-வருஷத்திற்கு முன்னால் இதை அவர்கள் கவனிக்காமலிருந்தார்கள். இப்போது 20-மடங்கு அதிகமாக, வயல்களுக்கு எருவும் ஜனங்களுக்கு உணவும் கடலிலிருந்து பெறுகிறார்கள். ஜப்பானிய அதிகாரிகள் சமீபத்தில் கடலிலிருந்து கிடைக்கக்கூடிய பெரும் செல்வத்தையறிந்து, விசேஷமுயற்சிகள் செய்து வருகிறார்கள். லக்ஷக்கணக்கான கரையார்கள் (Fishermen) மீன் பிடித்து ஜீவிப்பதுமன்றி, கடலிற் கிடைக்கும் இந்தப் பொருளால் தேசஜனங்களின் புஷ்டியையும் செல்வத்தையும் பெருக்கும் பொருட்டு, ஜப்பானிய அதிகாரிகள் தக்க ஏற்பாடுகளை அமைத்திருக்கிறார்கள். 1904-ம் வருஷம் ஒன்றில் மட்டும் தயார் செய்யப்பட்ட மீன் எரு 36,27,800-இந்தியன் மணங்கு அல்லது 13,33,600-டன். இதன்மதிப்பு 150-லக்ஷம் ரூபாய் எனக்கணக்கிடப்பட்டது.

மனுஷர் மலத்திற்கும் மீனுக்கும் அடுத்ததாக பிண்ணாக்கு உயர்ந்த உரமாக உபயோகப்படுத்தப் படுகிறது. முக்கியமாய்ப் புகையிலை; பருத்தி முதலிய விசேஷப் பயிர்களுக்கு உபயோகப் படுத்தப்படுகிறது. தங்கள் தேசத்தில் உண்டாகும் பிண்ணாக்கை அங்கேயே வைத்துக்கொள்வதுமன்றி அன்னிய தேசங்களிலிருந்தும் தருவிக்கிறார்கள். அவரைவகைப் பிண்ணாக்கு சைனாவிலிருந்தும், எள்ளுப் (Rape) பிண்ணாக்கு மஞ்சூரியாவிலிருந்தும் தருவிக்கப் படுகின்றன. இப்படித் தருவிக்கப்பட்ட பிண்ணாக்கு 1891-ம் வருஷத்தில் 35,600-பவுன் மதிப்புள்ளதாயிருக்க, அது வருஷத்துக்கு வருஷம் அதிகமாகி, 1903-ம் வருஷத்தில் 10,74,000-பவுன் மதிப்புள்ளதாயிற்று. ஜப்பானியர் பருத்திக் கொட்டையும் அன்னிய தேசங்களிலிருந்து தருவிக்கிறார்கள். 1903-ம் வருஷத்தில் 83,000-பவுன் மதிப்புள்ள பருத்திக்கொட்டை தருவிக்கப்பட்டது. ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் எவ்வளவு வித்தியாசமென்று சொல்லி, ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் ஆச்சரியப் படுகிறார். இந்தியாவிலிருந்து எற்றுமதியாகும் பருத்திக்கொட்டை 1,97,31,000-அந்தர் நிறையும் 13-கோடி ரூபாய்க்கு அதிகமான மதிப்புமுள்ளது.

ஜப்பானியர் கலவை எருவை (Composite) தப்பாமல் உபயோகிக்கிறவர்கள். எரு உபயோகிக்கும் விஷயத்தில் அவர்களுக்கு அசங்கியம் என்பதே இல்லை. மலத்தையும் மூத்திரத்தையும் உபயோகிப்பது போல எந்த வஸ்து எங்குக் கிடந்தாலும் அதைப் பொறுக்கி



எருவாக உபயோகிக்கிறார்கள். எந்த வஸ்து பூமியில் மக்கக்கூடுமோ அது எல்லாம் எருத்தான். மனிதர் மலம் நீங்க மற்ற எந்தப் பிராணிகளது மலமும்; கோழி, புறா முதலியவைகளுடைய மலமும்; இலைகள், புற்பூண்டுகள், வைக்கோல், வேறு மரவகைகளைச் சேர்ந்த எந்தத் தள்ளுபடி வஸ்துவும்; வீடு வயல் முதலிய இடங்களில் கழிக்கப்பட்ட வஸ்துக்களும்; உருளைக் கிழங்குத் தோல்போன்ற கிழங்குத் தோல்களும்; செத்துப்போன பட்டுப்பூச்சிகளும்; கிளிஞ்சல்கள், சுக்கான் கற்கள் (Lime); வாள்பொடிகள் (Saw dusts), அவுரிச்சக்கைகள், வண்டல் மண், இன்னும் என்னென்ன கிடைக்குமோ அதுவும்;—இவை எல்லாவற்றையும் ஒன்றாய்க் குவித்து, குவியலின் மீது அப்போதப்போது நீரைத்தெளித்து, நையச்செய்து, முழுதும் நன்றாய் மக்கினபிறகு சல்லடையாற் சலித்து, சல்லடைக் கண்களில் இறங்காததை நீக்கிவிட்டு மற்றது வயலிற் கொண்டுபோய் எருவாகப் போடப்படுகிறது. சலித்து மிகுந்தது வேறொரு குவியலுடன் சேர்த்து மக்க அடிக்கப்படுகின்றது. சில சமயங்களில் இப்படிச் சேர்க்கப்படும் குவியல்கள் நெருப்பில் எரித்துக் கரியாக்கி உபயோகப் படுத்தப்படுகின்றன. இவ்விதமான எரு சென்னை இராஜதானியில் அரிதாய் உபயோகப் படுத்தப்பட்டாலும், ஜப்பானியருடைய மாதிரிகளை நம் விவசாயிகள் தெரிந்து கொள்வது நல்லதென்று ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் இதைத்தம் புஸ்தகத்திற் சொல்லுவதாகச்சொல்லுகிறார். சேலம் கோயமுத்தூர் ஜில்லாக்

களிலும் திருநெல்வேலி ஜில்லாவில் சில இடங்களிலும் இம்மாதிரி கலவை எரு குழிகளில் தயார் செய்யப்படுவதைத் தாம் பார்த்திருப்பதாகவும் வீட்டுக் குப்பை கூளமனைத்தும் குழிகளில் சேர்க்கப்பட்டு அவைகள் நன்றாய் மக்கின பிறகு தோட்டங்களுக்கு எருவாக உபயோகப்படுத்தப்படுகின்றன என்றும் சொல்கிறார். ஜப்பானில் தோட்டங்களேயல்ல, எல்லா நிலங்களும் இப்படியே எருவிடப்படுகின்றன.

தழையுரம் முக்கியமாய் நெற்பயிருக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது. தழை எதுவானாலும் உபயோகப்படுத்தப்படுகின்றது. கொட்டிலெருவும் அரிசித் தவிடும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால், ஜப்பானில் அதிகமாடுகள் இல்லையாகையால் கொட்டிலெரு அதிகமில்லை. ஜப்பானில் 110 லக்ஷம் கோழிகள் இருக்கின்றன. இவைகளின் எரு வெகு கவலையுடன் சேர்க்கப்படுகின்றது. மேற்சொன்ன கலவை எருவுடன் இதுவும் சேர்க்கப்படுகின்றது. ஒரு கோழி வருஷமெல்லாம் தன் உடம்பைப்போல் 150 பங்கு அதிகப்பளுவுள்ள எருவைக் கொடுக்குமாகையால், மேற்படி கலவை எருவோடு இது கலக்கப்படும்போது, அதன் பிரயோஜனம் விளங்கும். கோழியின் எச்சம் பயிர்களுக்குச் சிலாக்கியமான எரு.

---

### காடு

இந்தியாவைப் போல் ஜப்பானிலும் கவர்ன்மெண்டுக்குட்பட்டு ஒரு காட்டிலாகா இருக்கின்றது.



ஆனால் அந்தேசத்து ஜனங்களுக்குக்காடுகளை உபயோகப்படுத்திக் கொள்வதில் இங்குள்ள நிர்ப்பந்தங்கள் இல்லை. காடுகள் குன்றுகளிலும் மலைகளிலும் உண்டாகின்றன. சமபூமியெல்லாம் விவசாயத்துக்கு உபயோகப்படுகின்றது. ஆனால், மலைச்சரிவுகளில் அங்கங்கே சிறுசிறு திடல்களில் தோப்புகள் போலவும் தோட்டங்கள் போலவும் காடுகள் காணப்படுகின்றன. ஜப்பானில் காடுகள் மூன்று விதம்: கவர்ன்மெண்டுக்குச் சேர்ந்த காடுகள்; அரண்மனையைச் சேர்ந்த காடுகள்; ஜனங்களுக்குச்சொந்தமான காடுகள்; இவைகள் முறையே 300-லக்ஷம் எக்கராவும், 30-லக்ஷம் எக்கராவும், 180-லக்ஷம் எக்கராவும் விஸ்தீர்ணமுள்ளவை. கவர்ன்மெண்டுக் காடுகளும் அரண்மனையைச் சேர்ந்த காடுகளும் எவ்வளவு பிரயோஜனமாயிருந்தாலும் ஜனங்கள் தங்கள் சொந்தக்காடுகளிலிருந்தே கழனிகளுக்கு வேண்டிய தழை முதலிய எருக்களையும் வீட்டு உபயோகத்துக்கு வேண்டிய சாமான்களையும் பெறுகிறார்கள். இந்தச் சொந்தக் காடுகள் பலவிடங்களில் நிரவிக்காணப்படுகின்றன. ஓரொரு காடு சராசரி $8\frac{3}{4}$ எக்கராவாயிருக்கும். இந்தச் சொந்தக்காடுகளிற் சில தனிமனிதருக்குச் சொந்தமாயிருந்தாலும், மற்றவை மொத்த கிராம சமுதாயத்தைச் சேர்ந்தன. இந்தக் கிராம சமுதாயம் ஒன்றாய்க்கட்டுப்பட்ட சமுதாயம்; கிராமக்காரியங்களைச் சுயமாய் நிர்வகிக்கும் சுதந்திரம் பெற்றது. பொதுவான சொத்தும் அதற்குண்டு. இந்தக் காடுகளில் சொந்தக்காரருக்கு

வேண்டிய சாமான்கள் கிடைப்பதுமன்றி லாபமும் கிடைக்கின்றது. இந்த லாபம் வருஷத்துக்கு 3½-கோடி ரூபாயென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் காடுகள் கொடுக்கும் வரி ஒரு ஏக்கராவுக்கு 3-அணாவுக்கு மேலில்லை; இது யுத்தகாலத்திற் கொடுக்கப்பட்ட வரி. சாமானிய காலத்தில் ஒரு அணாவுக்கு மேலில்லை. வரி இவ்வாறு சொற்பமாயிருக்கிறபடியால் கிராமத் தரிசுநிலங்களில் மரங்கள் வைத்து வளர்ப்பது லாபகரமெனத் தெரிந்து கிராம வாசிகள் அப்படியே செய்து வருகிறார்கள். ராஜாங்கத்தார் கிராமவாசிகளுக்கு இந்த விஷயத்தில் இலவசமாய் யோசனைகள் சொல்ல ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சமீபகாலம் வரையில் ஜப்பானுடைய விவசாய மாதிரிகள் பழைய காலத்தைப் போல ஒரே மாதிரியாயிருந்து வந்தன. உலகத்தாரோடு சகவாசம் செய்யாமல் தன்னுள்ளேயே தான் அடங்கினதாயிருந்த காலத்தில் இந்தமாதிரிகள் ஏறக்குறையப் போதுமானவைகளாயிருந்தன. சகல தொழில்களும் சகல வியாபாரங்களும் அதன் எல்லைகளுக்குள்ளேயே நடந்து அன்னியர் போட்டி இல்லாதிருந்த காலம்வரையில் ஜப்பானியர் புது அனுஷ்டானங்களின் அவசியத்தை அறியவில்லை. தற்காலம் ஜப்பானின் நிலைமை மாறிவிட்டபடியால் அதன் தொழில்கள், முக்கியமாய் விவசாயத் தொழில், புதுமாதிரிகளை அனுசரித்துச் செய்யவேண்டியனவாய் விட்டன. விவசாயப் பொருள்கள் வியாபாரப் பொருள்களாகும்போது,



வியாபாரம் அதிகரிப்பதை நோக்கி விவசாயத்தையும் விர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகின்றது. ஜனங்கள் பழைய காலத்தைப்போல் ஜீவிப்பதில் திருப்தி கொண்டவர்களாய் முன் செல்ல விரும்பாமலிருந்த காலம் வரையில் விவசாயம் நவீன சாஸ்திர ஞானத்தை யனுசரித்துச் செய்யவேண்டிய அவசியம் தோன்றவில்லை. ஜனங்களுக்குப் புது ஆசையும் முன் செல்வதில் உற்சாகமும் தோன்றவே, அன்னியர் தங்களை மீறக்கூடாதென்று நிச்சயித்து, அன்னியர் அனுஷ்டிக்கும் யுக்திகளையும் அவர்கள் அறிந்த அறிவையும் ஜப்பானியர் உபயோகிக்க ஆரம்பித்தார்கள். அத்தேசத்து ராஜதந்திரிகளது வழக்கம்போல, எந்தெந்தத் தேசத்தில் எப்படியெப்படி விவசாயம் நடத்தப்படுகிறதோ, அதைச் சோதித்து அங்கங்குள்ள உயர்ந்த மாதிரிகளைத் தங்கள் தேசத்து விவசாய முறைகளில் அமைக்கத் தலைப்பட்டார்கள்; முக்கியமாய், அமெரிக்காவையும் ஜர்மெனியையும் பார்த்தே இப்படிச் செய்தார்கள்; அத்தேசங்களைப் பார்த்து ஜனங்களுக்கு விவசாயக்கல்வி கற்பிப்பதையும் ராஜாங்கத்தார் உதவி செய்வதையும் விவசாயச் சங்கங்கள் ஸ்தாபிப்பதையும் செய்தார்கள்.

பலவழிகளில் விவசாயத்தை ராஜாங்கத்தார் விர்த்திசெய்து வருகிறார்கள். தேர்ந்த நிபுணர்களடங்கிய ஒரு தனி இலாகா ஸ்தாபித்து அதைக்கொண்டு விவசாயத்தையும் வியாபாரத்தையும் முற்படுத்தி வருகிறார்கள். அந்த இலாகாவானது உலகத்தில் எங்

ளென்ன சிரேஷ்டமான வழிகளுண்டோ அவைகளை அங்கங்கு வைக்கப்பட்டிருக்கும் காரியஸ்தர்கள் மூலமாயறிந்து, அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருகின்றது. இம்மாதிரி அன்னியதேசங்களைப் பார்த்துச் செய்வதுமன்றி ஜப்பானிலேயே சோதனைப் பண்ணைகள் ஸ்தாபித்துப்புதுமாதிரிகளைக்கண்டு பிடித்தும்; அங்கங்குப்புஸ்தகசாலைகள் ஸ்தாபித்துப் பிரசங்கங்கள் செய்து ஜனங்களுக்குப் போதித்தும்; தேசமெல்லாம் விவசாய ஸ்கூல்கள் ஸ்தாபித்தும்; கிராமாந்தரங்களில் வயதுமுதிர்ந்த விவசாயிகளுக்குப்பிரசங்கங்கள் செய்தும்; விவசாயிகளுக்கு வேண்டும்போது பணம் கிடைக்கும்படியாயும் தெரியாதவைகளைத் தெரிந்து கொள்ளும்படியாயும் ஒருவருக்கொருவர் யோசனைகள் சொல்லிக்கொள்ளும்படியாயும் பட்டினங்களிலும் கிராமங்களிலும் படிப்படியாய் சங்கங்கள் ஸ்தாபித்தும்; விவசாயபாங்கிகளுக்கும்ஐக்கியநாணயச் சங்கங்களுக்கும் பணவுதவி செய்தும்; நேராகவே விவசாயிகளுக்குப் பணம் கொடுத்தும்; அப்போதப்போது சட்ட திட்டங்கள் செய்தும்;—இவ்விதமாயெல்லாம் ராஜாங்கத்தார் விவசாயத்தை உற்சாகப்படுத்தி முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள். ஜப்பானியர் வெறும் பேச்சுக்காரரல்ல. முடிவில்லாமல் யோசனை செய்து காரியத்தில் பலனின்றிக் காலத்தை வீண் கழிப்பவர்களல்ல. மேற்சொன்னவைகளை யெல்லாம் இருபது வருஷகாலமாய் அனுஷ்டித்து ஊக்கத்துடன் காரியம் நடத்தி வருகிறார்கள்.

# CHAPTER XIII

# பதின்மூன்றாவது அதிகாரம்

## வியாபாரம்

ஜப்பானில் கூலிவேலை நயம்—தொழிலின் வளப்பத்துக்கு ஆதாரங்கள்—சரக்குகள் நல்லவைகளாயிருக்கவேண்டும்—அன்னியர் முதலில் ஜப்பானியச் சரக்குகளைத் தாராளமாய் வாங்கினது—பின் அவர்கள் மோசம் போனது—ஜப்பானியர் பிறகு அவர்களைத் திருப்தி செய்தது—அன்னியர்க்கு அனுப்பும் சரக்குகளுக்குச் சங்கங்கள் ஜப்பானெங்கும் ஏற்பட்டன—இந்தியரின் சரக்குக்கு வந்த இகழ்ச்சி—ஜப்பானில் பூர்வம் வர்த்தகருக்கு மதிப்பில்லை—சாமுராய் வகுப்பாருக்குப் பூர்வம் வெகு மரியாதை உண்டு—தொழில் செய்வது ஜப்பானில் இப்போது படித்தவர்க்கும் ஒரு பெருமையாய் விட்டது—ஜப்பானில் பாக்டரிகள்—ஜப்பானியர், ருஷிய யுத்தம் நின்றதுமே, தொழில்செய்யத் தொடங்கினர்—இயந்திரங்கள் அதற்காக வாங்கவே மேற்கத்தியார் ஜப்பானியரைப் பழித்தார்கள்—தலைமுறை தலைமுறையாய் ஜப்பானியர் செய்த கைத்தொழில் நின்றது—பாக்டரிகள் ஸ்தாபித்ததற்குக் காரணங்கள்—தொழில் சாலைகள் நடத்த ஜப்பானியர்க்குத் திறமையில்லை என்ற புகார்—நாட்டுப்புறத்து ஜனங்கள் தொழிற்சாலைக்குக் கூலிக்கு வெள்ளமாய் போகிறார்கள்—அந்த ஜனங்களின் சுகம்—ஜப்பானில் தொழிலாளிகளுக்குக் காட்டப்படும் பரிவு—உதாரணமாக, கானேகாபூசித் தொழிற் சாலை—14 - ஆயிரம் பேர்

அங்குத் தொழிலாளிகளுண்டு—கைத்தொழில்களுக்கு மூலதனம்—மூலதனம்கிடைக்க ஜப்பானியர் செய்தயுக்தி—அவ்யுக்தியால் ஜப்பானியரின்வேலைத்திறமை பெருகுகிறது—ஜப்பானில் மூலப்பொருள்கள் வியாபாரச்சரக்குகளாவது—இப்படி ஆவதற்குக்காப்புவரி—நெசவு நூல் போன்ற பாதிச்செயற்கைப் பொருள்கள்—துணி போன்ற முழுச் செயற்கைப் பொருள்கள்—முடிவு.

---

## ஜப்பானுக்கு வேண்டியதென்ன?

இந்தியாவில் கூலிவேலை எப்படிமலிவாய்க்கிடைக்கின்றதோ, அப்படி ஜப்பானிலும்கிடைக்கின்றது. இந்தியாவைவிட அத்தேசத்தில்கூலிவிகிதங்கள்சிறிது அதிகமாயிருந்தாலும், ஐரோப்பிய தேசங்களைவிட அவைகள் குறைந்தவைகளா யிருக்கின்றன. பல்லாயிரம்கூலியாட்களை அமர்த்திக்கொண்டு பெரியபாக்டரிகள் நடத்தப்படும்போது கூலிவிகிதங்கள் குறைவாயிருப்பது தொழிலின் வளப்பத்துக்குப்பெரும்சாதகம். ஆயினும், கூலிவேலை மலிவாய்க்கிடைப்பது மட்டும் போதாது; அனுபோகம், திறமை,பயிற்சி,விடாமுயற்சி, ஏதேஷ்டமான இயற்கைப்பொருள்கள், இவைகளுடன்சொற்ப வட்டிக்குக் கிடைக்கக்கூடிய மூலதனம், ஆகிய இவைகளெல்லாம் தேசத்தில் தொழில் வளப்பத்துக்கு அவசியம். இந்த இரகசியத்தை இப்போது ஜப்பானியர் அறிந்துகொண்டிருக்கிறார்கள். சென்ற இருபது வருஷகாலமாய் ஜப்பான் மிகவும் தீவிரமாய் முன்சென்று வந்திருக்கிறது. இனியும் அவ்வளவு தீவிரமாக முன்செல்லுமென்று நினைக்க நியாய



மில்லை. எப்படிப் பிராணிகளின் சரீரம் சிறுவயதில் தீவிரமாய் வளர்ந்து முதுமையில் வளர்ச்சி அற்றுப் போகின்றதோ அப்படியே ஜனசமூகமும் இளம்பிராயத்தில் தீவிரமாய் அபிவிர்த்தியாவதுபோல் எப்போதும் ஆவதில்லை. ஜப்பானியர் இனிச் சிறிது மெதுவாகவே முன்செல்லுவார்களென்று நினைக்க வேண்டும். மெதுவாய் முன் சென்றாலும், அதற்கு அவசியமான பந்தோபஸ்துகளும் சாதனங்களும் அமைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். உலகத்தில் எல்லாமுக்கியமான தேசங்களும் அன்னியச் சரக்குகள் இறக்குமதி யாகும்போது, அச்சரக்குகள் மீது காப்பு (protective) வரிகள் விதித்து உள்நாட்டுத் தொழில்களையே சம்ரக்ஷிக்க முயலுகின்றன. அது போலவே ஜப்பானும் செய்து உள்நாட்டுத்தொழில்களைச் சம்ரக்ஷித்து நாளடைவில் நாகரிகத் தொழில்களை நிர்மாணிக்க விரும்புவார்களானால், அது சகஜமேயாகும். ஜப்பானிலுள்ள தொழிற்சாலைகளிலும் கடைகளிலுமிருந்து அன்னிய தேசங்களுக்குச் சரக்குகள் அனுப்பி லாபம் பெறவேண்டுமென்னும் விருப்பமும் புகழ்ச்சிக்குரியதெனக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்தற்குச்சொற்ப வட்டிக்கு மூலதனம் பெறக்கூடியதாயிருப்பதும், பயிற்சி பெற்ற கூலிவேலையும், நல்ல இயந்திரங்களும்,அவசியம். தங்களுடையதொழிற்சாலைகளை வெகு ஜாக்கிரதையாய் அமைத்து நிர்வகிப்பதோடுகூட அங்குச் செய்யப்படும் சாமான்களை நல்லவைகளாய்ச் செய்யவும் வேண்டும்.

ஜப்பானியருக்குத் தொழில் வளப்பத்தில் பெரிதாக ஆசை வந்தபோது, நானாவிதத் தொழில்கள் செய்து, அன்னிய தேசங்களுக்குச்சரக்குகள் அனுப்ப ஆரம்பித்தார்கள். அன்னிய வர்த்தகர்களுக்குத் திருப்தியுண்டாக்க மாதிரிகள் (Samples) அனுப்புவிக்க, அவைகள் நல்லவைகளா யிருந்தபடியால் அன்னிய வர்த்தகர் ஜப்பானியச் சரக்குகளைத் தாராளமாய் வாங்கினார்கள். வாங்கினதைக்கண்டு ஜப்பானியவர்த்தகர் வீண் ஆசையால் அவர்கள் அனுப்பின சரக்குகளில் கலப்பு கலந்தும், இளப்பமானவைகளைப் பொறுக்கியும், அவர்கள் அனுப்புவித்த மாதிரிகளைப்போல் இல்லாத சாமான்களை அனுப்புவித்தார்கள். ஆகவே, அன்னியவியாபாரிகள் ஜப்பானியசாமான்களை வாங்குவதை நிறுத்திவிட்டார்கள். நிறுத்திவிட்டதும் ஜப்பானியவர்த்தகர்பயந்து, புத்திமான்களான சிலர்கில்டுகள் (Guilds) அல்லது சங்கங்களாகச் சேர்ந்து, இளப்பமான சாமான்களையாவது கலப்பு கலந்த சாமான்களையாவது அனுப்பக்கூடாதென்று தடுத்து, ஜப்பானியவர்த்தகர் மோசக்காரர்களென்ற பெயர் போய் நாணயஸ்தர்கள் என்ற பெயர் வாங்கும்படிச் செய்தார்கள். இப்படி அன்னிய தேசங்களுக்குப் போகும் சரக்குகள் கலப்பில்லாதன வாகவும் இளப்பமல்லாதன வாகவும் இருக்கவேண்டுமென்று, அவைகளைச் சோதித்தனுப்பும் சங்கங்கள் தேசமெல்லாம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அதாவது, இந்தச் சங்கங்களுடைய முத்திரை



இல்லாத சரக்குகளை அன்னியவர்த்தகர் அங்கீகரிப்பதில்லை. இந்திய வர்த்தகர்கள் இதைப்பார்த்துக் கற்றுக் கொள்ளுதல் நலமாகும். இந்தியாவிலிருந்து போகும் பருத்தி முதலிய ஒவ்வொரு சரக்கும் கலப்புள்ளதாயும் இளப்பமானதாயு மிருக்கிறதென்று அன்னிய வர்த்தகர் சந்தேகப்படுகிறபடியால், நம் சரக்குகள் நல்ல விலைக்குப் போகிறதில்லை. ஜப்பானிய தேசத்தில் பூர்வம் வர்த்தகமும் தொழிலும் செய்யும் வகுப்பாரை ஜனங்கள் பொதுவாய் மதிப்பதில்லை. படிப்பாவது அந்தஸ்தாவது இல்லாதவர்களா யிருந்தபடியால், சாமுராய் வகுப்பாருக்கு எவ்வளவு மரியாதையிருந்ததோ அவ்வளவு இவர்களுக்கில்லை. இப்பொழுது அத்தேசத்தில் இது மாறிவிட்டது. தொழில், வர்த்தகம், முதலியவை செய்வதால் கௌரவக்குறைவில்லையென்றும், அவைகளாலேயே தேசம் செல்வமும் பெருமையும் அடையவேண்டுமென்றும், ஒருஎண்ணம் மேலிட்டு வருகிறபடியால், படிப்பும் அந்தஸ்தும் உள்ள தக்கோர் தொழில்களும் வர்த்தகமும் செய்ய முன் வருகிறார்கள். உண்மையில், ஐரோப்பிய தேசத்தில் இந்த வகுப்பாருக்கு எவ்வளவு மரியாதையும் செல்வாக்கும் இருக்கின்றனவோ, அவ்வளவு ஜப்பானிய முதலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் உண்டாகி வருகின்றது. இந்தியாவில் இம்மாதிரி மாறுவதைக் காணலாம். பலசரக்குவியாபாரமும்ஜவுளிவியாபாரமும் கல்விகற்றவர்களும் பென்ஷன் பெறும் உத்தியோகஸ்தர்களும் செய்யத் தலைப்பட்டு விட்டார்களானால்,

தொழில் செய்வது இளப்பமென்ற எண்ணம் எங்கே இருக்கின்றது?

---

### பாக்டரிகள் வைத்துத் தொழில்கள் செய்வது

யுத்தத்தில் பராக்கிரமம்பெற்ற தேசமென்றுலகமெல்லாம் பேரெடுத்த ருஷியாவை யுத்தத்துக்கிழுத்து, வரிசையாய் ஒன்றின்பின் ஒன்றாகப் பிரமாதமான சண்டைகளில் தோற்கடித்துத் தன் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்ட ஜப்பானானது சமாதானம் கிடைத்ததும், தொழில்கள் செய்து செல்வம் சேர்க்க வேண்டுமென்ற ஆசையால் மேல்நாடுகளிலிருந்து இயந்திரங்களைத் தருவித்தபோது, மேனாட்டார் ஜப்பானைக் கேலி செய்தார்கள். தொழிற்சாலைகள் கட்டி, பூச்சிக் கூடுகளினின்று பட்டுரிக்க இயந்திரங்களும் நூற்கவும் நெய்யவும் வேண்டிய இயந்திரங்களும் தருவித்தது; இயந்திரங்கள் ஸ்தாபித்தும் ரயில்வேக்களை நிர்வகித்தும் ஐரோப்பியரைப்போல்தொழில்கள் செய்ய ஆரம்பித்தது. அதைப்பார்த்து, ஜப்பானியர் தலைமுறை தத்துவமாய் சிறுகைத்தொழில்கள் செய்து பெயர்வாங்கினதை விட்டு விட்டு பாக்டரிகளில்தொழில் செய்ய இறங்கி விட்டார்களென்று மேல்நாட்டார் நகைத்தார்கள். நகைத்தாலென்ன? உலகத்து வல்லரசுகளில் ஒன்றாய் தற்கால முறைப்படி ராஜாங்கம் நடத்துவதோடு, பெருங்கடற்படை தரைப்படைகளை அமைத்து வைப்பதற்கவசியமான பெருஞ்செலவுகளைச் சில்லரைக் கைத்தொழில்களாற் கிடைக்கும் லாபத்



தைக்கொண்டு எங்ஙனம் பொறுப்பார்கள்? பெருந்தொழில்கள் நடத்தித் தக்க லாபங்கள் பெற்று ஜனங்கள் செல்வவான்களானாலன்றி, ராஜ்ஜியச்செலவுகளைத் தாங்கக்கூடியவர்களாகமாட்டார்கள். ஜர்மெனிருஷியா, இங்கிலாந்துபோன்ற தேசங்கள் எவ்வாறு நாகரீகமாய் ராஜாங்கம் நடத்துகின்றனவோ, அவ்வாறு ஜப்பானும் நடத்தி எப்படி அத்தேசங்கள் படைகளைப் பெருக்கிக்கொண்டு போகின்றனவோ, அப்படியே அதுவும் பெருக்கிக்கொண்டுபோக, தொழில்கள் முதலிய பொருளாதாரங்களில் மட்டும் ஜப்பான் எப்படிப் பிற்பட்டு நிற்றல் சாத்தியம்! ஆகையால் மகா மதியூகிகளான ஜப்பானியர் ஐரோப்பியத்தேசங்களைப்போலப் பெருங்கைத்தொழில்கள் செய்து, அன்னிய தேசங்களுக்குத் தங்கள் சரக்குகளை விற்றுச் செல்வம் சேர்ப்பதே சரியென்று நிச்சயித்தார்கள். இப்படி நிச்சயித்து ஐரோப்பியர்களைப்போல் பெருந்தொழிற்சாலைகளை ஸ்தாபித்துத் தொழில்கள் நடத்த ஆரம்பித்தபோது, அப்படி நடத்தும் திறமை அவர்களுக்கு இல்லையென்றும் அவர்களுடைய முயற்சி நிறைவேறாதென்றும் மேனாட்டார் பலர் நினைத்தார்கள். லக்ஷக்கணக்கான பெருஞ்சைனியங்களையமைத்து நடத்தி, எவ்விதக்குழப்பமுமில்லாமல் யுத்தத்தை முடித்துக் கீர்த்திபெற்ற ஜப்பானியருக்குத் தொழிற்சாலைகளை நிர்வகிக்க சாமர்த்தியமில்லையென்று மேல்நாட்டார் என் நினைத்தார்களோ தெரியவில்லை. ஆனால், சொற்ப காலத்துக்குள் இந்த விஷயத்தில் அவர்கள் சாமர்த்தியம் பிரகாசமா

யிற்று. பருத்தித்தொழிற்சாலைகளிலும் மற்றத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்வோரின் நிலைமை முற்றிலும் திருப்திகரமாயில்லை யென்று மேல்நாட்டார் குற்றஞ் சொல்லுகிறார்கள். ஆனால், உண்மையில் இந்த விஷயத்தில் ஜப்பான் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வருகிற தென்பதில் சந்தேகமில்லை. பட்டினங்களில் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்படவே, அங்கு உயர்ந்த கூலி வினி தங்கள் கிடைக்குமென்ற ஆசையால் நாட்டுப்புறங்களிலிருந்து கூலி வேலைசெய்வோர் வெள்ளமாய்ப் போய்க்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாய் ஸ்திரீகளும், சிறு பிள்ளைகளும், இத்தொழிற்சாலைகளில் தாராளமாய்ச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பொதுவாய் கூலிக்காரர்களுடைய சுகாசுகங்களைப்பற்றி முதலாளிகள் தக்க கவலை கொள்ளுகிறார்களானதால் அவர்கள் சந்தோஷமாகவே அங்கு வசித்து ஜீவிக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவிலும் இந்தக் கூலிக்காரர்களுடைய நிலைமையானது கவர்ன்மெண்டு செய்திருக்கும் சட்டத்தினால் தக்க மேல் விசாரணைக்கு உட்பட்டிருக்கின்றது. அவர்கள் வசிக்கும் ஸ்தலங்கள் சுகாதாரங்களுக்கு உற்றவைகளாக இருக்கவேண்டும். வியாதிவராமலும் வியாதிவந்தால் அவர்களுக்குச்சிகிச்சைகள் நன்றாய்க் கிடைக்கும்படியும் மிதமிஞ்சின நேரம் வேலை செய்யாமலும் அவர்களை முதலாளிகள் காப்பது கட்டாயம். இப்படிப்பட்ட கவர்ன்மெண்டு சட்டம் தற்காலம் ஜப்பானிலில்லை. ஆகையால், முதலாளிகள் ஏராளமான சரக்குகள்செய்ய வேண்டு



மென்ற ஆசையால் கூலிக்காரரிடம் இரவும் பகலும் வேலை வாங்குகிறார்கள். ஆயினும், தேசாபிமானிகளாயும் உலகத்தாரிடம் நற்பெயர் வாங்கவேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களாயு முள்ள ஜப்பானிய முதலாளிகள் இந்த விஷயத்தில் தீவிரமாய்த் திருந்திக்கொண்டு வருகிறார்கள். தொழிற்சாலைகள் பல விடங்களில் துரிதமாய் ஸ்தாபிக்கப்பட்டு வருவதால் ஜப்பான் இந்த விஷயத்தில் மேல் நாடுகளைப் போல் மாறிக்கொண்டு வருகிறது. நாட்டுப் புறங்களில் விவசாயமோ வேறு சில்லரைத்தொழில்களோ செய்து அவரவர் தத்தம் எஜமானுக்கு அடங்கி அவனுக்குப் பயபக்தியுடன் தொண்டுசெய்தும் அவனால் ஆதரவுடன் சம்ரக்ஷிக்கப்பட்டும் வந்த தொழிலாளிகள் இப்போது பட்டினங்களில் தனியாய் வந்து கூட்டங் கூட்டமாய் வேலைகளில் அமருகிறார்கள். பட்டினங்கள் பெருகுகின்றன. வேலை செய்வோர் அடக்கமில்லாதவர்களாய் சுவாதீனபுத்தி பெற்றுத் தாங்கள் ஒரு வகுப்பாரென்றும் முதலாளிகள் வேறு வகுப்பாரென்றும் நினைக்க ஏது உண்டாகிக்கொண்டு வருகிறது. மேல் நாடுகளில் இப்படி யுண்டாகி முதலாளிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் விரோதம் முற்றி வருகின்றது. மேல் நாடுகளில் வேலை நிறுத்தங்கள் அடிக்கடி நேரிடுகின்றன. வேலையாளிகள் சங்கங்களாகச் சேர்ந்து ஐவேஜுகள் சேகரித்து முதலாளிகள் தங்களை வருத்தாமலிருக்கும்படிக் காத்துக்கொண்டு வருகிறார்கள். இந்த வேலைக்காரர்களே அபேத வாதிகளாய்ச் சமூகத்

தில் ஏற்றத்தாழ்வு பெற்ற வகுப்புப் பேதங்கள் கூடாவென்று வாதித்து வருகிறார்கள். தாங்கள் கஷ்டப்பட்டு வேலைசெய்து பொருளாக்கத் தங்களுக்குச் சொற்பக்கூலி கொடுத்து விட்டு லாபம் அனைத்தும் சுகஜீவிகளான முதலாளிகள் பெறுகிறார்களென்று அவர்கள் மீது விரோதம் பாராட்டி வருகிறார்கள். இந்த அபேதவாதிகளை எப்படித் திருப்திப்படுத்திச் சமூக அமைப்பில் குழப்பம் நேரிடாதபடிக் காப்பதென்பது மேல்நாடுகளில் ராஜதந்திரிகளுக்கும் கல்விமான்களுக்கும் பெருங் கவலையாயிருக்கின்றது. இந்த நிலைமை இன்னும் ஜப்பானில் தோன்றவில்லை. அது தோன்றாமல் தடுப்பது ஜப்பானிய ராஜதந்திரிகளின் பெருங்கடமையாகும். ஜப்பானிய வேலைக்காரர்கள் தங்கள் எஜமானருக்கு அடங்கி யிருப்பதும் எஜமானர் வேலைக்காரர்களைப் பரிவுடன் ஆதரிப்பதும் நின்று போகவில்லை. உதாரணமாக:—

டோகியோவில், காநேகாபூசி என்ற ஒரு பஞ்சாலையில் 14-ஆயிரம் ஆட்கள் வேலை செய்கிறார்கள். இதில் நூல் நூற்கப்படுகிறதேயன்றித் துணி நெய்யப்படுகிறதில்லை. இவ்வளவு அதிகமான ஆட்கள் வேலைசெய்கிற ஓர் ஆலையில் முதலாளிகள் எவ்வளவு பணம் போட்டிருக்கவேண்டுமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. இதில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் எல்லோரும் வேலை செய்கிறார்கள். இரவு பகல் என்ற வித்தியாசமில்லாமல் 12-மணிநேரம்



வேலைக்காரர்களிடம் முறை வைத்து வேலை வாங்கப்படுகிறது. இந்த ஆலையில் வேலைசெய்வோரைச் சொந்தக்காரர்கள் நடத்துகிற மாதிரியினாலே இது வெகு திறன்மையை யடைந்து உலகமெல்லாம் கீர்த்தி பெற்று வருகிறது. பம்பாய்ப் பஞ்சாலைகளில் வேலைசெய்வோர் தாங்கள் செய்யும் வேலையில் அதிக அக்கறையாவது ஊக்கமாவது காட்டாதவர்களாய்த் தங்களால் ஆனவரையில் வேலையைக் கழிக்கப்பார்க்கிறவர்களாயிருக்க, ஜப்பானிய வேலைக்காரர்களோ, தாங்கள் வேலை செய்யுமிடத்தில், தம் சொந்த வீட்டிற் கிடைக்கக்கூடிய சகல சௌகரியங்களையும் பெற்று, சிரத்தையுடன் வேலை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். மேலே சொன்ன டோகியோ பஞ்சாலையில் கமிட்டியொன்று ஏற்பட்டு வேலைக்காரர்களுடைய சுக சௌக்கியங்களைக் கவனிப்பதே கடமையாகக் கொண்டிருக்கிறது. எந்தெந்த விஷயங்களில் ஆண்களும் பெண்களும் தனித்தனியாய் நடத்தப்படவேண்டுமோ அவ்வவ்விஷயங்களில் அப்படியே நடத்தப்படுகிறார்கள். வசிக்கும் இடமும் தூங்கும் இடமும் உடுக்கும் இடமும் விளையாடும் இடமும் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியே ஏற்பட்டிருக்கின்றன. ஸ்திரீகள் கர்ப்பவதிகளானால் அக்காலத்திலும், பிரசவகாலத்திலும், வியாதி வந்தபோதும் அவர்களுக்குத் தனியே சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. கைக்குழந்தைகளை வளர்ப்பதற்கும் பிள்ளை பெண்களுக்குச் சிறு பிராயத்தில் கல்வி கற்பிப்ப

தற்கும் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஓயாது வேலைசெய்து சலிப்படையாமலிருக்கும்பொருட்டு வேலைக்காரர்களுக்கு அப்போதப்போது ஓய்வும் உல்லாசமும் கிடைக்குமாறு விளையாட்டு வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேலைக்காரர்கள் வசிக்கும் வீடுகளில் ஒவ்வொன்றையும் ஒட்டி ஒரு தோட்டம் அமைக்கப்பட்டிருப்பதால், ஒழிந்த நேரத்தில் வேலைக்காரர்கள் அந்தத் தோட்டத்தைக் கவனித்தும் அதில் திரிந்தும் சிரம பரிகாரம் செய்துகொள்ளலாம். வேலைக்காரர்கள் தங்கள் குடும்பங்களுக்கு நிருபங்கள் எழுதுவதில் எவ்விதத் தடையுமில்லை. இவர்கள் மிகுக்கக்கூடிய சொற்பத்தொகைகளைப் போட்டுவைக்க ஒரு பாங்கியும் ஏற்பட்டிருக்கின்றது. சொந்தக்காரர்கள் இந்தப் பணத்துக்கு நூற்றுக்குப் பத்து வட்டி கொடுக்கிறார்கள். இவர்களுடைய சாப்பாட்டுக்கு வேண்டிய பொருள்கள் எளிதாய்க் கிடைக்குமாறு இவர்களுக்குள்ளேயே கூட்டுவியாபாரமும் செய்யப்படுகின்றது. வேலை செய்யும் இவர்களுக்கு ஆலைகளில் உபயோகிக்கப்படும் இயந்திரங்களிலாவது வேறெந்த விஷயத்திலாவது புதிய யுக்திகள் தோன்றினால், அந்த யுக்திகளை எழுதிப்போட்டுவைக்கப் பெட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நல்ல யுக்திகள் சொல்லுகிறவர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்படுகின்றன. இந்தக் கானேகாபூசிப் பஞ்சாலையில் 300-வித்தியாப் பட்டதாரிகள், அதாவது உயர்ந்த கல்விபெற்றுப்



பட்டம் பெற்றவர்கள் வேலைகற்று வருகிறார்கள். இவர்களுடைய சாப்பாட்டுச் செலவுகூட இவர்கள் கொடுக்க வேண்டியதில்லை. இப்படித் தயாராகும் 300-கல்விமான்கள் ஆலையில் வேலை செய்யும் 14,000 ஆட்களை ஏற்பட்டிருக்கும் ஒழுங்குகளின்படி மேற்பார்வை பார்த்து நடத்துவதுமன்றிக் காலக்கிரமத்தில் வேறு பஞ்சாலைகளை நடத்தவும் சக்தி பெறுகிறார்கள். ஜப்பானிய முதலாளிகள் தங்கள் சொந்த நன்மையோடு தேச நன்மையையும் கருதுகிறவர்களானதால், இந்த 300-பட்டதாரிகளை இலவசமாய்ப் பயிற்சி செய்விப்பதில் பொறுமை கொள்வதில்லை. மேல் நாட்டாரைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும் ஜப்பானியருக்கும் நமக்கும் வித்தியாசத்தைப் பாருங்கள்! இந்தக் "கானேகாபூசி"ப் பஞ்சாலையைப்போல் இந்தியாவில் ஒரு பஞ்சாலையும் இல்லை. வேலை செய்வோரை அன்புடன் நடத்தும் முதலாளிகளை இந்தியாவில் காண்பதரிது. வேலைக்காரர்கள் படித்தவர்களாயும் சரீரத்திடனுள்ளவர்களாயும் மனதில் உல்லாசம் கொண்டவர்களாயும் தம் குடும்பங்களைப்பற்றி அடிக்கடி நினைத்துத் துக்கிக்காதவர்களாயும் இருந்தால், வேலைவாங்கும் முதலாளிகள் லாபம் பெறுவார்களென்பதை இந்திய முதலாளிகள் ஏன் அறியவில்லையோ தெரியவில்லை.

---

### கைத்தொழில்களுக்கு மூலதனம்

இந்தியாவில் மனிதனுடைய சுகத்துக்குரிய எந்த வஸ்துவானாலும், அது ஒரு பாகத்தில் கிடைக்காவிட்

டாலும் வேறொரு பாகத்தில் கிடைக்கக் கூடியது போல் ஜப்பானிற் கிடைக்கக் கூடியதல்ல. அத்தேசத்தில் இயற்கையாய்க் கிடைக்கக்கூடிய வஸ்துக்கள் அதிகமாயில்லை. விவசாயத்தாற் கிடைக்கக்கூடிய தானியங்களும் காடுகளிற் கிடைக்கக்கூடிய மரம் முதலிய பொருள்களும் கடலிற் கிடைக்கக்கூடிய மீனும் ஆகிய இவைகள்,போக, பூமியின்கீழ் சுரங்கங்களிற் கிடைக்கக் கூடிய பொருள்கள் நிலக்கரியும் செம்புமே தவிர இயற்கைப் பொருள்கள் வேறதிகமில்லை. இரும்பும் அதிகமாய்க் கிடைப்பதில்லை. ஜப்பானுக்கு வேண்டிய இரும்பு ஒரு பாகம் சைனாவிலிருந்து வருகின்றது. கொரியாவை இப்போது ஜப்பான் சேர்த்துக்கொண்டுவிட்டபடியால் அங்குண்டாகும் இரும்பு இனி ஜப்பானியக் கைத்தொழிலுக்கு உதவும்; மண்ணெண்ணெய் அதிகமாய்க் கிடைக்குமென்று நினைத்தபடிக் கிடைக்கவில்லை; இவைகள்தான் அத்தேசத்திற் கிடைக்கக் கூடிய இயற்கை வஸ்துக்கள். இவைகளைக் கொண்டு பெரிய தொழிற்சாலைகளில் செயற்கை வஸ்துக்களைச் செய்து, அல்லது, நிலக்கரிபோன்ற இயற்கை வஸ்துக்களை அதே ரூபமாக அன்னியதேசங்களுக்கு அனுப்பி லாபம் பெறுவதில் ஜப்பானியர் வெகு ஊக்கமாயிருக்கிறார்கள். அன்னியர் தங்கள் மூலதனத்தைக்கொண்டு ஜப்பானுக்கு வந்து தொழில்கள் செய்வது சட்டப்படி தடையில்லையாயினும், ஜனங்களுக்கு அது இஷ்டமில்லை. 'அன்னியர் தங்கள் முதலைக்கொண்டு ஜப்



பானில் தொழில்கள் செய்தால், அத்தொழில்களை நிர்வகிக்கும் உத்தியோகஸ்தர்களும் எஞ்சினீர்களும் வேலைக்காரர்களும் ஜப்பானியராயிருக்க வேண்டுமே தவிர அன்னியராய் இருக்கக்கூடாது, அன்னியராயிருந்தால் தொழில்கள் நஷ்டப்பட்டுப்போகும்' என்று கௌண்ட் ஓகுமா தாம் எழுதியிருக்கும் ஒரு புஸ்தகத்திற் சொல்லியிருக்கிறார். அன்னியர் திறமைசாலிகளாயிருந்தால் இத்திறமை ஜப்பானியரின் நன்மைக்கு உபயோகப்படுவதில் விரோதமில்லை. ஆனால், அந்த அன்னியரின் திறமை ஜப்பானியர் திறமைசாலிகளாகிற வரையில் மட்டும் அவசியமேயன்றிப் பிறகு அவசியமல்ல. அந்தந்தத் தேசத்தின் தொழில்கள் அந்தந்தத் தேசத்து ஜனங்களின் திறமையால் நடத்தப்பட வேண்டுமேயன்றி அன்னியர் அவைகளைத் தங்கள் திறமையால் நடத்தப் பார்த்திருப்பது விவேகமல்ல. ஜர்மானியர் சில வருஷங்களுக்கு முன்னால் கப்பல்கள் செய்ய ஆரம்பித்தபோது, அந்த வித்தை அவர்களுக்குத் தெரியவில்லை என்று பிரிட்டிஷ் தேசத்தார் நகைத்தார்களாம். அதற்கப்போது ஜர்மெனியின் பிரதம மந்திரியாயிருந்த மார தீரரான பிரின்ஸ் பிஸ்மார்க் 'பாதகமில்லை, இப்போது தெரியாவிட்டாலும் பின்னால் தெரிந்துகொள்வார்க'ளென்று பதிற் சொன்னாராம். கப்பல் செய்யும் வித்தை தெரியவில்லை என்று அன்னியரை நம்பியிருந்தார்களானால், அந்த வித்தையை ஜர்மானியர் இப்போதும் அறியாதவர்களாயிருப்பார்கள். உண்மையில், ஜர்மானியர்

எவ்விதமான கப்பல்களையும் செய்வதில் அன்னியரைவிடக் குறைந்த சாமர்த்திய முள்ளவராயில்லை. பிரிட்டிஷ் தேசத்தாரோடு போட்டி செய்து புதிது புதிதாய் மகாநேர்த்தியான வியாபாரக் கப்பல்களும் பகிரங்கமான போர்க்கப்பல்களும் செய்து கொண்டு போகிறார்கள். ஜப்பானியரும் துருக்கியரும் ஜர்மனியில் செய்த கப்பல்களை வாங்குகிறார்கள். எந்த வித்தையானாலும் ஆரம்பத்தில் அதை யறியாத ஜனங்கள் அனுபோகத்தால் வரவரக் கற்றுக்கொள்ளக் கூடும். ஜப்பானியர் மகா புத்திமான்களாய் முன் செல்லும் சுபாவ முள்ளவர்களாயிருப்பதால், அவர்கள் தேசத்துத் தொழில்களை அவர்கள் செய்யத் திறமைசாலிகளாவது கஷ்டமல்ல. ஆரம்பத்தில் அன்னியருடைய திறமையை உபயோகப்படுத்தப் பார்த்துக் காலவளவில் அவர்களும் திறமைசாலிகளாகக்கூடும். அநேக பெரிய தொழில்களில் தற்காலம் அன்னியரை அமர்த்திக் கொள்ளுகிறார்கள். ஆனால், அவர்களைச் சகாயத்துக்கு வைத்துக் கொள்ளுகிறார்களே யன்றி அதினால் தங்களுடைய தலைமையை இழந்து விடுகிறதில்லை. அன்னியர் அவர்கள் மூலதனங்களோடு வந்து அன்னியரையே உதவிக்காக வைத்துக்கொண்டு பெருந்தொழில்களை நடத்தி சகல லாபமும் திறமையும் அனுபோகமும் அன்னியரே பெற்றுப் போவார்களானால், தேசத்து ஜனங்களுக்குக் கிடைப்பதென்ன? ஜப்பானியர் சாமார்த்திய சாலிகளாய் மேல் நாட்டாரைப்போல்



பெருந்தொழில்கள் செய்து செல்வம் சேர்க்க வேண்டுமென்றல்லவோ ஜப்பானியரின் ஆசை! அந்த ஆசையை நிறைவேற்ற எது அவசியமோ அதைச் செய்யவும், அதை நிறைவேறாமல் எது தடுக்குமோ அதை நீக்கவும், ராஜாங்கத்தாரும் ஜனங்களும் தயாராயிருக்கிறார்கள்.

---

### அன்னிய மூலதனம்

ஆரம்பத்தில் ஜப்பானியர் அன்னியருடைய திறமையைக்கொண்டு தொழில்கள் நடத்திவந்தது போல அந்தக் காலத்தில் அவர்களுடைய மூலதனத்தையும் அபேக்ஷித்திருந்தார்கள். ரயிற்பாதைகள் முதலான போக்குவரத்து வசதிகள் உண்டாக்குவதற்காக விசேஷ செலவுகள் செய்ய வேண்டியிருந்து, நிகழும் வரும்படிகளிலிருந்தாவது ஜனங்களிடம் கடன் வாங்கியாவது இந்தச் செலவைச் செய்யக் கவர்ன்மெண்டாருக்குச் சாத்தியமில்லாதிருந்தபடியால் அன்னியரிடம் கடன்வாங்கினார்கள். கவர்ன்மெண்டுக்கு மாத்திரமல்ல, பெருந்தொழில்கள் செய்து வரும் ஜனங்களுக்குங்கூட, சொற்ப வட்டிக்குக் கிடைக்கக்கூடிய மூலதனம் அவசியமாயிருந்தது. அன்னியர் ஜப்பானுக்கு வேண்டிய மூலதனத்தைக் கடன் கொடுக்கத் தயாராயிருந்தார்கள். ருஷ்ய யுத்தத்திற் பெற்ற அத்தியாதிசயமான வெற்றியால் உலகத்தாருக்கு ஜப்பானியரிடத்தில் மதிப்பு ஒரே ஏற்றமாய் ஏறிவிட்டது. அவர்கள் வாங்கின கட

னைக் கொடுக்கத் தவறிப்போவார்களென்ற சந்தேகம் இல்லவே இல்லை. ஆகையால், ஜப்பான் கவர்ன்மென்டார் கடன்வேண்டு மென்று பிரசித்தப்படுத்தவே, ஐரோப்பிய முதலாளிகள் தயங்காமற் கொடுத்தார்கள். இவ்வாறு அன்னிய முதலாளிகளின் நம்பிக்கை தங்களிடத்தில் இருக்கிறதென்றறிந்து, எப்போதுமே, தொழிலபிவிர்த்திக்கு அன்னிய மூலதனம் சுளுவாய் வேண்டியபோதெல்லாம், அது சுளுவாய்க் கிடைக்கும்படி என்னயுக்தி செய்யலாமென்று ஜப்பானியக் கவர்ன்மென்டார் யோசித்தார்கள். இந்தியாவில் நடப்பது போல அன்னியரே தங்கள் மூலதனத்துடன் ஜப்பானுக்கு வந்து இசைந்த தொழில்களைத் தங்கள் சொந்த உத்தியோகஸ்தர்களையும் ஏஜெண்டுகளையும் வைத்து நடத்தும்படிச் செய்யலாம். இப்படியே இந்தியாவில் ரயில் பாதைகளும் தேயிலை, காபி, ஸின்கோனா, ரப்பர் முதலிய தோட்டப் பயிர்களும், பஞ்சாலை, சணலாலை முதலிய கைத்தொழில்களும், வேறு நானாவிதத் தொழில்களும், அன்னியரே அவர்களுடைய மூலதனத்தைக்கொண்டும் அவர்களுடைய ஆட்களைக் கொண்டும் நடத்தி வருகிறார்கள். ஜப்பானிய கவர்ன்மென்டார் அப்படிச் செய்ய விரும்பவில்லை. அப்படிச் செய்வதால் அவர்களுடைய நோக்கமும் ஆசையும் நிறைவேறா. ஆகையால், ஜப்பானியக் கவர்ன்மென்டார் என்ன செய்தார்களென்றால், ஒரு பெரிய ஜாதீய பாங்கி ஸ்தாபித்து அதற்குத்தக்க விகிதம் வட்டி கொடுப்பதாக அவர்களே பிணைப்பட்டு அந்தப்



பாங்கியில் பணம் போடுகிறவர்களெல்லாம் போடலாமென்று பிரசித்தம் செய்தார்கள். அன்னிய முதலாளிகள் ஏராளமாய்ப் பணம் போட்டார்கள். ஜப்பானியரும் பணம் போட்டார்கள். இப்படி, இந்தப் பாங்கிப் பணத்தைக் கொண்டும் அப்போதப் போது தனியாய்க் கடன் வாங்கியும் தொழில்களின் அபிவிருத்தியை முற்படுத்தி வருகிறார்கள். சகல லாபமும் அனுபோகமும் அன்னியர் பெற்றுச் செல்லாமல் ஜப்பானியரே பெறுவதால் இந்த லாபமும் அனுபோகமும் தீவிரமாய்ப் பெருகாவிட்டாலும், காலவளவில் இவைகள் குவிந்து போகின்றன. இவைகளைக் கொண்டு ஜப்பானியர் தங்கள் தொழில்களை மேல்நாட்டாரைப்போல் செய்ய வல்லவராகி வருகிறார்கள்.

### புதுக்காப்பு வரிகள்.

இந்தவல்லமை இன்னும் பெருகுமாறு ஜப்பானியக் கவர்ன்மென்டார் இப்போது ஒருபுது யோசனை செய்து வருகிறார்கள்; அங்கு இறக்குமதியாகும் அன்னியச் சரக்குகளுக்கு ஏற்கெனவேயுள்ள வரி விகிதங்களை மாற்றி, எந்த அன்னியச் சரக்குகள் ஜப்பானியரே செய்ய முடியாதோ அவைகளுக்கு வரியைக் குறைத்தும், எந்த அன்னியச் சரக்குகள் ஜப்பானிலேயே செய்யப்படுமோ அல்லது செய்யப்பட்டு வருகின்றனவோ அவைகளுக்கு வரியை அதிகப்படுத்தியும் தொழில்களின் காப்பு நிமித்தம் ஒரு புதிய ஏற்பாடு செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்

போது ஜப்பானிலிருந்து வெளியேபோகும் சரக்குகளில் கீழ் ஏஷியா தேசங்களுக்குப் போகிறவைகள் முழுச் செயற்கைப் பொருட்களாக அல்லது பாதிச் செயற்கைப் பொருட்களாக இருக்கின்றன; அப்படியென்றால், ஜப்பானிற் கிடைக்கும் மூலப்பொருட்களை என்னென்ன பிரயோசனங்களுக்கு எவ்வாறு உதவும்படி செய்யக்கூடுமோ அப்படிச் செய்து, அரைகுறையாய்ச் செய்து உபயோகப்படும்படிச் செய்யக்கூடுமானால் அப்படியும், முற்றுப் பெற்றவைகளாய்ச் செய்து உபயோகப்படும்படிச் செய்யக்கூடுமானால் அப்படியும், செய்கிறார்கள். உதாரணமாக, பருத்தியை நூலாகச் செய்தனுப்பினால் அது பாதிச்செயற்கைப்பொருளாகின்றது. அந்த நூலைத் துணியாகச் செய்தனுப்பினால் அது முழுச் செயற்கைப் பொருளாகின்றது. இன்னும், சுரங்கத்திலிருந்தெடுத்த தாம்பிரத்தைத் தகடுகளாக்கி யனுப்பினால், அது பாதிச்செயற்கைப்பொருள். அந்தத் தகடுகளையே பாத்திரங்களாகவும் கருவிகளாகவும் செய்து அவைகள் அப்படியே உபயோகப்படும்படி யனுப்பினால் அவைகள் முழுச்செயற்கைப் பொருளாகின்றன. இப்படிப்பட்ட பொருள்களைக் கீழ் ஏஷியாதேசங்களுக்கு ஜப்பான் அனுப்பிக்கொண்டு வருகின்றது.

மேல் நாடுகளுக்கனுப்பும் சாமான்களோ ஜப்பானிலுண்டான மூலப்பொருள்கள் அல்லது இயற்கைப் பொருள்களாக இருக்கின்றன. அதாவது தேயிலை, பட்டு, இவை போன்றவைகள் ஜப்பானில் இயற்கையாயுண்டானபடியே அனுப்பப்படுகின்றன.



இதற்குமாறாக, மேனாடுகளிலிருந்து ஜப்பானில் இறக்குமதியாகும் பொருள்கள் அத்தேசங்களில் முற்றுப் பெற்ற செயற்கைப் பொருள்களாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. கீழ் ஏஷியா தேசங்களிலிருந்து ஜப்பானுக்குப்போவன பருத்தி போன்ற இயற்கைப் பொருள்களா யிருக்கின்றன. இப்படி யிருப்பதால் ஜப்பானியக் கவர்ன்மெண்டாரின் எண்ணம் இப்போதென்னவென்றால், மேனாடுகளுக்குப் போகும் மூலப்பொருள்களை அங்குப் போகாமல் தடுப்பதும் அங்கிருந்து வரும் முற்றுப்பெற்ற செயற்கைப் பொருள்களை அப்படி வராமல் தடுப்பதும் எண்ணம். அப்படி இரண்டு விதமாயும் தடுத்துவிட்டால் ஜப்பானில் விளையும் பொருள்கள் அன்னியப் போட்டி இல்லாமல் அங்கேயே செயற்கைப் பொருள்களாக்கப்படலாம். உதாரணமாக, மேனாடுகளிலிருந்து தற்காலம் ஜப்பான் பெறும் பொருள்கள் காகிதம், இரும்புச் சாமான்கள், பெரிய இயந்திரங்கள், கருவிகள், கண்ணாடிச்சாமான்கள் முதலியவை. இந்தச்சாமான்களைத் தாங்கள் அன்னிய தேசங்களிலிருந்து கூடிய வரையில் வாங்கக்கூடாதென்பது ஜப்பானியரின் எண்ணம். இவைகளுக்கு மூலப்பொருள்கள் ஜப்பானிற் கிடைக்குமானால் அவைகளைக்கொண்டும், கிடைக்காவிட்டால் அந்த மூலப்பொருள்களை அன்னிய தேசங்களிலிருந்து வரவழைத்தும், மேற்கண்ட பேப்பர் முதலிய சாமான்களை ஜப்பானிலேயே செய்யவேண்டுமென்பது கருத்து. இந்தக் கருத்துக்கிசைய மேற்கண்ட சாமான்களுக்கு

இறக்குமதி வரியை அதிகப்படுத்த யோசித்திருக்கிறார்கள். வரிகளை அதிகப்படுத்திவிட்டால் அவைகளின் இறக்குமதி குறையுமாகையால், ஜப்பானியர் அவை சம்பந்தமான தொழில்களைச் செய்ய காலவளவில் கற்றுக்கொள்வார்கள். அப்படிக் கற்றுக்கொள்ளுகிற வரையில் சிலகாலம் அவைகளுக்கு அதிகவிலை கொடுக்கும்படி நேரிடும். நேரிட்டாலென்ன? காலக்கிரமத்தில் இறக்குமதியாகும் இந்தச் சாமான்களை விட தேசத்திலேயே செய்யப்படும் சாமான்கள் மலிவாய் விற்றல் சாத்தியப்படும். அந்தத் தொழில்களைச் செய்யும் திறமையையும் ஜப்பானியர் கற்றுக் கொள்வார்கள். கீழ் ஏஷியா தேசங்களிலிருந்து இறக்குமதியாகிறவைகள் மூலப்பொருள்களாயிருக்கிறபடியால், அவைகளுக்கு வரி குறைவாகவே இருக்கும். ஏனெனில், அந்த மூலப் பொருள்களை வாங்கி ஜப்பானியர் தொழில்கள் செய்வதாயிருந்தால், அவைகள் எவ்வளவு மலிவாய்க் கிடைக்கின்றனவோ அவ்வளவு லாபகரமாகும்.

## முடிவு.

உலகமெல்லாம் ஒரே குடும்பம்போலாகிவிட்டது. எங்கெங்கு எங்கெந்த ஜனங்களுக்கு எங்கெந்தப் பொருள்கள் அவசியமோ அவைகளைச் சாமர்த்தியமுள்ளவர்கள் செய்து விற்கலாமென்று தற்காலம் ஏற்பட்டு வருகின்றது. உலகத்திற் கிடைக்கும் பொருள்களுக்கோ அளவில்லை. ஜனங்களின் சுகா சுகங்களுக்கு வேண்டிய சாமான்களுக்கும் அளவில்லை. நாகரிகம்



அதிகமாகவாக மனிதனின் சுகா சுகங்கள் பெருகி, சுகத்தைத் திருப்தி செய்வதற்கும் அசுகத்தை நீக்குவதற்கும் அவசியமான சாமான்கள் அதிகப்பட்டு வருவதுமன்றிப் புதிது புதிதாய்த் தோன்றியும் வருகின்றன. இந்தியாவிற்கு ஏராளமான துணிகள் வேண்டியிருக்க, மான்செஸ்டர் அவைகளைச் செய்துவிற்கத் தலைப்பட்டது. மான்செஸ்டரைப் பார்த்து ஜர்மெனியும் பிரான்ஸும் மற்றத்தேசங்களும் இந்தியாவுக்கு வேண்டிய சாமான்களைச் செய்து விற்கத்தலைப்பட்டன. இப்போது ஜப்பான் போட்டியாய்க் கிளம்பியிருக்கின்றது. அப்படியே உலகத்தில் எந்த மூலையிலுள்ள ஜனங்களுக்கு எந்தச் சாமான்கள் வேண்டியிருந்தாலும் சாமர்த்தியமுள்ள ஜனங்கள் அவைகளைச் செய்து விற்பதில் தடையில்லை. அப்படியே மூலப்பொருள்கள் எங்குக் கிடைத்தாலும் அவைகளைப் பெறுவதில் தடையில்லை. நீராவி விசையாலும் மின்சாரவிசையாலும் உலகத்து எல்லாத் தேசங்களும் எவ்வளவு தூரத்தில் இருப்பவைகளானாலும் அயல் தேசங்கள் போலாகிவிட்டன. ஆகவே, உலகத்துப்பொருட்கள் அனைத்தும் சாமர்த்தியசாலிகள் தங்கள் தங்கள் சாமர்த்தியத்துக்குத் தக்கபடி சாமதானபேத உபாயங்களால், சில சமயங்களில் தண்டோபாயத்தாலும், பெறக்கூடியனவாய் விட்டன. அப்படியே, சாமர்த்தியசாலிகளான ஜனங்கள் செய்யும் செயற்கைப்பொருள்கள் மேற்படி உபாயங்களால், எத்தேசமானாலும் அத்தேசத்தில், தாராளமாய் விற்க வசதிகள் அமைந்திருக்கின்றன. அப்படியிருக்க, ஜப்

பான்மட்டும் ஏன் சும்மாவிருக்க வேண்டும்? அதுவும் மேனாடுகளைப்போல் வல்லரசாய் முன்வந்து பெருஞ் செலவுகள் செய்யவேண்டியிருப்பதனால் திரளானசெல்வம் அவசியமாயிருக்கும்போது, தன் சாமர்த்திய மனத்தையும் உபயோகித்து, மற்றத் தேசங்களோடு போட்டிபோட்டு, வியாபாரம் செய்து, ஏன் செல்வம் சேர்க்கக்கூடாது? இப்படிச் சேர்க்கவேண்டுமென்றே ஜப்பானியர் தற்காலம் பெரும் ஊக்கங்கொண்டிருக்கிறார்கள்.


# முக்கியமான விளம்பரங்கள்

## மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்டின் பிரசங்கங்கள்

ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன — இந்தப் பிரசங்கங்கள் இந்திய ஜனங்கள் எப்படி ஒருமைப்பட்டு ஒரு ஜனமாக வாழலாம் என்பதை விளக்குவன.

மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்டின் கல்வியும் சொல்வன்மையும் உலகம் அறியும். வாசித்துப் பார்த்தால் அவருடைய பிரசங்கங்களின் அருமை தெரியும். தேசாபிமானம், ஐக்கியபுத்தி, ராஜவிசுவாசம் இவைகளை உண்டுபண்ணும்.

## இதிலடங்கிய விஷயங்கள்

1. ஜன நிர்மாணம் (Nation Building)
2. பொதுப் பான்மை (Public Spirit).
3. எவ்விதக் கல்வி தேசநன்மைக்கு அடிப்பீடம் (Education as the basis of National Prosperity).
4. மதசம்பந்தமான கல்வி அவசியம் (Religious Education, Necessary)

5. யுக தர்மம் (Spirit of the Age)

6. சர்வமத சகோதரத்துவம் (Brotherhood of Religions).

7. கிழக்கும் மேற்கும் (East and West).

8. மானவ ரட்சகர் (Guardians of Humanity)

220 பக்கங்கள் அடங்கிய இந்தப்புஸ்தகம் விலை அணா 6

## இந்தியா கவர்ன்மெண்டில் திருத்தங்கள்

1. டாக்டர் ரதர்போர்டு பேசினது.
2. லார்டு மார்லி பேசினது.
3. சூரத் காங்கிரஸின் அக்கிராசனப் பிரசங்கம்.
4. மிஸ்டர் கோக்லே அதிகாரப் பிரிவினையைப்பற்றி.
5. பம்பாய் பிரஸிடென்ஸி சபையின் அபிப்பிராயங்கள்.

220 பக்கங்கள் அடங்கிய இந்தப்புஸ்தகம் விலை அணா 6

மேற்கண்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் சுதேசமித்திரன் ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

119886